

# ஈழத்து செவ்வேள் படையல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து
# செவ்வேள் படையல்கள்

5

**செ. வேலாயுதபிள்ளை**
B.A (Hons.) Tamil

1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து செவ்வேள் படையல்கள்

815.01

நூலாசிரியர்:
திரு. செ. வேலாயுதபிள்ளை B.A (Hons.) Tamil

முதற்பதிப்பு:
1998ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம்

பதிப்புரிமை:
ஆசிரியருக்கே

Copyright Reserved ©

அச்சகம்:
சங்கர் அச்சகம், ஸ்காபரோ - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என் கணவருடைய அருகில் 53 ஆண்டுகளாக இருந்து பழகியமையால் அவரது ஆழ்ந்த தமிழறிவையும் ஆற்றலையும் ஓரளவுக்கு என்னால் அறிய முடிந்தது. அதன் காரணமாகவே அவரது படையல்களைக் கொண்ட இந்நூலுக்கு முன்னுரை எழுதுந் துணிவு எனக்கு வந்தது. நான் சிறு மாணவியாகக் கல்வி கற்கும் நாளில் என் ஆர்வம், திறமையெல்லாங் கணிதத்துறையிலேயே அமைந்திருந்தது. எனினும், விதி வலிந்து என்னைத் தமிழ்த்துறைக்கு ஈர்த்துச் சென்றது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உயர் திரு. விபுலாநந்த அடிகளிடங் கல்வி பயிலவேண்டுமென்பதும், என் கணவனுடன் நான் தனிச் சகமாணவியாக இருந்து அவருக்கு நன்கு அறிமுகமாக வேண்டுமென்பதும் ஆண்டவன் கட்டளை போலும்! விதியின் வலியை அறியவல்லார் யார்!

திரு. வேலாயுதபிள்ளையவர்கள் தமிழ்த் துறையில் தனிப்பெரும் ஆற்றலுந் திறமையும் வாய்ந்தவர்; தமிழிலக்கணப்புலி; மரபு வழுவாது கவிதை இயற்றும் வல்லமை படைத்தவர். அவர் உயர் புலமையை ஆய்ந்துணரும் பணியை, இந்நூலை வாசித்து இன்புறும் இரசிகர்களிடமே விட்டுவிடுகிறேன்.

இந்நூலை வெளிக்கொணருவதற்கு முன்னின்று உதவிய திரு. அடியார் அவர்களுக்கும், என்னுடைய மகள், மருமகனுக்கும் என் மனமார்ந்த நன்றி.

திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வேண்டுகோள்

திரு. வேலாயுதபிள்ளையவர்களின் படையல்களில் என் கைவசம் இருந்தவற்றையே முதல் வெளிவரும் இந்நூலிற் சேர்த்திருக்கிறேன். அவரிடம் கோரிக்கை விடுத்து அவரது ஆக்கங்களைப் பெற்று பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியிட்டவர்கள் அவற்றைத் தந்துதவினால் இந்நூலின் இரண்டாவது பாகத்தையும் வெளிக் கொணருவதற்கு வாய்ப்பாயிருக்கும்.

நன்றி

எனது முகவரி:
திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை
1205 - 460 யார்விஸ் வீதி (Jarvis Street)
ரொறொன்ரோ, ஒன்ராறியோ (Toronto, Ontario)
M4Y 2X8 கனடா (Canada)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

அமரர் திரு. வேலாயுதபிள்ளையவர்களின்

அழியாத நினைவுச் சின்னமாக

அவரது சிறந்த ஆக்கங்களைக்கொண்ட இச் சிறு மலரை

அன்னார் அன்புக் கரங்களில்

மிக்க தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியரும் பாரியாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நூலாசிரியர் வாழ்க்கை வரலாறு

தமிழின் ஆழத்தையும் அகலத்தையும் ஒருங்கே கண்டறிந்தவர் திரு. வேலாயுதபிள்ளை அவர்கள். இவர் தன் அறிவுக்கூர்மையாலும் அகன்ற அறிவுப் பரப்பாலும் வேலாயுதத்தைத் தாங்கும் பிள்ளையாகவே காட்சியளித்தார். பின் வரவிருப்பதை முன் அறிந்தே பெற்றார் அவருக்கு இத்திருநாமத்தைச் சூட்டினார் போலும். இப்பெருந்தகை 1923ஆம் ஆண்டு (ருதிரோற்காரி வருடம்) புரட்டாதித் திங்கள் 25ஆம் நாள் திரு. செல்லத்துரை, திருமதி. தங்கம்மா செல்லத்துரை ஆகியோரின் மூன்றாவது செல்வப் புதல்வனாக அவதரித்தார். இவர் பிறப்பிடம் இலங்கையின் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள கொக்குவில் தலையாளி அம்பதியாகும். இவரது சகோதர சகோதரிகள் மூவர்: ஒருவர் அண்ணன், ஒருவர் அக்காள், மற்றவர் தங்கை. இவரது இளமைப்பருவம் அவ்வளவு வசதியுள்ளதாக அமையவில்லை. ஆயின் இளமைக் காலந்தொட்டே இவரது புத்திக்கூர்மை தெட்டத் தெளிவாக ஒளிரத்தொடங்கியது.

இவர் தமது ஆரம்பக்கல்வியை வீட்டுக்கு அருகாமையிலுள்ள உவெலியன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிற் பெற்றார். அதன்பின் சேணியத்தெரு சன்மார்க்கப் போதனா (இருமொழி) வித்தியாசாலையிற் சேர்ந்து பாடங்கேட்டார். இப்பாடசாலையிற்றான் இவரது மறைந்திருந்த ஆற்றல் வெளிவரத் தொடங்கியது. அப்பாடசாலையிலுள்ள நல்லாசிரியர்கள் இவருக்குத் தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் ஆர்வமுண்டாக்கி அவற்றைக் கற்றறிவதற்கான அடிப்படையையுமிட்டனர். 1940ஆம் ஆண்டு யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் 8ஆம் வகுப்பிற் சேர்ந்து கொண்ட இவருக்குத் தமிழறிவையும், தமிழ்ப்பண்பாட்டையும், சைவசமய அடிப்படை ஒழுக்கத்தையும் மேலும் பெற உதவியாயிருந்தது அக்கல்லூரி. இவரின் தமிழறிவு அத்திவாரத்தை உரப்படுத்தி, சைவசமய அடிப்படையையும் இட்டுக்கொடுத்தது அது. இங்கு கல்வி கற்கும்போதே பிள்ளையவர்களின் கவிதை இயற்றும் ஆற்றல் வெளிக்காட்டத் தொடங்கியது. அக்கல்லூரி மாணவர் சஞ்சிகையிற் பிரசுரிப்பதற்கென அவர் இயற்றிக் கொடுத்த "தமிழ்த்தாய் வாழ்த்து" இந்நூலிற் பிரசுரமாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்துவால் வல்லுனராக உருவாக்கப்பட்ட திரு. வேலாயுதபிள்ளை 1944ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகப் படிப்புக்குத் தெரிவானார். இங்கே இவருக்குச் சுவாமி விபுலாநந்த அடிகளின் தொடர்பு கிட்டியது. இது இவர் வாழ்க்கையில் ஒரு புதுச்சகாப்தத்தையே உருவாக்கி விட்டது எனலாம்.

பல்கலைக் கழகத்தில் முதலாமாண்டில் தமிழ் கற்ற மாணாக்கர்களிடையே இவரே மிக்க திறமையுள்ளவராக மிளிர்ந்தார். முதலாம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சிறப்பாகத்தேறி உதவிப் புலமைப் பரிசிலையும் தட்டிக்கொண்டார். முதலாம் ஆண்டு முடிவடைந்ததும் பட்டமானிப் படிப்புக்கு இவர் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் வகுப்பிற் சேர்ந்தார். இக்காலத்தில் இவருக்கு அடிகளிடமிருந்த அன்பும் பக்தியும் வளரத்தொடங்கின. இருவருஞ் சேர்ந்து பல விடயங்களையும் அலசி ஆராய்வதில் அதிக நேரஞ் செலவிடுவர். அடிகளார் தமது அறிவுக் களஞ்சியத்தில் ஒருபெரும் பகுதியைத் திரு. பிள்ளையவர்களுக்கு ஊட்டினார். பிள்ளையவர்களும் கைகட்டித் தலைவணங்கிக் குருவின் உபதேசங்களை ஏற்றுக்கொண்டார். இவர் விபுலாநந்த அடிகளின் தலைசிறந்த மாணவன். இவரைத் தம்முடனேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று அடிகளார் எண்ணிய காலமுமுண்டு. அடிகளாரின் தொடர்பால் பிள்ளையவர்களின் தமிழறிவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. பட்டமானிப் படிப்பு முடிந்ததும் இவரைத் தமிழ்ப் பகுதி வியாக்கியானியாக்கி ஆராய்ச்சி வேலைகளில் இறங்கச் செய்யலாம் என்று பிள்ளையவர்களுக்கு ஆர்வமூட்டினார் அடிகள். ஆனால் விதி சதி செய்து விட்டது. பட்டமானிப்படிப்பு இறுதி ஆண்டில் காலன் அடிகளாரைக் கவர்ந்து சென்று விட்டான். எனினும் தன் அறிவுத்திறமையால் பட்டதாரிப் பரீட்சையில் சிறப்புடனே தேறினார். அடிகளாரின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட பேராசிரியர் பிள்ளையவர்களிடம் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அதுவுமல்லாமல் அவரது முன்னேற்றத்துக்குமே தடைபோட்டு விட்டார்.

விதியின் விளைவு பாதகமாயிருப்பது கண்டு மனமுடைந்த பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆசிரியர் பணியை மேற்கொண்டார். 1947ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டுவரை இப்பணி நீடித்தது. இக்காலப்பகுதியில் கல்லூரி வைபவங்களிற் பாடுவதற்கென இவர் பல பாடல்களை ஆக்கிக்கொடுத்தார். பின்னர் அரசாங்க சேவையில் நாட்டங்கொண்டு இலங்கையின் தலைநகரான கொழும்பில் அரசகரும மொழித் திணைக்கழத்தில் போதனாசிரியராக 1953ஆம் ஆண்டு கடமை மேற்கொண்டார். இங்கே 1958ஆம் ஆண்டுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாற்றிய காலத்தில் இலங்கையின் பல பாகங்களுக்குஞ் சென்று அரசாங்க அலுவலகங்களில் தமிழில் கடமையாற்றுங் கரும வழிவகைகளைப் போதித்து வந்தார். அரசாங்கப் பாஷைகள் என்னுஞ் சஞ்சிகைக்கு ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

1954ஆம் ஆண்டு சித்திரை மாதம் பிள்ளையவர்கள் பல்கலைக்கழகத்தில் தன் சகமாணவியாகக் கல்வி பயின்ற செல்வி நேசமலர் பேரம்பலத்தைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கரம்பற்றினார். இல்லறமே நல்லறமாக வாழ்ந்துவந்த இருவருக்குங் கிடைத்த புத்திர செல்வங்கள் ஐந்து: சிவபாலன் (வைத்திய கலாநிதி - அமெரிக்கா), நந்தபாலன் (வைத்திய கலாநிதி - இங்கிலாந்து), மஞ்சுளா (வைத்திய கலாநிதி - கனடா), சிவக்குமார் (கணக்காளர், கணனிப் பொறியியலாளர் - கனடா), நந்தகுமார் ஆகியோராவர். இவர்களுள் நந்தகுமார் இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்து விட்டார். மற்றவர்களில் மூவர் தத்தம் பதிகளில் இல்லறமேற்கொண்டு பெருமையுடன் வாழ்கின்றனர்.

இவர் போதனாசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்குங் காலத்தில் இவரது அறிவுத்திறமையை அறிந்து கொண்ட கொழும்பு பாடநூற் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தார் இவருக்கு உயர் கல்வி நூல் மொழிபெயர்ப்பாளராகவும், பதிப்பாசிரியராகவும் பதவி உயர்வு வழங்கினர். அங்கு இவர் கடமையாற்றிய காலத்தில் புவியியல் வரலாறு, கல்வியியல் ஆகிய துறைகளில் பாடநூல்களை மொழிபெயர்த்தும், பல மொழிபெயர்ப்பு நூல்களைப் பதிப்பாசிரியராகச் செவ்வை பார்த்தும் பணி புரிந்தார். இவ்வாறு இவர் மொழி பெயர்த்த நூல்களுள் "வியத்தகு இந்தியா" (The Wonder India by Bhasham) என்னும் நூல் குறிப்பிடத் தக்கது. இவரது மொழிபெயர்ப்புக்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும், பண்டிதர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டன. இக்காலப்பகுதியில் இவர் கல்வி அமைச்சிலும் பரீட்சைத் திணைக்களத்திலும் வேறு பல கடமைகளும் புரிந்தார்.

1971ல் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் தமிழ்ப்பகுதிக்குப் பிள்ளையவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கே 1971 -75, பின்னர் 1979 -83 ஆகிய காலவரையறைகளில் தமிழ்ப்பாட விதானங்களைத் திருத்தியும், புதுக்கியும், புதிய தமிழ்ச் சைவ பாடநூல்களை எழுதியும் அருந்தொண்டாற்றினார். இவர் எழுதிய பாடநூல்கள் பாடசாலைகளில் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. 1976 - 79க்கு இடையேயுள்ள காலப்பகுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அந்தரங்கக்கிளையின் உதவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையாணையாளராகக் கடமையாற்றி அக்கிளையின் தமிழ் அலுவல்களைச் சீராக்கி ஒழுங்கு படுத்தினார். அரசாங்க சேவையிலிருந்த காலத்தில் இவர் அருஞ்சொல்லமைக்கும் வேலையில் ஈடுபட்டுப் பல புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தமிழ் அறிவுக்களஞ்சியத்துக்கு மெருகூட்டினார். விபுலாநந்த அடிகளின் மறைவுக்குப் பின்னும் தன் தமிழறிவை வளர்க்கும் ஆர்வத்தை இவர் கைவிடவில்லை. இவர் கொழும்பில் வாழ்ந்து வந்த காலத்தில் சித்தாந்த வித்தகர் புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் அவர்களிடம் பாடங்கேட்டுத் தன் தமிழ்ப் புலமையை மேலும் பெருக்கிக் கொண்டார்.

பிள்ளையவர்கள் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தபோது அரசாங்கம் இவருக்குப் பல்வேறு சிறப்புப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பையும் கையளித்தது. இலங்கையிற் கல்வியமைச்சு நூற்றாண்டு விழா கொண்டாடியபோது அதன் செயற்குழு ஆங்கிலத்தில் வெளியிட்ட 3 தொகுதிகளைக் கொண்ட "இலங்கையின் கல்வி" என்னும் நூற்றாண்டு மலரின் தமிழாக்கத் தொகுதிக்குத் தலைமை தாங்கிப் பல கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்தும், பிறர் மொழி பெயர்த்தனவற்றை மூலப்பிரதியோடு ஒப்பிட்டுச் செப்பஞ் செய்தும் முழுத்தொகுதியையும் இவர் பதிப்பித்தார்.

இவர் ஆற்றிய பிறபணிகள் பின்வருமாறு:

1965 முதல் 1985 ஆம் ஆண்டு வரை பரீட்சைத் திணைக்களத்தில் க.பொ.த. (சா.த) தமிழ்ப்பாடத்துக்குப் பிரதான கட்டுப்படுத்தும் பரீட்சையாளராகப் பணிபுரிந்தார். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் (1970ஆம் ஆண்டுகளில்) மொழியியல் கற்கும் பட்டதாரி வகுப்பு மாணவருக்கு மொழிபெயர்ப்புக் கலை, மொழியாக்கம் ஆகிய பாடங்களில் விரிவுரை நிகழ்த்தினார். இலங்கைச் சட்டக்கல்லூரி (1972 -1980) புகுமுகத் தேர்வுக்கான பரீட்சகர் குழுவில் தமிழ்ப் பரீட்சகராகப் பணிபுரிந்தார். யாழ்ப்பாணத் தமிழ்ப்பல்கலைக் கழகத்துக்கு முன்னோடியாகக் கொழும்பிலே வெள்ளவத்தையில் நாவலர் கூடம் (Navalar Hall) தொடங்கிய காலந்தொட்டு அது மூடப்பட்டது வரை பல்கலைக்கழக வெளிவாரி மாணவருக்குத் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இப்பொழுது இவரது பொதுப்பணிகளைச் சிறிது பார்ப்போம்:

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக ஈராண்டுகள் கடமை புரிந்தார். இக்காலத்திற் சங்கம் இனிது வளர்ச்சியடைந்தது. கொட்டாஞ்சேனை விவேகானந்த சபையின் அங்கத்தவராயிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலம் அதன் நடவடிக்கைகளிற் கலந்து அரும்பணி யாற்றினார். இத்தகைய அரும் பெரும் பணிகளை ஆற்றியபின் பிள்ளையவர்கள் தம் 60ஆம் வயதில் அரசாங்க சேவையினின்றும் ஓய்வு பெற்றார். அவர் இளைப்பாறிய பின்னும் அவரது பணிகள் ஓயவில்லை. கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பாடவிதானத் திணைக்களம் ஆகியன மென்மேலும் அவர் உதவியை நாடின.

1988ஆம் ஆண்டு தன்னருங் குழந்தைகளின் அழைப்பின் பேரில் இவர் கனடாவுக்குப் புறப்படும் நிர்ப்பந்தம் உண்டாகியது. புறப்படும்போது இவர் தான் 40 ஆண்டுகளாகத் தொகுத்து வைத்திருந்த அரிய நூலகத்தின் ஒரு பெரும் பகுதியை விவேகானந்த சபைக்கும், இன்னொரு பகுதியைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கும் அன்பளிப்புச் செய்தார். யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாகி அதை மீண்டும் அமைக்க முயன்றபோது தமது நூலகத்திலிருந்து 100 நூல்கள்வரை அதற்கு அன்பளிப்புச் செய்தார்.

தாயகத்தைவிட்டுக் கனடா மண்ணில் காலூன்றிய பின்னும் பிள்ளையவர்களின் தமிழ்ப்பணி நின்று விடவில்லை. கனடாவிலுள்ள தமிழன்பர்களும், தாய்த்திருநாடாம் இலங்கைவாழ் தமிழன்பர்களுங் கேட்டபோதெல்லாம் எதுவித ஊதியமும் பெறாது கவிதைகளையுங் கட்டுரைகளையும் யாத்து வழங்கியும், அவர்கள் ஐயங்களைத் தீர்த்தும் பல வகையில் உதவி நல்கினார். காலப்போக்கில் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த பிள்ளையவர்களின் உள்ளத்தை இறைபக்தி ஆட்கொள்ளத் தொடங்கியது.

ஆகவே கனடாவில் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் இயற்றிய செய்யுள்களெல்லாம் இறைவன் புகழ் பாடுவனவாகவே அமைந்துள்ளன. அவற்றை இந்நூலின் இரண்டாம் பாகத்திற் சேர்த்துள்ளேன்.

இவ்வாறு இறவாப்புகழ் படைத்த திரு. வேலாயுதபிள்ளை என்னும் பெருந்தகை 1996ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23ஆம் திகதி சிறிய கால இடைவெளிச் சுகயீனத்தின் பின்னர் அமரருலகடைந்து விட்டார். ஆயின், அவர் விட்டுச் சென்ற அடிச்சுவடுகள் இன்னும் பசுமையுடன் திகழ்கின்றன; என்றும் திகழும் என்பதில் ஐயமில்லை. ஒருவர் இறந்தபின் அவரை மக்களுக்கு நினைவூட்டுபவை அவர் விட்டுச் செல்லும் பொக்கிஷங்களேயாகும். பொக்கிஷங்களுள் மிக அருமையான அறிவுப்பொக்கிஷத்தைத் தமிழுலகிற்கு விட்டுச் சென்றுள்ள திரு. வேலாயுதபிள்ளையவர்களை நினைவு கூர்ந்து அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## செய்யுள்கள்:


1. தமிழ்த்தாய் வாழ்த்து 1
2. வள்ளுவன் புகழ் 2
3. காந்தி அண்ணலின் நினைவு 3
4. பாரதி வந்தான் 4
5. விபுலாநந்த அடிகள் நினைவு 5
6. இரங்கற்பாக்கள்:
   - I. தோமஸ் கிரே பாடியவை 6
   - II. குழந்தையை விளித்துக் கூறியது 11
   - III. தாய் மகளை விளித்துக் கூறியதாகப் பாடப்பட்டது 12
   - IV. அடங்கியோ விட்டாய் இன்று 15
7. புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் 17
8. சிவாய சுப்பிரமுனிய அடிகள் 18
9. நல்லிசைப் புலவோன் 20
10. மனக்கினிய தனக்குப் புலவன் உரிமையாக்கும் இவ்வடிகளையே 21
11. காலிமுகக் கடற்கரை 23
12. குயில் 24
13. பொங்கும் இன்பம் எங்குந் தங்குக 25
14. கொடுமழை 26
15. லயிக்கா என் காதலீ! 27
16. பாரசீகக் காவியம் 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. செகப்பிரியர் செய்யுள் விருந்து:

I. புயல் 32

II. உரோமியோவும் யூலியற்றும் 36

III. தண்ணளி 41

IV. நாவலர் இருவர் 42

## கட்டுரைகள்:

1. விபுலாநந்த அடிகள் 52

2. இராவணன் வீழ்ச்சி 60

3. பாரி மகளிர் 62

4. பட்டினத்துப் பிள்ளையார் 64

5. பட்டினத்தடிகள் தாய்க்கு இறுதிக்கடன் தீர்த்தவாறு 66

6. தைப்பொங்கலுக்கும் நத்தார்ப் பண்டிகைக்கும் உள்ள தொடர்பு 67

7. தாலாட்டு 70

8. சிலேடை 72

9. இலச்சினை விளக்கம் 76

10. பகவத்கீதை 77

11. அறுபத்து நான்கு கலைகள் 80

12. இந்துசமயமும் இக்கால விஞ்ஞானமும் 90

13. மொகஞ்ச தாரோவும் சிந்துவெளி நாகரிகமும் 97

14. சிவலிங்க வழிபாடு 117

15. நால்வர் வழிபாடு 138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

(நேரிசை யாசிரியப்பா)

உலகினி லின்று நிலவுபல் மொழிகளுட்
பொன்மையும் மென்மையும் நன்மையுங் கொண்டு
கண்டென வினிய வண்டமிழ் நங்காய்!
புவிமகள் திலகமாய்க் கவினுற விளங்குந்
தமிழகத் துதித்தே யமிழ்தென மிளிர்வாய்,
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளுங்
குன்ற மெறிந்த வென்றிவேற் கரனுங்
குருவா யமர்ந்து திருவாய் மலர்ந்து
குறுமுனிக் கோதும் பெருமையுற் றனைநீ;
தலையிடை கடையென நிலைபெறு சங்கம்
மூன்றனு ளுறைந்தே சான்றோர் பல்லோர்
வளர்க்க வளர்ந்தனை; அளப்பருஞ் சிறப்பின்
நல்லோர் நாவிடை நயந்துறைந் தனையால்,
நின்னருஞ் சிறப்பை யென்புன் னாவாற்
பன்னிப் பகரினு மின்னற் படுவாய்;
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமும்
வள்ளுவ முனியருள் தெள்ளிய குறளும்
மணிவா சகனருள் அணிவா சகமும்
மூவ ரருளிய தேவா ரங்களுஞ்
சிலப்பதி காரமுஞ் சிந்தா மணியுங்
கம்பன் கவியுங் கந்த புராணமும்
மணிமே கலையும் அணிசெய விளங்கும்
அந்தமிழ் நங்காய்! அத்தமி லன்னாய்!
உன்னிக ரொருமொழி யிந்நிலத் தில்லை
ஆரியந் தானுஞ் சீரிழந் தொழிந்த
தன்னாய் நீயோ வின்னு மிளமையோ
டிந்நிலந் தனிலே மன்னிய மாட்சி
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!
தேவ தேவனை யேவல் கொண்டும்
ஆற்றி லேட்டை யூற்றெதிர் விட்டும்
நெருப்பி லேட்டைக் கருக்கா தெடுத்தும்
காயாப் பனைகளைக் காய்க்கச் செய்தும்
முதலைவாய்ப் பாலனை முதல்போற் றந்தும்
பற்பல வான வற்புத மியற்றியும்
பெரும்புகழ் படைத்த வருந்தமி ழணங்கே!
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண் டாக
வாழிய நீயே வாழிய நீயே!

---

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் சஞ்சிகையான THE YOUNG HINDU (DECEMBER 1943) என்பதில் வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் புகழ்

மண்ணுலகில் நிலைத்தெழுந்து மழைமுகில்கள் தோய
விண்ணுலகிற் சிரம்போக்கும் வீறிமய மென்ன
எண்ணரிய வளம்பெருக்கி யிலங்குதமிழ் மறையின்
திண்மைநிலை காணாத கண்ணென்ன கண்ணே
திருக்குறளைக் காணாத கண்ணென்ன கண்ணே! 1

அறிவுலகைக் குறட்பாவால் அளந்தென்றும் மாறா
அறவியல்பும் பொருளியல்பும் அன்பியல்புங் காட்டி
நெறிவழியே நீணிலத்தார் நின்றிடநூல் செய்த
திறலுடையான் சீர்கேளாச் செவியென்ன செவியே
திகழறிவன் சீர்கேளாச் செவியென்ன செவியே! 2

மாறுபடும் மதநூல்கள் மக்களினத் தவரைக்
கூறுபடச் செய்திடலாற் குவலயத்தில் யாருந்
தேறுபொருள் கொழித்தெடுத்துத் தீந்தமிழிற் றந்த
வீறுடையான் புகழ்பேசா வாயென்ன வாயே
விளங்கறிவன் புகழ்பேசா வாயென்ன வாயே! 3

வேதியர்க்கும் மற்றவர்க்கும் வெவ்வேறாய் நீதி
ஓதியவர் வாயடங்க வுலகமொருங் கேத்தச்
சாதிமத பேதமறச் சமரசநூல் தந்தான்
நீதியினை நினையாத நெஞ்சென்ன நெஞ்சே
நிறையறிவன் றனைநினையா நெஞ்சென்ன நெஞ்சே! 4

கற்றவர்தம் ஆராய்ச்சிக் கப்பலிலே சென்று
பொற்றிரள்கள் நனியீட்டிப் புதுப்புவனங் கண்டும்
குற்றமிலா முழுமணிகள் குளித்தெடுத்தும் வாழும்
வற்றலிலாக் கடல்படியார் வாழ்வென்ன வாழ்வே
வள்ளுவன்செய் குறள்படியார் வாழ்வென்ன வாழ்வே! 5

---

` *வெளியிட்ட சஞ்சிகை: 'உதயம்'
மலர் 2 இதழ் 2,3 (1955 வைகாசி - ஆனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி அண்ணலின் நினைவு

ஒட்டிய யாக்கை தோன்றும் ஊன்றுகோல் கையிற் றோன்றும்
கட்டிய கதர்நூ லாடை காலின்மே லுயர்ந்து தோன்றும்
மொட்டலர் முறுவல் தோன்றும் முகம்பொழி கருணை தோன்றும்
தெட்டிலாக் காந்தி யண்ணல் திருவுரு நினையுங் காலே. 1

சாந்தமும் அருளுந் தோன்றும் சத்தியப் பொலிவு தோன்றும்
சாந்துயர் இழைத்தார் பாலும் சலங்கொளாச் சால்பு தோன்றும்
வேந்தரும் வணங்கும் நோன்பின் வீறுகொள் ஒளியும் தோன்றும்
மாந்தருள் தெய்வ மானான் மாண்பினை நினையுங் காலே. 2

ஊரெலாம் நடந்து நீதி உரைத்திடுங் கோலந் தோன்றும்
சீரிலா மக்கள் வாழ்வைத் திருத்திடுஞ் சேவை தோன்றும்
நேரலார் சமயப் பூசல் நிறுத்திடும் முயற்சி தோன்றும்
பாரதப் பிதாவாங் காந்தி பணியினை நினையுங் காலே. 3

இறைவழி பாடு செய்யும் இரும்பெருங் கூட்டந் தன்னில்
வெறியனின் குண்டு மார்பைத் துளைத்தபோ திராம நாமம்
குறைவற ஓதிச் சாய்ந்த குளிர்முகக் கனிவு தோன்றும்
நிறைகுணத் தண்ணல் அன்பின் நீர்மையை நினையுங் காலே. 4

கத்தியும் வாளு மின்றிக் கனலுமிழ் குண்டு மின்றி
யுத்தமொன் றுஞற்றி நாட்டின் சுதந்திரம் ஈட்டி என்றும்
சத்தியம் அகிஞ்சை தாமே சயந்தரும் படையென் றோதும்
வித்தகன் உலகுக் கெல்லாம் விளக்கொளி வழங்கி னானே. 5

ஒள்ளிய அறிவின் செம்மல் உலகெலாம் போற்றும் ஞானி
எள்ளலில் தூய வாழ்வின் இலக்கணங் கண்ட மேதை
வள்ளுவப் பெரியோன் முன்னாள் வண்டமிழ் மொழியில் ஈந்த
தெள்ளிய குறட்கு வாய்ந்த தெளிவுரை காந்தி வாழ்வே. 6

தொன்மைய தான இந்து சமூகத்தில் தோன்றி விட்ட
புன்மையும் வழுவும் பொய்யும் போக்கச்சீர் திருத்தஞ் செய்து
நன்மையாம் வழியில் நாடு செழித்திட வமைதி நாட்டித்
தன்னையே தியாகஞ் செய்தான் சால்பினில் இமயந் தானே. 7

போதியின் நீழல் வைகும் புனிதனும் பாவம் போக்க
ஆதியின் சுதனாய் வந்த ஐயனும் அறபு நாட்டின்
சோதியும் மற்று முள்ள தொல்பெருஞ் சமயத் தோரும்
ஓதிய ஞான மெல்லாம் உணர்த்தினான் வாழ்க்கையாலே. 8

---

வெளியிடப்பட்ட சஞ்சிகை 'உதயம்'
மலர்2 இதழ் 6,7 (1955 புரட்டாதி - ஐப்பசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறஞ்சிதைந் தழிய மாந்தர் அல்லல்வாய்ப் பட்டு மாள
மறந்தலை தூக்கி யாடும் போதெலாம் மண்ணில் வந்து
பிறந்துல களிப்ப னென்ற பெரியனே பரத நாட்டிற்
சிறந்தபோர் பந்தர் வந்த செம்மலென் றேத்து வோமே! 9

உலகிடை மாந்தர் வாழும் ஒழுகலா றெலாம் மறந்து
கலகமும் பகையுங் காழ்ப்புங் கயமையுங் கொலையும் பொய்யும்
பலபல பெருக்கிச் செல்லும் பாழ்நிலை யொழிக பாரில்
அலகிலந் தண்மை சான்ற அண்ணலின் வழியே வாழ்க! 10

## பாரதி வந்தான்

ஒளிரும் புலமைப் பஞ்சத்தால் ஒட்டி யுலர்ந்து வளங்குன்றித்
தளருந் தாயின் நரம்புகளிற் சக்தி பாய்ச்சி வலிசேர்த்துக்
கிளரும் இளமை எழிலூட்டிக் கீதச் சுவையு முடன்கூட்டி
வளரும் வண்ணம் வழிகாட்ட வந்தான் கவிஞன் பாரதியே. 1

கற்றார் சொத்தே கவியென்ற கட்டை யுடைத்துக் கவியின்பம்
மற்றோர் தமக்கும் உரித்தென்ற மரபை நாட்டி முகிலென்ன
நற்றேன் சொட்டுங் கவிதைபல நவமாய்ப் பாடித் தமிழன்னை
வற்றாச் செல்வம் பெற்றுய்ய வந்தான் கவிஞன் பாரதியே. 2

தூங்கா நின்ற தமிழினத்தைத் துயிலின் எழுப்பிச் சுதந்திரத்தில்
நீங்காக் காதல் கொண்டெவரும் நிமிர்ந்து நிற்க நெறிகோலித்
தேங்காய் கதலி திராட்சையெனச் செப்புஞ்செய்யுள் மரபெண்ணிப்
பாங்காய்த் திராட்சைப் பாகத்திற் பாக்கள் தந்தான் பாரதியே. 3

பாழும் மூடக் கொள்கைகளும் பயனில் பழைய வழக்கங்களும்
ஆழும் அடிமை மனப்பாங்கும் அச்சம் சோர்வு கவலைகளும்
வாழுந் தமிழர் கூட்டத்தை வாட்டும் நோய்க ளெனக்கண்டே
சூழுங் கேட்டைத் தவிர்த்தற்காய்ச் சொரிந்தான் கவிதை பாரதியே. 4

பழமை தாமே உயிரென்று பற்றிப் பிடிப்போர் மடமையையும்
பழமை எல்லாந் தீமையெனப் பழிக்குங் குருடர் புன்மையையும்
பழகுந் தமிழில் அழகாகப் பாடித் தமிழர் முன்னேறப்
பழமை புதுமை இரண்டிற்கும் பாலம் அமைத்தான் பாரதியே. 5

மடியும் நோயும் மாய்ந்திடவும் மடமைக் கொள்கை தீய்ந்திடவும்
கொடிய அடிமை ஒய்ந்திடவும் கோழைத் தன்மை வீழ்ந்திடவும்
இடியும் புயலு மெனவார்த்தே இன்பம் விளைய அன்புத்தேன்
வடியுங் கவிதை பலதந்தான் வண்மைக் கவிஞன் பாரதியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணெய் வைத்து நெய்க்கலையும் வீணர் விதியை நோகுமவர்
மண்ணை நரகாய் மாற்றுபவர் மனிதப் பண்பைப் பாற்றுபவர்
பெண்ணைப் பழிப்போர் என்றிவர்தம் பேதை மதியைப் போக்கியவர்
கண்ணைத் திறக்கக் கவிசெய்தான் கவிஞர் கோமான் பாரதியே. 7

உலக வாழ்வை வெறுத்தொதுக்கும் உதவாச் செய்யுள் பிறர்செய்ய
உலக வாழ்க்கைப் பிரச்சினையே உண்மைக் கவிதைப் பொருளாமென்(று)
உலக வாழ்வைச் சீராக்கும் உயர்ந்த நோக்கிற் கவிசெய்தே
உலகம் வாழத் தமிழ்வாழ உழைத்தான் கவிஞன் பாரதியே. 8

இயற்கைத் தாயின் எழிலினையும் இறைவன் கருணைப் பெருக்கினையும்
செயற்கைக் கலையின் திறத்தினையும் செம்மைத் தமிழின் சிறப்பினையும்
கயற்கண் மாதர் உயர்வினையும் காதல் அன்பின் களிப்பினையும்
புயற்கே நிகராம் புலமையினால் பொழிந்தான் பாவாய்ப் பாரதியே. 9

கன்னல் நிகர்க்குந் தமிழென்னுங் கடலிற் படிந்து கற்பனையாம்
துன்னும் வியன்மா மலையேறித் தூய இயற்கை அறிவென்னும்
மின்னல் மின்னித் தமிழ்நாடாம் மென்பால் செழித்து வளங்கூர
முன்னிக் கவிதை மழை பொழியும் முகிலாய் வந்தான் பாரதியே. 10

---

வெளியிடப்பட்ட சஞ்சிகை ‘உதயம்’
மலர்1, இதழ்6-7 (1954, புரட்டாதி - ஐப்பசி)

---

# விபுலாநந்த அடிகள் நினைவு

ஈழத் தாயின் திருமகனே, இன்பத் தமிழுக் கொருமகனே,
ஆழக் கடனேர் அறிவோனே, அருளே உருவாந் துறவோனே,
வாழத் தமிழைப் பலவகையால் வளர்த்துச் சிறப்புச் செய்தோனே,
யாழைப் புதுக்கித் தந்தோனே, யாரே உன்னை ஒப்பாரே! 1

செம்மை அழகு நலமென்னும் தெய்வப் பண்பைத் தெரிவிக்கும்
மும்மைத் தமிழின் துறையெல்லாம் மூழ்கித் திளைத்த புலவோனே
இம்மைப் பிறவிப் பயனெல்லாம் இன்பத் தமிழின் பணியென்றே
அம்மெய்ப் பொருளை அறிவுறுத்தி அழியா வாழ்வைப் பெற்றாயே! 2

பண்டைத் தமிழர் கலைமாண்பைப் பாரோர் அறியப் பன்முறையும்
பண்டைப் பனுவற் கடல்படிந்து பாழில் மறைந்த பொருளாய்ந்து
விண்டு விரித்தாய் யாழ்நூலை விபுலா 'நந்தா நீசெய்த
தொண்டுக் குவமை சொலப்போமோ, சொல்லிற் படுமோ நின்புகழே! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதங்கொள் கலையாம் நாடகத்தை இழந்தார் இற்றைத் தமிழரென
விதங்கொள் வடநூல் ஆங்கிலத்தில் விளங்குஞ் செம்மைப் பொருடேர்ந்து
மதங்க சூளா மணியென்னும் மங்காத் தமிழ்நூல் செய்தோய், நின்
பதங்கள் மனத்தில் இருத்தியுனைப் பரவிப் பணிவோம் பத்தியொடே. 4

சொல்லின் கிளத்தி ஒருத்தியவள் தோன்றுங் கோலம் மொழிவகையாற்
பல்ல வாகு மெனுமெய்ம்மை பாங்காய் உணர்த்த ஆங்கிலத்தின்
மல்லற் கவிதை வளந்தேர்ந்து மாணத் தமிழில் வழங்கினையால்,
இல்லைப் புலவர் எம்மிடையே, இன்னும் ஒருகால் வாராயே. 5

முறையாய்த் தமிழைக் கல்லாதோர் முழுதும் அறிந்தார் போனடிப்போர்
நிறையாப் போலிக் கல்வியினோர் நெஞ்சில் நேர்மை இல்லாதோர்
கறையே மலிந்த நூலியற்றிக் கன்னித் தமிழைச் சிதைக்கின்றார்
அறைபோ யவருக் கறிவுறுத்த அண்ணல் ஒருகால் வருவாயே! 6

# இரங்கற்பாக்கள்

## I

(தோமஸ் கிரே என்னும் ஆங்கிலப்புலவர் (1716-1771) நாட்டுப்புற திருக்கோவிலையடுத்துள்ள இடுகாட்டிலிருந்து பாடிய இரங்கற்பாவின் **(Elegy written in a country churchyard)** தமிழாக்கம். தமிழில் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தது)

மாலை நேர மணிபகலின்
மறைவுக் கிரங்கும்; வயலிடத்தே
வேலை செய்த உழவன்றன்
வீடு நோக்கி மெலநடக்கும்;
காலி தொழுவக் கன்றுள்ளிக்
கதறி மேய்ச்சல் வெளிநீங்கும்;
ஞாலந் தன்னை இருள்சூழ
நானுந் தமியேன் ஆனேனே. 1

அந்தி ஒளியில் திகழ்ந்த நிலத்(து)
அழகுக் காட்சி மங்கிடுமால்;
இந்த ஞாலத் திடமெங்கும்
இரும்பே ரமைதி தங்கிடுமால்;
செந்தேன் உண்டு முரல்வண்டு
சேக்கைக் கேகும்; சேய்மையிலே
அந்தீஞ் சலங்கை ஒலியடங்க
ஆட்டுப் பட்டி கண்ணயரும். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை வல்லி இலைபோர்த்த
பழைய கோவிற் கோபுரத்தின்
துச்சில் ஒதுங்கிப் பகலெல்லாந்
தூங்கும் ஆந்தை தன்னரசுக்(கு)
அச்சம் விளைக்கும் வகையாங்கே
அணுகும் பகையின் அல்லலெடுத்(து)
உச்சி வானில் ஊர்மதிக்கங்(கு)
உரைக்கும் முறைப்பா டதுகேட்கும். 3

முற்றிப் பருத்து நிழல் செய்யும்
முருட்டு மரங்கள் அவற்றின்கீழ்க்
கற்றைப் பசும்புல் கலித்துள்ள
கவிப்பின் கீழாங் கல்லறையுள்
எற்றைப் போதும் அமைதிபெற
எண்ணில் லாதோர் இடப்பட்டோர்
சிற்றூ ரவர்தம் முன்னோராந்
திருந்தா மாக்கள் துயில்கின்றார். 4

காலைப் பூவின் நறு நாற்றங்
கமழும் மென்பூங் காற்றழைப்பும்
சோலைக் குடம்பை வாயிருந்து
சுவைப்பண் மிழற்றும் புள்ளினமும்
கோலச் சேவற் கூவிளியும்
கொம்பின் ஒலியும் இனியிவரை
ஞாலப் படுக்கை தனிலிருந்தெந்
நாளும் எழுப்ப மாட்டாவே. 5

அன்னார்க் கடிசில் ஆக்கவினி
அடுப்பில் நெருப்பும் எரியாதே;
கொன்னே கழியாக் குலமகளிர்
குறியார் மாலைக் கடனினியே;
பொன்னேர் சிறுவர் பூங்குதலை
பொழிந்தங் கவரை வரவேற்கார்;
முன்னே முத்தம் பெறவோடி
முழங்கால் மீதும் ஏறாரே. 6

சிறப்பும் பணமும் செல்வாக்கும்
தேடி அலையார்; தினந்தோறும்
உறக்கம் இல்லா திரவுபகல்
உயரும் வழிகள் தமையெண்ணார்;
புறத்தும் அகத்தும் பொருந்தாத
போலி வேடம் பலபூணார்;
அறத்தைக் கொல்லார்; பழியஞ்சி
அகந்தை கழிய வாழ்வாரே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக் குதிரை தனைப்பூட்டி
அதிகா ரத்தேர் ஓட்டும்நீர்
'காசைப் பொருளைக் காணாதார்,
கல்வீட் டிருக்கை அறியாதார்,
தேசைத் தேடும் முயல்வில்லார்
செயலில் நுகர்வில் உயர்வில்லார்
நீசப் பிறவி மாக்கள் என
நிந்தித் திவரை நகையீரே! 8

யாரும் நாடாப் பதியுள்ளார்
எனினும் இவருள் ஒருவேளை
கூரும் தெய்வக் கனல்பொங்கிக்
குமுறும் நெஞ்சை உடையோரும்
பாரைப் புரக்கும் செங்கோலைப்
பற்றும் கையை உடையோரும்
வாரம் பெருகப் பண்மீட்டல்
வல்லார் தாமும் வாழாரோ? 9

கல்லா மாக்கள் கலைநூலைக்
கண்ணாற் றானுங் கண்டறியார்;
வல்லார் ஏத்தும் அறிவென்னும்
வனிதை அருளின் சுவையறியார்;
பொல்லா வறுமைப் பிணியெண்ணம்
பொங்கா வண்ணம் நசித்துவிடக்
கல்லாய் மரமாய் உணர்வொடுங்கிக்
காலங் கழிப்பார் புவிமீதே. 10

நீலக் கடலின் உதரத்தில்
நீங்கா இருள்சேர் குகைமறைவில்
கோலக் கதிர்கால் குருமணிகள்
குவையாய்க் கிடக்கும், யாரறிவார்?
ஞாலத் தழகார் நறுமலர்கள்
நயக்கும் கண்ணுக் கெட்டாமல்
பாலைக் காற்றில் மணம்போக்கிப்
பயனற் றழியும், அறிவார் யார்? 11

பேரும் புகழும் இல்லாதார்,
பெருமை பேசும் வாயில்லார்;
வீரம் விளங்கார் இவர்தம்முள்
வீமன் ஒருவன் வாழானோ?
காரும் வெள்கக் கவிபொழியும்
கம்பன் ஒருவன் வாழானோ?
தேரும் தகையால் நேருநிகர்
தேயத் தலைவன் வாழானோ? 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் கூடி இவர்பெருமை
கூறும் மக்கட் குழாமில்லை;
ஆட்டம் பாட்டோ டெதிரேற்பார்
ஆரும் இல்லை; இவர்பேச்சைக்
கேட்டுக் களிக்கச் சபையில்லை;
கீர்த்தி பாடக் கவியில்லை;
வீட்டுக் கப்பால் புகழ்போக்கார்;
விதியால் வீழ்ந்தார் இவரம்மா! 13

மனத்தைக் கல்லாய் மாற்றார்;தம்
மானம் விற்றுப் புகழ்வாங்கார்;
நினைத்த எண்ணம் நிறைவேற்ற
நியாயம் தன்னைக் கொலைசெய்யார்;
கனத்தைப் பணயப் பொருளாக்கிக்
காமக் களவுச் சூதாடார்;
இனத்தை அழிக்கும் பழியெண்ணார்;
இறைவன் கருணை மறவாரே. 14

நித்தம் இரைச்சல் நீங்காத
நிறைவில் நகரில் வாழ்கின்ற
பித்தம் பிடித்தோர் பகட்டாலும்
பீழை மிக்க பிழைப்பாலும்
சித்தம் திரியார்; திசைமாறிச்
செல்லார்; என்றும் இயற்கையுடன்
ஒத்திங் கமைதிச் சூழலிலே
உள்ளம் ஒன்றி வாழ்வாரே. 15

அடுத்த வாழ்வால் மலராதிங்(கு)
அரும்பில் அழியும் ஆற்றலினார்,
எடுத்த நடையும் பீடுமிலார்,
என்றும் படுத்த உளமுடையார்,
குடத்துள் வைத்த விளக்கேபோல்
குணங்கள் வெளிப்பா டெய்தாமல்
நடத்தும் வாழ்க்கை தனைக்கண்டு
நகைப்பார், ஞானம் இல்லாரே. 16

பிறிந்த உயிரிங் கன்புடையார்
பிரிய நெஞ்சில் நசைகொள்ளும்;
உறங்கும் கண்கள் வேண்டுவதும்
உண்மை அன்பர் கண்ணீரே;
செறிந்த கல்லின் அறையிருந்து
சிணுங்கும் இயற்கை அன்னைகுரல்;
அறிந்த அன்னார் அனலெங்கள்
அடலை யதிலும் வாழ்ந்திடுமே! 17

---

21-07-1963 வீரகேசரியில் வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லறை வாசகம்

இங்கே நிலத்தாய் மடிமீதில்
இளைஞன் ஒருவன் துயில்கின்றான்;
பொங்கும் புகழும் நல்லூழும்
புவியில் அறியான் அவனம்மா;
துங்கக் கலைமா தவன் பிறப்பைத்
துலங்க வைக்க மறுத்திட்டாள்;
மங்கும் முகடி தனக்கென்றே
வரைந்தாள் இந்த வறியனையே. 18

வறியான் எனினும் அவனுளத்தில்
வண்மை நிறைந்து வயங்கியதே;
அறியான் வஞ்சம்; அளியுடையான்
அன்னோன் உயிரின் மாண்பென்னே!
சிறியார் துயருக் கவன்கண்ணில்
சிந்தும் நீரே கொடையாகும்;
இறையோன் அன்புக் கிலக்கானான்
இதுவே பேறாம் அவனுக்கே. 19

இன்னும் அன்னான் சிறப்பெல்லாம்
இயம்பிப் பரப்ப வேண்டுங்கொல்?
பின்னும் அவன்றன் குறையெடுத்துப்
பேசல் பெரிதும் பிழையாமே;
தன்னன் புக்குப் பாத்திரமாம்
தந்தை இறைவன் திருவுளத்தில்
மன்னி என்றும் அவை யாவும்
மாறாத் துயிலில் அடங்கிடுமே. 20

---

குறிப்பு: 1. காலி -பசுக்கூட்டம் 2. சேக்கை - தங்குமிடம்
3. துச்சில் - ஒதுக்கிடம் 4. கலித்துள்ள - செழித்து வளர்ந்துள்ள
5. குடம்பை - பறவைக்கூடு; கூவிளி- கூவுங்குரல்
6. அடிசில் - உணவு;
கொன்னே கழியாக் குலமகளிர் - வீண்காலங் கழியாது தன்கடமை புரியும் மனைவியாக

11 ஆம் பாட்டின் இரண்டாம் அடியின் மற்றொரு வடிவம்:
கோல மணிகள் குவைகுவையாய்க் கொட்டிக் கிடக்கும்; யாரறிவார்?
15. நிறைவில் நகர் - மனநிறைவு தராதநகர்; பீழை - துன்பம்
17. அடலை - சாம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# (குழந்தையை விளித்துக் கூறியது)

### கலிவெண்பா

நந்தகுமார் எங்குழந்தாய், நாலோடேழ் ஆண்டுகளாய்
சொந்தமென எம்முடனே வந்துவிளை யாடிவிட்டுப்
பந்தமெலாம் நீக்கிப் பரிதவிக்க விட்டெம்மை
எந்த வுலகத்துக் கேகினைநீ இப்போதே?
இன்னல் மிகநிறைந்த இன்னாத இவ்வுலகில்
இன்னும் இருந்தால் இடர்மிகுமென் றஞ்சினையோ?
என்ன நினைந்தோநீ எம்மைப் பிரிந்தகன்றாய்!
முன்னம் பிறந்திங்கு மூன்றாநாட் பட்டதுயர்
பின்னும் வருத்தியதுன் பிஞ்சுளத்தைத் தாக்கியதோ?
அன்னையுந் தந்தையும் அண்ணன்மார் மூவருமுன்
அக்காளும் விக்கி அழுவதையும் பார்க்காதே
எக்காலும் மீளா இருந்துயிலை ஏன்விழைந்தாய்?
அன்றுநான் உனைவிட்டுப் பேரா தனைக்ககலச்
சென்று வரும்போது தித்திக்கும் மாங்கனிகள்
வாங்கி வருகவென வாழ்த்தி விடைதந்தாய்
மாங்கனிநான் வாங்குமுனம் மாயமாய்ப் போயினையே!
ஆடி மகிழ்ந்தாய் அயல்வீட்டுப் பாலருடன்
பாடிக் களித்தாய் கதைகள் பலசொல்லிச்
சிட்டுக் குருவியைப்போற் செல்வா சிறுபொழுதும்
கட்டுக்குள் நில்லாமே காலாடிப் பந்தாடித்
துள்ளித் திரிவாய் துடுக்கும் பலபுரிவாய்
பள்ளிச் சிறுவருடன் பம்பரம்போற் சுற்றிடுவாய்
கள்ளம் அறியாவுன் வெள்ளை உளமறிவார்
பிள்ளைத் தனமென்று பேசுவதுங் கேட்டோமே!
இங்கிருந்து நாமிரங்க எங்கேநீ போயினையோ?
அங்கே உனையணைக்க அன்புத்தாய் உள்ளாரோ?
பக்கத்தில் வைத்துனக்குப் பாடங்கள் சொல்வதற்குத்
தக்க துணையான தந்தையுமங் குள்ளாரோ?
அம்மா அறியாமல் ஆசைத்தீன் வாங்கிவர
அம்மான்மார் உள்ளாரோ? அத்தைமார் உள்ளாரோ?
பேரன்பு காட்டும் பெரியம்மா உள்ளாரோ?
சின்னம்மா மாரென்றும் சித்தப்பா மாரென்றும்
பன்னி அழைப்பதற்குப் பற்றுள்ளார் அங்குளரோ?
தண்டெடுத்துக் கைக்கொடுத்துத் தாத்தா எனவழைக்கப்
பண்புள்ள பாட்டனார் பாங்காக ஆங்குளரோ?
கீழ்வீட்டு மாமியென்று கீர்த்தியெலாம் சொல்வாயே,
கீழ்வீட்டு மாமியும் மாமாவும் கிள்ளைமொழிப்
பிள்ளைகளும் மற்றங்கே உள்ளாரோ? பின்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் தோழர்கள் வேறங்கு கண்டோ
உளையுமுளத் தெம்மைவிட்டே உம்பர் உலகடைந்தாய்
நீபோன புத்துலகின் நீர்மையெலாம் ஆரறிவார்?
ஈசன் விரும்பும் இளையவரைத் தன்பாலே
நேசமுடன் தானழைத்து நல்வாழ் வளிப்பனெனப்
பேசுவர் மேலோரப் பேச்சுண்மை யாகுகவே;
பிள்ளையெனத் தந்தவனே பேசா தழைத்திட்டான்;
கொள்ளையென இச்செயலைக் கூறுதற்கு நாமாரோ?
வள்ளலவன் செய்கைக்கு மாட்டோம் வகைகூற
உள்ளியுள்ளி உன்னை, உளமுருகி ஏங்கினுமென்?
எந்தை பெருமான் திருவுள்ளம் ஈதாயின்
நொந்து வருந்திநாம் நோவதுவும் வீணாமே;

நந்தகுமார், எம்பெருமான் நல்லடிக்கீழ் நீவாழ்க!
சிந்தை மகிழச் சிறந்து.

## (இறைவனை வழுத்தி வேண்டியது)

### குறள்வெண் செந்துறை

எவ்வுயிர்க்குந் தாயுமாய்த் தந்தையுமாய் என்றென்றும்
எவ்வுலகுங் காத்தருளும் எம்பெருமான், எங்குழந்தை
உன்குழந்தை யாதலினால் உன்னடிக்கே வந்திட்டான்
உன் கடமை யாமெடுத்திங் கோதுவதும் வேண்டுவதோ?
பிள்ளையெனப் பெற்றெடுத்த பாசத்தால் வேண்டுகின்றோம்
வள்ளால் உன் மாணடியில் வைத்தவனைக் காப்பாயே.

---

இளைய மகன் செல்வன் நந்தகுமார் 1974-09--28 இல் அகால மரணமெய்தியபோது, அன்னான் நினைவுகுறித்துப் பாடியது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

## ஒரு தாய் மகளை விளித்துக் கூறுவதாகப் பாடப்பட்ட செய்யுள்

### மஞ்சம்மா

வண்ண நறுமலரே - மஞ்சம்மா
வாழ்வு தழைக்க வந்தாய்
எண்ணி யெண்ணி - உன்னையே
என்றும் நினைப்பேனடீ. 1

உன்னை நினைத்தாலே - மஞ்சம்மா
உள்ளங் குளிருதடீ
அன்னையென் றென்னை நீ - அழைத்தாலே
ஆவி தளிர்க்குதடீ. 2

பெண்மைக் கணிகலமே - மஞ்சம்மா
பேசும்பொற் சித்திரமே
கண்ணுக்குள் நீயிருப்பாய் - என்றாலும்
காண விழைவேனடீ. 3

அன்புக்கும் பண்புக்கும் - உன்னைப்போல்
ஆரையுங் கண்டதில்லை
துன்பத்தும் இன்பத்தும் - எனக்குத்
துணைவே றொருவரில்லை. 4

உன்வாய்ச்சொல் கேட்டாலோ - இன்பத்தேன்
ஊறுமென் செவிகளிலே
உன்னைப் பிரிந்து விட்டால் - எனக்கோ
உன்மத்தம் ஆகுதடீ. 5

உன்முகம் வாடக்கண்டால்- என்னுள்ளம்
உடைந்து போகுதடீ
என்னுயிர் உன்னதன்றோ - மஞ்சம்மா
என்குலத் தெய்வம் நீயே. 6

என்னதவம் செய்தேனோ - உன்னையே
என் மகளாய்ப் பெற்றெடுக்க
என்னைப் பிழைபொறுத்தே - வாழ்வில்
ஏற்றமும் செய்திடுவாய். 7

நீசெய்யும் உதவியெல்லாம் - குழந்தாய்
நெஞ்சை யுருக்குதடீ
தாயென நானிருந்தும் - உன்னையே
தனிக்க விட்டுவிட்டேன்! 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளங் கபடறியாய் - குழந்தாய்
கண்மணி நீயல்லவோ!
அள்ளி அணைத்திடவே - மஞ்சம்மா
ஆசை பெருகுதடீ! 9

உன்வாழ்வு மலர்வதற்கே - தெய்வத்தை
ஓயாமல் வேண்டுகின்றேன்
என்குறை நிறைவேற - தெய்வந்தான்
எப்போ தருள்செயுமோ? 10

## விநாயகக் கடவுளை வேண்டல்

அஞ்சு முகத்தார்க் கபயமருள் ஆனைமுகனே அடியிணையைத்
தஞ்சம் என்றே சரணடைந்தேன்; தமியேன் குறையைத் தீர்ப்பாய் நீ!
பிஞ்சு மனத்தாள் எங்களுக்குப் பிரியமான பெண்குழந்தை
மஞ்சு ளாவின் இடர்போக்கி வாழ்வு செழிக்க அருள்வாயே. 1

## சிவபெருமானை வேண்டல்

வையக மெல்லாம் படைத்தளித் தழிக்கும்
வள்ளலே வான்பிறை சூடீ
தையலோர் பாகம் வைத்தருள் செய்யும்
சங்கரா சங்கவெண் குழையாய்
மையலுற் றடியேன் மலரடி தொழுவேன்
மகள்படும் அல்லல் கண்டுளம் நைவேன்
ஐயனே அகிலம் ஆண்டருள் சிவனே
அவள்துயர் துடைத்தருள் வாயே. 2

## தேவியை வேண்டல்

இம்மா நிலமும் பிறவு மெல்லாம்
ஈன்ற தாயே இறைசிவனாம்
பெம்மான் பங்கில் உறைபவளே
பேறு யாவுந் தருபவளே
செம்மா மலரில் உறைதிருவும்
செழுங்கலை வாணியும் நீயன்றோ
அம்மா, தேவீ எம்மகளின்
அல்லல் தீர அருள்வாயே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகனை வேண்டல்

அருவாய் உருவாய் அருவுருவாய்
அருளும் முருகா அறுமுகவா
குருவாய் வருவாய் குமரேசா
குஞ்சரி வள்ளி மணவாளா
ஒருமா மயில்மேல் வந்தெங்கள்
உயிர்நேர் மகளின் துயர்போக்கிப்
பெருவாழ் வளித்துக் காத்தருள்வாய்
பெருமான் நீயே கதியெமக்கே. 4

## திருமாலை வேண்டல்

திருமகள் உறையும் எழில்மார்பா
செங்கம லம்பொற் கண்ணழகா
கருமுகில் வண்ணா கதிராழி
சங்கமுங் கரத்தில் உடையோனே
வருபகை போக்கி உலகுயிர்கள்
வாழ்வுற இனிது காப்போனே
ஒருமக ளுடையோம் அவளின்னல்
ஓம்பிக் காப்பாய் திருமாலே. 5

# IV

## 'அடங்கியோ விட்டாய் இன்று....'

கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னைநாள் அதிபரும் முதுபெருந் தலைவரும் மூதறிஞருமான திருவாளர் ஹன்டி பேரின்பநாயகத்தின் மறைவு குறித்த கையறுநிலைப் பாடல்கள்:

கொக்குவில் இந்துவுக்கோர்
குலபதி யாக வந்தாய்
மக்களின் ஆட்சிப் பண்பை
மாண்புற நாட்டி வைத்தாய்
மிக்குயர் மாடங் கட்டி
மேம்படு கலை வளர்த்தாய்
திக்கெலாம் புகழ் விளங்கச்
செய்தெங்குச் சென்றாய் ஐயா! 1

சீரிய குணங்கள் எல்லாம்
சேர்ந்துரு வானாய் ஐயா,
நேரிய கொள்கை பேணி
நெறியினில் வாழ்ந்தாய் ஐயா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருனக் கொருவர் இல்லாய்
நீயிலை என்றால் ஐயா
ஆரினிச் சால்புக் குள்ளார்
அவனியும் பாழே ஐயா! 2

ஆன்றவிந் தடங்கி யோய்நீ
அடங்கியோ விட்டாய் இன்றுன்
ஆன்றபே ரறிவு மெங்கே!
அரசியல் ஞானம் எங்கே!
ஊன்றிய கொள்கை எங்கே!
உரிமையின் குரல்தான் எங்கே!
ஈன்றவள் ஈழத் தாயாள்
இவையெலாம் இழந்தாள் ஐயா! 3

சாந்தமே உருவா னாய்நீ
சபைதனில் தலைமை தாங்கி
ஆய்ந்தசெம் மொழியிற் பேசி
அருவிருந் தளித்தாய் ஐயா,
காந்தமே போல எம்மைக்
கவர்ந்தநின் நாவும் இப்போ(து)
ஓய்ந்ததே! கல்வி மாதும்
உறுதுணை இழந்தாள் ஐயா! 4

அண்ணலார் காந்தி காட்டும்
அறநெறி விளக்கி நின்றோய்!
மண்ணுல கிதனை விட்டு
மறைந்தனை இப்போ தென்றே
எண்ணிட நெஞ்சம் புண்ணாய்
ஏங்குவோம், அழுவோம் உள்ளக்
கண்ணிலே நின்றெமக்குக்
காட்சிதந் தருள்வாய் ஐயா! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தாந்த வித்தகர்
## புலவர் சிவங் கருணாலய பாண்டியனார்

பல்லாண்டாகத் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிவரும்
அரும்பெருந் தொண்டினை உள்ளி, அன்னாருடைய
மாணாக்கரும் ஆர்வலரும் அவருக்குப்
பொன்னாடை போர்த்துப் பொற்கிளியளித்த ஞான்று
படித்து வழங்கிய பாராட்டிதழ்:

கண்ணுதற் கடவுளோடு கழகத்தி னமர்ந்து முன்னாள்
எண்ணுதற் கரிய மும்மைத் தமிழ்க்குநூலினிது செய்த
அண்ணன்மா முனியா மந்த வகத்தியன் றானே யிந்நாள்
மண்ணிடை வந்தா லன்ன மாண்புறு காட்சி யோயே. 1

செந்தமிழ்ப் பாண்டி நாட்டிற் சிவனெனும் பெயரினாற்கு
மைந்தனாய்த் தோன்றி மெய்ந்நூல் மாசறத் தமிழொ டாய்ந்தே
அந்தநற் கலைக ளெல்லா மார்வலர்க் குணர்த்து மாறு
வந்தனை கொழும்பை நாடி வாழ்ந்தது சேய் நாடம்மா. 2

அன்றுதொட் டின்று காறு மரசியல் வினைஞ ருக்கும்
துன்றிய தமிழா ராய்ச்சித் துறைபடிந்தாடு வார்க்கும்
ஒன்றிய வுளத்தி னோடே யுண்மை நூல் நாடு வார்க்கும்
ஒன்றுநீ கரவா துன்ற னுறுபொருளுவந் தளித்தாய். 3

தொல்லிய னூலுக் கான்றோர் சொல்லியவுரைகள் யாவும்
நல்லியன் மதியி னாய்ந்து நவையறு காட்சியாலே
சொல்லியன் முறைமை தேர்ந்து துணிபொருளுரைக்கு முன்றன்
கல்வியி னாழங் கண்டே கடலுடைந் திரங்கு மாதோ. 4

உலகியல் வாழ்வின் றன்மை யுள்ளவா றுணர்ந்து மேனாள்
அலகில்சீ ரறிவோன் செய்த வருங்குறண் முதனூ லுள்ளே
நிலவுமெய்ப் பொருள் கடைந்து நீணிலம் வியக்கத் தந்த
மலைவறு புலவோய் நின்றன் மதிக்கந்த மலைநே ராமோ. 5

ஆரிய மொழியி லுள்ள வரும்பெறல் வீட்டு நூலாம்
சீரிய கீதை சொல்லுஞ் செம்பொருள் திருக்கு றட்கு
நேரிய தாகி மேலும் நிறைவுசெய் திடுமா றோர்ந்து
வேரியந் தமிழ்க்கு நல்ல விருந்தென வதனைத் தந்தாய். 6

முன்னையோர் மரபு போற்று முறைமையா லான்றோ ராய்ந்து
சொன்னவை நிலைத்து வாழத் தொகுத்தெடுத் தவற்றி னோடு
பின்னையும் வேண்டு மாக்கம் பெட்புற வினிது சேர்த்தெம்
அன்னையின் சீரடிக்கே அழகிய தென்ன வைத்தாய். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரநன் மலையின் மேவுங் கடவுளுக் கொன்று, நோன்மை
முதிரருள் பழுத்த யோக முனிவனுக் கொன்று மாக
எதிரிலாப் புலமை மின்ன விருதமிழ்ச் செய்யுள் செய்தே
அதிரலை சூழுமீழ நாட்டினுக் கணியுஞ் செய்தாய். 8

ஏயநந் தமிழின் றொன்மை யியல்வள மினிதி னோர்ந்து
சேயநாட் புலவோர் சென்ற செந்நெறி வழாது போற்றி
ஆயநூற் பொருள்க ளெல்லா மயன்மொழி கலத்த லில்லாத்
தூயதாந் தமிழிற் சொல்லுந் தொண்டுநீ டினிது வாழி! 9

இன்னணஞ் செந்தமிழ்க்கு மிறையுணர் புலத்து றைக்கும்
பன்னரும் புலமை யோய்நீ பல்லாண்டு செய்தொண் டுள்ளிப்
பொன்னுறு மாடை போர்த்துப் பொற்கிழி யளிக்கின் றோநாம்
மன்னுமா வலிநீர் போல வையகந் தழைக்க வாழி! 10

ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் சீடரும்
அமெரிக்காவில் உள்ள
சைவசித்தாந்த திருச்சபையின் தலைவருமான

## சிவாய சுப்பிரமுனிய அடிகள்

ஈழநாட்டிற்கு எழுந்தருளியபோது ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் அன்னாரை வரவேற்குமுகமாகப் பாடி வழங்கிய

## வாழ்த்திதழ்

என்றுமுள பெருநெறியாஞ் சைவமார்க்கம்
இமயமுதல் இலங்கைவரை எல்லைப்பட்ட
தொன்று நிலை யதுபோக்க வருள்பாலித்த
துய்யசிவ யோகமுனி யென்னுங்காந்தம்
அன்றிழுக்க வமெரிக்கா நாட்டினின்றும்
அலைகடல்சூழ் ஈழத்தை யணைந்தாயன்னான்
சென்றினிநீ சிவமுழக்கஞ் செய்வாயென்னச்
சித்தாந்தத் திருச்சபையங் கமைத்தாய் வாழி! 1

சிவஞான மொருவடிவங் கொண்டு மண்ணோர்
தீவினைகள் போக்குதற்கா யீழம் வந்து
சிவயோக முனிவனருள் வெள்ளந் தன்னில்
திளைத்தவன்றன் ஆணைவழி நின்று மேற்கில்
அவமாய வழியொழுகு மாந்தருய்ய
அன்புவழி யதுகாட்டிச் சிவன்பா லுய்க்குந்
தவயோக சுப்பிரமுனி வருக வாழ்க
சைவமழை பொழியுமுகில் வருக வாழ்க! 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிசூழ் ஆவாயிற் கடவுளுக்கோர்
அரியதிருக் கோயிலமைத் தங்குசைவம்
வாழவழி பாட்டுநெறி வழங்கவைத்தாய்
வாகான பெருநந்திச் சிலையும் வைத்தாய்
ஊழிமுதல் வற்கினிய கொன்றையோடும்
உருத்திரனின் அக்குமணி மரமுநாட்டிச்
சூழலுடன் சிவநகரந் துலங்கவைத்தாய்
தூயோய்நின் தொண்டுழி நீடுவாழி! 3

வேதமோ டாகமங்கள் விளக்குஞ் சைவ
விழுப்பொருளைக் குருவருளா லுணர்ந்து தேறி
ஓதுதமிழ் மறையென்னுங் குறளின்பாலும்
ஓங்குதிரு மந்திரத்தின் பாலுமுள்ளங்
காதலுற வாங்கவற்றி னுண்மை ஞானங்
கவினாரு மாங்கிலத்திற் கடைந்தளித்தாய்
யாதுமூர் யாவருமே கேளிரென்ற
நற்றமிழர் நெறிவிளக்கு ஞானீ வாழ்க! 4

உலகதனில் நிலவுபல சமயமெல்லாம்
ஒருங்கணைத்திங் கொவ்வொருவர் நிலைக்குமொக்கப்
பல்வகையாம் வழிபாட்டு முறைவகுத்துப்
பாமரர்க்கும் பக்குவர்க்கும் பயில்வு காட்டும்
அலகில்பெருஞ் சைவநெறி யதுவேமேலாம்
அன்புநெறி யநாதிநெறி யென்றமெய்ம்மை
உலகவர்க்கு விளக்குமரு ளொளியே வாழ்க
உத்தமசற் குருஞால முய்ய வாழ்க! 5

சிவபூமி யென்றதிரு மூலர்முன்னஞ்
செப்பியசீர்த் திருநாடாம் இலங்கை பின்னர்ச்
சிவயோக முனிதன்னை யீன்றளித்துஞ்
சிவஞான குருமரபைத் தோற்றுவித்தும்
சிவநீதி யுலகெல்லாம் பரவும் வண்ணம்
சிவதொண்டு செய்யவுனை யழைத்ததென்றால்
சிவனார்தந் திருவருளே யீதென்றுள்ளித்
திருநெறிய தமிழ்மன்றம் வழுத்துமாலோ! 6

---

அடிகள் ஈழநாட்டிற்கு எழுந்தருளியபோது 1981-01-20 இல் அன்னாரை வரவேற்கு முகமாகப் பாடி வழங்கிய வாழ்த்திதழ்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிசைப் புலவோன்

இயற்கையின் வனப்பை யெல்லாம் இயல்புற வுணர்ந்து துய்த்து
மயக்கறு மனத்த னாகி மற்றவை பிறழா வண்ணம்
வியத்தகு முறையி லாங்கே விழுப்பொருள் இனிது காட்டி
நயத்தொடு முரைக்க வல்லான் நல்லிசைப் புலவன் தானே. 1

இன்பொடு துன்ப மாயும் இருளுடன் ஒளியு மாயும்
அன்பொடு வன்பு மாயும் அழகொடஃ. தின்மை யாயும்
மன்பதை யுலக மீங்கே மயங்கிய தோற்ற மாய்ந்து
தன்புல நிறைகோல் தூக்கித் தருபவன் புலமை யோனே. 2

நீரிடத் துள்ள முத்தும் நீள்சுடர் வீசு துப்பும்
பாரிடத் தகல வுள்ள பன்மணிக் குவையுங் கொண்டே
ஓரிடத் தமைத்துச் செம்பொன் ஒள்ளிழை செய்த லொப்பச்
சீருடைப் புலவன் றானுஞ் செஞ்சொலிற் கவிதை செய்வான். 3

வனப்புறு மங்கை பாங்கர் வறியளை நிற்க வைத்தால்
வனப்புளாள் நலஞ் சிறந்து வயங்குத லுண்மை போல
வனப்புறு பொருளி னூடே வறியவை யறிந்து வைத்து
வனப்பினைத் துலங்க வைப்பான் வண்கவி யரசன் தானே. 4

இன்பமே உயிர்கள் தம்மை இருநிலத் தியாத்து வைப்ப(து)
இன்பமின் றுலகம் நில்லா தின்பினை நுகர்வ தற்கே
மன்பதை யுலகம் நாளும் முயன்றிடு மிதனை யோர்ந்திங்(கு)
இன்பமே யூறுஞ் செய்யுள் இயற்றுவான் புலமை யோனே. 5

இல்லது புனைந்து கூறின் இன்பமும் அறிவும் பொங்கி
நல்லது பயப்ப தென்றால் நயமுறக் கவிதை செய்வான்,
நல்லறி வாராய்ச் சிக்கு நவைதரு நீர்மைத் தாகும்
இல்லது புனைந்து கூறி இழுக்கிடான் இயல றிந்தோன். 6

வல்லவன் கையிற் பட்டால் வச்சிரப் படையை யொத்துப்
புல்லுமோர் படையாய்ப் போரிற் பயன்படும் பான்மை போலப்
புல்லிய பொருள்கள் தாமும் பொய்யிலாப் புலவன் நாவில்
நல்லியல் புடைய வாகி நலமுறத் திகழு மன்றே. 7

பொறிகள்தம் வாயி லாகப் புறப்பொருட் கடலை மொண்டே
அறிவெனும் மின்னல் காட்டி ஆற்றலாம் உருமுக் கான்று
செறிவெனும் வானத் தேறிச் செம்பொருட் செய்யு ளென்னும்
உறைபெயும் எழிலி யாவான் உத்தமக் கவிஞன் தானே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பிலாப் பொருளாம் பாலை மனமெனுங் கலத்தி லேந்தி
அரும்புலக் கனலாற் காய்ச்சி அன்பெனும் பிரையை யிட்டு
நிரம்புறு மதியாம் மத்தால் கடைந்திடத் திரண்ட வெண்ணெய்
பெரும்பயன் அளிக்கும் பாவாய்த் தருபவன் புலவ னாமே. 9

தன்னுருச் சிறிதாய் மற்றுப் பொருள்பரந் திருத்த லானும்
மன்னுயிர்க் குறுதி யாய மாண்பொருள் கூற லானும்
இன்னுயிர் உணர்வை மேன்மேல் ஓங்கிடத் தூண்ட லானும்
அன்னவன் கவிதை தேவர் அமுதினுஞ் சிறந்த தம்மா. 10

---

வெளியிடப்பட்ட ஏடு: 'தமிழ் ஓசை'
மலர்1, இதழ் 5 (1952 புரட்டாதி - ஐப்பசி)

---

# மனக்கினிய தனக்குப் புலவன் உரிமையாக்கும் இவ்வடிகளையே

'அரையன் றனக்கும் ஆண்டவன் றனக்கும்...'
இந்நாற் சொல்லும் இன்னாச் சொல்லாம்,
அறையென வுறைக்கும்; ஆயின் தலையினை
என்போ லொருவன் எங்குப் புதைக்கும்?
எங்குள திங்கே புகலிட மெனக்கே?

மாக்கட லெனயான் சிறியே னாயின்
மீக்கொளுந் திரைமிசை மெல்ல நடந்து
வற்றுப் பெருக்கென வான்மதி மங்கைக்
குற்றவென் காதல் உரைத்திரந் திடுவேன்;
எங்கியான் தேடிக் காணபன் என்போல்
என்மனக் கினிய காதலி தனையே?
சின்னஞ் சிறிய வானுக் கமையாள்
பென்னம் பெரியள் பெட்புடை யாளே!

கோடி கோடி தொகுத்தோன் போல
வாடும் மிடிமை வருங்கொல் எனக்கே!
உயிர்க்குப் பணத்தால் உறுபயன் என்கொல்?
அதனிடை உறையும் ஆராக் கள்வன்,
கலிபோணி யாவின் காசெலாம் ஒருங்கே
அளிப்பினும் அமையா தென்மாட் டுள்ள
கொளைவல் காமக் கும்பல் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் தாந்தே பெத்திராக் கவர்போல்
நாவடைத் திருக்கும் நலம்பெறின் அம்ம,
ஒருதனிக் காதலுக் குயிர்கொளுத் துவனே!
நீறா யெரிகென வீறுகொள் பாவிற்
காத லவட்குக் கட்டளை இடுவேன்;
உற்றவென் சொல்லும் காதலும் ஒருபெரும்
வெற்றிவில் வாயி லாயமைந் திடுமேற்
பற்பல காலத்துப் பாங்குடன் திகழ்ந்த
சொற்பெறு காதற் றலைவிய ரெல்லாம்
பிற்படச் சுவடு தோன்றா வண்ணம்
பொற்புட னவ்வழிப் புகுதரு வாரே.

உருமென வமைதி உடையே னாயின்
பொருமி யழுது புவியின் முதிய
துறவுக் குடிலையென் துளங்குறு மணைப்பில்
அகப்படுத் திடுவேன் அப்போ தியானே.

ஆற்றல் முழுதும் தோற்றும் வகையென்
வியன்குர லதனைப் பயன்படுத் துவனேல்
வால்வெள்ளி யெல்லாம் வருந்தித் துயரால்
வேங்கை நெரித்து வீழ்ந்திடும் புவிக்கே.

செங்கதி ரெனயான் மங்கொளி யினனேற்
கட்கதி ராலக் கங்குலை யரிப்பேன்;
மண்ணின் மெலிந்த மடியினை யென்றன்
ஒண்சுட ராலெவன் ஊட்டவேண் டுவதே?

என்னுறு காதற் சுமையினை யிழுத்தே
இந்நிலத் தென்னாட் போக்குவன்; எள்ளி
யாரும் விரும்பாப் பேருடல் உடையேன்;
மாலுறு நோயால் மறுகுமெக் கங்குலிற்
கோலியாத் தெனக்குத் தந்தையா யினனே?

---

குறிப்பு: தாந்தே, பெத்திராக்கு இருவரும் தலைசிறந்த இத்தாலியப் பாவலர்; கோலியாத்து என்போன் பேருடலுடைய ஓரரக்கன். வேங்கை என்னுந் தொடரை - வே(கு)ம் கை (-வேங்கை) எனப் பிரித்துப் பொருள் கொள்க; துறவுக்குடில் - முனிவர் உறையுள்

**Mayakovsky** என்ற இரசியப் புலவரது பாடலின் மொழி பெயர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகக் கடற்கரை

ஆதவன்தன் நாட்கடமை ஆற்றியபின் தேக
அலுப்பகலக் கடல்நீரில் திளைக்கவரும் நேரம்;
ஓதமலி கருங்கடலும் உவகையுடன் ஆர்த்தே
ஒய்யாரத் திரைக்கையால் சைகைசெயும் நேரம்;
சீதமிகு கடலலையின் திவலையொடு குலவிச்
சிலுசிலெனும் காற்றுடலைத் தடவவரும் நேரம்;
காதலர்கள் நடைபயிலும் காலிமுகக் கரையின்
காட்சியினைக் காணாத கண்ணென்ன கண்ணே! 1

காலைமுதல் அலுவலகக் கடமைகளில் மூழ்கிக்
களைத்தவர்தம் அயர்வகற்றக் கடற்கரைக்கு வருவார்;
சேலைநிகர் விழியுடையார் கொழுநரொடும் வருவார்;
செவிலியர்கள் சிறுவர்களைச் சுமந்துபின்னே தொடர்வார்;
சேலையிலும் சட்டையிலும் செயற்கைநலம் புனைந்து
சிங்காரப் பெண்மணிகள் திரள்திரளாய் வருவார்;
வேலையற்ற வம்பர்களும் வீணர்களும் கூடி
வேடிக்கை பார்ப்பதற்கு விரும்பிவரு வாரே. 2

மேடையிலே நடனமிடும் மெல்லியர்க ளென்ன
மெய்ம்மினுக்கி உடல்குலுக்கி விழிசுருட்டிப் பூப்போல்
ஆடையணிந் தவைகாற்றில் அலையமயிர் கலைய
அங்கநலம் அரைகுறையாய்க் காட்டிஒயில் கூட்டிப்
பேடையனம் பிடிமயிலென் றிவைபுரைய நடந்து
பெண்கள்பலர் திரிவர்சுர மகளிரிவர் என்றே
ஆடவர்தம் விழியென்னும் வண்டுகளைத் தூண்டி
அன்னவர்பால் தூதனுப்பி அவலமுறு வாரே. 3

ஓதமலி கடலணங்கை உவகையுறத் தழுவி
உயர்வானம் முத்தமிடும் ஓதரிய காட்சி
காதலிளம் காளையர்க்கும் கன்னியர்க்கும் நெஞ்சில்
கனல்மூட்டிக் களியூட்டிக் காதல்விருந் தளிக்கும்;
போதுமதன் மணமுமெனப் பொருந்தியதம் பதிகள்
புறவுலகை மறந்தின்பப் புத்துலகில் திளைப்பர்
வேதனையுள் வருத்தவுளம் வெந்துதனித் திருப்போர்
வேலையெறி திரையென்ன வெய்துயிர்ப்பர் வீணே. 4

பொன்னுருக்கிச் செய்தவொரு சுடர்க்கோள மென்னப்
பொலிவுடனே தகதகக்கும் சூரியனும் வானில்
வண்ணவண்ணப் புதுக்கோலம் வகைவகையாய்ப் புனைந்து
வந்தவர்க்கு விருந்தளித்து வார்கடலில் மறையும்;
துன்னுமிருள் பையவந்து சூழுதலும் இன்பம்
துய்க்கவந்தோர் சந்தையினில் கூட்டமெனக் கலைவார்;
மன்னுமவர் உள்ளத்தின் உணர்வுகளும் அந்தி
வானத்தின் கோலமெலாங் கொண்டுவிடுந் தானே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில்

கோல மாவின் கிளைகளிலே குலவி மகிழுங் கோகிலமே
நீல வுருவுங் கரந்துநீ நெஞ்சம் உருக இசைப்பதென்னே?
ஆலு முன்றன் இன்றுணையை அருகே வாவென் றழைத்தாயோ?
பாலுங் கைக்கப் பண்ணிசைப்பாய் பாரில் உனக்கு நிகருண்டோ! 1

மன்னுங் காதல் மனத்தூற மடவார் இசைக்கும் பண்ணென்கோ?
தன்னங் குழவி தாலாட்டும் தாயின் பாடல் அமிழ்தென்கோ?
கன்னற் சாற்றின் கனிவென்கோ? கனிகள் மூன்றின் பிழிவென்கோ?
துன்னு யாழின் நரம்பிலெழும் தூய இசையின் தெளிவென்கோ? 2

பள்ளிக் கேகும் பாலகனாய்ப் பாடி யாடும் பருவத்தில்
தெள்ளத் தெளிந்த இன்குரலிற் றெய்வ கானம் நீபாடத்
துள்ளித் துள்ளிக் கூவினேன், துருவித் துருவித் தேடினேன்
கள்ளக் குயிலே கரந்திருந்து கான வாரி பெய்தாயே! 3

தேனிற் பாலைக் கலந்தனைய செழுமை மிக்க தீங்குரலில்
வானில் வாழுங் கின்னரரும் வணங்கும் வண்ணம் இசைமிழற்றி
வேனிற் கால வருகையினை விரும்பி யுலகர்க் கெடுத்துரைக்கும்
கானத் தூதன் நீயென்றே கருதி மகிழ்ந்தேன் கோகிலமே! 4

அன்றென் செவிகள் குளிரக்கேட் டானந் தித்த அக்குரலை
இன்றுங் கேட்ட வளவினிலே இன்பக் கனவு காண்கின்றேன்
சென்று மறைந்த நாளெல்லாந் திரும்பி யென்றன் மனத்திரையில்
ஒன்றன் பின்ன ரொன்றாக ஓடிக் காட்சி யளித்திடுமே! 5

திரையிற் காணும் படமேபோற் சீராய்த் தோன்றும் பழங்காட்சி
உரையிற் கடங்கா இன்பூறல் உளத்திற் பெருகிப் பாயும்மே;
புரையிற் றீர்ந்த அந்நாட்கள் புதுக்கி யெனக்கின் றளித்தாயுன்
கரையில் இன்பக் கானத்துக் கென்னே கைம்மா றியான்செய்கேன்! 6

அன்பு கனிய இசைமிழற்றி என்பும் உருகச்செய்வாய்நீ
இன்பப் பெருக்கின் ஊற்றேயோ? இசையே உருவாய் வந்தாயோ?
துன்ப மென்ப தறியாய்நீ; தொலைவில் இருந்து கூவுவது
துன்பம் மிக்க உலகத்தில் தோய்தல் கூடா தென்றேயோ? 7

மண்ணின் மக்க ளிடைத்தோன்றும் மடியும் நோயும் இலம்பாடும்
எண்ணில் அடங்காக் கவலைகளும் ஏய்ப்புங் களவும் வஞ்சனையும்
விண்ணில் திரியுங் குயிலேநீ விரவாய், வாழ்வில் நின்னின்பம்
மண்ணில் யானும் பெறுவேனோ? மற்றுன் இனத்திற் பிறவேனோ? 8

கவலை தோயா நின்னோசை காற்றில் மிதந்து பரந்திடவே
கவலைக் கிடனாம் இவ்வுலகும் கான மயமாய்க் கவினுமால்;
திவலை யாய நானும்மண் சேர்க்கை நீங்கி யப்போதுன்
அவல மென்ப தில்லாத அமுத வுலகில் திரிவேனே. 9

இன்பக் குயிலே யுன்னைநான் இரந்து கேட்ப தொன்றுண்டு;
பொன்னை மண்ணைப் பொருள்பிறவைப் போற்றி வாழும் இம்மாந்தர்
புன்மை தவிர்த்துப் பொய்நீக்கிப் பொன்றா வின்பம் பெற்றுய்ய
அன்பிற் குழைத்த அருமருந்தொன் றளிப்பா யோநீ அன்புருவே? 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கும் இன்பம் எங்குந் தங்குக

உழுதுண் மாந்தர் மழைநோக்கி
உவந்தன் பாக வயலுழுதங்
குணவுக் காகும் நென்முதலாம்
உயர்தா னியங்கள் மிகவிளைத்துத்
தொழுதுண் மாந்தர் துயரோட்டத்
தோட்டந் தோறும் வாழைகளும்
தோடை வருக்கை மாமுதலாத்
துன்னுங் கனிகள் தருமரமும்
பழுதில் வள்ளிக் கிழங்கினமும்
பாகல் முதலாங் காய்வகையும்
பாங்காய் வளர்க்குந் தமிழ்நாட்டிற்
பரிதிச் செல்வன் ஒளிசிறக்கும்
பொழுதில் இன்பப் புனலாடிப்
பொற்பார் மனையிற் கோலமிட்டுப்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பந் தங்கிடுமே. 1

வாழும் நெறியைப் பாழாக்கி
வஞ்சப் பகைமைத் தீமூட்டி
வாய்கா வாமல் வஞ்சினமும்
வறிதே பிதற்றும் வன்கண்ணார்
சூழுங் கொடிய சூழ்ச்சியெலாம்
சுட்டுப் பொசுக்கிச் சுதந்திரமாச்
சுடரும் வானச் சோதியெனச்
சுவைகூர் தமிழ்த்தாய் துலங்கற்கும்
ஈழம் வாழுந் தமிழரினம்
இருளில் அழுந்தா துயர்தற்கும்
இன்னல் மலைபோல் வந்தாலும்
இறையுங் கலங்கா தெதிரேற்றுப்
போழ்து வீரம் பெறுதற்கும்
பொங்கிக் களிப்போம் தைந்நாளில்,
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பந் தங்கிடுமே 2

சங்கம் இருந்த தமிழ்பொங்கச்
சைவம் பொங்கத் தரணியெலாம்
சாந்தம் பொங்கச் சன்மார்க்கம்
தழைத்துப் பொங்க தன்னரசின்
அங்கம் பொங்க அறம்பொங்க
ஆளும் நீதித் திறம்பொங்க
ஆண்மை பொங்க அருள்பொங்க
அழகுக் கலைகள் அவைபொங்கத்
திங்கள் மூன்று மழைபொங்கத்
திருவும் வளனும் உடன்பொங்கத்
தீம்பால் பொழியுங் கறவையினம்
செழித்துப் பொங்கச் சிவம்பொங்கப்
பொங்கும் வாழ்வுக் கறிகுறியாய்ப்
பொங்கிக் களிப்போம் தைந்நாளில்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பந் தங்கிடுமே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பரிசு பெற்ற கவிதை வெளியிடப்பட்ட ஏடு: 'உதயம்', தை, 1955

# கொடு மழை

## வானம் இருண்டது

பாதகம் கொலைஞனைப் பற்றுதல்போல்
படர்ந்தது கருமுகில் வானரங்கில்;
ஆதவன் ஒளிநடம் ஆடுதல்விட்(டு)
அகன்முகில் திரையினுள் உடல்கரந்தான்;
காதலன் பழிமொழி கேட்டுள்ளம்
கருகிய கற்புடை மடமாதின்
கோதறு மலர்முகம் குழைவதுபோல்
கும்மெனத் திசைமுகம் இருண்டதுவே! 1

## இடிமுழங்கியது

விடமுடை நாகமும் இடருழந்து
விடரிடைத் தனதுடல் அடக்கிடவே,
கடதடக் களிறுகள் பிளிறியடர்
காட்டினில் பேரமர் புரிவதுபோல்
படபட படவென வானூடு
படுமுகிற் கணமிடி முழங்கினவே; அம்
மிடல்கெழு கரிகளின் கோடுகள்போல்
மின்னொளி விண்ணிடைத் துன்னியதே! 2

## மழைகொட்டியது

கடல்மடை திறந்தென விண்ணின்று
கடுமழை பொழிந்தது நெடுநேரம்;
இடருழந் துயிரினம் நடுங்கினவே;
இல்லிடை மக்களும் ஒடுங்கினரே;
தடமலை பெயர்த்திடும் கடுவிசையில்
தலையெடுத் தொருபுயல் ஆர்த்ததுவே;
அடல்குறித் தெழுந்திடு புயலினிலே
அகப்பட்ட மரங்களின் நிலையென்னே! 3

## நிலம் உருக்குலைந்தது

பெருமரம் வேரொடு சாய்ந்தனவே;
பேடுறை கூடுகள் மாய்ந்தனவே;
வெருவரு கொம்பர்கள் வீழ்ந்தனவே;
வீடுகள் மண்ணுறத் தாழ்ந்தனவே;
கருவரு நெற்பயிர் சரிந்தனவே;
கனிமரம் காய்களைச் சொரிந்தனவே;
உருவரு படையொரு களம் போலே
உருக்குலைந் திருந்ததிம் மாநிலமே! 4

## வெள்ளம் ஓடியது

ஓவென மதகிடை நீரோட,
ஓடிய நீரொடு பொருளோட,
ஆவினம் கோழிகள் இறந்தோட,
அருமனைப் பண்டங்கள் உருண்டோடச்
சீவனம் இழந்தவர் திகைத்தோடச்
சிறுகுடில் அழிந்தவர் கவன்றோடச்
சோவெனச் சொரிந்தவம் மழைவிளைத்த
சோகமென் சொல்லினில் அடங்காதே! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே சீறினாள்!

உணத்தகும் உணவும் உறைவிடமும்
உடைகளும் உலக வாழ்க்கைக்காம்
கணக்கினில் அடங்கா வளங்களெலாம்
கருணையின் ஈந்து காக்குந் தாய்
கணத்தினில் வெகுண்ட காரணத்தால்
காளியின் கோலம் கண்டேனே;
அணைத்திடும் அன்னை அவடானே
அடித்திடில் யாமென் செய்வோமே! 6

# லயிக்கா, என் காதலீ!

(1957, நவம்பர் 3ல் இரசிய விஞ்ஞானியர் விண்வெளியிற் பறக்க விட்ட செயற்கை மதியிற் சென்று தன் உயிரைத் தியாகஞ் செய்த 'லயிக்கா' என்னும் நாயின் செய்தி உலகறிந்தது. அந்தப் பெண் நாயின் மேற் காதல் கொண்டிருந்த ஓர் ஆண் நாய், தன் காதலி விண்வெளியிலே இறந்த செய்தி அறிந்து புலம்பியதாகக் கற்பனைசெய்து பாடப்பட்டது இக்கவிதை.)

குய்யோ முறையோ! என்னன்பே!
கொலையோ செய்தார் கொடியோரே!
பொய்யோ சொல்லி உனை யேய்த்தார்?
போய்ப்பின் வருவாய் என்றிருந்தேன்;
மெய்யோ, புவிக்கே வாராமல்
மேலே வெளியில் மாய்ந்தாயோ?
ஐயோ! இனிநான் என்செய்வேன்?
ஆர்க்கென் துயரம் உரைப்பேனே? 1

நினைக்க நினைக்கத் தலைசுழலும்
நிலமுஞ் சுழலும் நெஞ்சழலும்
நினைக்க முடியாப் பெருவெளியில்
நெடுந்தூ ரத்தே சென்றாயுன்
இனிக்குஞ் சடலந் தனையென்றன்
இதயங் கரைக்குங் கண்ணீரால்
நனைக்கும் பேறுங் கிட்டாத
நாயாய் இங்கே நலிவேனே! 2

'வாக்கும் மனமும் எட்டாத
வான வெளியின் மருமத்தை
நோக்கும் வாய்ப்புப் பெற்றுள்ளேன்,
நொந்து வருந்தேல்; என்னெஞ்சில்
தேக்குங் காதல் தனைநல்கத்
திரும்பி வருவேன் தோழா' வென்
றூக்கந் தந்தாய் போகும்போ
துனக்கோ இந்தக் கதியன்பே! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக விடைநீ கேட்கும்போ
தெங்கோ இருந்த பல்லியொன்று
சாக விருக்குங் குறிகாட்டிச்
சச்சச் சென்றே சொல்லுதலும்
சோகம் விழியிற் சேர்த்தொன்றும்
சொல்லா திருந்தேன்; அப்போதென்
ஆகம் நக்கி 'அன்பா நீ
அஞ்சேல்' என்றாய்; அகன்றாயே! 4

கண்ணே, லயிக்கா, நீயந்தக்
ககனப் பொறியிற் போயினபின்
உண்ணேன், உறங்கேன், உன்னினைவால்
உயிர்வைத் திருந்தேன் உனைக்காண;
விண்ணே நோக்கி இன்றளவும்
வீணே காலங் கழித்தேனே;
பெண்ணே என்னைப் பிரிந்தாயே!
பேரா வுலகம் புகுந்தாயே! 5

ஆறாம் அறிவு நினக்குண்டென்
றறிஞர் கூறக் கேட்டின்பம்
ஊறா நெஞ்சோ டிருந்தேனோ
டுடிப் பூசல் விளைத்தாயே;
ஆறாம் அறிவு படைத்தவரின்
றாறாத் துயரம் எனக்கீந்தார்;
நீறாய் உன்னைப் பொசுக்குதற்கு
நினைந்தோ செய்தார் வஞ்சனையே! 6

கண்ணாற் காதற் களியூட்டிக்
காடும் மேடும் எனைக்கூட்டித்
தண்ணார் சோலைத் தடங்காட்டித்
தணியாக் காதற் றீமூட்டிப்
பெண்ணே, லயிக்கா, பிரிந்தாயே!
பிழையென் செய்தேன் பேசாயோ?
புண்ணாய் நெஞ்சம் புலம்புதற்கோ
புவியிற் பிறந்தேன் நாயேனே? 7

முன்னம் ஒருநாள் நானோயால்
மூடிக் கிடந்தேன் மூலையிலே;
அன்னம் உண்ணேன் ஆவூவென்
றனுங்கி அழுதேன்; அப்போது
துன்னுஞ் சோகம் விழியொழுகத்
துணையாய் நின்றாய் என்பாங்கர்;
இன்னும் அந்த நினைவகலேன்
இறந்தா யென்றால் நம்புவனே? 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக் கண்ணும் அவிர்சடையும்
அரும்புப் பல்லும் எழில்வாலும்
பழகப் பழகச் சுவைகூரும்
பண்புங் காட்டி யன்பூட்டி
இளகும் நெஞ்சை இழுதாக்கி
இன்பந் தந்தாய்; இறுமாந்தேன்;
புளகங் கொண்டேன் இவையெல்லாம்
பொய்யாய் கனவாய்ப் போயினவே! 9

'ஊனும் பாலுந் தந்துன்னை
உவப்பாய்த் தடவிக் கொடுப்பவர், விஞ்
ஞானந் தழைக்க உழைத்திடுவோர்
ஞாலம் போற்றும் நல்லோர்' என்(று)
ஈனம் வாரா வகையெல்லாம்
இதமாய் மிகவும் எடுத்தியம்ப
நானும் மகிழ்ந்தேன்; முடிவிலவர்
நஞ்சைத் தந்து கொன்றாரே! 10

வானிற் பயணம் முடிந்தபின்பு
வருவாய் புவிக்கே, வந்தவுடன்
வானிற் கண்ட விந்தையெலாம்
வாகாய் உரைப்பாய் எனக்கென்றே
நானிக் கொடிய பிரிவாற்றி
நாளைக் கழித்தேன்; நன்றியிலார்
கானிற் கிடக்கும் நாயென்றோ
கருதிக் கொன்றார் காதலியே! 11

மதியில் இவர்ந்திம் மாநிலத்தை
மனவே கத்திற் சுற்றுகையில்
விதியின் சதியை நினைந்தாயோ?
வினையேற் குருகி யினைந்தாயோ?
இதயந் துடித்த துடிப்பெல்லாம்
இங்கே கேட்டா ரெனக்கேட்டேன்;
இதயம் இல்லார் எவ்வாறுன்
இதயம் அறிவார் லயிக்காவே! 12

புலத்தின் வல்லார் நுண்மதியாற்
புணர்ந்த மதியிற் புவியோர்கட்
புலத்திற் கெட்டாப் புறவெளியிற்
புகுந்தே தியாகம் புரிந்தாய்நீ;
குலத்தின் விளக்கம் புகழ்க்குன்றின்
குவட்டில் வைத்தாய்; விஞ்ஞானம்
நிலத்தில் வாழும் நாள்வரையும்
நின்பேர் வாழும் லயிக்காவே! 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே ஐவர் பாண்டவருள்
மூத்தோன் துறக்கம் புகும்போதிற்
பின்னே யொருநாய் போனதெனப்
பெருமை பேசும் மானிடர்தாம்
'தன்னே ரில்லாத் துணிவுடனே
தனியே சென்றாய்' நின்வீரம்
என்னே யிருந்த வா(று) என்றே
எழிற்கா வியமொன் றெழுதாரே? 14

என்பே யுருகக் காதலினால்
என்னோ டுடி விளையாடும்
அன்பே! லயிக்கா, நின்முகத்தை
அந்தோ! இனிநான் காணேனே;
மன்பே ருலகம் அறிவீட்ட
மாண்டாய், மாண்டாய்! மண்ணுலகோர்
நின்பே ரெழுதிக் கன்னாட்டி
நித்தம் பூசை செய்வாரே? 15

---

வெளியிடப்பட்ட ஏடு 'நோக்கு', 1964 தை

---

# பாரசீகக் காவியம்

பாரசீகம் இலக்கியப் பரப்பிலே, மன்னர் வரலாறு கூறுங் காவியமான 'ஷாநாமா' என்பது தனிச் சிறப்புடையது. இதனைப் பாடிமுடித்தவர் பீர்தௌசீ என்னும் மகாகவியாவார் (கி.பி.1010). இக்காவியத்தில் இடம்பெறும் சூரப்பன், உருத்தன் (Sorab and Rustum) வரலாறு வீரச்சுவையும் அவலச்சுவையும் இணைந்ததாய், உலகப்பிரசித்திபெற்று விளங்குகின்றது. மாபெரும் போர்வீரனாகிய உருத்தன் (Rustum) தன் சொந்த மைந்தனாகிய சூரப்பனை (Sorab) இன்னான் என்று அறியாமல், அவனுடன் பொருது கொன்றுவிடுகின்றான். குற்றுயிராகக் கிடந்த சூரப்பனின் புயத்தில் அணிந்திருந்த அடையாளத்தைக் கண்டபின்பே, அவன் தன் மைந்தனே என்று உணர்ந்து, ஆவலித்து அரற்றுகின்றான்.

### சூரப்பன் பிறப்பு

(தார்த்தாரியர் புலத்திலே தன் அன்புக் குதிரையைப் பறிகொடுத்த உருத்தன், சமன்கான் என்னும் அரசன் மகளாகிய தாமினை என்பவளை மணந்து சிறிது காலம் அரண்மனையிலே தங்கியிருக்கின்றான்;. பின்பு, தாமினை கருவுற்றிருந்தபோது அவளைத் தந்தையின் அரண்மனையிலே இருக்கவிட்டு, உருத்தன் தன் குதிரையைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்புகின்றான். தாமினை தனக்குப் பிறந்த ஆண் மகவைப் பிரியாமல் என்றும் தன் பக்கலிலே வைத்திருக்க விரும்பி, தனக்குப் பிறந்தது பெண்மகவு என்று கணவனுடைய தூதுவர்க்குச் செய்தி சொல்லியனுப்புகிறாள்; இதன் விளைவு பின்னர் அவலமாக முடிகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது செய்யுளின் முற்பகுதி

ஒன்னலர் நடுக்கும் உருத்தனு மாங்கே துயில்போதில்
மன்னவன் பெற்ற தாமினை யென்னும் மடநல்லாள்
துன்னிருள் போக்குந் தூமணிச் சுடர்தன் கையேந்திப்
பொன்னொளி வீசும் பூங்கொடி யெனவந் தயனின்றாள். 1

சுரிகுழ லசையச் சுடர்விழி மருளத் தூமேனி
பரிமளங் கமழப் பாகெனு மிதழ்முத் தொளிகாட்ட
அரமக ளெனவந் தவளுருக் கண்டே யடல்வீரன்
'இரவிடை வந்தாய் எழிலுரு வேநீ யாரெ'ன்றான். 2

என்னலு மந்த மின்னனை யாள்புன் னகைபூத்தே
மன்னவன் மகள்யான் தாமினை யென்பேர் மாவீரா
நின்னரு வீரங் கேட்டுனை நெஞ்சிற் குடிவைத்தேன்
என்குறை தீர்க்க இறைவனை நாளும் வரங்கேட்டேன். 3

'வழிபடு தெய்வந் தந்திட வந்தாய் இவணென்றே
இழிவென வெண்ணா திரவிடை வந்தென் உளம்விண்டேன்
மொழிவது வாய்மை முறைமையில் எந்தை தனைநாடின்
பழிதவிர் மன்றற் கிணங்குவன், என்பாற் பரிவாயோ? 4

'அன்றியு முன்றன் ஆருயிர்ப் பரிமா அவனீவான்'
என்று மொழிந்தே இருவிழி யாலு மிரந்தாள், பொற்
குன்று நிகர்தோட் கொற்றவ னுள்ளம் பூரித்தே
'நன்று நவின்றாய்' நற்றவப் பேறென நயந்தானே. 5

விருந்தென வந்த வீரனு முறையாய் மணம் வேண்டப்
பெருந்தனம் பெற்ற ஏழையின் உவகை பெருகத்தன்
அருந்தவ மகளை ஆங்கவற் களித்தான் அடல் மன்னன்
திருந்தெழில் வீரஞ் சேர்ந்தது கண்டார் களிகொண்டார். 6

(வேறு)

நாள்பல கழிந்த பின்னர் நம்பியும் மனம்வ லித்துத்
தோள்வளை கழற்றி யன்புத் துணைவிகைக் கொடுத்துச் சொல்வான்:
'வாள்விழி மடவா யுன்றன் வயிற்றினிற் பெண்பி றந்தால்
நீள்குழற் கணிவாய் அன்னாள் நெடும்புகழ் பெற்று வாழ்வாள். 7

'ஆண்மகப் பிறக்கு மாயின் அவன்புயத் தணிவாய் சாமின்
ஆண்மையும் வலியு மிந்த அற்புத வளைதான் நல்கும்;
மாண்புறு செயலால் மைந்தன் மாற்றலர் வணக்கு' மென்றே
நீண்மலர் விழியாள் தன்னை நீங்குதல் குறித்து நின்றான். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலைப் பிரிதலாற்றா தணங்கனாள் அகங் கரைந்து
கண்களின் வழிய "அந்தோ கதியிலி யானேன்" என்று
பண்ணெனு மொழியாற் கெஞ்சிப் பயனிழந் தேங்கி நின்றாள்
எண்ணிய முடிக்கு மேந்தல் ஏழையைத் தேற்றலுற்றான். 9

மன்னவன் சமன்கான் ஆங்கே மருகனை யண்மி வாழ்த்தி
முன்புதான் கவர்ந்து வைத்த முடுகுவெம் பரியைக் காட்டக்
கன்னவில் தோளான் உள்ளங் களித்துடன் தாவி யேறித்
தன்னகர் நோக்கிச் சென்றான்; தாமினை தமிய ளானாள். 10

ஐந்தொடு நான்கு திங்கள் அழுகையிற் கழித்த பின்னாப்
பைந்தொடி மடந்தை யாங்கோர் பாலனைப் பயந்தெடுத்தம்
மைந்தனில் மைந்தற் கண்டு மனத்துய ராற்றி மற்றச்
சுந்தரச் செல்வன் றன்னைச் சூரப்பன் என்ற ழைத்தாள். 11

வெந்துயர்க் கங்கு லுக்கோர் விண்மணி யென்ன வந்த
மைந்தனைப் பிரிய மாட்டா வாஞ்சையாற் பான்ம றைத்துத்
தந்தையின் தூதர் கேட்கத் தாயினை மாற்றந் தந்தாள்
பிந்திய நிகழ்வை யெங்ஙன் பேதையாள் அறிவா ளம்மா! 12

**விளக்கக் குறிப்புகள்**

**1. மன்னவன்** - சமன்காள். **2. பாகெனும் இதழ் முத்து ஒளிகாட்ட** - தேன்பாகுபோலும் இனிய உதடுகள் சிறிது திறந்து முத்துப் போன்ற பல்லின் ஒளியைக் காட்ட. **3. மன்றல்** - திருமணம் **4. ஏழையின்** - ஏழையைப்போல். "திருந்தொழிலும் வீரமும் திருமணத்தால் ஒன்று சேர்ந்த கண்டவர் யாவரும் களிகொண்டார்."

---

"தமிழ் 7" 1972 என்னும் பாடநூலுக்காக மொழிபெயர்க்கப்பட்டது.

---

# செகப்பியர் செய்யுள் விருந்து

(Shakespeare 1564 -1616) என்னும் உலகப் புகழ்பெற்ற நாடகக் கவியின் நாடகங்கள் சிலவற்றில் வரும் கவிச்சுவை மிக்க பகுதிகள் இங்கு மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளன)

## செகப்பியர் சித்தரிக்கும் சில காதற்காட்சிகள்

## 1. புயல்

(இந்நாடகத்திவல் வரும் பேடினந்து என்னும் தலைமகன், மிராண்டா என்னுந் தலைமகளைத் தலைப்பட்டுக் காதலித்த காட்சிகளிற் சில பகுதிகள் இங்கே மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளன)

(தொலைவில் வரும் பேடினந்தைத் தந்தை காட்ட, மிராண்டா வியத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிராண்டா:** அண்ணல், அவ்வுரு யாதோ? வலிமை
கண்ணிய வுருவம் காட்சிக் கினிதால்;
திண்ண மஃதொரு தெய்வத மாமே.

(உடைந்த கப்பலில் வந்தோருள் ஒருவனேயெனத் தந்தை கூறியபோது மிராண்டா கூறுதல்)

**மிராண்டா:** பூவில் இந்தப் புண்ணியற் கண்டிலேன்
தேவன் இவனெனச் செப்புவன் யானே.

(மிராண்டாவைக் கண்ட பேடினந்தின் வியப்பு)

**பேடினந்து:** தெய்வம் நீயெனத் தேருவன், இவணீ
வைகுவை யாயின் வரமெனக் கருள்வாய்;
புதியன் யானிவண் வதியுமா றறியேன்,
அதிசயப் பொருளே, அறிவுரை சொல்வாய்;
முன்னம் யானுனை வேண்டுவ திதுகேள்:
கன்னியோ? அன்றிக் கற்புடை யாயோ?

(மிரண்டா விடைகூறல்)

**மிராண்டா:** ஐய, யானோர் அதிசயப் பொருளலேன்
மெய்யே கன்னி; மேவிலன் கற்பே.

(பேடினந்து தன் விருப்பத்தைத் தெரிவித்தல்)

**பேடினந்து:** கன்னி நீயெனிற் காதலை யொருவற்
கின்னு மளித்திலையோவென் அணங்கே?

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

(காதலன் மரக்குற்றி காவுவதைக் கண்டு கன்னி கலங்குதல்)

**மிராண்டா:** அந்தோ கொடுமை! ஆவென் செய்தீர்!
நொந்தீர் உடலம்! நோகுமென் நெஞ்சே!
எந்தை குவியென ஏவிய விறகிதை
அந்த மின்னல் அழித்திட விலையே!
ஆறுக சற்றே, அமருக, குற்றியை
நிலத்தில் இடுக, நெருப்பினில் எரிகையில்
நலத்தகு மும்மை நலிவுசெய் ததற்கே
கண்ணீர் வடித்தழும் கட்டையிதுவே;
எந்தை கற்றலில் ஈடுபட் டுள்ளார்,
இந்த வேளை வாரார் இங்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேடினந்து:** என்னருந் தலைவீ! என்கடன் செயுமுன்
துன்னிருள் சூழச் சுடர்மறைந் திடுமே

**மிராண்டா:** அவ்வா றாயின், ஆங்கப் பணியைச்
செவ்வனம் யானே செய்குவன்; என்னிடம்
குற்றியைத் தருக குவியலிற் சேர்ப்பேன்
சற்றிவண் இருந்து தளர்வகற் றுகவே.

**பேடினந்து:** இல்லை, இல்லை என்னரும் பொருளே
புல்லிய தொழிலிதை மெல்லியல் நீசெய
வறிதே பார்த்திங் கிருப்பென் கொல்லோ?
முறிகவென் முதுகே! அறுகவென் நரம்பே!

**மிராண்டா:** நுமக்கிது தகுமேல் எனக்குந் தகுமே,
நுமக்கு வெறுப்பாம் இப்பணி; இதையான்
அருத்தியிற் செய்வேன் ஆதலின் நும்மினும்
திருத்த மாகச் செய்குவென் எளிதே.

**பேடினந்து:** வியத்தகு மிராண்டா! வியப்பின் முடியே!
நயத்தகு பொருளிலை நானிலத் துனைப்போல்;
நங்கையர் பலரை நயப்பொடு கண்டுளேன்,
அங்கவர் குதலை அஞ்செவி மடுத்துளேன்,
பலநலங் கருதிப் பலரை மதித்துளேன்,
இலரவர் தம்முள் இதய நிறைந்தார்;
திருந்தெழில் மடவார் செம்மை நலத்தொடு
பொருந்தாப் பண்பும் போரிடக் கண்டேன்;
ஆயின் நீயோ அழகெலாந் திரண்டே
நேய நெஞ்சொடு நிறைகுணம் பூண்டுளாய்;
ஈடு மெடுப்பும் இல்லாய் நீயே
பீடுறு பெண்மைப் பிழம்பென லாமே.

**மிராண்டா:** என்னை யன்றி இப்புவி தனில்யான்
என்பா லாருள் எவரையு மறியேன்;
என்முகம் ஆடியிற் கண்டதை யன்றிப்
பின்னொரு பெண்முகம் பேதையான் கண்டிலன்;
என்னருந் தந்தையும் ஏந்தலு மல்லால்
இந்நிலத் தாடவர் எவரையுங் கண்டிலன்;
மற்றை மாந்தர் எத்தகை யாரெனச்
சிற்றறி வுடையேன் தேரேன்; ஆயினும்
நாண மென்னும் நல்லணி பூண்டேன்
ஆணினத் துமையலால் ஆரையும் விழையேன்;
மற்றொரு வடிவை மனத்தால் மதிக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை செய்துங் காண்கிலன்; என்னே!
பற்பல சொல்லிப் பிதற்றுவென், எந்தை
கற்பனை தனையும் மறந்துவிட் டேனே!

**பேடினந்து:** என்னுடை நாட்டில் இளங்கோ யானே,
மன்ன னென்றெனை மதித்தலுந் தகுமே.
குற்றி சுமக்குங் கொடுந்தொழி லிதுதான்
மற்றென் மனத்துக் கொவ்வா தாயினும்,
என்னுயிர் உரைக்கும் நன்மொழி யிதுகேள்
அன்பே, உன்னைக் கண்டவக் கணமே
உன்பணிக் கென்றன் உள்ளம் விரைந்தங்
கோடி யுன்பால் உறைதலின் அடிமை
நாடி யுனக்குச் செய்குவென் யானே

**மிரண்டா:** ஐயவென் மீதுமக் கன்புள தாமோ?

**பேடினந்து:** வானமும் இந்த வையமு மிரண்டும்
நானுரைப் பதற்கு நற்கரி யாகுக:
பாலொத் தினிக்கும் பணிமொழி கேளாய்,
ஞாலத் துள்ளவை யாவினு மேலாக்
கருதி யுன்னைக் காதலின் மதித்துப்
பொருவி லன்பாற் போற்றுவன் யானே.

**மிராண்டா:** திருமணம் புரிந்தென் செங்கரம் பற்றின்,
பெரும! நும் மனையாம் பெரும்பே றடைவேன்;
மணமிங் கிலையெனின் மடியுங் காறும்
பணிபுரிந் துமக்கே பாங்கி யாவேன்;
பாங்கி யாகும் பான்மையு மின்றெனின்
நீங்கா வடிமை யாகுவென் நுமக்கே.

**பேடினந்து:** ஆருயிர்த் தலைவீ, அடிமையா னுனக்கே.

**மிராண்டா:** அப்போ தென்றன் ஆளன் நீரே.

**பேடினந்து:** ஆமாம்; அன்புப் பிணிப்புக் கிசைந்தே
இந்தா என்கை தந்தேன் உனக்கே.

**மிராண்டா:** காத லுளத்தொடென் கையுந் தந்தேன்,
போதும் பிரியேம் அரைமணிப் போதே.

---

**(SHAKESPEARE: THE TEMPEST: ACT III SCENE I)**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. உரோமியோவும் யூலியற்றும்

**(விருந்து மனையில் யூலியற்றைக் கண்ட உரோமியோ நெஞ்சொடு கிளத்தல்)**

கங்குற் கதுப்பிற் கனங்குழை யென்னத்
தொங்குவள் போலுந் தூநகை யிவளே
விளக்கொளி சுடர்ந்து விளங்கப் பயிற்றும்,
அளப்பரும் அழகே! அவனிக் கரிதே!
கன்னியர் பிறரெலாங் காக்கையே யாக
அன்னவர் நாப்பண் அனமெனப் பொலிவாள்;
இன்றிங் கிவளை எதிர்ப்படு முன்னம்
ஒன்று மழகைக் கண்டில னாதலின்
காத லென்றுமுன் கருதிய தெல்லாம்
பேதைமை யன்றிப் பிறிதிலை நெஞ்சே.

**(கங்குற் பொழுதிற் கன்னிமாடத்தில் நின்று காதலனை நினைந்து யூலியற்று இரங்கல்)**

உரோமி யோவென் உயிரே ஓ ஓ!
உரோமி யோவெனும் பெயரேன் பூண்டாய்?
தந்தையை மறுப்பையோ! பெயர்தனைத் துறப்பையோ!
இந்த வகைசெய இசையா யென்னில்,
என்னை யன்பால் ஏற்றருள் வாயேல்
இன்னே யென்குலம் இகப்பேன் யானே

நின்பெய ரொன்றே என்பகை யாகும்
அன்பே அந்தப் பெயரிலென் னுளதே?
கையுங் காலுங் கண்ணும் முகமும்
மெய்யே அந்தப் பெயர்க்கிலை யாதலின்
இப்பெயர் எவணோ கொண்டனை ஏந்தால்?
எப்பெய ரானும் எனக்கினி யாயே;
உரோசா என்னும் ஒருமலர் அதுதான்
மற்றெப் பெயரில் வழங்கினுந் தனது
நற்பண் பொன்றும் நந்தா தாகும்;
ஆதலின் அன்பே அப்பெயர் துறந்து
காதலின் என்னைக் கையேற் பாயே.

**(கீழே கரந்திருந்த உரோமியோ விடைகூறல்)**

நின்னுரை மெய்யென நெஞ்சங் கொண்டேன்
என்னை அன்பனென் றேற்பா யென்னில்
இன்னா வென்பெயர் இன்னே விடுத்துப்
பொன்னே, புதுப்பெயர் பூண்பன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யூலியற்று:**

யார் நீ இந்த யாமத் திங்கனம்
மறைவிடத் திருந்தென் மறைசெவி மடுத்தாய்?

**உரோமியோ:**

என்பெய ரதனால் என்னை யாரென
அன்பே, உணர்த்தும் ஆற்றல் எனக்கிலை;
நினக்கது பகையாய் நேர்ந்துள தாகலின்
எனக்கும் என்பெயர் இன்னா தாமே;
எழுத்தில் அதனை எழுதுவ னாயின்
கிழித்தெறிந் திடுவேன் கிளிமொழி யணங்கே.

**யூலியற்று:**

இவ்வாய் மொழிநூ றின்னுமென் செவியிற்
பருகில னாயினுங் குரலிது தேர்வேன்;
உரோமி யோநீ? மொந்தே கலையோ?

**உரோமியோ:**

இல்லை, இல்லை; மெல்லியல் நினைக்கவை
அல்லல் செயுமேல், ஆகா வெனக்கே.

**யூலியற்று:**

எங்ஙனம் வந்தாய்? ஏன்வந் தாயோ?
கடிமதில் உயர்ந்தன, கடத்தற் கரியன
கொடியர் எம்மவர்; ஈங்குனைக் காணின்
இடமிது கொலைக்கள மாகுமால் இன்னே!

**உரோமியோ:**

காதற் சிறகாற் கடிமதில் கடந்தேன்
கற்சுவர் காதற் கொருதடை யாமோ?
காதலெத் தடையையுங் கடந்திட வூக்கும்
ஆதலின் நுமரெனைத் தடுத்தலு மரிதே.

**யூலியற்று:**

எம்மவர் காணின் ஈங்குனைக் கொல்வார்.

**உரோமியோ:**

அம்ம, யானவர்க் கஞ்சேன்; அவர்தம்
இருபது வாளினுந் திருவே யுன்றன்
கருவிழி என்னைக் கலக்கிடும் பெரிதே;
அன்புநோக் காலெனை அணைத்திடு வாயேல்
துன்புறுத் தாதெனைத் துன்னலர் பகையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யூலியற்று:**

காணா ராகதில் பேணார் உனையே.

**உரோமியோ:**

இருளெனும் போர்வை எனைமறைத் திடலாற்
கருதலர் காணார்; காணினு மென்னே?
நின்னன் பின்றி நெடிதுழந் திறத்தலின்
அன்னவர் பகையால் அழிவது நன்றே.

**யூலியற்று:**

ஆர்வழி காட்ட அறிந்தனை இவ்விடம்?

**உரோமியோ:**

ஆரென நினைமுன் அறியத் தூண்டிய
ஏருறு காதலே எனைவழிப் படுத்தது;
நல்லறி வெனக்கது நல்கிய தாங்கே
மெல்லியல், அதற்கு விழிவழங் கினன்யான்;
சேணெடுந் தொலைவில் திரையொரு கரையில்
வாணுதல் மங்கை வதிவா யாயின்,
மாலுமி யல்லே னாயினும் அந்த
அரும்பெறற் பொருளை அடைவான் வேண்டிக்
கருங்கடல் தனையுங் கடப்பன் துணிந்தே.

**யூலியற்று:**

இருளென் முகத்தினை மறைக்கும்.˙. தறிவாய்;
இல்லையேல் இன்றுநான் சொல்லிய மொழிக்காய்
நாணுவ தென்றன் கதுப்பினிற் காண்பாய்;
ஒப்பொடு நிற்றற் கொருப்படா துள்ளம்;
தப்பெனச் சொன்னவை மறுத்தலு மிலனே;
பேதையே னெனைநீ காதலிக் கிறாயோ?
ஆமெனச் சொல்வாய், அதையான் அறிவேன்;
உன்சொல் லதனை உறுதியாய்க் கொள்வேன்;
சூளுரைப் பாயெனிற் பொய்த்தலுங் கூடும்;
காதலர் பொய்ப்பிற் கடவுளர் நகுவர்;
ஆதலின் உரோமியோ அன்புனக் குண்டேல்
வஞ்சக மின்றி வாயாற் சொல்லுதி;
அன்றி எளிதில் வென்றாய் எனையென்
றெண்ணுவை யேல்யான் ஏதிலர் போலப்
பொதுநோக்கு நோக்கிப் பேசவு மறுப்பேன்;
அப்போ தென்பாற் குறையிரந் தன்பா,
காதலை நீயே தூண்டுதல் வேண்டும்;
எளியள் என்றெனை எண்ணிலை யாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுடன்பெறினும் உள்ளத்தை ஒளியேன்;
உண்மையில் அன்போ உளநிறைந் தொழுகும்
நாணிலி யென்றெனை எண்ணினு மெண்ணுவை;
ஆயினு மென்னை நம்புதி ஐய,
காதலை யொளித்தங் கேதிலர் போல
நடிக்குநங் கையிரினும் நான்மெய் யுடையேன்;
இத்தனை எளிதில்யான் இசைந்ததென் பெண்மைக்
கொத்த தன்றே; ஒருவரு மிலையெனுந்
துணிவால் உள்ளத் தணைகடந் தெழுந்தவென்
உணர்ச்சியை வாய்விட்டுரைத்தேன்; ஒளித்திருந்
ததனைக் கேட்டனை யாதலின் என்பிழை
பொறுப்பை;என் அன்பும் போலியென் றெள்ளி
வெறுப்பொடு நெஞ்சில் வேறெண் ணாயே.

**உரோமியோ:**

ஆருயிர் அணங்கே. அவ்வா றுரையேல்;
ஏருற இம்மரத் திலைமுடிக் கொளிதரும்
அங்கண் வானூர் மதிமேல் ஆணை.

**யூலியற்று:**

திங்கள் தோறும் திரிபுறு மதனால்
ஓஓ மதிமேல் உரையேல் ஆணை;
மாறும் மதிபோல் மற்றுன் காதலும்
மாறு மென்றே மாழ்குமென் நெஞ்சம்.

**உரோமியோ:**

எதன்மீ தாணை இடுவது? சொல்லாய்.

**யூலியற்று:**

ஆணை வேண்டா; வேண்டுமேல் அன்பா,
உன்மீ தாணை உரைப்பாய்; உனையே
என்னுளத் திறையென ஏத்தித் தொழுவேன்
நம்பி, உன்னுரை நம்புவென் யானே.

**உரோமியோ:**

என்றுமென் னிதயத் தினிக்குங் காதல்.

**யூலியற்று:**

நன்று, சூளுரை வேண்டா; நானுன்
அன்பு மொழியில் மகிழ்வே னாயினும்
இன்று செய்தவிக் காதற் பொருத்தினை
ஒன்றும் மகிழ்வெனக் கூட்டா தன்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணித் துணியாச் செயலதை நினைக்கின்
விண்ணில் தோன்றி விரைவினில் மறையும்
மின்போ லும்மே; மீண்டுநீ வருக;
இன்று முகிழ்த்தவிக் காத லரும்பு
நன்று வளர்ந்து நாளைநாம் காண்கையில்
நன்மணங் கமழும் பொன்மல ராகும்;
அன்பா, வணக்கம்! அமைவொடு துயில்க;
எனக்குள வமைதி நினக்குமா குகவே.

**உரோமியோ:**

நிறைவுசெய் யாதெனை நீங்குதல் நன்றோ?

**யூலியற்று:**

யாதிவ் விரவில் யான்தர வல்லேன்?

**உரோமியோ:**

என்சூள் கேட்டனை; எனக்கது தந்திலை.

**யூலியற்று:**

கேட்கு முன்னே கொடத்தேன்; ஆயினும்
மீட்டுங் கொடுக்க விழைவேன் யானே.

**உரோமியோ:**

கொடுத்ததை மீட்டுக் கொள்ளுவை கொல்லோ?
மடத்தகு நல்லாய் மறிப்பது மெவன்கொல்?

**யூலியற்று:**

மறித்துந் தரவே, மற்றொன் றில்லை;
மடவேன் யானென் னிடமுள தொன்றையே
அடைய விழைந்தேன், அள்ளித் தருவேன்;
கடல்போல் வண்மை கரையில தன்புங்
கடல்போ லாழ்ந்தது காதல், இரண்டுங்
கொடுக்கக் கொடுக்கக் குறையா; கூப்பிடும்
(செவிலி உள்ளிருந்து கூப்பிடுகிறாள்)
குரலொலி யொன்று கேட்கிற தன்பா,
விரைவில் வருவேன், சற்றுநிற் பாயோ.
(யூலியற்று மறைகிறாள்)

**உரோமியோ:**

வாழிய இரவே! வாழிய காதல்!
கனவோ நனவோ கண்டது மெய்யோ?
கங்கு லாதலிற் கலங்குமென் நெஞ்சே.
(யூலியற்று மீளத் தோன்றுகிறாள்)

**யூலியற்று:**

மூன்று வார்த்தை மொழிந்தபின் என்னின்
நீங்க விடையான் நினக்கின் றளிப்பேன்;
என்னருங் காதல் மன்னவ கேண்மோ:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னது காதல் விழுமிய தாயின்,
நின்னுடை நோக்கங் கடிமண மாயின்,
எங்கே எப்போ தென்னை மணக்க
எண்ணினை யென்னுஞ் செய்தியை நாளைத்
திண்ண மெனக்குத் தெரிவிப் பாயேல்
என்னுடை மையெலாம் நின்னடி வைத்துத்
தலைவ நீயிம் மலர்தலை யுலகிற்
படரு மிடமெலாந் தொடருவன் யானே.

---

**Shakespeare: ROMEO AND JULIET: Act 2, Scene 2**

---

# III தண்ணளி

வெனிசிய வணிகனான அந்தோனியோ என்பான் தன் ஆருயிர் நண்பனான பஸானியோவின் பொருட்டு, யூதனாகிய ஷைலொக்கிடம் பணம் கடன்வாங்கி, உரிய தவணையில் அதனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமையால் யூதனின் பழிவாங்கும் சூழ்ச்சிக்கு ஆளாகின்றான். அந்தோனியோவின் உயிரைக் காப்பதற்காக, பஸானியோவின் காதலியான போஷியா என்னும் பெண்ணணங்கு, ஒரு சட்ட நிபுணன் போல மாறுவேடம் பூண்டு, நீதிமன்றத்தில் அந்தோனியோவுக்கு இரக்கம் காட்டவேண்டுமென மன்றாடுகிறாள். இச்சந்தர்ப்பத்தில், போஷியாவின் உரையாகத் 'தண்ணளி' பற்றிச் செகப்பிரியர் இயற்றிய செய்யுட்பகுதி, ஆங்கில இலக்கியப் பரப்பிலே அரும்பெறல் மணியாய்த் திகழ்கின்றது. அதன் தமிழாக்கம் வருமாறு:

தண்ணளி என்பது தகைத்தல் இலாதது
விண்ணின் றிழியுந் தண்மழை போல
ஈர நெஞ்சில் இயல்பிற் சுரப்பது;
ஈவோன் ஏற்போன் இருதிறத் தார்க்கும்
தாவில் பெருநலந் தரூஉந் தகையது;
வலிமையிற் சிறந்த வல்லார்க் கெல்லாம்
வலிமைக் கதுவே வரம்பா யமைவது;
அரியணை யமரும் அரசற் கவனது
விரிகதிர் முடியினும் விழுத்தக வுடையது;

மற்றவன் கோலெனில் மண்ணுல காளுங்
கொற்றங் குறிப்பது; குரிசிலர்க் குரிய
உட்கும் அச்சமும் உறைதற்கிட மாயது;
அஞ்சுதக வுடையவக் கோலோன் ஆணையின்
விஞ்சிய தண்ணளி விழுமிதே யம்ம;
உலகாள் வேந்தர் உள்ளத் தவிசில்
உறையு மதுவே; இறைவற் குரிய
ஒருபெரும் பண்பென் றோதவும் படுமே;
தண்ணளி தழீஇத் தகவொடு முறைசெயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணக மாளும் மன்னவன் ஆற்றல்
கடவுள தென்னக் கவினுமா லீங்கே;
ஆதலின் யூத, அறநெறி வழுவா
நீதி யொன்றே வேண்டுதி யாயினும்
உறுதி மொழியிதை உளங்கொள் வாயே;
கண்ணோட்ட மிலாது முறைசெயின் வாழ்விற்
கடைத்தே றேமிது திண்ணம்; கடவுள்
இன்னருள் வேண்டி இரப்போம், பிறருக்
கன்னதை மறுப்பின் அவனருள் பெறேமே.

---

**Shakespeare: THE MERCHANT OF VENICE: Act Scene 1**

---

# IV. நாவலர் இருவர்

'யூலியசு சீசர்' என்பது செகப்பிரியர் இயற்றிய துன்பியல் நாடகங்களுள் ஒன்று. இந்த நாடகத்தில் நாவலர் இருவரைச் செகப்பிரியர் நமக்குக் காட்டுகின்றார். ஒருவர் புரூட்டசு (Brutus); மற்றவர் அந்தனி (Antony). இருவரும் சீசரின் நண்பர்கள். சீசரின் புகழ் கண்டு பொறாமையாற் புழுங்கிய புல்லரின் சூழ்ச்சியில் புரூட்டசு வீழ்ந்து, அவரோடு சேர்ந்து சீசரைப் படுகொலை செய்கின்றார். பகைவரின் கையோங்கி இருப்பதைக் கண்ட அந்தனி, அவருக்குப் பணிந்து நடித்துப் பழிவாங்கத் திட்டமிடுகிறார்.

புரூட்டசின் உடன்பாடு பெற்று, இறந்த சீசருக்கு ஈமக் கடன் செய்வதற்காக அந்தனி சீசரின் உடலை நகரமக்கள் கூடும் பொதுமன்றுக்கு எடுத்துச் செல்கிறார். சீசருக்கு இறுதி மரியாதை செலுத்தும் வேளையில், புரூட்டசு தாமே முதலிற் பேசுவாரென்றும், தமக்குப் பின்பே அந்தனி பேசவேண்டுமென்றும், அவ்வாறு அவர் பேசுகையிற் சீசரைக் கொன்ற தம்மவரைப் பழிக்கலாகாதென்றும் முன்னேற்பாடு செய்துகொள்கிறார். அவ்வாறே புரூட்டஸ் முதலில் மேடையில் ஏறிப் பேசுகின்றார். அவருடைய பேச்சுத் தருக்கமுறை தழுவியதாயும், சுருக்கமாயும் அமைகிறது. மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் பண்பு அதில் இருக்கவில்லை. ஆட்சி மன்றத்தில் அறிஞர் முன்னிலையிற் பேசும் ஒரு நாவலரையே நாம் இங்கே காண்கிறோம்.

பின்பு, அந்தனி மேடைக்கு வருகிறார். மேடையில் ஏறும்போது, மக்கள் இன்னும் சீசருக்கு மாறாக இருப்பதை அந்தனி உணர்ந்துகொள்கிறார். ஆகவே, அவர் அடக்கமாகத் தமது பேச்சைத் தொடங்குகின்றார். மக்கள் தமது பேச்சுக்குச் செவிசாய்க்கின்றனர் என்று கண்டதும், அவர் படிப்படியாகத் தமது நாவன்மையைக் காட்டி, மக்களின் உணர்ச்சியைத் தூண்டுகிறார். அங்கத அணியை அழகாகக் கையாண்டு, அழுகை, இளிவரல், அச்சம், மருட்கை முதலிய பற்பல சுவைகளில் அவர்களை ஆழ்த்துகின்றார். அந்தனியும் மக்களுடைய உணர்ச்சியை உச்ச விசைக்கு முறுக்குவதற்காகத் தமது பேச்சை எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் முக்கூறாக வகுத்துத் தம் நாவன்மையை நன்கு காட்டி, எண்ணியதை முடித்துக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. புரூட்டசு நிகழ்த்திய ஈம உரை:

என்னரு நாட்டீர், இனியவென் நண்பீர்,
என்னுரை கேண்மின்; இரைச்சலை ஒழிமின்;
என்றக வெண்ணி எனைநீர் நம்புமின்;
என்னை நன்னர் நம்புதற் கெனது
புன்மை யில்லாத் தகவினைப் போற்றுமின்;
என்செயல் பிழையென ஏதமில் காட்சியிற்
கண்டீ ராயின், கடிந்தெனை இகழ்மின்;
குற்றமுங் குணமும் பெற்றியின் நாடுதற்(கு)
உற்றநும் உணர்வை ஊக்குமின் மிகவே;
இப்பே ரவையில் ஈண்டிய நும்முள்
ஒப்பருஞ் சீசருக் கினியான் ஒருவன்
உளனேல் அவனுக் குரைப்பன் இதனை:
புரூட்டசு சீசர்பாற் பூண்ட நேயம்
ஆங்கவன் அன்பிற் குறைந்ததோ அன்றே;
அற்றேல் அந்தப் புரூட்டசு வன்பாற்
செற்றங் கொண்டு சீசருக் கெதிராய்
எழுந்த தெற்றுக் கென்றவன் வினவின்,
அழுந்த வுளத்தில் விடையவற் களிப்பேன்:
சீசருக் கெனது நேசமோ குறைவிலை;
ஆயினும், என்றன் அருமை உரோமைச்
சீசரின் மேலாச் சிந்தையில் வைத்தேன்,
இதுவே என்விடை; இனிநீர் உரைமின்,
உயிரொடு சீசரை உலகாள வைத்துச்
செயிருறும் அடிமைச் சிறுமையுற் றழிதிரோ?
அன்றி அந்தச் சீசரைக் கொன்றபின்
உரிமை மக்களாய் ஒருங்குடன் வாழ்திரோ?
யாதுநும் விருப்பம்? ஓதுமின்! என்பால்
அன்பு வைத்தார் சீசர்; ஆதலின்
துன்பக் கண்ணீர் வடிப்பேன் அவர்க்காய்;
நற்பே றுள்ளார் அவரா தலின்யான்
அப்பே றெண்ணி அகமகிழ் கின்றேன்;
ஆண்மை யுள்ளார் அவரா தலின்யான்
பேணி யவர்தம் பெருமையை மதிப்பேன்;
ஆயினும் அடங்காப் பேரவா வுடையார்,
ஆதலின் அவரைத் தீதறக் கொன்றேன்;
காதலுக் காகக் கண்ணீர் வடித்தேன்;
பேற்றுக் காகப் பெருமகிழ் பூத்தேன்;
ஆண்மைக் காக மாண்புற மதித்தேன்;
ஆசைக் காக அவருயிர் செகுத்தேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிபடு தொழும்பில் வாழ விரும்பும்
இழிதக வாளன் ஈங்குளன் கொல்லோ?
அன்னான் ஒருவன் உளனேல் அவனுக்(கு)
இன்னாச் செய்தே னாகுவென் யானே;
உரோமன் என்னும் உயர்வினை விரும்பா
ஒருவன் உம்மிடை உளனோ? உரைமின்;
அன்னான் ஒருவன் உளனேல் அவனுக்(கு)
இன்னாச் செய்தே னாகுவென் யானே;
தாயினும் இனிய தன்னுடை நாட்டிற்
காதல் கொள்ளாக் கயவனு முளனோ?
அன்னான் ஒருவன் உளனேல் அவனுக்(கு)
இன்னாச் செய்தே னாகுவென் யானே;
என்னுரை கேட்டீர், இனிநும்
நன்மொழிக் காயிடை நிறுத்துவென் யானே.

## விளக்கக் குறிப்புகள்:

**என்றகவெண்ணி** - (என் + தகவு + எண்ணி) **தகவு** - மேன்மை; **நன்னர்** - நன்றாய்; **ஏதம்**-குற்றம்; **காட்சி** - அறிவு; **எழுந்தது எற்றுக்கு என்று அவன்வினவின்**: **எற்றுக்கு**-எதன்பொருட்டு; **செயிர்**-குற்றம்; **தீதறக் கொன்றேன்** - உரோம மக்கள் அடிமைகளாக்கப்படும் கேடு ஒழியும்படி கொன்றேன்; **செகுத்தல்** - அழித்தல்; **தொழும்பு**-அடிமை; **இனிநும் நன்மொழிக்காய்** இடைநிறுத்துவென் யானே, என்க.

## 2. அந்தனி நிகழ்த்திய ஈமப் பேருரை

(எடுப்பு)

'நண்பரே, உரோமரே, நாட்டுநன் மக்களே,
புண்படு நெஞ்சினேன் புகல்வதைக் கேண்மின்:
சீசரின் புகழிவண் பேசயான் வந்திலேன்,
நேசரைப் புதைக்கவே நேர்ந்தியான் வந்தேன்;
மாந்தர் இழைக்குந் தீங்கவர் மாண்டு
போந்த பின்னும் புவியினில் நிலைக்கும்;
மற்றவர் செய்யும் நற்செயல் அவர்தம்
எற்புடன் மண்ணில் இடப்படும் ஒருங்கே;
ஈதே அம்ம உலகியல் பாதலின்
தீதில் சீசர் திறத்துமஃ தாகுக;
ஆசை மிக்கவர் சீசரென் றுமக்குப்
பெருந்தகை புருட்டசும் திருந்த வுரைத்தார்;
ஆங்கது வாயின் தீங்கது பெரிதே;
அதற்குறு தண்டமும் பதைப்புற வடைந்தார்;
அன்பர் புருட்டசும் அவருடை நண்பரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பாய் எனக்கிங் கிசைவளித் தமையால்-
(புருட்டசோ தகவு பூண்டுள சீரியர்,
அவருடை நண்பரும் அத்தகை யோரே,
யாவருந் தகவுடைச் சீரியர் தாமே;)
சீசர் பொருட்டுச் செய்யுமிக் கடனிற்
பேசுதற் கும்முன் பேணியான் வந்தேன் –
சீசரென் நண்பர், சிந்தைக் கினியர்,
நேச நட்பி நெறிவழா நேரியர்,
ஆயினும் புருட்டசோ அவாவுளர் என்பர்
புருட்டசோ தகவு பூண்டுள சீரியர்--
அமரிடைச் சீசர் அடையலர் பலரைத்
தமதுறு வலியாற் சிறையெடுத் தெமது
நன்னகர் புகலக் கொணர்ந்தவர் தந்த
பொன்னால் நிறைத்தார் பொதுக்கரு வூலம்;
அவாவென இதனை ஆரெடுத் துரைப்பர்?
அவாவுளர் நீர்மையும் இதுவோ அறைவீர்!
ஏழை மக்கள் இனைந்தழு தாரெனக்
கோழைபோற் சீசருங் குழைந்தழு தாரே!
பெருநசை யாளர்தம் பெற்றியும் இதுவோ?
உரமிகும் உளமவர்க் கொருதலை வேண்டுமே!
ஆயினும் புருட்டசோ அவாவுளர் என்பர்;
புருட்டசோ தகவு பூண்டுள சீரியர்;
உலூப்பர்க்கல் விழாவில் உலகாள்கென்று
மும்முறை அவர்க்கியான் முடிவழங் கியதும்
அம்மணி முடியை அவர்மும் முறையும்
ஏற்க மறுத்ததும் எல்லீர் நீவிரும்
கண்ணால் அன்று கண்டீ ரன்றே;
நண்பீர், உரைமின் நசையிது தானோ?
ஆயினும் புருட்டசோ அவாவுளர் என்பர்;
வாயே, அவரும் மாண்புளர் மன்னோ!
புருட்டசு சொன்னவை பொய்யெனப் புகலேன்,
ஆயினும் அடியேன் அறிந்ததை நுமக்கு
நேய முறையாற் சொல்லவே நேர்ந்தேன்;
சீசரை ஒருகால் நீயிரெல் லீரும்
ஆதரித் தீரதற் கேதுவு முண்டே;
அத்தகை யீர்நீர் இன்றவர்க் கிரங்காச்
சித்தங் கொண்டது மெவனோ, செப்புமின்;
தகைத்துநும் அன்பைத் தடுப்பதும் யாதோ?
பகுத்தறி வேநீ பழியினுக் கஞ்சிப்
பொல்லா விலங்கிடைப் புகுந்தனை கொல்லோ?
அறிவிழந் தனரே ஐயகோ மாந்தர்--!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமின் நண்பீர்--புலம்புமென் நெஞ்சம்
சீசரை யெண்ணிச் சென்றவர் உடல்சேர்
பேழையுட் புகுந்துள தேஜையென் செய்வேன்?
மறித்தென் பாலது வருஉம் வரையும்
நிறுத்துவன் எனது பேச்சினை இன்னே.

## விளக்கக்குறிப்புகள்:-

**இவண்** - இவ்விடம்; **எற்பு** - எலும்பு; **அம்ம** - கேட்போர் கருத்தை யீர்க்கும் இடைச்சொல்; **தீதில் சீசர் திறத்தும் அஃதாகுக** - குற்றமில்லாத சீசர் விடயத்திலும் அப்படியே யாகுக; **திருந்த** - தெளிவாக; புருட்டசு தமக்குப் பேச இசைவளித்தமையால் தாம் பேசவந்திருப்பதாகக் கூறத் தொடங்கிய அந்தனி, இடையிடையே புருட்டசையும் அவருடைய நண்பரையும் 'தகவுடையவர்' என்று வஞ்சப்புகழ்ச்சியாக குறிப்பிடுகின்றார். '**புருட்டசோ**' என்பதிலுள்ள ஓகாரம் உயர்வு சிறப்பையன்றி, எதிர்மறைப்பொருளும் தருதல் காண்க. **கடன்** - இறுதிக்கடன், அதாவது ஈமக்கிரியை. **அமர்** - போர்; **அடையலர்** - பகைவர்; **புகல** - மகிழ்ச்சி கொள்ள;
**கருவூலம்** - பொருளறை அதாவது திறைசேரி; **கோழை** - இளக்கமான நெஞ்சுள்ளவன்; **ஒருதலை** - நிச்சயமாக; **நசை** - ஆசை.

(அந்தனியின் பேச்சைக் கேட்ட மக்கள் அவருடைய அழுகையைக் கண்டு, தாமும் இரங்கினர். அவர்களது மனமும் ஓரளவு மாறத்தொடங்கியது. '**அந்தனி சொல்வதில் நியாயம் இருக்கிறது.** உண்மையிற் சீசருக்குப் பெருங் கொடுமை செய்யப்பட்டுள்ளது என்றே தோன்றுகிறது. சீசருடைய இடத்துக்கு இன்னுங் கொடிய ஒருவரே வரக்கூடும். ***சீசர், தமக்களித்த முடியை மறுத்துவிட்டாராமே;*** ஆகவே, அவருக்குப் பேராசை இல்லை என்பது தெளிவு. ஐயோ! அழுதழுது அந்தனியின் கண்கள் அழல்போலச் சிவந்துவிட்டனவே! அந்தனியிலும் சிறந்த பெருந்தகை யொருவர் இந்த உரோம நகரிலே இல்லை.'-- இவ்வாறு மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்கின்றனர். இந்தக்கட்டத்திலே அந்தனி மீண்டுந் தமது பேச்சைத் தொடருகிறார்.)

### (தொடுப்பு)

'நெருநற் சீசர் ஒருமொழி யுரைத்தால்
இருநிலம் வெருவி இறைஞ்சிடும்; இன்றோ
எளியரின் எளியராய் இறைஞ்சுநர் இன்றி
அளியர் பிணமாய்க் கிடப்பார், அந்தோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியீர் நும்மைப் பேதுறக் கலக்கி
உருகெழு சினத்தீ உளத்தின் மூட்டிக்
குழப்பஞ் செய்கெனக் குறித்தே னாயின்,
இழைப்பேன் மன்ற புரூட்டசுக் கின்னா;
காசிய சுக்குங் கடுங்கண் செய்வேன்;
பேசிய இருவரும் பெருந்தகை யாரென
நீவிர் அறிவீர், நேர்ந்தியான் அவர்க்கு
நாவினா லேனும் நவைசெய வொட்டேன்;
மாண்டவர் தமக்கும் மற்றியான் எனக்கும்
ஈண்டுள நுமக்கும் இன்னாங் கொருகாற்
செய்யினுஞ் செய்வேன்; செயிரிலாத் தகைசேர்
ஐயர் அவர்க்கோ அதுசெயேன்; ஆயினும்
ஈங்கோர் ஆவணம் என்பால் உளதிது
பாங்கருஞ் சீசரின் பொறிப்பொடு பட்டது;
மற்றிதை யவர்தஞ் சிற்றறை யதனிற்
கண்டெடுத் தேனவர் கைப்பட எழுதிய
இறுதி விருப்ப முறியிது கண்டீர்,
ஈங்கிதிற் சீசர் எழுதிய கட்டுரை
பாங்காய் மக்கள் செவியிற் படுமேல்,
(இல்லை, இல்லை - இவ்வுரை யுமக்குச்
சொல்ல விரும்பேன்; சோர்விது பொறுப்பீர்;)
நாட்டவர் இதனைக் கேட்டன ராயின்
விதுப்பொடு சென்றவர் புதுப்புணில் முத்தம்
கொடுப்பர்; தங்கைக் குட்டையை அண்ணலின்
தூய குருதியில் தோய்ப்பர்; அன்றியும்
அயர்வற நினைவில் அவரைவைத் தேத்த
மயிரொன் றிரந்ததை உயிரெனப் பேணுவர்;
இறக்குங் காலவ் வெய்தருந் தேட்டம்
சிறக்கும் மக்கட் குரிமையிற் செல்கென
இறுதி முறியில் எழுதுவர் தாமே.

(சீசரின் இறுதிமுறியை அந்தனி எடுத்துக் காட்டி, அதில் அவர் என்ன எழுதியுள்ளார் என்பதை வாசித்துக் காட்டாமற் குறிப்பாகச் சில கூறுகிறார். அந்த ஆவணத்திற் சீசர் என்ன எழுதியுள்ளார் என்று அறிய மக்கள் ஆவல் கொள்கின்றனர். ஆகவே, அதனை வாசித்துக் காட்டுமாறு அவர்கள் வற்புறுத்திக் கேட்கின்றனர். ஆனால், அந்தனியோ அவர்களது ஆவலை மேலும் தூண்ட விரும்பித் தமது பேச்சைத் தொடருகிறார்.)

பொறுமை போற்றுமின் புரிவுறு நண்பீர்,
முறியுரை இதையான் மொழிவது குற்றம்;
வள்ளியர் எந்தை நும்பால்வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளரு மன்பின் தகவினை நீவிர்
அறியீ ராதல் நன்றே; அறிவில்
கல்லோ, மரமோ அல்லீர் நீரே;
மாசில் பண்பின் மக்க ளாதலின்
சீச ரெழுதிய செய்தியைக் கேட்பின்
செழுங்கன லென்னச் சினங்கொண் டெழுவீர்,
விழுங்கு துயரால் வெறியுற் றலைவீர்;
மாண்டவர் உடைமைக் குரிமையு மரபிற்
பூண்டுளீ ரென்னும் புதினந் தனைநீர்
அறியீர்; அதுவும் நன்றே; அறியின்
உறுவ தியாதோ? உட்குமென் நெஞ்சே!

(இப்பொழுது மக்கள் உண்மையிலேயே உணர்ச்சி வெறி கொண்டவராகிச் சீசரின் இறுதிமுறியை வாசிக்குமாறு முன்னிலும் வன்மையாகக் கேட்கின்றனர்.)

பொங்குதல் வேண்டா, பொறுமின் சிறுவரை
இங்கிது குறித்துப் பேசிய தென்பிழை;
சீசரை வாளாற் சிதைத்த அத்தகு
சீரியர்க் கின்னா செய்வது தேரேன்;
ஆங்கவர்க் கதனால் தீங்குறு மென்றே
அஞ்சுவன், எனது நெஞ்சறி வீரே.

(சீசரைக் கொலை செய்தவரைச் சீரியர் என்று அந்தனி சொன்னதும், மக்கள் கோபாவேசங் கொண்டு, அவர்களை வாய்க்கு வந்தபடி வைகின்றனர். முறியை வாசிக்கக் கேட்கவேண்டும் என்று முழங்குகின்றனர். இந்தச் சூழ்நிலையை உருவாக்குவதே அந்தனியின் நோக்கம். ஆகவே, அவர் இப்பொழுது மக்களைத் தம் விருப்பப்படி ஆட்டி வைக்கின்றார்.)

'இப்பொழு திந்த முறிவுரை யெடுத்துச்
செப்புக வெனநீர் வற்புறுத் துவிரேல்,
அடலுறு சீசர்தம் உடலினைச் சுற்றி
இடமுற நிற்பீர்; இங்கிருந் திறங்கி
இம்முறி ஈந்த செம்மலை உமக்குத்
தெருளுறக் காட்டவெற் கருளுவிர் நீரே.

('ஆம், இறங்கி வருக; இறங்கி வருக' என்று ஆரவாரித்த மக்கள் சற்றே இடம் விட்டுக் கொடுக்க, மேடையினின்றும் அந்தனி மெல்ல இறங்கிச் சீசரின் உடலை வைத்திருந்த பிணப்பெட்டிக்கு அருகில் வந்து நிற்கின்றார். அங்கே பேரமைதி நிலவுகிறது. அனைவரும் அந்தனியின் வாயை ஆவலோடு பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். அந்தனியும் தமது பேச்சைத் தொடருகிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (முடிப்பு)

(சீசரின் மேலங்கியை அகற்றி, அவருடைய புண்பட்ட மேனியை மக்களுக்கு அந்தனி காட்டியதும், அவர்கள் சினந்து பொங்குகின்றனர். 'அந்தோ! உள்ளத்தை உருக்குங் கோலம்! பெருந்தன்மை வாய்ந்த சீசர்!' என்று ஓலமிடுகின்றனர் சிலர். 'ஓ கொடியர்! கொலைகாரர்! அவர்களைப் பழிக்குப் பழி வாங்குவோம்!' என்று கூவுகின்றனர் சிலர். 'கொல்லுங்கள்! எரியுங்கள்! வெட்டுங்கள்! வஞ்சகர் எவரையும் வாழவிடாதீர்கள்!' என்று வஞ்சினங் கூறி எழுகின்றனர் சிலர். ஆனால் அந்தனி அவர்களைக் கையமர்த்தித் தமது பேச்சைக் கேட்குமாறு வேண்டுகின்றார். 'அமைதி! அமைதி! அண்ணல் அந்தனி பேசுவதைக் கேளுங்கள்,' என்கிறார் கூட்டத்தில் நின்ற ஒருவர்.

'ஆம், அவர் சொல்வதைக் கேட்போம்; அவர் சொற்படியே செய்வோம்; அவரோடே, எம்முயிரையும் விடுவோம்,' என்று முழங்குகின்றனர் ஏனையோர். இந்தச் சூழ்நிலையிலே அந்தனி அமைதியாக மீண்டும் தமது உரையை தொடர்ந்து முடிக்கிறார்.)

'நல்லியல் புள்ளீர், நயத்தகு நண்பீர்,
எல்லே இந்த வல்லடிக் கும்மைத்
திடுமெனத் தூண்டிற் கெடுகவென் நாவே;
கொடுவினை இதனைக் குறித்துச் செய்தோர்
தகைமிக வுடையர்; தனிப்படு முறையிற்
பகையவர் கொண்ட பரிசறி யேன்யான்;
ஏனிது செய்தார் என்பதுந் தேரேன்;
ஆனால், அவரோ அறிவொடு தகையும்
உடையவர்; ஆதலின் உமக்கவர் தக்க
விடையொடு நல்ல விளக்கமுந் தருவர்;
நேயரே, உங்கள் நெஞ்சங் கவரும்
மாயங் கற்று வந்திலேன்; மற்றுப்
புருட்டசு போலப் புனைந்து மருட்டும்
நாவலன் அல்லேன், நீவிரே அறிவீர்;
உள்ளதை உரைக்கும் வெள்ளை உளத்தேன்,
நண்பர்பால் அன்புகொள் பண்பினேன், இதனை
ஆங்கவர் நன்கனம் அறிவார், ஆதலின்
ஈங்கிப் பொதுவில் இறந்தவர் புகழை
எடுத்துப் பேசென விடுத்தனர் எனையே;
கேட்பவர் நரம்பிற் குருதி கிளர
வேட்பச் சொல்லும் வீறெனக் கில்லை;
நுண்ணறி வில்லை, நுவலுந் திறனிலை;
திண்ணிய குரலிலை, செஞ்சொல் வளமிலை;
மெய்ப்பா டில்லை, மேதக வொன்றிலை;
நெஞ்சில் எழுந்ததை தேரிதின் உரைப்பேன்;
புதிதாய் ஒன்றைப் புகலவும் அறியேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுநீர் அறிவீர், அதுவே சொல்வேன்;
அண்ணல் சீசரின் புண்ணை·உமக்குக்
காட்டி அந்தக் கல்லா ஊமை
வாய்களை எனக்காய்ப் பேசவைப் பேனே;
ஆனால், அந்த நாநலம் வாய்ந்த
புரூட்ட சாக நானிங் கிருப்பின்,
அந்தனி யாக அவரு மிருப்பின்,
கொந்தளித் துணர்வைக் குமுறச் செய்வேன்;
சீசரின் புண்ணெலாம் செவ்வா யாகப்
பேசப் வைத்துப் பேரெயில் ஆழுந்த
உரோம நகருள் ஒவ்வொரு கல்லும்
உருத்தெழுந் துடங்கு செருச்செய வலிப்பேன்
என்னே! பொங்கி எழுவீர் கொல்லோ?
இன்னும் என்னுரை கேட்பீர் இனியீர்,
என்னோ செய்தற் குன்னி யெழுவீர்?
இத்தனை அன்புஞ் சீசருக் கெவனோ
வைத்தீர்? அந்தோ! வகைசொல வறியீர்;
இன்னே அதனை யானெடுத் துரைப்பேன்,
முன்னே சொன்ன முறிமறந் தீரோ?
பொருவருஞ் சீசர் பொறிப்பொடு பட்ட
அருமை முறியீ தறைகுவன், கேளீர்
உரோம நகர்வாழ் ஒவ்வொரு வர்க்கும்
எழுபத் தைந்து செழும்பொன் ஈந்துளார்;
இன்னுங் கேளீர், இழுமென வொழுகுந்
தைபர்க் கிப்பால் தனிப்பட அவர்க்குள
உலாவழி யன்றியும் உயர்பூங் காவும்
பழமுதிர் சோலையும் படப்பையு மெல்லாம்
வழிவழி உமக்கே வைத்தனர் உரிமையின்
வெளியில் உலவிநீர் களிகொளு மாறே;
சீசரின் வண்மை பேசரி தம்மா!
இப்போ தெண்ணுமின் இவர்போல்
எப்போ தொருவர் இனிவருவாரே!

(இவ்வாறு அவலச் சுவையின் உச்ச நிலைக்குக் கொண்டு போய்த் தமது பேச்சை முடிக்கின்றார் அந்தனி. இப்போது கடல் கரைபுரண்டாற்போல அந்த மக்கட் கூட்டம் கட்டுக் கடங்காது பொங்கி எழுகின்றது. ‘சீசரைப் போன்ற ஒருவரை இனி நாம் ஒருபோதுமே காண்மாட்டோம்; வாருங்கள், அவருடைய உடலை இந்தப் புனித இடத்திலே வைத்து எரிப்போம்; எரிந்த கொள்ளிகளை எடுத்துக் கொண்டுபோய், இந்தப் படுகொலை புரிந்த கயவரின் இல்லங்களையும் எரிப்போம்,’ என்று இரைந்த மக்கள் தமது செயலில் விரைகின்றனர்.
‘குழப்பமே! நீ இப்போது தலையெடுத்து விட்டாய்; இனி, நீ விரும்பியதைச் செய்வாயாக’, என்று கூறி அமைதி கொள்கின்றார் அந்தனி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கக்குறிப்புகள்:

**வாயே** - உண்மையே மிகுதிப்பொருள் தருவதோடு, இங்கே அங்கதமாக ஒழியிசைப் பொருளுந் தருதல் காண்க; அதாவது, மாண்பு இல்லாதவர் என்பது. **புலம்பும் என் நெஞ்சம்** -சீசரைப் பிரிந்தமையால், தனித்து வருந்தும் எனது நெஞ்சம்; **பேளை**-பிணப்பெட்டி; **இன்னே**- இப்போது; **நெருநல்**-நேற்று; **இறைஞ்சுனர்**-வணங்குவோர்; **அளியர்**-இரங்கத்தக்கவர், அருளுடையவர் என இரு பொருள்படுதல் காண்க.

**பேதுற**-அறிவு மயங்க; **மன்ற**-தேற்றங் குறிக்கும் இடைச்சொல். **கடுங்கண்** - கொடுமை; **நவை**-குற்றம்; **ஒட்டேன்**-இணங்கேன்; **இன்னா**-தீங்கு, துன்பம் என்றுமாம். **ஐயர்**-உயர்ந்தோர்; (இங்கும் அங்கதக் குறிப்புத் தோன்றவே அவ்விருவரையம் அந்தனி 'தகைசேர் ஐயர்' என்கிறார்.) **ஆவணம்**-எழுத்துச் சாதனம்; **பாங்கரும் சீசர்**-அரும் பாங்குள்ள சீசர் என மாற்றுக. **பாங்கு**-தகைமை; **பொறிப்பு**-முத்திரை இறுதி முறி-மரண சாதனம்; **கட்டுரை**-உறுதியுரை; சீசரின் இறுதிமுறியில் உள்ள வாசகத்தை மக்கள் கேட்டால்' என்று சொல்லத் தொடங்கிய அந்தனி, இடையில் அதை நிறுத்துகிறார். நிறுத்தி, முறி வாசகத்தைப் படித்துக் காட்டுதல் தமக்கு விருப்பமில்லை என்று கூறி, மக்களின் ஆவலைத் தூண்டுவதைக் காண்க. **விதுப்பு**-பரபரப்பு, வேட்கையுமாம். **புரிவுறு**-அன்புள்ள; **எந்தை**-எம்தலைவர்; இங்கே சீசரைக்குறிக்கும். **உறுவது யாதோ**-என்னதான் விளையுமோ; **உட்கும்**-அஞ்சும்; **சிறுவரை**-சிறிதுநேரம்; **அடலுறு**-வலிமைவாய்ந்த; **இடமுற**-இடம் உண்டாக; **செம்மல்**-தலைவன்; பெருமையிற் சிறந்தோன். **தெருளுறக் காட்ட எற்கு அருளுவீர்**-தெளிவாகக் காட்டுவதற்கு எனக்கு விடைதருவீராக. **எல்லே**-ஒரு வியப்பிரக்கச் சொல்; **வல்லடி**-பலவந்தம், கொடுமையுமாம். உம்மை இந்த' வன்செயலுக்குத் தூண்டுவேனாயின் எனது நாக்கெடுவதாக. என்றாராயினும், உண்மையிற் கெடவேண்டும் என்பது அவர் கருத்தன்று. **பரிசு** - தன்மை; **பொது** - ஊர்மன்றம்; **மேதவு**-மேன்மை, மதிப்புமாம். **கல்லா ஊமை வாய்** - என்றது பேசவறியாத புண்ணாகிய வாயை; **செவ்வாய்**-குருதி கொப்பளிக்கும் வாய்; **ஆவது** - புண்வாய்; **பேரெயில்**-பெரிய மதில் **எயில்**-மதில்; **உருத்தெழுந்து** - உருக்கொண்டு எழுந்து; வெகுண்டெழுந்து என இருபொருளுங் கொள்க. **உடங்கு** - ஒருங்கே; **வலிப்பேன்**-தூண்டுவேன்; **இனியீர்**-இனியர் என்பதன் விளி. **உன்னி**- உட்கொண்டு; **எவனோ**-ஏன்; **படப்பை**-தோட்டம்; **தைபா**-ஒருநதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்த அடிகள்
## வாழ்க்கையும் பணிகளும்

கருவிலே திருவுடைமை, கடவுள் நம்பிக்கை, உறுதியான உடல், கூர்ந்த நுண்ணறிவு, அசாதாரண நினைவாற்றல், விடாமுயற்சி, தூய துறவொழுக்கம், கேட்டார்ப்பிணிக்கும் நாவன்மை, எண்ணிய கருத்தை எண்ணியவாறே வெளிப்படுத்தும் எழுத்தாற்றல் என்னும் இக்காரணிகள் எல்லாம் ஒருங்கியைந்தமையால் உருவாக்கப்பட்ட ஒருவரே விபுலாநந்த அடிகள்.

### இளமைப்பருவமும் அடிப்படைக்கல்வியும்:

இவர், இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரான மட்டக்களப்புப் பட்டினத்தின் தென்றிசையிலே, 28 மைல் தொலைவிலுள்ள காரைதீவு என்னும் ஊரிலே, சாமித்தம்பி என்பவருக்கு அவர் வாழ்க்கைத் துணையான கண்ணம்மையார் வயிற்றில் 1892ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3ஆம் தேதி மகவாய்ப் பிறந்தார். பிள்ளைக்குப் பெற்றோர் இட்டபெயர் மயில்வாகனம் என்பது. மயில்வாகனத்துக்கு இளம்வயதில் எழுத்தறிவித்தவருள் திரு. ச. குஞ்சித்தம்பி ஆசிரியர் விதந்து குறிப்பிடத்தக்கவர். அடிகள் பின்னாளிற் பாடிய குருவணக்கப் பாடல்களிற் குஞ்சித்தம்பி ஆசிரியரைப் போற்றியுள்ளார்.

மயில்வாகனம் தமது பத்தாம் வயதில் (1901) கல்முனை மெதடிஸ்த பாடசாலையிலும், பின்னர் 1906ல் பட்டினத்திலுள்ள புனிதமைக்கேல் ஆங்கிலக் கல்லூரியிலுஞ் சேர்ந்து கல்வி கற்றார். கல்லூரியிற் கற்கையில் ஆங்கிலமொழி, ஆங்கில இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைத் தலைசிறந்த ஆசிரியர்களிடங்கற்று, அப்பாடங்களில் ஆர்வமும், திறமையும் பெற்று விளங்கியதோடு, ஆசிரியர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் ஆளானார். தமது கணிதத் திறமையினால் ஆசிரியரையே வியப்படையச் செய்த மயில்வாகனம், தமது 16ஆம் வயதில் (1909ல்) கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அடிகளுடைய ஆளுமை வளர்ச்சிக்கு இக்கல்லூரியே அடிப்படையிட்டது என்று அடிகளோடு நெடுங்காலம் பழகிய திரு.க.கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கல்லடி சிவானந்த வித்தியாலய அதிபர்) கருத்துத் தெரிவித்துள்ளார்.

கல்லூரியிற் கற்றபோதே விடுமுறைக் காலங்களில் காரைதீவு வித்துவான் பொ.வயித்தியலிங்கத்தேசிகரிடம் தமிழ் இலக்கணநூல்கள், இலக்கியநூல்கள் ஆகியவற்றையும் வடமொழி நூல்கள் சிலவற்றையும் மயில்வாகனம் முறையாகப் பாடங்கேட்டார். அவர் 1909ல் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் தேறிய பின், அக்கல்லூரியிலேயே சில ஆண்டுகள் ஆசிரியராய்க் கடமையாற்றிப் பின்னர் அக்கல்லூரியிலிருந்து விலகிக் கல்முனை புனிதமரியாள் ஆங்கிலப் பாடசாலையில் ஓராண்டுக் காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1912ஆம் ஆண்டளவில், மயில்வாகனம் கொழும்பு சென்று, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிற் சேர்ந்து கற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிற் கற்ற காலத்திலே அவர் உயர்தரத் தமிழ்க் கல்வியிலும் கருத்துச் செலுத்தி கொழும்பிலே தமிழறிஞர்களாக விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ச.கந்தையாபிள்ளை, சி.தமோதரம்பிள்ளை முதலியார் சிற். கைலாயபிள்ளை ஆகியோரிடம் சில உயர்தரத் தமிழ் இலக்கண நூல்களையும் கருத்தூன்றிக் கற்றார்.

மட்டக்களப்புக்கு மீண்டு, மயில்வாகனம் ஓராண்டு ஆசிரியப்பணி புரிந்து 1915ல் மீண்டுங் கொழும்பு சென்று, அரசினர் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து 1916ல் விஞ்ஞானத்துறையில் 'டிப்ளோமாப்' பட்டம் பெற்றார். இவ்வாண்டிலேயே மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சை எழுதிச் சித்தியடைந்தார்.

இவர் 1912இற்கும் 1916க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கோதண்ட நியாயபுரி குமரவேணவமணிமாலை, கணேச தோத்திரப்பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணியசுவாமி இரட்டை மணிமாலை ஆகிய சிறு பிரபந்தங்களை இயற்றினார். பின்னர் இலத்தின் மொழியில் வேர்ஜில் என்னும் புலவர் ஆக்கிய ஏநேயகாவியத்தின் (Aeneid) இரண்டாம் பரிச்சேதத்தைப் தமிழ்ச் செய்யுள்நடையில் மொழிபெயர்த்து, நூற்பொருள், கதைத்தொடர்பு முதலியவற்றை உரைநடையில் எழுதி, 1916ல் மதுரைத்தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டார்.

## யாழ்ப்பாணத்தில் வாசமும் துறவு பூணும் முடிவும்:

பயிற்றப்பட்ட ஆசிரியரும் தமிழ்ப்பண்டிதருமான மயில்வாகனம் 1917ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூயில் இரசாயனப் பாடங்கற்பிக்கும் ஆசிரியராய்ச் சேர்ந்தார். அங்கே கற்பித்துக் கொண்டிருந்த காலத்திலே அவர் லண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணிப் (B.Sc) பட்டதாரியானார். யாழ்ப்பாணத்துப் புலவர்களோடும், அறிஞர்களோடும் அளவளாவிப் பழகியதுபோலவே இவர் ஏழைமக்களோடும் பொதுமக்களோடும் நெருங்கிப் பழகினார். அன்றியும் நாடகத்துறையை வளர்க்க விரும்பிய இவர் இளைஞர் பலருக்கு நாடகங்கள் பழக்கி, மேடையேற்றினார். மேலும் அன்பர்களின் அழைப்பை ஏற்று, யாழ்ப்பாணத்திற் பல இடங்களில் தமிழ்பற்றியும் சைவம் பற்றியும் சொற்பொழிவுகளும் ஆற்றிவந்தார். இவ்வாறே இவர் புகழ் யாழ்ப்பாணமெங்கும் பரவியது.

இவர் பெருமையை அறிந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளர், இவரை அக்கல்லூரியின் அதிபராக்க விரும்பி, கொழும்பு திருவிளங்க தேசிகர் மூலம் இவரை உடன்படச்செய்தனர். இவரது தலைமையிற் கல்லூரி வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் யோகர் சுவாமிகள், மாவை வெண்ணெய்க்கண்ணனார் என்னும் நவநீதகிருஷ்ணபாரதியார், மட்டுவில் மகாலிங்கசிவம், சாவகச்சேரி வித்துவான் பொன்னம்பலப்பிள்ளை முதலிய சிலர் ஒழுங்காகக் கூடி நடத்திவந்த சற்சங்கத்தில் பண்டிதர் மயில்வாகனனாரும் கலந்து தமிழ், சைவம், பற்றிய உயர்வான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி யாவரையும் மகிழ்வித்தார். அவ்வவ்போது தாம் பாடிய தனிப்பாடல்களைப் படித்துக்காட்ட அவற்றைப் பாராட்டிய மயில்வாகனனார், அப்பாடல்களையெல்லாம் ஒரு நூலாகத் தொகுக்கச் சொல்ல, 'உலகியல்' விளக்கம்' என்னும் பெயருடன் பாரதியார் தம் பாடல்களைத் தொகுத்தளித்தார். மயில்வாகனனார் மட்டக்களப்பு வித்துவான் பூபாலபிள்ளையவர்களைக் கொண்டு பாடல்களுக்கு உரையெழுதுவித்து, நூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சேற்றி வெளியிடும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். மயில்வாகனனாரும், நவநீத கிருஷ்ணபாரதியாரும் சங்ககாலப் புலவர்களான கபிலபரணர் போன்று கெழுதகை நட்புடன் பழகிவந்தனர்.

அக்காலத்திலே வடபெரும்பாகத் தமிழ் வித்தியாதரிசியாய் விளங்கிய சிவத்திரு தி. சதாசிவஐயர் அரிதின் முயன்று, அரசினர் அனுமதியோடு 1921ல் நிறுவிய ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை ஐயரோடு சேர்ந்து, மயில்வாகனனார் மறுசீரமைப்புச் செய்து, மதுரைத்தமிழ்ச் சங்கம் போன்றே பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்னும் பரீட்சைகளை நடாத்திச் சான்றிதழ் வழங்கும் கல்விநிறுவனமாய் விளங்கச் செய்தார்.

இவ்வாறு யாழ்ப்பாணத்து மக்களின் உள்ளங்கவர்ந்து, அவர்களின் பெருமதிப்புக்கும், அன்புக்கும் ஆளாயிருந்த மயில்வாகனனார், பட்டம், பதவி, புகழ் எல்லாம் பெற்றிருந்தும் ஏனையோர் போலத் தகுந்த பெண்ணொருவரைத் திருமணஞ் செய்து கொண்டு சிறப்பாக வாழ்க்கை நடாத்தியிருக்கலாம். ஆனால் இவர் அவ்வாறு செய்திலர்; தமது முப்பதாம் வயதளவிலேயே துறவுபூண முடிவுசெய்துவிட்டார். இந்த முடிவு செய்வதற்கு யாதேனும் ஒரு காரணம் இருந்திருக்கலாம். ஆனால், இவருடைய வாழ்க்கை வரலாறு எழுதியோர் எவரும் அதுபற்றி ஒன்றுங் கூறவில்லை. மயில்வாகனனாரும் அதுபற்றி எவருக்கும் விளக்கமாக எதுவும் கூறுவில்லைப் போலும்.

1944 முதல் 1947வரையுள்ள காலப்பகுதியில் கொழும்பில் அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தில், அடியேன் விபுலாநந்த அடிகளிடம் தமிழ் கற்றேன். இரண்டாம் ஆண்டு முதல் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்ற என்னுடன் அடிகள் பலபொருள்கள் பற்றிக்கலந்து உரையாடுவதுண்டு. ஒருமுறை ஒரு சந்தர்ப்பத்தில் அடிகள் இவ்வாறு கூறினார்: ‘அக்காலத்தில் என் மனத்தில் ஒரு மயக்க உணர்வு தோன்றிச் சில கணப்பொழுதுகளே நின்று, நீங்கிவிட்டது. மனந்தெளிந்து, துறவில் நிலை கொண்டுவிட்டது’. அடிகள் அக்காலத்திலே பழுத்த துறவியாக வணக்கத்துக்கு உரியவராக விளங்கினார். நானோ அடிகளின் மாணாக்கன். அடிகள் குறிப்பிட்ட அந்த மயக்கம் பற்றி வினாவவோ, விளக்கம் கேட்கவோ நான் விரும்பவில்லை. அடிகளும் அது பற்றி மீண்டும் ஒருபோதும் என்னிடம் கூறவில்லை.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் தருணம் வந்துவிட, பிறவிகள் தோறும் செய்த தவப்பயனை நுகருவதற்கேற்ற ஏது நிகழ்ச்சி தோன்றியதும், பண்டித மயில்வாகனனார் இளமையிலேயே துறவு பூண முடிவு செய்தார் எனலாம். யாழ்ப்பாண வாசம் இதற்குச் சாதகமான சூழலை உதவியது.

1. யோகர் சுவாமிகளோடு பழகியமையால் இவர் மனம் தூய்மை பெற்றுவந்தது.
2. முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் ஈடுபட்ட மயில்வாகனனாரின் உள்ளம், இளங்கோவடிகளின் இளமைத் துறவு பற்றியும் எண்ணியிருக்கலாம்.
3. தமிழ்த்தொண்டு செய்வதற்குத் துறவற வாழ்க்கையே வாய்ப்பளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இவர் எண்ணியிருக்கலாம்.

4. சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தலைவரும், சிறந்த நாவலரும், தூய அன்னை சாரதாதேவியிடம் தீட்சை பெற்றவருமான சுவாமி சர்வானந்தர் 1920ல் யாழ்ப்பாணம் வந்து, வேதாந்தச் சொற்பொழிவுகள் ஆற்றியபோது மயில்வாகனனாருக்கு அச்சுவாமியின் தொடர்பு ஏற்பட்டது. இராமகிருஷ்ண இயக்கத்திற் சேர்ந்து துறவியானால் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் செய்யலாம் என்று முடிவு செய்தார் மயில்வாகனனார்.

## துறவு வாழ்க்கையும் பல்வகைப் பணிகளும்:

பண்டிதர் மயில்வாகனனார் துறவு பூணும் கருத்துடன் 1922ல் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தை அடைந்தார். அங்கே பரமஹம்சரின் நேர்ச்சீடர்களான சுவாமி பிரம்மானந்தரையும், சுவாமி சிவாநந்தரையும் நேரிற் சந்தித்துப் பழகும் பேறு இவருக்குக் கிடைத்தது. மயில்வாகனனார் சங்க விதிகளுக்கு அமைய ஒழுகி, 1923ல் சுவாமி பிரம்மானந்தரிடம் பிரமசர்ய தீட்சை பெற்று, பிரபோதசைதன்யர் என்னும் பெயரும் பெற்றார். 1924 சித்திரைப் பூரணை நாளன்று பிரபோதசைதன்யருக்குச் சுவாமி சிவாநந்தர் காவியுடை வழங்கி ஞானோபதேசம் செய்து, சன்னியாசத் தீட்சையளித்து, சுவாமி விபுலாநந்தர் என்னும் நாமமும் சூட்டினார்.

விபுலாநந்த அடிகள் தம் குருவைப் போற்றுமுகமாக குருசரண ஸ்தோத்திரம் என்னும் பாமாலையை யாத்தார். 1922 முதல் 1924 வரை மடத்தின் வெளியீடுகளான ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்த கேசரி(ஆங்கிலம்) என்னுஞ் சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்ட அடிகள் பிரபோதசைதன்யர் என்ற பெயரில் அச் சஞ்சிகைகளில் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுவந்தார். அன்றியும் இந்தக் காலகட்டத்தில் கரந்தைத்தமிழ்ச்சங்க வெளியீடான தமிழ்ப்பொழில், மதுரைத்தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழ் ஆகிய சஞ்சிகைகளிலும் ஒழுங்காகக் கட்டுரைகள், கவிதைகள் வெளியிடுவதை முக்கிய கடமையாகக் கொண்டார். இவ்வாறாக அடிகள் எங்கு சென்றாலும், எந்தச் சூழலிலும் தமது தமிழிலக்கிய ஆராய்வையும், தமிழ்த்தொண்டையும் விடாது வெளிப்படுத்தி வந்தார்.

சுவாமி சிவானந்தர் பணித்தவாறு 1925ல் விபுலாநந்த அடிகள் இலங்கைக்கு மீண்டு வந்து, ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைநிறுவனமொன்றை அங்கு நிறுவினார். அன்றியும் கல்வி நிறுவனங்கள் பலவற்றையும், ஏழை மாணவர் இல்லங்களையும் அமைத்தார்; கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை போன்ற இடங்களில் ஆச்சிரமங்களைத் தோற்றுவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் நிறுவப்பட்ட சிவானந்த வித்தியாலயமும், ஏழை மாணவர் இல்லமும் அடிகளுக்கு உயிர்போன்று மிகவும் இனியவை. மேலும் வண்ணை வைத்தியேசுவரவித்தியாலயம், திருக்கோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதா வித்தியாலயம் ஆகியனவும் அடிகள் பொறுப்பேற்று நடாத்திய கல்வி நிறுவனங்களுட் குறிப்பிடத் தக்கவை.

1925ல் கொழும்பு விவேகானந்த சபை வெளியிட்டு வரும் 'விவேகானந்தன்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியர் பதவியை ஏற்று, விபுலாநந்த அடிகள் 'ஆசிரியர் உள்ளக் கிடக்கை' என்னும் தலைப்பில் பலபொருள்கள் பற்றிச் சுருக்கமான கட்டுரைகள் எழுதி வெளியிட்டு வந்தார்.

சங்கத்தின் பல்வேறுபட்ட பணிகளைச் செய்துவந்த அதே வேளையில், அடிகள் மக்களின் அழைப்பினை ஏற்றுக் காலி, நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை, அட்டன் முதலிய இடங்களுக்குஞ் சென்று சமயச் சொற்பொழிவுகளாற்றினார்.

1927ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த காந்தியடிகளை யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் சார்பில் வரவேற்றவர் விபுலாநந்த அடிகளே.

அடிகள் 1931ல் மீண்டுந் தமிழ்நாடு சென்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியர் பதவியை ஏற்று, மூன்று ஆண்டுகள் தொண்டு செய்தார். 1936 பெப்ருவரியில் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டி மண்டபத்தில் (Senate House) ஆங்கில மொழியில் அடிகள் ஆறு விரிவுரைகள் நிகழ்த்தினார். அவை வருமாறு:

**22 ஆம் திகதி - யாழ்ப்பாணன்**
**24 ஆம் திகதி - தமிழிசை**
**25 ஆம் திகதி - சிலப்பதிகார அரங்கேற்று காதை**
**27 ஆம் திகதி - ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை**
**28 ஆம் திகதி - பழந்தமிழகத்தின் சிற்பாசாரிகள்**
**29 ஆம் திகதி - பரிசனவேதி**

இச்சொற்பொழிவுகளை இந்து (The Hindu) நாளிதழ் முழுமையாகப் பிரசுரித்தது.

அவ்வாண்டு பெப்ருவரி 20ஆம் திகதி சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற 'கலைச்சொல்லாக்கம்' என்னும் பொருள் பற்றி அடிகள் சொற்பொழிவாற்றினார்.

1937ல் விபுலாநந்த அடிகள் திருக்கைலாய யாத்திரை செய்து திரும்பினார். மிகமிகக் கடினமானதும் அபாயகரமானதுமான இந்த யாத்திரையை வெற்றிகரமாய்ச் செய்து முடித்த விபுலாநந்த அடிகள் நல்ல ஒளிப்படங்கள் சிலவற்றையும் எடுத்துக்கொண்டு மிகவும் இளைத்த நிலையிலேயே மீண்டார் என்றும்; அதற்குப்பின் அவர் தமது பழைய உடல்நலத்தை முற்றாகப் பெற்றிலர் என்றும்; தமது இடப்பக்கத்தில் ஒரு சிறு கூன் உண்டான நிலையிலேயே மீண்டார் என்றும் அக்காலத்தில் அடிகளோடு பழகிய திரு. எஸ். அம்பலவாணர் (முன்னாள் சிவானந்த வித்தியாலய அதிபர்) எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கைலாய யாத்திரை செய்து திரும்பிய அடிகள் 1938.07.18 ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் தலைமையில் 'எனது கையாலய யாத்திரை' என்னும் பொருள் பற்றிப் பேரானந்தம் பொங்கும் மெய்ப்பாட்டுடன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். இலங்கையிலும் பல இடங்களில் படவிளக்கத்தோடு அப்பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார் என்றும் அறிகிறோம்.

1939ன் நடுப்பகுதியளவில், விபுலாநந்த அடிகள் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மற்றொரு பணியின் பொருட்டு இமயமலைச் சாரலிலுள்ள அல்மோரா நகரில் அமைந்துள்ள மாயாவதித் தவப்பள்ளிக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன் அடிகள் யாழ்ப்பாணஞ் சென்று அங்குள்ள அன்பர்களிடம் பிரியாவிடை பெற்றபோது வயித்தியேசுவர வித்தியாலயத்தில் வித்துவான் சிவத்திரு. கணேசையர் அவர்கள், அடிகளைப் பாராட்டி வாழ்த்தி, அமைதியான இமயச் சூழலிலிருந்தும் அடிகள் தமிழ்த்தொண்டு புரிய வேண்டும் என்று தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து வழியனுப்பி வைத்தார்கள். மாயாவதியிலிருந்து வெளியிடப்பட்டு வந்த 'பிரபுத்தபாரத' என்னும் ஆங்கிலச் சஞ்சிகையின் வரம்புக்கு உட்பட்டு, அடிகள் தமது தமிழ்த்தொண்டிற்கு அதனையும் பயன்படுத்தினார். 'கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த்தாயின் அருளெனக் கருதி ஏற்றுக்கொண்டு விரிந்த முறையிலே தொண்டாற்ற வேண்டும், என்பதே அடிகள் இலட்சியம். 'பிரபுத்த பாரத' இதழ்களில் அவர் பழந்தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம் முதலானவற்றை ஆங்கிலத்தில் விளக்கியும், மொழிபெயர்த்தும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்; மேலும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்னும் சங்க நூல்கள் பற்றிய செய்திகளையும் ஆங்கிலத்தில் தந்தார்.

இராமகிருஷ்ண இயக்கத்தில் ஒரு சீடராகத் தொடர்ந்து தொண்டாற்ற இயலாத அளவுக்கு இலங்கையிலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும் அடிகளுக்கு அழைப்புக்கள் அலையலையாக வந்து கொண்டிருந்தன. அடிகளுக்கு ஏற்பட்ட இந்த 'நெருக்கடிகளைப்' பரிவுடன் விளங்கிக்கொண்ட ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத் தலைமைப்பீடம் அடிகளுக்கு, விதிவிலக்காகச் சற்றே வெளியிலிருந்தும் பணியாற்ற அனுமதியளித்தது.

1943ல் இலங்கைத் தமிழர்களின் வேண்டுகோளைப் பரிவுடன் ஏற்ற தலைமைப்பீடம், விபுலாநந்த அடிகளுக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ள இசைவு அளித்தது. அதன்படி விபுலாநந்த அடிகள் இலங்கைக்கு மீண்டு, கொழும்பில் அமைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்று 1947 ஜூலை 20ல் உடற்பொறையை நீக்கும் வரையும் தமிழ்ப்பணியும், கல்விப்பணியும் ஒருங்கே செய்து புகழ்நாட்டினார்.

விபுலாநந்த அடிகள் பதினான்கு ஆண்டுகளாகச் செய்துவந்த தமிழிசை ஆராய்ச்சியின் பயனான 'யாழ்நூல்' என்னும் பெரிய நூலை இக்காலப் பகுதியில் எழுதி முடித்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கம் அச்சேற்றிய யாழ்நூல் 1947ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் திருக்கொள்ளம்புத்தூர்த் திருக்கோயிலிலே ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையில் அரங்கேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நூல் அரங்கேற்றத்திற்குப் பின், அடிகள் தாம் செய்த யாழோடு யாழ்ப்பாணஞ் சென்றார். அங்கே வயித்தியேசுவர வித்தியாலய மண்டபத்தில் யாழ்ப்பாணத்து அன்பர்களுக்கு யாழ்நூல் அறிமுகவிழா நடத்தினார். அவையோரின் பாராட்டைப் பெற்றுக் கொழும்புக்கு வந்த விபுலாநந்த அடிகள் அவ்வாண்டு (1947) ஜுலை 20ஆம் திகதி ஞாயிற்றுகிழமை நள்ளிரவுக்குச் சற்றுப்பின்னர் சர்வசித்து ஆண்டு ஆடி மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை இரவு தமது 55 ஆம் வயதிலே பரமபதமடைந்தார்.

அடிகளது பூதவுடல் மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிவானந்த வித்தியாலயத் தபோவனத்தில் அடக்கஞ் செய்யப்பட்டது.

**விபுலாநந்த அடிகள் படைத்த நூல்கள்: (கால அடைவின்படி)**

1. மயில்வாகனனார் தமது இளமைக்காலத்தில் (1912-1913) இயற்றிய சிறு பிரபந்தங்கள் (இக்கட்டுரையில் முன்னே குறிப்பிடப்பட்டவை) 1915ல் அச்சேறி வெளிவந்தன.
2. கர்மயோகம்: இது சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தமிழாக்கம். இது 1922ல் சென்னை இராமகிருஷ்ண மடத்தினால் வெளியிடப்பட்டது.
3. விவேகானந்த ஞானதீபம்: சுவாமி விவேகானந்தரின் நூல்கள் அனைத்தையும் 10 தொகுதிகளில் வெளியிடுந் திட்டத்தில் இது முதலாம் தொகுதியாகும். இதிலே 'சிக்காக்கோ பிரசங்கம்' 'கருமயோகம்', 'ராஜயோகம்' 'பதஞ்சலி யோகசூத்திரம்' மற்றும் யோகநூற் குறிப்புக்கள் என்பன அடங்கிய ஓர் அநுபந்தமும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நூல் சென்னை இராமகிருஷ்ண மடத்தால் 1934ல் வெளியிடப்பட்டது.
4. மதங்கசூளாமணி என்பது ஒரு நாடகத்தமிழ்நூல்: இது நாடக இலக்கண அமைதி கூறும் ஒரு சிறுநூல். மதங்கர் எனப்படுபவர் கூத்தர்; சூளாமணி என்பது முடிமணி. கூத்தர்களின் முடிமணி போன்ற ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றைத் தமிழிலும் வடமொழியிலும் உள்ள நாடகங்களோடு தொடர்புபடுத்தி விளக்குவதால் இதற்கு மதங்கசூளாமணி எனப்பெயரிடப்பட்டது. இது முதற்கண் 1924ல் மதுரைத் தமிழ்ச்சங்கத்து 23ஆம் ஆண்டு நிறைவு விழாவிலே, பெரும்புலவருட் பெரும்புலவரான உ.வே.சாமிநாதையர் தலைமையில் விபுலாநந்த அடிகளால் ஓர் ஆய்வுக் கட்டுரையாகப் படிக்கப்பட்டது. பொருளின் அருமை பெருமை நோக்கி இதனை மதுரைத் தமிழ்ச்சங்கம் 1926ல் நூல்வடிவில் வெளியிட்டது. விபுலாநந்த அடிகளின் மொழிநடைக்கும், செய்யுள் நடைக்கும், மொழிபெயர்ப்பு வன்மைக்கும் இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இலங்கைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு 1987ல் இதனை மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ளது. (விபுலாநந்த அடிகள் யாழ்நூல் அரங்கேற்றத்துக்குத் தமிழ்நாடு போவதற்குமுன் என்னிடம் 'இன்றோடு இசைத்தமிழ்த்தொண்டு முற்றுப்பெற்றது; இனி நாடகத்தமிழ் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். மதங்கசூளாமணியை வழுக்களைந்து, புதுக்கி, விரிவாக எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்கு அளிக்கவேண்டும்' என்று சொன்னார்.)

5. நடராஜ வடிவம்: கடவுளுக்கு உருவத்திருமேனி உண்டென்றும், படைத்தல், காத்தல், மறைத்தல் அழித்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் இறைவனது வடிவமே நடராஜ வடிவமென்றும் சைவ மெய்ந்நூற் சான்றுகள் காட்டி விளக்கும். இச்சிறு நூல் சென்னை ஸ்ரீராமக்கிருஷ்ண மடத்தால் வெளியிடப்பட்டது. இதன் ஆறாம் பதிப்பு 1987ல் வெளிவந்தது.

6. யாழ்நூல்: இது பழந்தமிழரின் இசைக்கலைவளத்தை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்கும் முதனூல். பண்டைத் தமிழர்களின் இசைக்கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், செம்முறைக்கேள்வி என்னும் சகோடயாழ் என்பனவற்றுள் முன்னைய நான்கினைப் பற்றிப் பொதுவாகவும், சகோட யாழ் பற்றிச் சிறப்பாகவும் கூறுவதால் இது யாழ்நூல் என்னும் பெயர் பெற்றது. ஆயிரம் ஆண்டுகளாக மறைந்துபோன சகோடயாழின் வடிவத்தையும், இயக்கத்தினையும் பிற யாழ்களின் வடிவங்களையும், சங்க நூல்கள், சிலப்பதிகாரம் முதலான பழந்தமிழ்க் காவியங்கள், தேவாரங்கள் ஆகியவற்றில் வருங் குறிப்புக்களையுமெல்லாம் துருவி ஆராய்ந்து, தமிழிலும் வடமொழியிலும் உள்ள இசைநூல் முடிபுகளோடு ஒப்புநோக்கி வெளிப்படுத்தும் இறவாப்புகழ் படைத்த இந்நூலாக்கத்துக்கு, அடிகளார் தமது கணிதநூற் புலமை, பௌதீகநூற் புலமை ஆகியவற்றையும், கல்வெட்டு ஆய்வினையும் பயன்படுத்தியுள்ளார். 1947ல் யாழ்நூல் முதலில் வெளியிட்ட கருத்தைத் தமிழ்ச்சங்கம் மீண்டும் 1974ல் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டது.

8. கட்டுரைகள், தனிச்செய்யுள்கள், மொழிபெயர்ப்புக்கவிதைகள்: மட்டக்களப்பு ந.நடராசா M.A. அவர்கள் அரிதின் முயன்று, அடிகளின் எழுத்தாக்கங்கள், வெளிவந்த ஏடுகள் எல்லாவற்றையும் தேடி, 1976ல் 'விபுலாநந்தம்' என்னும் பெயரில் வெளியிட்ட சிறுநூலில் அடிகளின் படைப்புக்களான 180 தமிழ்க் கட்டுரைகள், 41 ஆங்கிலக் கட்டுரைகள், 32 தமிழ்க் கவிதைகள், 7 ஆங்கிலக் கவிதைகள் என்பனவற்றின் பெயர்களையும், அவை வெளிவந்த ஏடுகளின் பெயர்களையும், ஆண்டு மாதம் ஆகிய தகவல்களையும் தந்துள்ளார்.

அடிகளின் மறைவுக்குப்பின், 1960ல் மட்டக்களப்பு குருமண்வெளி வாசியான அருள் செல்வநாயகம் என்பவர் 'விபுலாநந்த வெள்ளம்', 'விபுலாநந்தத்தேன்', 'விபுலாநந்த அமுதம்', 'விபுலாநந்தச் செல்வம்', 'விபுலாநந்த ஆராய்வு', 'விபுலாநந்தக் கவிமலர்' என்னும் பெயர்களில் அடிகளின் தமிழ்க்கட்டுரைகள் பலவற்றையும், கவிதைகளையுந் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவருடைய தொண்டு பாராட்டத்தக்கது.

விபுலாநந்த அடிகளது வாழ்க்கை வரலாற்றைச் செப்பமாகவும், விரிவாகவும் எழுதவும், அவருடைய கட்டுரைகள், கவிதைகள் அனைத்தையும் மூலபாடத்தினின்றும் வேறுபடாமல் திருத்தமாகத் தொகுத்து, வேண்டிய அடிக்குறிப்புக்களுடன் திருத்தமாக வெளியிடவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் வீழ்ச்சி

இராவணன் விசிரவசு என்பவருக்குக் கேகசியிடம் பிறந்தவன். மிகுபலம் படைத்தவன்; கடுந்தவம் பல புரிந்து கடவுளிடம் பெற்ற வரபலமும் உடையவன்; சிறந்த சிவபக்தன். 'இராவணன் மேலது நீறு' என்று திருஞானசம்பந்தர் தமது திருநீற்றுப்பதிகத்தில் திருநீற்றின் பெருமையோடு, இராவணன் பெருமையையும் எடுத்துக் கூறுகின்றார்.

அவனுக்கு மனைவியாக வாய்த்தவளே மண்டோதரி; மந்தோதரி என்பர் வால்மீகி. அழகமர் வண்டோதரி என்று மாணிக்கவாசகர் அவளுக்குச் சிவன் அருள் செய்தமை பற்றிக் கூறுகின்றார். கற்புடைய ஐந்து பெண்மணிகளுள் 'பஞ்ச கன்னியர்' மண்டோதரியும் ஒருத்தி. ஏனையோர் அகலிகை, திரௌபதி, சீதை, தாரை என்பவர். வண்டமரோதி (வண்டுகள் படிந்த கூந்தல் உடையவள், என்னும் பெயரே, வண்டோதரி எனத் திரிந்து வழங்குகின்றது) என்கிறார் ஓர் ஆராய்ச்சியறிஞர்.

இராவணனுக்குப் பத்துத்தலை உண்டு என்று பொதுவாக நூல்கள் கூறும். பத்து வீரருடைய பலம் ஒருங்கே பொருந்தியவன் என்று இதற்கு விளக்கங் கூறுவர். சிங்களக் காவியங்களில் இராவணன் சிறந்த வீரன், பெருந்தகை என்று எல்லாம் பேசப்படுகிறான். அவன் கழுத்தில் நவரத்தின மாலை அணிந்திருந்தான். ஒன்பது மணிகளிலும் அவன் கழுத்தும், முகமும் பிரதிபலித்தமையால் அவனுக்குப் பத்துத்தலையன், தசகிரீவன் (வடமொழி); பத்துக் கழுத்துடையவன் என்று பெயர் வந்தது என்று சிங்களமொழிப் புலவர் விளக்கங் கூறுகின்றார்.

இராமாயணக் கதையை வரலாறு என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், திராவிடப் பெரு வேந்தனாகிய இராவணனை, ஆரியர் இராக்கதன் என்றும், தீயகுணமுடையவன் என்றும் இழித்துப் பழிப்பதும், ஆரியனாகிய இராமனை வானளாவப் புகழ்ந்து, அந்த ஆரிய இராமன் திராவிட இராவணனை வென்று கொன்றான் என்பதனால், திராவிடருடைய நாகரிகத்தை ஆரிய நாகரிகம் வென்று மேம்பட்டது என்னும் உட்கருத்தை உடையது என்றுங் கூறுவர். வேதகால முதல், ஆரியர் தமது வேள்விகளை எதிர்த்து அழித்த திராவிடரை தஸ்யு(தாசர்) என்று பழித்து வருவாராயினர். இந்த அடிப்படையிலேயே வால்மீகியின் ஆதிகாவியம் எழுந்தது என்பர்.

இதற்கு மாறாகத் தென்னாட்டவர் இராவணனை நெடுந்தகை என்று அவன் புகழ் பேசுவர். 'சீதையைச் சிறைசெய்தாலும் அவளின் உடன்பாடு கேட்டே அவளை அடையவிரும்பினான்; வலோற்காரமாக அவளைக் கற்பழிக்க முயன்றிலன்,' என்று சிங்கள அறிஞர் பாராட்டுகின்றார். புலவர் குழந்தை என்பவர் இயற்றிய இராவணகாவியம் இராவணனின் பெருமைகளைப் பலபடப் பேசுகின்றது.

எவ்வாறெனினும் கம்பன் படைத்த இராமாயணத்தை வரலாறு என்று நோக்காமல் காவியம் என்று நோக்கினால், மாபெரும் வீரன் ஒருவன் பல சிறப்புக்களை உடையவனாயிருந்தும், பிறன்மனை நயந்த பெரும் குற்றத்தால் பெருமையும் வீரமும் எல்லாம் இழந்து, இராமபாணத்தால் இறக்கின்றான் என்னும் அவல நாடக (Tragedy) நயத்தைக்காணலாம். கம்பர் வால்மீகியின் கதையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு தமிழர் அறங்களை வலியுறுத்தும் வகையில் கதையை நடத்திச் செல்கிறார். பல இடங்களில் வால்மீகியிலிருந்து வேறுபட்டுத் தமக்கே உரிய தனிவீறு தோன்ற காவியக்கதையை நாடகமாக்கிக் காட்டுகிறார். திருவள்ளுவர் 'பிறனில் விழையாமை,' என்னும் அதிகாரத்திற் கூறிய கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் இராவணன் என்ற பாத்திரத்தை உருவாக்கியுள்ளார்.

**"எனைத் துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறனில் புகல்" குறள் (144)**

கும்பகருணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகையில் இக்கருத்தையே வலியுறுத்துகின்றான்.

**"நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் தடையல்லா**
**வாரங் கொண்டார் மற்றொருவற்காய் மனைவாழும்**
**தாரங் கொணடார் என்றிவர் தம்மைத் தருமந்தான்**
**ஈருங் கண்டாய் கண்டகர் உயந்தார் எவர் ஐயா?"**

இராமன் அறத்தின் வடிவமாக நின்று, போர் புரிகிறான். அறத்தை அழித்த இராவணன் தன் வரபலம், உடற்பலம் ஆகியவற்றைக் கொண்டு எதிர்த்து நின்றுபோராடுகிறான். முதல் நாட் செய்த போரில் இராவணன் தேரையும் அம்புவில்லையும் இழந்து நிராயுதனாய் களத்தில் நிற்கிறான். அவனது பரிதாபமான நிலையைக் கண்ட இராமன், அவனைக் கொல்லாமல், 'இன்று போய் நாளை படைகளுடன் வா' என்று பெருமிதந் தோன்றக் கூறுகிறான்.

**"ஆளயாவுனக் கமைந்தன? மாருதம் அறைந்த**
**பூளையாயின கண்டனன் இன்று போய்ப் போர்க்கு**
**நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."**

இங்கேயும் திருவள்ளுவரின் கருத்தையே கம்பர் உதாரணப்படுத்துகிறார்.

**"பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு."**

இராவணன் நாணிக்கோணி வெறுங்கையோடு அரண்மனை போகின்றான். அந்தக் காட்சியை கம்பர் வருணிக்கின்றார்.

**"வாரணம் பொருதமார்பும் வரையினை எடுத்ததோளும்**
**நாரத முனிவர்க்கேற்ப நயம்பட இசைத்த நாவும்**
**தாரணி மௌலிபத்தும் சங்கரன் கொடுத்த வாளும்**
**வீரமும் களத்தேவிட்டு வெறுங்கையோ டிலங்கைபுக்கான்."**

பின்னர் செய்த போரில் இராமன் பிரமாஸ்திரம் விட அது இராவணன் உடலைச் சல்லடையாகத்துளைத்து மீள்கின்றது. இராவணன் உள்ளத்தில் சீதையின்பால் வைத்த காதல் இருக்குமிடமெல்லாந் தேடி அம்பு தைத்தது என்று மண்டோதரி புலம்புகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தில் விழுந்த வீரன் முகம் மும்மடங்கு பொலிவுற்று விளங்குகின்றது. மண்டோதரி அவன் மார்பில் விழுந்து புலம்பியவண்ணம் உயிர் துறக்கிறாள். அவள் தலையாய கற்புடைய பெண்தெய்வம்!

# பாரி மகளிர்

பாரி என்பவன் கடையேழு வள்ளல்களில் ஒருவன்; பாண்டிநாட்டைச் சேர்ந்த பறம்புநாட்டை ஆண்ட சிற்றரசன். இந்த நாடு பறம்பு என்னும் மலையைச் சூழ்ந்திருந்த முந்நூறு ஊர்களைக் கொண்டது. பறம்புமலை இப்போது பிரான்மலை என வழங்குகின்றது; புதுக்கோட்டைப் பகுதியில் உள்ளது. பாரி, வேளிர் குடியிற் பிறந்தவன். ஆகையால் வேள்பாரி என்றும் வழங்கப்பட்டவன். தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தரும் இந்த வேளிர் குடியிற் பெண் கொள்ளும் வழக்கமுடையவர்.

பறம்புநாடு, எழில்மிக்க காடுகளையும், மலைச்சுனைகளையுங் கொண்டது. மூங்கில் நெல்லும், வள்ளிக்கிழங்கும், தீஞ்சுவைப் பலாக்கனியும், தேனும் பறம்பு மலையின் சிறந்த விளைபொருள்கள் என்று புறநானூற்றுப் பாடல் (109) ஒன்று கூறுகிறது.

பாரி, கொடையிற் சிறந்து விளங்கினான். ஒருமுறை அவன் காட்டுவளங் காணச் சென்றிருந்தான். அங்கே முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படருவதற்குக் கொழுகொம்பில்லாமல் காற்றில் அலைவதைக் கண்டான். பாரியின் இளகிய உள்ளம் உருகியது. உடனே தான் ஏறிச்சென்ற தேரை முல்லைக்கொடி படருவதற்கு நிறுத்திவிட்டுப் பாரி கால்நடையாக வீடு சென்றான். இந்த அரிய கொடைவண்மையைச் சங்கப்புலவர் புகழ்ந்து பாடியுள்ளனர். பிற்காலத்துச் சுந்தரமூர்த்திநாயனாரும் 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை' என்று தமது தேவாரப்பதிகத்திற் பாடியுள்ளார்.

பாரிக்குக் கபிலர் என்னுஞ் சங்கப்புலவர் நண்பனாகவும் அவைக்களப் புலவனாகவும் விளங்கினார். பாரிக்கு மகளிர் இருவர் இருந்தனர். சங்கநூல்களில் அவர்கள் பாரி மகளிர் என்று மட்டுமே குறிப்பிடப்படுகின்றனர் (புறம் 112). பிற்கால வழக்கில் அவர்கள் அங்கவை சங்கவை என்று பெயர் குறித்து பேசப்படுகிறார்கள். பாரி பெருங் கொடை வள்ளலாக விளங்கியது மட்டுமன்றிச் சிறந்த போர்வீரனாகவும் விளங்கினான். அவன் புகழ், தமிழ்நாடு எங்கும் ஓங்கிப் பரவியது. இதனால் முடியுடைவேந்தராகிய சேரசோழபாண்டியர் பாரியின்பாற் பொறாமை கொண்டு, தம் படையோடு சென்று பறம்பு நாட்டை முற்றுகையிட்டுப் போராடினர். பாரியும் அஞ்சாது எதிர்த்து வீரத்தோடு போர் புரிந்தான். முடிவிலே பாரி போர்க்களத்தில் மாண்டான். (அவனைப் போரில் வெல்லமுடியாமல் மூவேந்தரும் பரிசிலர் போல வேடம் புனைந்து சென்று அவன் நாட்டைப் பெற்றுப் பாரியையும் வஞ்சனையாற் கொன்றனர் என்றுஞ் செய்தி வழங்குகின்றது)

பாரியின் மரணம் கண்டு நண்பராகிய கபிலர் மனமுடைந்து வருந்தினார். ஆனால் பாரியின் இரு பெண்களையும் தக்கவருக்கு மணஞ்செய்து கொடுத்துவிட்டு, உண்ணாவிரதமிருந்து இறப்பதற்கு முடிவுசெய்தார். கபிலர் இரு பெண்களையும் அழைத்துச் சென்று, சிற்றரசர் சிலரை அணுகி அப்பெண்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டினார். அவர்களோ மூவேந்தர் பகைமைக்கு அஞ்சி மறுத்துவிட்டனர். இறுதியில் மனமுடைந்த கபிலர் அப்பெண்களைத் திருக்கோவலூரில் தம் உறவினரான பார்ப்பனர்களிடம் ஒப்படைத்து விட்டு, வடக்கிருந்து உயிர்விட்டார்.

திருக்கோவலூரில் பாரிமகளிர் அந்தணர் வீட்டில் வாழும்போது, ஔவையார் மழையில் நனைந்து, அவ்வீட்டில் ஒதுங்கினார். பாரி மகளிர் ஔவையாருக்குத் தம் நீலச் சிற்றாடை கொடுத்து, ஆதரவு செய்து, தாம் சமைத்து வைத்திருந்த கீரையை உணவாகக் கொடுத்தார்கள். ஔவையார் அவர்களின் அன்புக்கும் வண்மைக்கும் மனமுருகி அவர்கள் வரலாற்றைக் கேட்க, அவர்கள் தாம் பாரிவேளின் மக்கள் என்பதைக் கூறி,

**"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**யாமெந்தையும் உடையோம் எங்குன்றும் பிறர் கொளார்;**
**இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்**
**வென்றெறி முரசின் வேந்தர்**
**எங்குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே."**

(புறம் 112)

'சென்ற திங்கள் முழுநிலாவின்போது எம்தந்தையார் இருந்தார்; எங்குன்றும் எமக்கே உரியதாயிருந்தது; இன்றைய முழுநிலவில் மூவேந்தர் எம் குன்றுங் கொண்டார்; நாம் எம் தந்தையாரையும் இழந்திருக்கிறோம்,' என உள்ளமுருகிப்பாடினார்.

ஔவையார் அப்பெண்களின் அவலநிலையுணர்ந்து வருந்தி, திருக்கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடிக்காரி என்னுங் குறுநில மன்னனின் புதல்வர்களான தெய்விகன், கண்ணன் என்பவருக்கு அப்பெண்களைத் திருமணஞ்செய்து வைத்தார். மூவேந்தருக்கும் அஞ்சிய அவர்களின் அச்சத்தை போக்குவதற்காக மூவேந்தரையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையில் அவ்விருவருக்கும் பாரிமகளிரை மணமுடித்தார். அச்சந்தர்ப்பங்களில் ஔவையார் பாடிய தனிப்பாடல்கள் மிக்க சுவையுடையவை. அவை தனிப்பாடல் திரட்டில் உள்ளன. அவற்றுள் ஒன்று:

பாண்டியனுக்கு அனுப்பிய செய்தி:

**"வையத் திறைவன் மதுரா பதித் தென்னன்**
**செய்யத் தகாதென்று தேம்பாதே - தையற்கு**
**வேண்டுவன கொண்டு விடியல் பதினைந்தாநாள்**
**ஈண்டு வருக இசைந்து."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார்

இவர் காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்து, கப்பல் வாணிகஞ் செய்து, பெருஞ்செல்வமீட்டிச் சிறப்பாக வாழ்ந்த காரணத்தால், நாட்டவர் எல்லோரும் இவரைப் பட்டினத்துப்பிள்ளை, என்று மதிப்பாகப் பேசிவந்தனர். பட்டினம் என்றால் காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும். பட்டினப்பாலை என்னும் சங்கப் பாடலில் இது விளக்கமுறுகின்றது.

இவருடைய பிள்ளைப்பெயர் திருவெண்காடர். தந்தையார் சிவநேசர்; தாயார் ஞானகலை அம்மையார். இவர் இளமையிலேயே கல்வியிற் சிறந்து விளங்கி, பின்னர் சிவகலை அம்மையார் என்னும் பெண்ணைத் திருமணஞ் செய்து, தங்கள் குலத்தொழிலாகிய கப்பல் வாணிகத்தொழிலை மேற்கொண்டு பெருஞ்செல்வம் ஈட்டினார். இல்வாழ்க்கையில் மகப்பேறு இல்லாமையால் திருவிடைமருதூர் இறைவனை வேண்டி இருவரும் வரங்கேட்டனர். அவ்வூரிலே ஏழை அந்தணன் ஒருவன் மருதவாணர் என்னுஞ் சிறுவனைத் திருவெண்காடருக்குத் தந்து, பெரும்பொருள் பெற்று மகிழ்ந்தான். சிவபெருமானே அவ்வாறு சிறுவனாக வந்து அந்தணனிடம் வாழ்ந்தவர் என்பர்.

மருதவாணர் வளர்ந்து கப்பல் வாணிகத்தை மேற்கொண்டு, செல்வத்தைப் பன்மடங்கு விருத்தி செய்தார். ஒருநாள் மருதவாணர் திருவெண்காடருக்கு ஞானம் உண்டாகும் வண்ணம்.

**"காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே."**

என்று ஏட்டில் எழுதித் தாயாரிடங் கொடுத்துவிட்டு மறைந்தார். மருதவாணரின் மறைவால் வருந்திய திருவெண்காடர், தம் மனைவியிடமிருந்து அந்த ஏட்டைப் பெற்றுப்படித்தார். அந்த அளவில் அவருக்கு நிலையாமை உணர்வு மேலோங்கியது. அவர் பெருந்துறவு பூண்டார். தமது கணக்காளரான சேந்தனாரை அழைத்துத் தம் பணத்தையெல்லாம் ஊரார் எடுத்துப்போக அனுமதிக்கும்படி கூறி, இல்வாழ்க்கையைத் துறந்து, ஓடேந்தி வீடுதோறும் பிச்சையேற்று உண்டு, துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தென்னாட்டிலும், வடநாட்டிலும் திருத்தல யாத்திரை மேற்கொண்டு பல பாடல்கள் பாடி, ஆங்காங்கே பல சித்திகள் செய்துவந்தார். திருவொற்றியூரில் கடற்கரையில் விளையாட்டுச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடி வந்தார். ஒரு நாள் தம்மை மணலுக்குள்ளே புதைக்கச் செய்து சிவலிங்கமாக விளங்கினார். இது 'அருவுருவச் சித்தி' என்று சொல்லப்படும் முத்தி நிலையாகும். திருவொற்றியூரிலே அடிகளாருக்கு எடுத்த கோயில், இன்னும் பல அடியார் வந்து தொழச் சிறப்புற விளங்குகின்றது.

### பட்டினத்துப் பிள்ளையார் காலம்:

தேவாரம் திருவாசகங்களுக்குப் பின்னரும், திருமுறை தொகுத்த நம்பியாண்டார் நம்பிக்கு 12ஆம் நூ.ஆ முன்னரும் 10-11ஆம் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கூறுவர். அவர் பாடிய நூல்களுள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு:

1. **கோயில் நான்மணி மாலை**
2. **திருக்கழுமல மும்மணிக்கோவை**
3. **திருவிடை மருதூர் மும்மணிக்கோவை**
4. **திருவேகம்பமுடையார் திருவந்தாதி**
5. **திருவொற்றியூர் ஒருபாவொருப∴து**

இவற்றின் நடை உயர்ந்த செந்தமிழ் நடை. இல்லறத்தையுஞ் சிறப்பித்துப் பாடியுள்ளார்; அகத்துறையிலும் பாடியுள்ளார். பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு என்னுந் தொகுப்பில் மேற்சொன்ன ஐந்து நூல்களோடு,

6. **கோயில் திருவகவல்**
7. **கச்சித்திருவகவல்**
8. **திருவேகம்ப மாலை**
9. **திருவேகம்ப விருத்தம்**
10. **முதல்வன் முறையீடு**
11. **அருட்புலம்பல்**
12. **பூரண மாலை**
13. **உடற்கூற்று வண்ணம்**
14. **பல தனிப்பாடல்கள்**

ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. பிந்திய பாடல்களின் நடை எளியது; பேச்சுமொழி நடையை ஒட்டியது. எளிதில் எல்லோரும் பொருளுணரக் கூடிய பாடல்கள். பட்டினத்துப்பிள்ளையார் ஒரு சித்தராயும் விளங்கினார். அதனால் அவருடைய பாடல்கள் 'சித்தர் ஞானக் கோவையிலுஞ்' சேர்க்கப்பட்டுள்ளன; இவரது சீடர்கள்:

1. **சேந்தனார் (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியவர்) பிள்ளையாரிடங் கணக்காளராயிருந்தவர்.**
2. **பத்திரகிரியார் - அவ்வூர் அரசர்.**
3. **பட்டினத்துப்பிள்ளையாரைப் போற்றிப்பாடிய ஞானிகள், தாயுமான சுவாமிகளும், கண்ணுடை வள்ளலாருமாவர்.**

பிற்கால ஆராய்ச்சியாளர்கள் இரு வேறு பட்டினத்துப்பிள்ளையார்கள் இருந்திருக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆயின் துறவெய்திய ஆரம்பகாலத்தில் பாடியவை பதினோராந்திருமுறைப்பாடல்கள் என்றும், காலப்போக்கில் அடிகள் ஊரூராகச் சுற்றிப் பொதுமக்களுக்கு அறிவுறுத்திப் பாடிய பாடல்கள் எளிய இனிய பேச்சுநடையில் அமைந்துள்ளன என்றுமே நான் நம்புகிறேன். தாய் இறந்தபோது தாயைத் தகனஞ் செய்யும் வேளையில் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்கவல்லன.

**"அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி அம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு**
**கைத்தலம் மேல்வைத் தழும்மைந் தரும்சுடு காடுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"**

---

**மெத்திய - நிரம்பிய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தடிகள் தாயாருக்கு இறுதிக்கடன் தீர்த்தவாறு

துறவு பூண்ட பட்டினத்தடிகளை அவர் தாயார் விளித்து இவ்வாறு கூறினார்: 'எனக்கு மூப்பு வந்துவிட்டது. நான் இறந்தபின் எனக்குக் கொள்ளிவைத்து, இறுதிக்கடன் செய்ய நீ ஒருவனே உள்ளாய்; நீ துறவு பூணடு போனால் எனக்கு இறுதிக்கடன் செய்ய யார் இருக்கின்றார்?' அடிகள், தாயார் இறக்குந் தருணத்தில் அங்கு வந்து வேண்டிய கடன்களைத் தாமே செய்த வைப்பதாக வாக்களித்து வெளியேறினார்.

பின்னாளில் அடிகள் திருவெண்காடு என்ற தலத்துக்குச் சென்று, அங்கே தங்கியிருந்தபோது, அவருடைய அன்னையார் இறையடி சேர்ந்தார். உறவினர் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர். இறையருளால் அதை அறிந்த அடிகள், காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து, முன்பு தாம் உறுதிமொழி தந்தபடி ஈமக்கடனை இயற்றினார். அப்போது அடிகள் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்குவன. முற்றத்துறந்த முழுஞானியாயிருந்தபோதும், அவர் பெற்றதாயின் பொருட்டு மனமுருகிப் பாடிய செய்யுள்கள் 'தாயன்பு' எத்தகையது என்பதை விளக்குவன.

**"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி."**

**"வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாயுக்கோ
விறகிட்டுத் தீமூட்டுவேன்."**

பின்னர் உறவினர் செய்த சிதையை அகற்றிவிட்டுப் பச்சை வாழைத்தண்டுகளைக் கொணர்ந்து அடுக்கி அதன்மேல் தாயார் உடலை வைத்து இவ்வாறு பாடினார்.

**(தழல் மூட்ட எண்ணியபோது)**

**முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்தே
அந்திபகலாச் சிவனை ஆதரித்து - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.**

**நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும்
தாய் தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வாய்க்கரிசி இட்டபோது)
அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியமே
மானே எனவழைத்த வாய்க்கு.

(கொள்ளி வைக்கும் போது)
அள்ளியிடுவ தரிசியோ தாய்தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

(தீ மூட்டியபோது)
"முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென்னிலங்கையில்
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே."

என்று பாடியதும் பச்சை வாழைத்தண்டு தீப்பற்றிச் சுவாலித்து எரியத் தொடங்கியது. அப்போது அன்னையின் உடல் எரிவதைக் கண்டு அடிகள் பாடியது.

(எரியும் போது)
"வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாடி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை."

(உடல் எரிந்து முடியும்போது பாடியது)
"வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ? என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்
தென்னையே ஈன்றெடுத்த தாய்."

(அன்னையின் சாம்பரில் பால் தெளிக்க அன்பரை அழைத்தல்)
"வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமேயாம்."

---

சோணகிரி - திருவண்ணாமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கலுக்கும் நத்தார்ப் பண்டிகைக்கும் உள்ள தொடர்பு

தமிழகத்திலும் இலங்கையிலும் வாழும் இந்துக்கள் தைமாதம் முதலாம் நாளிற் கொண்டாடும் தைப்பொங்கற் பண்டிகைக்கும் கிறிஸ்துவ உலகில் கிறிஸ்து சமயத்தவர் டிசெம்பர் 25ஆம் திகதி கொண்டாடும் நத்தார்ப் பண்டிகைக்கும் தொடர்பு உள்ளது என்று சொன்னால், அது பலருக்கு வியப்பாக இருக்கும். ஆம், இரண்டு விழாக்களும் சூரிய வழிபாட்டிலிருந்தே தோன்றியவை.

பண்டைக்கால நாகரிகங்கள் பலவற்றிற் சூரியனைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தனர். ஒளியையும், வெப்பத்தையம் பெறுவதற்கும், உணவுப் பயிர்களை வளர்ப்பதற்கும் தாங்கள் சூரியனிலே தங்கியிருப்பதை அவர்கள் உணர்ந்தனர். அதனால் அவர்கள் சூரியனைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர். பண்டைய எகிப்திய நாகரிகத்திலும், வேதகால இந்திய நாகரிகத்திலும், பபிலோனிய, அசீரிய, பாரசீக, கிரேக்க, உரோம நாகரிகங்களிலும் சூரிய வழிபாடு இருந்தமை பற்றி வரலாற்றுநூல்கள் கூறுகின்றன. இந்தப் பழைய நாகரிகங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சூரியன் இன்றியமையாதது என்பதை உணர்ந்ததோடு, ஓர் ஆண்டுக் காலத்திற் சூரியன் வான் வீதியிற் செல்லும் போக்கையும் உன்னிப்பாக அவதானித்தனர். சூரியனது பயணத்தைத் தூண்டுவதற்காக அம்மக்கள் வெவ்வேறு பருவகாலங்களிற் பல வகையான பண்டிகைகளையும், கொண்டாட்டங்களையும் தோற்றுவித்தனர்.

புவியின் வடவரைக்கோளத்தில் வாழ்ந்த மக்களுக்கு டிசெம்பர் மாத முடிவு சிறப்பாக முக்கியம் பெற்று விளங்கியது. அக்காலத்தில் பகற்காலம் குறுகியதாகவும், இராக்காலம் நீண்டதாகவும் இருந்தன. சூரியன் மிகத் தாழ்ந்த நிலையில் நின்றது. டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி, சூரியன் புவிநடுக்கோட்டுக்குத் தெற்கே இருபத்துமூன்றரைப் பாகையில் அதாவது மகரக்கோட்டில் (Tropic of capricorn) உச்சங் கொடுக்கிறது. அதன்பின் 25ஆம் தேதியளவில் சூரியன் வடக்கு நோக்கி நகர ஆரம்பிக்கின்றது. வடவரைக்கோளத்தில் வாழும் மக்களுக்கு இது மகிழ்ச்சியூட்டும் நாளாகும். ஆகவே அவர்கள் இந்த நாளில் ஒளியும் வெப்பமும் அதிகரிக்கத் தொடங்க, சூரியனுக்கு நன்றி செலுத்தும் பாங்கில், விசேட விழாக்களும் கொண்டாட்டங்களும் ஏற்படுத்தித் தமது உள்ளக்களிப்பை வெளியிட்டனர்.

மாரிச்சூரிய கனநிலையில் (Winter Solstice December 23) அதிதாழ்ந்த நிலையிலிருந்த சூரியன், பின் டிசெம்பர் 25ல் மீளப்பிறந்து வலிமைபெற்று வரத்தொடங்குகின்றது. பகற்காலம் நீண்டு வரவே, டிசெம்பர் 25ல் தொடங்கி ஜனவரி முற்பகுதிவரையும் மக்கள் உண்டாடிக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இனி ‘கிறிஸ்மஸ்’ என்னும் நத்தார்ப்பண்டிகை, யேசுநாதர் பிறந்த நாள் என்று டிசெம்பர் 25ல் உலகமடங்கலும் (Christendom) கொண்டாடப்படுகிறது. ஆனால் யேசுநாதர் இன்ன தேதியில் பிறந்தார் என்பதற்கு விவிலிய வேதத்தில் (Bible) எவ்விதப் பதிவும் இல்லை. யேசுநாதர் எப்போது, எந்த மாதத்தில், என்ன தேதியில் பிறந்தார் என்பது எவருக்கும் இன்று தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து ஆண்டு தொடங்கிய முதல் நூற்றாண்டுகளில், அதற்கு முன்னர் சூரியதேவனுக்கு எடுக்கப்பட்ட விழாக்களும், கொண்டாட்டங்களும், உரோம இராச்சியத்தில் பரந்து வந்த கிறிஸ்துசமயத்திலே சேர்த்துக்கொள்ளப்பட்டன.

கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலந்தொட்டே உரோமப் பேரரசு விரிவடைந்து வந்தபோது, பல கீழைத்தேய வழிபாட்டு முறைகளோடு அதற்குத் தொடர்பு ஏற்பட்டது. அவற்றில் ஒன்று பாரசீக மக்களிடம் பயின்று வந்த சூரிய வழிபாடாகும்.

பண்டைக் காலத்தில் மத்திய ஐரோப்பாவிலிருந்து கிழக்கு நோக்கிப் பெயர்ந்து இந்தியாவுக்குள் நுழைந்த ஆரிய மக்களுள் (Indo Europe-ans) ஒரு பகுதியினர் பாரசீகத்தில் (இக்கால ஈரான் தேசம்) தங்கிவிட்டனர். அவர்களுடைய சமய வழிபாட்டு முறைகளுக்கும், இந்தியாவிற்குள் வந்த ஆரியர்களுடைய (வேதகால இந்தியர்) சமய வழிபாடுகளுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

வேதகால இந்திய ஆரியர் போலவே பண்டைப் பாரசீகர்களும் சூரிய தேவனை வழிபட்டு வந்தனர். அவர்கள் (பாரசீகர்) சூரிய தேவனை மித்ர(ன்) என்று பெயரிட்டு, அவனது பிறந்த நாளாக டிசெம்பர் 25ஆம் திகதியைக் கொண்டாடினார்.

பாரசீகர்களிடமிருந்து சூரிய வழிபாட்டை ஏற்றுக்கொண்ட உரோமானியர், இந்த டிசெம்பர் 25ஐ 'வெல்லரும் சூரியன் பிறந்த நாள், (Diesna talis solis invicti- Birthday of the invincible sun)' என்று கொண்டாடினர்.

கிறிஸ்தவ சமயம் உரோமப் பேரரசிலே வேரூன்றி ஆதிக்கம் பெற்றபோது, வானத்தில் விளங்கும் சூரியனாகிய ஒளிப்பிழம்பினது பிறந்த நாளை உலகத்தின் ஒளியும், அறநெறிக் கதிரவனும் ஆகிய யேசுநாதரின் பிறந்த நாளாகக் கொண்டு, விழாக் கொண்டாடத் தொடங்கினர் அங்குள்ள மக்கள்.

கி.பி.354லிலேயே யேசுநாதரின் பிறந்த நாள் டிசெம்பர்25 என்று முதன் முதலாகக் கொள்ளப்பட்டது. இச்செய்தி அந்த ஆண்டுக்குரிய உரோமப் பஞ்சாங்கம் (Roman Almanac) ஒன்றினால் தெரிய வருகிறது.

(ஆதாரம்: 1. The New Catholic Encyclopaedia (1967) : Article: Christ-mas and its cycle 2. Harpers Bible Dictionary: Article- Christmas.)

ஆகவே, இந்துத் தமிழர் சூரியனது உத்தராயணத் தொடக்கமாகிய தை முதல் நாளைப் (டிசம்பர்15) பொங்கற் பண்டிகையாகக் கொண்டாட, கிறிஸ்து உலகம் சூரியனது வடதிசைப்பயணம் தொடங்கும் டிசெம்பர் 25ஆம் நாளை யேசுநாதரின் பிறந்த நாளாக ஏற்றுக் கொண்டாடுகின்றனர் என்பது பெறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

குழந்தையைத் தொட்டிலில் இட்டு உறங்கச் செய்வதற்குத் தாய் பாடும் பாட்டே தாலாட்டெனப்படும். பெற்ற தாயே அன்றிப் பெரியதாயும் சிறிய தாயும் தாலாட்டுப் பாடுவதும் உண்டு. தால் என்பது நாவைக் குறிக்கும். நாவை ஆட்டி இன்னோசை எழுப்பித் தாய் தன் அன்பையும், உள்ளத்-துணர்வையும், கற்பனையையும் கலந்து பாடுவதைகக் கேட்டுக் குழந்தை உறங்கும். குழந்தையின் மூளையில் இந்த இசைப்பாட்டுப் பதிந்த பின்னர், குழந்தை உறங்கும். பின்னர் குழந்தை தன் நாவை அசைத்துப் பேச முயல்வதற்கும் இப்பாட்டு உதவியாகிறது என்று மொழிநூல் வல்லுநர் Jesperson என்பவர் கூறுகின்றார். இதற்காக 'ஆராரோ ஆரிரரோ' என்று 'சத்தம்', 'ஒலி' அமைப்பது வழக்கம். அதனால் இப்பாடலை ஆராட்டுதல் என்றுஞ் சொல்வதுண்டு. சில தாய்மார்கள் 'ஓராரோ ஓரிரரோ' என்னும் ஒலியமைத்துப் பாடுவர். இதனால் ஓராட்டுதல் என்றும் இது சொல்லப்படும். தாலாட்டைத் தாராட்டு என்று கம்பர் வழங்கியுள்ளார். 'தவளை தாராட்ட' என்று வருகிறது. ஓராட்டை ஓலாட்டு என்றுஞ் சொல்வதுண்டு.

நாட்டுப்பாடல்களின் பாணியில் ஏட்டுப்பாடல்களும் பாடப்பட்டுள்ளன. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்து தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். குலசேகர ஆழ்வார் பாடிய ஒரு பாடல்: இராமனைக் குழந்தையாக --

**"மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்**
**தன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ."**

(பெருமாள் திருமொழி 8:1)

அண்மைக்காலத்திலும், இக்காலத்திலும் தாலாட்டுப்பாடல்களைப் பின்பற்றிப் பல வகையான பாடல்களைக் கவிஞர்கள் பாடியுள்ளார்கள்: சீகாழிச் சிற்றம்பலநாடிகள் தாலாட்டு, தத்துவராயர் தாலாட்டு, நீதிநெறித் தாலாட்டு, நம்மாழ்வார் தாலாட்டு, நால்வர் தாலாட்டு முதலியன அவற்றுட் சிலவாம். இவை மரபுமுறையாக வந்த சமய, தத்துவ, அறநெறிக் கருத்துக்களைத் தாலாட்டுப் பாடல் வடிவிலே தருவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளாகும்.

இவை தவிரப் பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, வாணிதாசன், முடியரசன் போன்ற தற்காலக் கவிஞர்கள் தாய்மார்கள் பாடத்தக்க இனிய சில தாலாட்டுப்பாடல்களையும் இயற்றித் தந்துள்ளனர். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களில் 'தாலப் பருவம்' ஒன்று வகுத்துப் பத்து நெடும் பாட்டுக்கள் பாடுவது மரபு. இவை 'தாலோ தாலேலோ' என்று முடியும்.

**உ-ம்: "சரவண மருவுந் தண்டமிழ் முருகா**
**தாலோ தாலேலோ**
**சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்**
**தாலோ தாலேலோ."**

(திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் - பகழிக் கூத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது யாழ்ப்பாணப் பகுதியில் வழங்குவதெனக் குறிப்பிடப்படும் தமிழண்ணல் தாலாட்டு பின்வருமாறு:

1. **"ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ**
**ஆரடிச்சோ நீயழுதாய் அரியகண்ணில் நீர்வழிய**
**அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்பேன்**
**தொட்டாரைச் சொல்லியழு தண்டனைகள் பண்ணி வைப்பேன்**
**மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே**
**பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே**
**ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?**
**அண்ணன் அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே**
**ஆண்பனையின் நுங்கே அணில்கோதா மாம்பழமே**
**கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்**

2. ஆதாரம்: மு. இராமலிங்கம்: வடஇலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்:

**"மலடி மலடியென்று மாநிலத்தோர் ஏசாமல்**
**மலடிக் கொருகுழந்தை மாயவனார் தந்தபிச்சை**

**இருளி இருளியென்று இந்நிலத்தோர் ஏசாமல்**
**இருளிக் கொருகுழந்தை ஈஸ்வரனார் தந்த பிச்சை**

**பிள்ளை இல்லையென்று பெருந்தவங்கள் செய்தேனே**
**மைந்தன் இல்லையென்று மாதவங்கள் செய்தேனே**

**வெந்த மாத்தின்றால் விரதம் அழியுமென்று**
**பச்சைமாத் தின்று பகவானைக் கைதொழுது**

**வெள்ளிக் கிழமை விரத மகத்துவத்தால்**
**பிள்ளைக் கலிதீர்க்கப் பிறந்த நவரசமோ?**

**பரமசிவன் வாசலிலே பலநாள் தவமிருந்து**
**பரமசிவனார் தந்த பைங்கிளியே கண்வளராய்**

**கொம்புக் கனியோ கோதுபடா மாங்கனியோ**
**வம்புக் கழுகிறீரோ வாயெல்லாம் தேனூற?**

**மந்தி குதிபாயும் மாம்பழுத்த சோலையிலே**
**தம்பி குதிபாய்வான் தன்தாயார் மடிமேலே."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலங்கை மலையக மக்களிடை வழங்குந் தாலாட்டு – மாத்தளை கார்த்திகேசு:

**"ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிவரோ**

**கண்ணு மணியுறங்கு கானகத்து வண்டுறங்கு**
**பொன்னு மணியுறங்கு பூமரத்து வண்டுறங்கு**

**வாசலிலே வன்னிமரம் வழுசங்க ராசகுலம்**
**ராசகுலம் பெத்தெடுத்த ரத்தினமே கண்ணுறங்கு**

**பச்சை இலுப்பை வெட்டி பால்வடியும் தொட்டிகட்டி**
**தொட்டிக்கு மேலே துணையிருப்பா மாரியம்மா**

**முத்திடிச்சு மாக்கொளிச்சு முத்தமெல்லாம் கோலமிட்டு**
**கோலமிட்ட திண்ணையிலே கோவலரே நித்திரைபோ."**

# சிலேடை

ஒருசொல் அல்லது சொற்றொடர் பல பொருள் தந்து, செய்யுளின் கருத்தோடு பொருந்தும்படி கூறுவது சிலேடையணி. விசாகப்பெருமாள் ஐயர் தமது அணியிலக்கணத்தில் இதைப் பலபொருட் சொற்றொடரணி என்று கூறுவர். தண்டியலங்கார ஆசிரியர் இதனைப் பொருளணி வகைகளில் வைத்துக் கூறுவர். வேறு சிலர் இவ்வணியில் சொற்றிறமையே முக்கியமானதால், இதனைச் சொல்லணியின்பாற் படுத்துக் கூறுவர். புலவர்கள் இவ்வணியைப் படிப்பவர்க்கு வியப்பூட்டும் வண்ணம் கையாளுவதைக் காணலாம். புலமை வாய்ந்த சிலர் பேச்சிலும் இவ்வணியை வைத்துக் சாதுரியமாகப் பேசுவர்.

1. ஒரு முறை ஆறுமுகநாவலர் இந்தியாவிலே மீனாட்சி சுந்தரம்பிள்ளையுடன் உலாவி வந்தார். அது பனிக்காலம். பிள்ளையவர்கள் பனிக்குளிரைக் குறித்துப் 'பனிக்காலம் கொடிது' என்று சொன்னார். உடனே நாவலர் 'பனிக்காலம் நன்று' என்றார். இரு புலவருடைய சீடர்களும் தமக்குள் வாதிட்டனர். பிள்ளையாரவர்களின் சீடர்கள் பனிக்காலம் கொடிது என்று வாதாடினர். நாவலருடைய சீடர்கள் நாவலர் சொன்னபடியால் அதுவே சரியென்று கருதி பனிக்காலம் நன்று என்று எதிர்வாதமிட்டனர். பின்னர் இரு சாராரும் நாவலரிடங் கேட்க நாவலர் 'பிள்ளையவர்கள் சொன்னதையே நானுஞ் சொன்னேன்.' என்று சொல்லித் தமது சீடர்களை மலைக்க வைத்தார். பின்பு, பனிக்கு + ஆலம் + நன்று = பனியைக்காட்டிலும் விடம் விரும்பத்தக்கது என்று சொற்றொடரைப் பிரித்து பொருள் விளக்கினார்.

2. புலவர்மணி கதிரேசச் செட்டியார் ஒருமுறை தமது வைணவ நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்கு ஒரு குவளையில் பால் காய்ச்சி அருந்தக் கொடுத்தனர். புலவர்மணி பாத்திரத்திலுள்ள பாலின்மேல் ஓர் எறும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதக்கக் கண்டு நண்பரை பார்த்து, 'பாற்கடலிலே சீனிவாசன் பள்ளிகொள்ளுகிறார்' என்று சிலேடையாகச் சொன்னார். சீனிவாசன்--விஷ்ணுமூர்த்தி, இலக்குமியை மார்பில் தரித்தவர் என்பது பொருள்; மற்றப்பொருள் சீனியில் வசிக்கும் எறும்பு என்பது. இருவரும் நகையாடி மகிழ்ந்தனர்.

3. ஒருவர் கடகத்திலே காய்கறி அரிசி முதலிய பண்டங்களை வைத்துத் தலையிலே சுமந்து வந்தார். வழியிலே அதைக்கண்ட நண்பர். 'இது என்ன சுமை?' என்று கேட்டார். மற்றவர் இது என் 'தலைவிதிவசம்' என்று விடையளித்தார். இதிலுஞ் சிலேடை நயம் இருக்கிறது.: 1. என் தலைவி திவசம் - அதாவது மனைவியின் திவசம் (சிராத்தத்துக்குப்) பொருள் வாங்கிவருகிறேன் என்பது ஒரு கருத்து. தலைவிதிவசம் - எனது தலை எழுத்துப்படி நடக்கிறேன் என்பது மற்றப்பொருள்.

கவிதைகளிலும் இவ்வணி பல இடங்களிற் பயின்று வருகின்றது. அவற்றிற் சிலவற்றைப் பார்ப்போம்; முதலில் சிலேடையைப் பார்ப்போம்.

**"தெருட்டும் கலை பலவுஞ் சேர்ந்த**

**மதியை மருட்டும் முகத்தினளம் மான்."**

**(கலைகள் பல சேர்ந்த மதியை மருட்டும் அம் மாதின் முகம்.)**

1. பதினாறு கலைகளும் நிறைந்த முழுமதியையும் தோற்று ஓடச்செய்யும் அம்மாதின் முகம் என்பது ஒரு பொருள்.
2. பல கலைகள் கற்றவர்களின் புத்தியையுந் தடுமாறச் செய்யும் அம்மாதின் முகம் என்பது மற்றொரு பொருள்.

இனி, இருவகைச் சிலேடைகளுக்கு உதாரணங்கள் கூறுகிறேன்.

1. **செம்மொழிச் சிலேடை** - சொற்கள் உருவம் மாறாமல் நின்றவாறே இருவிதப் பொருள்களையுந் தருவது.
2. **பிரிமொழிச் சிலேடை** - சொற்கள் இருக்கும் உருவத்தில் ஒரு பொருளையும் பிரிந்து நின்று வேறு பொருளையுந் தருவது.

உதாரணம்:

1. குளத்திலுங் காட்டிலும் தாமரைகள் உள்ளன.

I. தாமரை + தாமரைப்பூ II. தாம் + மரை - தாவிச் செல்லும் மரைகள்

2. 'குறிஞ்சிக் குறத்தியரும் வானுலக அரம்பையரும் கரும்பாம்பாட்டினர்.

I. குறத்தியர் கரிய பாம்பை ஆட்டினர் (கரும்பாம்பு--ஆட்டினர்.)

II. அரம்பையர் கரும்பு போன்ற இனிய பாட்டையுடையவர் (கரும்பாம் + பாட்டினர்.')

3. இருபாலைச் சேனாதிராயர் முதலியார் பாடல்:

**"திருவாரும் நல்லை நகர்ச் செவ்வேள்ப் பெருமானார்**
**இருவாலைக் குயத்தியரோ டாடினர்காண் அம்மானை**
**இருவாலைக் குயத்தியரோ டாடினார் அவராயின்**
**தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இருவாலை - யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் ஊரின் பெயர்; இருபாலை என்பது இருவாலை என்று வழக்கில் மருவியது.

I. **குயத்தியர்** - குயச்சாதிப் பெண்கள் (வனைதற் றொழில் செய்பவர்.)

II. **இரு வாலைக் குயத்தியர்** - இளமையான முலைகளையுடைய வள்ளி, தெய்வயானை என்னும் இரு பெண்கள்.

III **சட்டி குடம்** - மட்பாத்திரங்கள்

**சட்டி** - ஷஷ்டி, **குடம்** - பூசநாள்

IV. **சாறு** - குழம்பு

**சாறு** - விழா, திருவிழா

4. (அ)கம்பர் இராமாயணத்தில் கவிக்கும் கோதாவரியாற்றுக்கும் சிலேடையாகப் பாடிய பாட்டுச் செம்மொழிச்சிலேடை பிரசித்தமானது.

**'புவியினுக் கணியாய் ஆன்றபொருடந்து புலத்திற்றாகி**
**அவியகத் துறைகள்நல்கி ஐந்திணை நெறியளாவிச்**
**சவியுறத் தெளிந்து தண்ணென்றொழுக்குந் தாங்கி ஞான்றோர்**
**கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.'**

ஆ. இராமன், குறித்தகாலத்தில் படையோடு வருவதாகச் சென்ற சுக்கிரீவன் வரத்தவறியபோது சினங் கொண்டு இலக்குமணனை அனுப்புகிறான்.

**'அஞ்சில் அம்பதில் ஒன்றறியாதவன்**
**நெஞ்சில் நின்ற நிலாவ நிறுத்துவாய்'**

அஞ்சிலம்; பதில்ஒன்றறி; ஆதவன் நெஞ்சில் நின்று நிறுத்துவாய். அஞ்சில் ஐம்பதில் ஒன்றறியாதவன். - பழமொழி. ஐந்து வயதிலும் ஐம்பது வயதிலும் ஒன்றும் அறியாத மூடன்.

5. சிலேடை பாடுவதில் மிகச் சிறந்தவரான அந்தக்கவிராய முதலியாரது செம்மொழிச் சிலேடைப்பாடல்:

**"இம்பர்வா னெல்லை இராமனையே பாடி**
**எண்கொணர்ந்தாய் பாணாநீ? என்றாள் பாணி**
**வம்பதாங் களப மென்றேன், பூசும் என்றாள்;**
**மாதங்கம் என்றேன், நாம் வாழ்ந்தோம் என்றாள்;**
**பம்புசீர் வேழம் என்றேன், தின்னும் என்றாள்;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகடென்றேன், உழுமென்றாள் பழனந்தன்னை;**

**கம்பமா என்றேன் நற்களியாம் என்றாள்;**

**கைம்மா என்றேன் சும்மா கலங்கினாளே."**

**களபம்** - 1. யானை 2. சந்தனம்

**மாதங்கம்** - 1. யானை 2. பெரும்பொன்

**வேழம்** - 1. யானை 2. இரும்பு

**பகடு** - 1. யானை 2. எருமை, எருது

**கம்பமா** - 1. யானை 2. கம்பின் மாவு

புலவர் 'யானை' என்ற கருத்துப்படச் சொல்ல, மனைவி அந்தப் பொருள் கொள்ளாது ஏனைய பொருள்களைக் கொண்டு விடை கூறுவதால் படிப்பதற்குச் சுவையாக உள்ளது.

6. தமிழுக்கும் சூரியனுக்கும் சிலேடையாக உள்ள ஒரு பழம் பாடல்:

**"ஓங்கவிடைத் தோன்றி உயர்ந்தோர் தொழவிளங்கி**

**வீங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் - ஆங்கவற்றுள்**

**பொன்னேர் தனியாழிப் பூங்கதிரோன் தேனனையது**

**தன்னே ரிலாத தமிழ்"**

இவை போன்ற சிலேடைநயங்கொண்ட பாடல்கள் தமிழிலக்கியங்களில் பரவலாகப் பல இடங்களில் வரக் காண்கின்றோம். நுண்ணிறிவாளர் இச் சிலேடைகளை விளங்கி, நயத்து, இன்புறுவர் என்பதில் ஐயமில்லை. அக்கிரகித்தறிதற்குத் தோற்றுவாயாகவே இச்சிறு கட்டுரையை வரைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலச்சினை விளக்கம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் தேவஸ்தான வெளியீடுகளுக்கென உருவாக்கப்பட்ட இலச்சினை (அடையாள முத்திரை), நிகழும் பிரமோதூத வருடம் வைகாசி மாதம் 24ஆம் தேதி (1990-06-07) வெளியிடப்பட்ட 'கொக்கூர் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு' என்னும் வெளியீட்டின் முகப்பை முதன்முதலாக அலங்கரிக்கின்றது.

இந்த இலச்சினை கண்ணுக்கு அழகாகவும் கருத்துக்குப் பொருண்மை பொதிந்ததாகவும் அமைந்திருப்பது சிறப்பாக குறிப்பிடத்தக்கது. பார்ப்பவர் கண்ணுக்கு உடனே புலப்படுவன 'ஓம்' என்னும சமட்டிப் பிரணவ மந்திரமும், ஓங்கி நிமிர்ந்து நிற்கும் வேலும், ஆடும் மயிலின் விரித்த தோகையும் ஆகும்.

பிரணவமே இலச்சினையின் அடித்தளமாக அமைந்துள்ளது. சைவர்களுக்கு அது பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கர விநாயகரை உடனே நினைவூட்டி நிற்கும். வேதங்களுக்கு முன்னும் பின்னும் ஒலிக்கப்படும் இப்பிரணவ மந்திரம், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவத்துக்கு மாத்திரமன்றி, அறுவகை வைதிக சமயங்களுள் ஏனைய வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றுக்கும் பொதுவான மகாமந்திரமாகும். அதனால் அது சிவன், விட்டுணு, சக்தி, கணபதி, குமாரன் என வெவ்வேறு பெயர் கொள்ளும் முழுமுதற் பரம்பொருள் ஒன்றே என்னும் உண்மையை உணர்த்தி நிற்கின்றது.

பிரணவம் வியட்டிப் பிரணவம் எனவும், சமட்டிப் பிரணவம் எனவும் இருவகைப்படும். வியட்டிப் பிரணவமாவது அகர, உகர, மகரங்களாம். சமட்டிப் பிரணவமாவது அம்மூன்று எழுத்துக்களும் சேர்ந்து 'ஓம்' என்று ஒலிப்பதாகும். வியட்டிப் பிரணவம் அபரப்பிரணவம் எனவும், சமட்டிப் பிரணவம் பரப்பிரணவம் எனவும் சொல்லப்படும். வியட்டிப் பிரணவத்தில் அகரம் வாய் திறத்தலையும், உகரம் இதழ் குவித்தலையும், மகரம் வாய் மூடுதலையும் குறிக்கும். இதனால் பிரணவத்திலிருந்தே சொற் பிரபஞ்சங்களெல்லாம் தோன்றுகின்றன என உயர்ந்தோர் கூறுவர். மேலும் வாய் திறத்தலால் தோன்றும் அகரம் படைத்தற்றொழிலையும், வாய் குவித்தலால் தோன்றும் உகரம் காத்தற்றொழிலையும், வாய் மூடுதலாற் றோன்றும் மகரம் அழித்தற்றொழிலையும் குறிக்குமென யோகிகள் கூறுவர். இன்னும் ஓங்காரத்துக்கு வடபுறம் தலையும், தென்புறம் தாளும் விளங்குவதால் அது வடக்கே தலைவைத்துத் தெற்கு நோக்கி வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவத்தை நினைவு படுத்தி நிற்கின்றது.

பிரணவத்தின் உண்மைப் பொருள் சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதது. அப்பொருளைத் தந்தையாகிய சிவபெருமானுக்குத் தானே குருவாய் அமர்ந்து கூறியருளிய பரசிவகுருமூர்த்தியாகிய முருகப் பெருமானைக் குறிக்கும் வேலாயுதம், எமது இலச்சினையின் நடுவே பிரணவத்தினூடாக நிமிர்ந்து விளங்குகின்றது. தமக்குத் தாமே மகனாக விளங்கிய சிவபெருமான், தமக்குத் தாமே குற்றமொன்றுமில்லாத குருமூர்த்தியாய் இருந்து, தாமாகிய தத்துவப் பொருளைத் தாமே சொல்லத் தாமே கேட்டுத் திருவிளையாடல் புரிந்த நுட்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலச்சினையும் நுட்பமாகக் குறிப்பிடுகின்றது.

இலச்சினையின் பின்னணி, முருகப் பெருமானைச் சுமந்து நின்று ஆடும் மயிலின் விரித்த தோகைபோல விளங்குகின்றது. நுணுகி நோக்கின், வட்டவடிவமான அத்தோகை, எண்ணிலடங்கா அண்டகோடிகள் அனைத்தையும் தன்னுள் அடக்கிநிற்கும் பேரண்டத்தைக் குறிப்பால் உணர்த்துவதைக் காணலாம். மயிலின் விரித்த தோகையில் விளங்கும் கண்களே அண்டங்களைக் குறிக்கின்றன. பேரண்டத்தின் புறக்கோடு, ஒரு தொடர்ச்சியான வரைவாக இல்லாமல் இடையறவுபட்டு வட்டமாகத் தோன்றுவது, பேரண்ட வெளியின் வரையறைப்படாத - எல்லையில்லாத தன்மையைக் காட்டுகிறது.

பரம்பொருளாகிய முருகப்பெருமான் அண்டங்களையும் கடந்து அப்பாலுக் கப்பாலாய் நிற்கும் உண்மையை, வேலாயுதத்தின் தலை, அப் பேரண்ட வடடத்துக்கும் அப்பால் ஓங்கிநிற்பதால் நாம் உணர்கின்றோம்.

எல்லா வகையிலும் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேவஸ்தானத்துக்கு ஏற்புடையதாக இவ்விலச்சினையை உருவாக்கித் தந்த கலைஞர் க. கதிர்காமத்தம்பி, எம்பெருமான் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று வாழ்க என்று மனங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

## பகவத் கீதை

இது வடமொழி மகாபாரதத்தில் அடங்கியுள்ள ஒரு தனி நூல்; பாரதத்தில் வீஷ்ம பர்வதத்தில் காணப்படுகிறது. பாரதத்தின் ஒரு சிறு பகுதியாக வந்தபோதும், இது ஒரு தனி நூலாகப் போற்றப்படுகின்றது. வடமொழியிலுள்ள வீட்டுநூல்கள் மூன்றனுள் (ப்ரஸ்தான த்ரயம்) இதுவும் ஒன்று. ஏனைய இரண்டும் உபநிஷத்துக்களும், பிரம சூத்திரமுமாகும். இவற்றுக்குச் சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலாய பல ஆசாரியர்கள் உரை விரித்திருக்கின்றனர். பகவத்கீதை 18 அத்தியாயங்களைக் கொண்டு தன்னளவில், முடிந்த ஒரு நூலாக விளங்குகின்றது.

குருஷேத்திரப் போர்க்களத்தில் கௌரவர்களுடைய படைகளும், பாண்டவர்களுடைய படைகளும் அணிவகுத்துப் போருக்கு ஆயத்தமாக நிற்கின்றன. அருச்சுனன் தனக்குச் சாரதியாக அமைந்த கிருஷ்ணபகவானை நோக்கி 'எனது தேரை இரு படைகளுக்கும் நடுவிலே கொண்டுபோய் நிறுத்து' என்று கேட்கிறான். கிருஷ்ணபகவான் அப்படியே செய்கிறார். அருச்சுனன் இரு பக்கத்துப் படைகளையும் நோட்டமிடுகிறான். எதிர்ப்பக்கத்திலே தன்னுடைய குரவரும், ஆசிரியர்களும், உறவினரும், நண்பருந் திரண்டு நிற்பதைக் காண்கிறான். 'இவர்களை' எல்லாங் கொன்று இரத்தந் தோய்ந்த பூமியையா நாங்கள் ஆளவேண்டும்?' என்று எண்ணி இரங்குகிறான். அவனுடைய உடல் நடுங்குகின்றது; உள்ளஞ் சோர்ந்து விடுகிறது. கையில் இருந்த காண்டீபமும் நழுவுகிறது. அவனுடைய வீரம், ஆண்மை எல்லாம் மறைந்து விடச் சோர்ந்த நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணனிடம் தன் நிலைமையைக் கூறுகிறான். இவ்வாறு மனக்கலக்கத்தினால் சோர்ந்த அருச்சுனனுக்குக் கிருஷ்ணபகவான் உற்சாகமூட்டிப் போர் செய்வதற்கு அவனைத் தூண்டும் பொருட்டு உபதேசித்த மொழிகளே பகவத்கீதையாகும். இந்நூல் பெரும்பாலும் அருச்சுனனுக்கும், கிருஷ்ணபகவானுக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் வடிவிலேயே அமைந்துள்ளது. இடையிடையே போர்க்களத்து நிகழ்ச்சிகளைத் திருதராட்டினனுக்கு எடுத்துக்கூறும் சஞ்சயன் என்ற அமைச்சனின் கூற்றாகவும் சிலபகுதிகள் வருகின்றன.

பகவத்கீதையின் உபதேசங்கள் பொதுவாக உபநிடதங்கள் கூறும் பொருள்களின் சாரமாக உள்ளன. ஆகையால், இதுவும் ஓர் உபநிடதமாக - முக்கியமாக விசிட்டாத்துவித வேதாந்தத்தைக் கொள்ளும் வைஷ்ணவர்களால்- போற்றப்படுகிறது. நூலின் 18 அத்தியாயங்களையும் ஆறு, ஆறு அத்தியாயங்கள் கொண்ட மூன்று பகுதிகளாக வகுத்து, அவற்றுக்குக் 'கர்மயோகம்' (அத்தி 1-6) 'பக்தியோகம்' (அத்தி 7-12), 'ஞானயோகம்' (அத்தி 13-18) என்று வழங்குவர். இனி வைஷ்ணவ சம்பிரதாயத்தில் வேதாந்தங் கூறும் 'தத்துவம்', 'இதம்', 'புருஷார்த்தம்' என்னும் மூன்று வழிகளும் 3 பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன என்று கொள்வர். தத்துவம் - பொருள்கள் சித்து, அசித்து, ஈசுவரன் என முத்திறப்படும் என்றும், அவற்றுள் ஈசுவரனே பரம்பொருள் என்றுங் கூறுவது. இதம் - சம்சாரத்தில் உழலுஞ் சீவர்கள், அதினின்றும் நீங்கிப் பகவானை (ஈசுவரனை) அடைவதற்கு வேண்டிய சாதனம் யாது, எனக் கூறுவது. புருஷார்த்தம் - சீவர்கள் சம்சாரத்தினின்றும் நீங்கி, மோட்சத்தை அடைவதைக் கூறுவது.

முதற்பகுதியின் சாரம்: ஆன்மா அழிவில்லாதது; அது உடம்பினின்றும் வேறானது. ஆன்மா சித்துப்பொருள்; உடம்பு அசித்துப்பொருள். இந்த ஞானத்தைக் கர்மயோகத்தாலும் ஞானயோகத்தாலும் அடையலாம். உடல் அழிவது; பிறப்பும் இறப்பும் உடையது. ஆன்மாவே அழியாதது. நைந்துபோன ஆடைகளை நீக்கிவிட்டு மனிதர் புதிய ஆடைகளை அணிவது போன்று, ஆன்மாவும் நைந்த உடலை விட்டுப் புதிய உடலை எடுக்கின்றது. அத்தி II-9 'இவன் (ஆன்மா) கொல்வானென்று நினைப்போனும், கொல்லப்படுவான் என்று நினைப்போனும்- இருவரும் அறியாதார்; இவன் கொல்வதுமில்லை, கொலையுண்பது மில்லை.' அத்தி II-22: 'நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு, மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, ஆன்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எடுக்கின்றது. ஆகையால், அறிவுள்ளவன் 'ஆன்மா அழியாதது; உடலே அழிவது' என்று தெளிந்து, உடலிற் பற்று வைக்கமாட்டான். கொல்வதும், கொல்லப்படுவதும் உடலேயன்றி ஆன்மாவன்று. ஆதலால், போர்வீரன், துணிவுடன் தனது போர்த்தொழிலைச் செய்யவேண்டும். எந்தத் தொழில் செய்யினும், பயனிற் பற்று வைக்கக் கூடாது. அவ்விதம் செய்யுந் தொழிலுக்கு 'நிஷ்காமிய கர்மம் - பற்றற்ற வினை' என்பது பெயர். நிஷ்காமியகர்மம் செய்பவன், புண்ணியம் - பாவம், சுகம்-துக்கம் என்னுஞ் சஞ்சாரத்தைத் தாண்டுகிறான். ஆகவே, கர்மயோகியானவன் தாமரையிலைத் தண்ணீர் போல பட்டும் படாமலும் உலகத்தோடு ஒட்டியிருந்து தன் தொழில்களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் வினைப்பயன் அவனிடம் ஒட்டமாட்டாது. இவ்வாறு பயனிற் பற்று வைக்காது தொழில் செய்பவனே கர்மயோகி, அவனே ஸ்திரப் பிரஞ்ஞன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உறுதியான ஞானமுடையவன்).'

**பகவான் கூறுகிறார்**

மேற்கோள்II. 47. 'தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு; அதன் பயனில் எப்போதுமே உனக்கு அதிகாரம் இல்லை; செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலும் இராதே.'

II.48 'தனஞ்ஜயா, யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி, தோல்விகளை நிகரெனக் கொண்டு, தொழில்களைச் செய்க. நடுநிலையே, யோகம் எனப்படும்.'

III.56 'துன்பத்திலே மனங்கெடாதவனாய், இன்பங்களிலே ஆவலற்றவனாய், அச்சமும் சினமும் தவிர்ந்தவனாயின், அம்முனி, மதியிலே உறுதிவாய்ந்தவனென்ப.'

IV. 'பகவானும் எப்பொழுதும் உலகத்தின் நன்மைக்காகவே தம்முடைய தொழில்களைச் செய்து விடுகிறார். பகவான் அவதாரமெடுப்பது, துஷ்டரை தண்டிக்கவும், சிஷ்டரை ஆட்கொள்ளவும் மட்டுமன்று - தண்டனையும் தயையான் காரியமே - அறத்தை நிலைநாட்டி, உலகத்தைக் காப்பாற்றுவதே அவதாரத்தின் நோக்கம்.'

IV.6 'பிறப்பற்றேன் எனினும், அழிவற்றேன் எனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே எனினும், யான் எனது பிரகிருதியில் நிலைபெற்று, ஆத்ம மாயையால் பிறப்பெய்துகிறேன்.'

IV.7 'பாரில் எப்போதெப்போது தர்மம் அழிந்து போய், அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன்.'

IV.8 'நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கின்றேன்.'

V. 'எந்தத் தொழிலைச் செய்தாலும் 'நான்' 'எனது' என்னும் செருக்குகள் இன்றி, அதை இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்து, தாமரையிலையில் தண்ணீர் போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கவேண்டும்.'

ஆன்மாவை உள்ளபடி பார்ப்பதற்கு வழி யோகம். யோகம் என்பது சமபுத்தி. அட்டாங்க யோகத்தால் பிராணாயாமம் செய்தபிறகு, மனத்தையடக்கி இறுதியில் ஆன்மாவைத் தரிசிக்கலாம். இவ்வண்ணம் கர்மயோகத்தாலும், ஞானயோகத்தாலும் ஆன்மாவைத் தெரிந்து, ஆன்மாவை அடைவது 'கைவல்யம்' எனப்படும். இதை அடைந்த யோகியானவன், எல்லா ஆன்மாக்களையுஞ் சமமாகவே எண்ணுவான்.

**(ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.)**

V.10 'செய்கைகளை எல்லாம் பிரம்மத்திற் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ அவன், நீரில் தாமரையிலை போலப் பாசத்தால் தீண்டப்படுவதில்லை.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பகுதி (அத்தி 7-12)

தன்னை அறிந்த சீவான்மா பின்னர்ப் பரமான்வாவை அறிந்து அவரிடத்திலே பத்தியோகம் செய்யவேண்டும். பிரகிருதி (அசித்து), சீவன் (சித்து) பகவான் (ஈசுவரன்) என்னும் மூன்று தத்துவங்களில், பிரகிருதியினாலாவது உடல். உடல் வேறு; சீவன் வேறு. பரமாத்மா அந்தர்யாமி; மணிகளைக் கோக்கும் நூல்போல் எல்லாச் சீவர்களிடத்திலும் அந்தர்யாமியாய் இருக்கிறார். அவற்றுடன் கலந்திருந்த போதிலும் அக்கலப்பினால் மாசுறுவதில்லை.'

மேற். VII.7 ' தனஞ்ஜயா! என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறு எதுவும் இல்லை; நூலில் மணிகளைப்போல், இவ்வையகமெல்லாம் என்மீது, கோக்கப்பட்டுள்ளது.'

X.29 'நான் எல்லா உயிர்களிடத்திலும் மையமானவன். எனக்குப் பகைவனுமில்லை; நண்பனுமில்லை. ஆனால் என்னை, அன்புடன் தொழுவோர், புரிவர். அன்னவர் என் அகத்து அமர்ந்தார்; அவரகத்து நானுளேன்.'

X.20 ' அர்ஜுனா! உயிர்கள் அனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதி நான்; இடையும், அவற்றின் இறுதியும் நான்.'

பகவானைத் துதிப்பவர் நான்கு வகையினர்: துன்பம் நீங்கத் துதிப்பவர்; சுவர்க்க இன்பங்கள் நுகரவேண்டித் துதிப்பவர்; ஆன்ம லாபமடையத் துதிப்பவர்; பகவானையே உயிரென நினைத்துத் துதிப்பவர். இவர்களுள் பகவானை உயிரென அறிந்தவன் ஞானி; அவன் மகாத்மா; அவன் பிறவியெடுப்பது மிகவும் அரிது. நாம் பகவானை எப்படி நினைக்கிறோமோ அவர் அப்படியே தோன்றி ஆட்கொள்கின்றார். பகவானை அடைந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லை. மனித உருவெடுத்து மனிதரை ஆட்கொள்ளும் பகவானது கருணையை மூடர்கள் அறிவதில்லை; ஆனால் பக்தர்கள் உணர்ந்து, அவரைக் கணமேனும் பிரிந்திருக்க மாட்டார்கள். பகவானே உலகுக்கு ஆதாரமாய், உயிருக்குயிராய் அனைவரையுங் காத்துத் தம் வயமாக்குகிறார். அவருடைய அன்பு அளவில்லாதது. அவருக்கு எதைப் பக்தியோடு அளித்தாலும் அவர் அதை விருப்புடன் ஏற்றுக்கொள்கிறார். அதற்கேற்ப அருளுஞ் செய்கின்றார். அபிமானத்தை விட்டு, மனத்தையும், பக்தியையும் பகவானிடம் வைக்கின்றவர்கள் பகவானுக்கு மிகப்பிரியமானவர்கள். மேற்.IX.34 (பகவான் கூறுகிறார்), மனத்தை எனக்காக்கிவிடு; பத்தியை எனக்காக்கு; என்னைத்தொழு; என்னை பரமான்மாவாகக்கொள். இங்ஙனம் இயற்றும் தற்கலப்பு யோகத்தால் என்னையே எய்துவாய்.

அருச்சுனனுக்குத் தமது ஈசுவரத் தன்மையையும் அவற்றின் ஆற்றலையும் அறிவிப்பதற்காகப் பகவான் தன் விசுவரூபத்தைக் காண்பிக்கிறார். மானிடக் கண்களாற் பார்க்க முடியாததலால், கிருஷ்ணபகவான் தமது விசுவரூபத்தைக் காண அருச்சுனனுக்குத் திவ்விய கண்கள் அளிக்கிறார். எண்ணற்ற வாய்களும், எண்ணற்ற கண்களும், எண்ணற்ற ஆயுதங்களும், சிறந்த ஆடை ஆபரணங்களும் பொருந்திய அந்த விசுவரூபத்தில் உலகம் முழுவதும் அடங்கியிருப்பதைக் கண்ட அருச்சுனன் கண்ணனைத் துதிக்கின்றான். பின்பு அச்சங் கொண்ட அருச்சுனன் வேண்ட, கண்ணன் தமது விசுவரூபத்தைச் சுருக்கிக் கொண்டு பழையபடி பார்த்தசாரதி வடிவிலே தோன்றுகிறார். (அத் XI)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பகுதி (அத்தி 13-18)

**அதன் சாரம்:**

உடல் ஷேத்திரம்; அதனை அறிபவன் ஷேத்திரக்ஞன். ஷேத்திரம் 24 தத்துவங்களால் ஆனது. ஆன்மா, தன்னை உடம்பு என்றும் தவறாக நினைப்பதால், பிறப்பிறப்புச் சூழலில் (சம்சாரத்தில்) அகப்பட்டு உழல்கின்றது. ஆனால் ஆன்மாவுக்கு அழிவில்லை; அறியாமையும் இல்லை. பகவான் பிரகிருதியின்றும், சீவனினின்றும் வேறுபட்டவர். சீவன், பத்தியின் வாயிலாக பரமான்மாவின் தன்மையை அடைகின்றான். பகவான் குற்றமற்றவர், புருடோத்தமன். பிரகிருதி-தத்துவம் சத்துவம், ராஜதம், தாமஸம் -- என்னும் முக்குணங்களை உடையது. சத்துவம்-அறிவையும், உயர்ந்த இன்பத்தையும் உண்டாக்கும். ராஜஸம்-ஆசையையும், தொழிலையும் உண்டாக்கும். தாமஸம்-அறியாமை, சோம்பல், துக்கம் ஆகிய தாழ்ந்த பண்புகளையும்,செயல்களையும் உண்டாக்கும். பிரகிருதியின் சேர்க்கையால் ஒவ்வொரு சீவனும் இந்த முக்குணங்களின் தாக்கத்துக்கு இலக்காகும். இக்குணங்கள் ஏறியுங் குறைந்தும் இருப்பதற்கேற்ப மக்களும் தன்மையில் வேறுபடுவர். பகவானுடைய கருணை இருந்தால், இந்த முக்குணங்களின் சேர்க்கை நீங்கி வீடடையலாம். சீவன் பகவானுடைய அம்சம். அகவே அதனால் சீவன் பகவானை அடைதல் அவசியம். மனிதர் தெய்வப் பிறப்பினர், அசுரப்பிறப்பினர் என இரு வகையினர். முன்னவர், சத்வகுணம் மேலிட்டுப் பகவானை அடைவர். பின்னவர், தாமே இறைவன் என்றும் எல்லாம் கர்மத்தால் உண்டாகின்றன என்றும் எண்ணி இறுமாப்பர். மக்கள் உய்திபெற எல்லாக் கர்மங்களையும் பரமான்மாவுக்கே அர்ப்பணஞ் செய்யவேண்டும். அப்போது கர்மம் கைங்கர்யம் ஆகும். பகவானுக்குப் பத்தி செய்வது தான் முக்கியமான சாதனம். இந்தப் பத்திக்கு ஜாதி, தேசம், காலம் முதலிய வேறுபாடுகள் இல்லை.

**மேற்கோள் XVIII.66 (பகவான் கூறுகிறார்.)**

'இங்கே எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணபுகு. எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன். பயப்படாதே.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்து நான்கு கலைகள்

**"ஆய கலைக ளறுபத்து நான்கினையு**
**மேய உணர்விக்கு மென்னம்மை - தூய**
**உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே**
**இருப்பளிங்கு வாரா திடர்."**

இவ்வாறு கம்பர் பாடியுள்ளார். இந்திய மரபிலே கலைகளை அறுபத்துநான்கு என்று எண்ணிக் கணக்கிடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. பழந்தமிழ் இலக்கியமாகிய சங்கத்தொகை நூல்களில் இவ்வழக்கம் காணப்படவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற காப்பியங்களின் காலந்தொட்டே வடமொழிச் செல்வாக்கினால் அறுபத்துநான்கு கலைகள் என்னும் வழக்குத் தமிழிலே இடம்பெற்று வருகிறது. சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் அவை கணிகையர் கற்கும் கலைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன:

சிலப்பதிகாரத்தில், மதுரையில் உள்ள கணிகையர் வீதியை வருணிக்குமிடத்து,

**'எண்ணெண் கலையோர் இருபெரு நீதியும்'**

**(சிலம்பு:14:அடி167)**

**'எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற**
**பண்ணியன் மடந்தையர் பயங்கெழு வீதி'**

**(சிலம்பு:22:அடி138-9)**

எனவரும் இடங்களையும், பெருங்கதையிலே

**'யாழ் முதலாக வறுபத்தொரு நான்(கு)**
**ஏரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்**
**கலையுற வகுத்த காமக் கேள்வி'**

**(பெருங்கதை, 1:35:அடி 8486)**

**'கலைதுறை போகிய கணிகா சாரத்துப்**
**பலதுறை பயின்று பல்லுரைக் கேள்வியொடு'**

**(கூஷ 5:8: அடி 53-54)**

எனவரும் இடங்களையும் நோக்க, இவ்வறுபத்துநான்கு கலைகளும் விலைமகளிர்க்கு உரியவை என்பது புலப்படும்.

'கலைதுறை போகிய கணிகா சாரத்து' என்னும் இடத்திலே 'கலை' என்பதற்குக் 'குலமகளிர்க்கும் பரத்தையர்க்கும் விதிக்கப்பட்ட கலைகள்' என்று பதிப்பாசிரியர் உ.வே.சாமிநாதையர் எழுதிய உரைக்குறிப்பை நோக்க, இக்கலைகள் எல்லாம் கணிகையர்க்கே உரியனவென்று கொள்ளல் பொருந்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுட் சிலபல கலைகள் குல மகளிர்க்கும் உரியனவாகும்.

அறுபத்துநான்கு கலைகளை ஒருசேரக் கூறும் தமிழ்நூல்கள் இல்லையென்றே சொல்லவேண்டும். **மணிமேகலையில்** இரண்டாம் காதையில் 18 முதல் 32 வரையுள்ள அடிகள் சில கலைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. **திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு** என்னும் தமிழ் நிகண்டுகளிலும் இக்கலைகளின் பட்டியல் தரப்படவில்லை. கி.பி. 1860ல், **வீரமாமுனிவர்** என்ற தமிழ்ப் பெயர் வைத்துக்கொண்ட பெஸ்கி என்னும் மேனாட்டுத் தமிழறிஞர் வெளியிட்ட சதுரகராதியிலேயே முதன்முதலாக அறுபத்துநான்கு கலைகளின் அட்டவணையைக் காண்கின்றோம். அதற்குப் பின்னர் வெளியிட்ட **அபிமான சிந்தாமணி, மதுரைத் தமிழகராதி, வினஸ்லோ தமிழ்-ஆங்கில அகராதி, சென்னைத் தமிழ்ப்பேரகராதி, தொகை அகராதி** ஆகிய அகராதிகளில் வீரமாமுனிவர் தந்த பட்டியலே பெயர்த்துக் காட்டப்பட்டுள்ளது. வீரமாமுனிவருக்கு மூலம் எது எனபது தெரியவில்லை. ஆனால் வீரமாமுனிவர் தந்துள்ள பட்டியல், வடமொழியிலுள்ள பழைய மரபினின்றும் வேறுபட்டது.

வடமொழியிலே அறுபத்து நான்கு கலைகளின் பட்டியலை முதன் முதல் தந்தவர் காமசூத்திரம் என்னும் நூலின் ஆசிரியரான வாத்ஸ்யாயனர் (கி.பி.100-கி.பி.400 இடைப்பட்ட காலம்). காமத்துப்பாலை விரிவாகக் கூறும் இப்பழைய நூலிலே, காமநுகர்ச்சிக்குரிய இளமகளிர் கற்றிருக்க வேண்டியவையென அறுபத்து நான்கு கலைகளின் பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. காமசூத்திரத்துக்கு ஜயமங்கலா, என்னும் விளக்க உரையொன்று உளது. அவ்வுரைகாரர் மூலநூல் கூறும் கலைகளின் அட்டவணையைச் சற்று மாற்றிக் கூறுகிறார்; வாத்ஸ்யாயனர் கூறாத பல புதிய கலைகளையும் உரைகாரர் தருகின்றார். இக்குழப்பத்தினால் வாத்ஸ்யாயனர் சொன்ன அறுபத்து நான்கு கலைகளின் பட்டியல் தமிழ் மொழிபெயர்ப்பிலும் ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றன. அன்றியும் மூலத்திலுள்ள சில கலைப்பெயர்களுக்கு வெவ்வேறான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இன்னும், குறிப்பிட்ட ஒருகலையின் பெயராக அமைந்த சொற்றொடரை, இருவேறு கலைகளை ஒன்றாகச் சேர்த்து அறுபத்துநான்கு என்று கணக்குக் காட்டப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

இனி, சிவதந்திரம் என்னும் பழைய தந்திர நூல் ஒன்றில் தரப்பட்டுள்ள அறுபத்துநான்கு கலைகளின் பட்டியல், பெரும்பாலும் காமசூத்திரப் பட்டியலை ஒத்திருப்பதால், அவற்றைக் கொண்டு வாத்ஸ்யாயனர் சொன்ன மூலப் பெயர்களை வரையறுத்துக் கொள்ளலாம். அப்பட்டியல் வருமாறு:

1. **கீதம்:** வாயாற் பாடும் கலை; அதாவது பாடல்.

2. **வாத்தியம்:** இசைக் கருவிகளை இசைக்கும் கலை.

3. **நிருத்தியம்:** நடனக் கலை, தமிழ்நூல்களில் இது நிருத்தம் என்று காணப்படுகிறது.

4. **நாட்டியம்:** ஆடலும் பாடலும் வாத்திய இசையும் ஒருங்கியலும் கலை. தமிழ்ப் பட்டியலில் இப்பெயர் இல்லை. தமிழ்ப்பட்டியல் செய்தோர் இது நிருத்தத்தின்பாற் படும் என்று கருதியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **ஆலேக்கியம்:** எழுத்துக் கலையும், வரைதற் கலையும் இதன் பாற்படும். தமிழ்ப் பட்டியலில் இது சித்திரம் என்று உள்ளது.

6. **விசேஷகச் சேத்தியம்:** விசேஷகம் என்பது மகளிர் நெற்றியில் இடும் திலகத்தைக் குறிப்பது. தமிழில் இது, பத்திர திலகம், கத்தரிக்கை, என்று தரப்பட்டுள்ளது. இலை, தாள் போன்றவற்றிலிருந்து பல்வேறு வடிவங்களிற் கத்தரித்துத் திலகமிடும் கலையை இது குறிக்கின்றது. வண்ணக் குழம்பினால் தீட்டும் திலகமும் இதன்பாற்படும்.

7. **தண்டுல-குசும-பலி விகாரம்:** இது பல்வகை அரிசி, பூக்களால் கோலம் வைத்தல் எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

8. **புஷ்பாஸ்தரணம்:** பூவேலைப்பாடு. **பூவமளியமைக்கை** எனத் தமிழில் தரப்பட்டுள்ளது. படுக்கைக்கான கட்டிலில் மலர்களைப் பரப்புவதும், தரையில் அலங்காரத்துக்காக மலர்களை ஒழுங்குற வைப்பதும் இக்கலையின் பாற்படும்.

9. **தசன-வஸனாங்கராகம்:** பற்களுக்கும் உடைகளுக்கும் உடல் உறுப்புக்களுக்கும் உவந்த வர்ணம் தீட்டும் கலை. **இது ஆடையுடை பற்களுக்கு வர்ணமமைக்கை** எனத் தமிழில் தரப்பட்டுள்ளது. உதட்டிற்கு வர்ணந்தீட்டுதல், முகம் முதலிய அங்கங்களுக்கு ஏற்றவாறு வாசனை வண்ணப் பொடிகளைப் பூசுதல், உடைகளுக்குச் சாயந் தோய்த்தல் முதலியன எல்லாம் இக்கலையில் அடங்கும்.

10. **மணி-பூமிகா-கர்மம்:** தரைத் தளத்திற்கு மணி பதித்தல் என்பது இத்தொடரின் பொருள். பருவகாலத் தட்ப வெப்பங்களுக்கு ஏற்பத் தரையை மாற்றியமைத்தல் என்று இதற்கு விளக்கங் கூறப்படுகிறது. **பள்ளியறையிலும், பானவறையிலும் மணிபதிக்கை** என்று தமிழிலே இது தரப்பட்டுள்ளது.

11. **சயனரசனம்:** துயில்கொள்வதற்காகப் படுக்கைவிரிப்பு, தலையணை, மெத்தை முதலியவற்றைக் கவர்ச்சியாக அமைத்தல். இது தமிழிலே **படுக்கையமைப்பு** என்று காணப்படுகிறது.

12. **உதகவாத்தியம்:** இது ஜலதரங்கம் எனப்படும் இசையாகும். கிண்ணங்களில் வெவ்வேறு அளவான நீரைவிட்டு, அக்கிண்ணங்களில் சிறுகோல் கொண்டு தட்டுவதனால் இசையெழுப்பும் கலை. இனி, இதற்குக் காதலர் தடாகத்தில் இறங்கி, நீரைக் கைகாளால் தட்டி, மிருதங்கம் போல ஒலிகளை எழுப்புங் கலை என்று மற்றொரு விளக்கமும் சிலர் கூறுவர். **(உதகம்-நீர்; வாத்தியம்-கருவிகள்மூலம்உண்டாக்கும் இசை).**

13. **உதககாதம்:** ஆடவரும் மகளிரும் கூடி நீராடுகையில், விளையாட்டாக ஒருவர் மீது ஒருவர் நீரை வாரி அடித்தல். இது தமிழில் நீர்வாரியடிக்கை என்று தரப்பட்டுள்ளது.

14. **சித்ராயோகம்:** இது எத்தகைய கலையென்பது தெளிவாக விளங்கவில்லை. சித்திரம் ஆக்கல், அலங்காரஞ் செய்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியாக்கல் என்ற வகையிலே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. வேடங் கொள்கை என்று தமிழிற் கொடுக்கப்பட்டுள்ளது.

15. **மால்ய கிரந்தன விகல்பம்:** மணிகளாலும் மலர்களாலும் பலவகையான மாலைகட்டுதல். மாலை தொடுக்கை என்று தமிழில் உள்ளது.

16. **கேச-சேகராபீட யோஜனம்:** தலைமுடி அலங்காரம், தலைப்பாகை கட்டுதல், தலைமாலை அணிதல், பல்வகைக் கொண்டை கட்டுதல், மலர்முடி செய்தல் முதலியன இக்கலையில் அடங்கும். மாலை முதலியன அணிதல் என்று கொடுக்கப்பட்டுள்ள தமிழ்ப்பெயர் இதற்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை.

17. **தேபத்திய யோகம்:** இதற்கு ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கை என்று தமிழாக்கம் தரப்பட்டுள்ளது. அரங்கில் நடிப்பதற்காக உடையலங்காரஞ் செய்தல் என்ற விளக்கமே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

18. **கர்ண-பத்திர-பங்கம்:** காதணிகள் செய்தல்; சங்கு முதலியவற்றால் காதணி அமைக்கை என்பது தமிழாக்கம். மலர் இதழ்களால் தோடு, குழை போன்றவற்றைச் செய்தல் என்பது வடமொழிச் சொற்றொடரின் கருத்து.

19. **கந்தயுக்தி:** வாசனைப்பொருள்கள் செய்தல். வாசனை கூட்டுகை என்பது தமிழாக்கம்.

20. **பூஷண யோஜனம்:** பொருத்தமான ஆபரணங்களை அணிந்து ஒப்பனை செய்தல். ஆபரணமியற்றுகை எனத் தமிழிலே தரப்பட்டுள்ளது.

21. **இந்திரஜாலம்:** இந்திரசாலம் என்னும் மாயவித்தை தமிழிலும் இந்திரசாலம் என்றே காணப்படுகிறது.

22. **கௌசுமாரம்:** இது எத்தகைய கலை எனபது தெரியவில்லை. தமிழ்ப் பட்டியலிலும் கௌசுமாரம் என்றே காணப்படுகிறது.

23. **ஹஸ்தலாகவம்:** பொருள்களைக் கையில் மறைப்பதும், கையில் இல்லாத பொருளைக் காட்டுவதும் போன்ற ஒரு மாயவித்தை. கைலாகவம் என்பது தமிழ்ப் பெயர்.

24. **சித்திர சாகாபூப பக்ஷ்ய விகாரகிரியா:** பல்வகையான தின்பண்டங்கள் செய்யும் கலை. பாகசாஸ்திரவுணர்ச்சி என்று தமிழில் காணப்படுகிறது.

25. **பானக ரஸ ராகாஸவ யோஜனம்:** பருகுவதற்கான சுவைநீர் வகைகள் செய்தல். தமிழ்ப்பட்டியலில் இக்கலை விடுபட்டுள்ளது.

26. **ஸூசீ வாபகர்மம்:** ஊசிகொண்டு செய்யும் தையற்கலை. தையல் வேலை என்பது தமிழ்ப்பெயர்.

27. **ஸூத்திரகிரீடா:** நூற்கயிறு கொண்டு விளையாடும் கலை. தமிழ்ப்பட்டியலில் நூல் கொண்டு காட்டும் வேடிக்கை என்று காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. **வீணாடமருகம்:** வீணை, மத்தளம் ஆகிய வாத்தியக் கருவிகளை இசைக்கும் கலை. **வீணை டமருகப் பயிற்சி** என்பது தமிழ்ப்பெயர்.

29. **பிரஹேலிகா:** சித்திரக் கவி செய்யும் கலை. **பிரேளிகை** என்பது தமிழாக்கம். நொடி போன்ற மறைபொருட் கவிக்கு விடைகூறுதல், இதில் அடங்கும்.

30. **பிரதிமா:** ஒருவர் கூறிய பாட்டின் கடையெழுத்தை முதலாகக் கொண்டு மற்றொருவர் ஒரு பாடலை ஒப்பித்தல். இது **ஈற்றெழுத்துக்கவிகூறுகை** என்று தமிழ்ப் பட்டியலிற் காணப்படுகிறது. **பிரதிமாலா** (பிரதிமாலை) என்றும் இதற்குப் பெயர் வழங்குகின்றது.

31. **துர்வாசக யோகம்:** எளிதில் ஒலிக்கமுடியாத நெருட்டுச் செய்யுள்களை நாத்திருத்தத்துக்காகவும், போட்டிக்காகவும் சொல்லுதல். **நெருட்டுச் சொற்றொடரமைக்கை** என்று இது தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

32. **புஸ்தக வாசனம்:** புத்தகங்களைத் தனக்கும் பிறர்க்கும் இனிமை பயக்கப் படிக்கும் கலை. இதன் தமிழ் ஆக்கம் **சுவைதோன்றப் பண்ணுடன் வாசிக்கை** என்று காணப்படுகிறது.

33. **நாடகாக்கியாயிகா தர்சனம்:** நாடகம் ஆடல், இதிகாச புராணக் கதைகளை விளக்கிக் கூறல், இரண்டினையும் பார்த்தும் கேட்டும் நயத்தல். இது **நாடகம், வசனமிவற்றின் உணர்ச்சி** எனத் தமிழிற் காணப்படுகிறது.

34. **காவ்ய ஸமஸ்யா பூரணம்:** தனியொரு கலைக்குப் பெயராய் அமைந்துள்ள இச் சொற்றொடரைத் தவறான முறையில் இரண்டாகப் பிரித்துத் தமிழ்ப் பட்டியல் செய்தோர் **ஸமஸ்யாபூரணம், காவியமியற்றுகை** எனத் தந்துள்ளனர். செய்யுளின் ஓர் அடியையேனும் உறுப்பையேனும் கொடுத்துப் பாடிமுடிக்குமாறு ஒருவர் சொல்ல, மற்றவர் அடிகளைப் பூர்த்திசெய்து புதுச்செய்யுள் செய்தலே இக்கலையாகும். இது **அட்டாவதானம், சதாவதானம்** போன்ற சாதனைகளிற் காணப்படுவது.

35. **பட்டிகா வேத்திர பாண விகல்பம்:** இத்தொடரும் தவறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில்வரும் **பட்டிகா** என்பதைப் பிரித்துத் தையல் வேலையுடன் சேர்த்துப் பொருள் கொள்ளப் பட்டிருக்கின்றது. வேத்திரம் என்பது பிரம்பு. தமிழ்ப்பட்டியலில் **பிரம்பாதிகளால் கட்டில் முதலியன அமைக்கை** என்று இக் கலை குறிக்கப்பட்டுள்ளது. **பட்டிகா, பாணம்** என்பவை பிரம்பு போன்று பின்னல் வேலைக்குப் பயன்பட்ட பிற தாவர வகைகளாய் இருத்தல் கூடும். மூலத்தின் உண்மையான பொருள் விளங்காமையால் **'பாண'** என்பதை **'வான'** (பின்னல்) எனத் திருத்தி **'வேத்திர வானவிகல்பம்'** (பிரம்புப் பின்னல் வகை) என்றும் சிலர் கொண்டுள்ளனர்.

36. **தர்கூ கர்மாணி:** தர்கூ என்பது நூல் சுற்றும் கதிர். இக்கலை **கதிரில் நூல் சுற்றுகை** என்று தமிழில் தரப்பட்டுள்ளது. இனி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தர்கூ' என்பதைத் 'தர்க' எனத் திரித்து, அநுமானித்தல், தர்க்கித்தல் என்ற பொருளில் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் ஒன்று இதனைக் குறிப்பிடுகிறது. (காமசூத்ர-ஆங்கில மொழிபெயர்ப்பு)

37. **தக்ஷணம்:** தச்சுவேலை; இது **மரவேலை** என்று தமிழிலே தரப்பட்டுள்ளது.

38. **வாஸ்துவித்யா:** கட்டடக்கலை. **மனையடி சாத்திரம்** என்பது தமிழ் வழக்கிலுள்ள பெயர். ஆயினும் தமிழ்ப் பட்டியலில் இது **வாஸ்து வித்தை** என்று தரப்பட்டுள்ளது.

39. **ரூப்யரத்ன பரீக்ஷ :** பொன், வெள்ளி நாணயங்களையும் இரத்தினக்கற்களையும் சோதனை செய்து மதிப்பிடுங் கலை. **நாணயரத்தினங்களின் சோதனை** என்று தமிழாக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

40. **தாதுவாதம்:** தமிழிலும் இக்கலை **தாதுவாதம்** என்றே தரப்பட்டுள்ளது. மூலச் சொல்லின் பொருள் திருத்தமாக விளங்காமையால், பலர் பலவாறு விளக்கங் கூறியுள்ளனர். **இரசவாதம், உலோகவியல், இரசாயனவியல், கனியவியல்நாடி சாத்திரம்** என்பன அவ்விளக்கங்கள் ஆகும்.

41. **மணிராகஞானம்:** மணிக் கற்களின் நிறம் பற்றிய அறிவு, என்பது இத்தொடரின் பொருள். **மணிக்கு நிறமமைக்கை** என்று இதற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. தமிழ்ப் பட்டியல் இதனையும் அடுத்துவரும் கலையையும் ஒன்றாக இணைத்துக் கூறுகின்றது.

42. **ஆகரஞானம்:** உலோகம், இரத்தினம் ஆகியன இருக்கும் நிலத்தைக் கண்டு பிடித்தல். மணியின் உற்பத்தி ஸ்தானமறிகை என்று தமிழாக்கம் செய்யப்பட்டு, இது மேலுள்ளதனுடன் (41) ஒன்றாகச் சேர்த்துத் தமிழ்ப் பட்டியலிலே **மணிக்கு நிறமமைக்கையும், மணியின் உற்பத்தி ஸ்தானமறிக்கையும்** என்று தரப்பட்டுள்ளது.

43. **விருஷாயுர்வேத யோகம்:** மரஞ்செடிகளுக்கு உண்டாகும் நோய்களுக்குப் பரிகாரம் செய்து, அவற்றின் வயதையும் துணிவது என்பது இக் கலையின் பெயரால் தெரியவருகிறது. **தோட்டவேலை** என்பது தமிழ்ப் பட்டியலில் உள்ள பெயர்.

44. **மேஷ-குக்குட-லாவகயுத்த விதி:** ஆடு, கோழி, காடை ஆகியவற்றைச் சண்டையிடச் செய்து பார்ப்பதும், அதிலே சூதாடுவதும் பற்றிய கலை (மேஷ-ஆட்டுக்கடா, குக்குட-கோழிச்சேவல், லாகவ-காடை) தமிழிலே **ஆடு, கோழி முதலியவற்றின் போர்முறை** என்று இது குறிக்கப்பட்டுள்ளது.

45. **சுக-ஸாரிகா பிரலாபணம்:** கிளி, பூவை ஆகியவற்றைப் பேசப் பழக்கலும், அவை பேசுவதை உணர்தலும் இக் கலையாகும். **கிளி நாகணவாய்களைப் பயிற்றுகை** என்பது தமிழாக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**46.உத்ஸாதனம்:** உடம்பு பிடிக்கும் கலை.

**47.கேச மார்ஜன கௌசலம்:** தலை மயிரைக் கோதுங்கலை. அச்சிட்ட காம சூத்திர ஆங்கில மொழிபெயர்ப்புகளில் 46,47 இரண்டும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிபெயர்ப்பிலும் **உடம்பு பிடிக்கையும் எண்ணெய் தேய்க்கையும்** என்று ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால், **சிவதந்திரத்திலே** இவை இரு வேறு கலைகளாகத் தரப்பட்டுள்ளன.

**48.அக்ஷர முஷ்டிகா கதனம்:** இதற்கு வேறுபட்ட விளக்கங்கள் தரப்படுகின்றன. 1. மறைபொருளாகச் செய்யுளிற் பொருளை அமைக்கும் பிதிர் வகை; 2. எழுத்துக்களையோ, சொற்களையோ, கருத்துக்களையோ கைவிரல்களினால் உணர்த்துவது. **சங்கேதாக்ஷரங்கள் அமைத்துப் பேசுவது** என்பது தமிழாக்கம்.

**49.மிலேச்சிதக விகல்பம்:** இதற்கும் வெவ்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. 1. கீழ் மக்களின் மொழிகளைத் தெரிந்து கொள்ளல்; 2. மிலேச்சர்களின் (அந்நிய நாட்டவர்களின்) பேச்சை அறிந்து கொள்ளல்; 3. சொற்களின் இயல்பு வடிவங்களைத் திரித்துப் பேசுதல். **இரகசிய பாஷை** என்பது இதன் தமிழாக்கம்.

**50.தேச பாஷா ஞானம்:** நாட்டு மொழியையும், வட்டார மொழி வழக்குகளையும் அறிவது என்றும், பலநாட்டு மொழிகளை அறிவது என்றும் இருவிதமாக இதற்கு விளக்கங் கூறப்பட்டுள்ளது. **தேச பாஷையுணர்ச்சி** என்பது இதற்குரிய தமிழ்ப் பெயர்.

**51.புஷ்ப சகடிகா நிமித்த ஞானம்:** தனியொரு கலையான இதன் உண்மைப் பொருளை அறியாமையால், தமிழிலும் ஆங்கிலத்திலும் இதனை இரு கலைகளாக்கி, **புஷ்பரதமமைக்கை** என்றும் **நிமித்தமறிகை** என்றும் கருத்துக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கொள்ளல் தவறு. புஷ்ப சகடிகா (மலர்ச் சிறுதேர்) என்பதற்கு **'விண்ணிலிருந்து கேட்கும் குரல்'** என்ற குறிப்புப் பொருள் வடமொழியில் உண்டு. ஆகவே, 'விண்ணிலிருந்து வரும் குரல்கள் குறிக்கும் நிமித்தங்களை அறியும் கலை' என்பதே உண்மையான விளக்கமாகும்.

**52.யந்திர மாத்ருகா:** இக்கலைக்கும் இருவேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. 1. புஷ்பக விமானம், மயிற்பொறி போன்ற வானிற் செல்லும் பொறிகளை அமைக்குங்கலை என்றும், 2. தெய்வீக சக்தியுள்ள மந்திரங்கள் பொறித்த யந்திரத்தகடுகளை (அட்சரக் கூட்டினுள் வைத்து அணிபவையும், அறையில் வைத்துப் பூசிக்கப்படுபவையும்) அமைக்கும் கலை என்றும் இரு விளக்கங்கள் கூறப்படுகின்றன.

**53.தாரண மாத்ருகா:** நினைவில் வைத்திருப்பதற்கான மனப்பயிற்சிகள் இக்கலையில் அடங்கும். ஒரு செய்யுளின் ஓர் அடியைக் கொடுக்க, ஏனைய அடிகளையும் கூறி நிறைவு செய்வது; அடிகளை ஒழுங்கு மாறிக் கொடுக்க, அவற்றை ஒழுங்குற வைத்துச் செய்யுளைக் கூறுவது போன்ற பல வகைகளில் ஞாபகசக்தியை வளர்ப்பது இக்கலையின் நோக்கமாகும். தமிழிலே இது **ஏக சந்தக் கிராகித்வம், துவிசந்தக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராகித்வம் என இரண்டாக கூறப்பட்டிருக்கிறது.

54.**ஸம்பாட்யம்:** முன் படிக்காத நூலாயினும், ஒருவர் படிக்கும்போது அவருடன் கூடிப் படிக்கும் திறமை. தமிழ் அட்டவணையில் இது இல்லை. **கூட்டுவாசிப்பு** என்று அமைத்துக் கொள்ளலாம்.

55.**மானஸீ காவ்யகிரியா:** தனியொரு கலையான இதனையும் தமிழ்ப் பட்டியலிலே **மானஸீ** = பிதிர்க்கவி விடுக்கை என்றும், **காவ்யகிரியா** =காவியமியற்றுகை என்றும இருவேறு கலைகளாகக் கொண்டுள்ளனர். 'ஒருவர் மனத்திலே ஒரு செய்யுளை வைத்துக்கொண்டு சில சூசனங்களை மட்டும் தர, மற்றவர் அச் செய்யுள்களைச் சொல்லுதல்' என்பதே இக்கலையின் உண்மைப்பொருள. ஒருவர் மனத்திலுள்ள குறிப்பை மற்றவர் செய்யுளாகச் சொல்லுதலும் இதன் பாற்படும். வடமொழி வரலாற்றிலும், தமிழிமொழி வரலாற்றிலும் இதற்குச்சான்றுகள் பல உண்டு.

56.**கிரியா விகல்பம்:** இக்கலை எதனைக் குறிக்கின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. தமிழில் இது **'அலங்கார வுணர்ச்சி'** என்று தரப்பட்டுள்ளது. வடமொழி, தமிழ் அகராதிகளிலும் இத்தொடருக்கு விளக்கங் காணப்படவில்லை. சிலர் இது **அலங்கார சாத்திரத்தைக் குறிக்கும்** என்பர்.

57.**சலிதக யோகம்:** ஏமாற்றுவதற்கான செய்யுள் என்று இதற்குச் சிலர் விளக்கங் கூறுவர். தமிழ்ப்பட்டியலில் இது **சாலவித்தை** என்று கொடுக்கப்பட்டுள்ளது. பருத்தியைப் பட்டுப்போலவும், கரடானதை மிருதுவானதாகவும் தோன்றச்செய்யும் **கண்கட்டி வித்தை** எனலாம்.

58.**அபிதான கோசச் சந்தோ ஞானம்:** இக்கலை நிகண்டு, யாப்பு ஆகியவற்றின் அறிவு என்று பொருள்படும் தனியொரு கலையாக மூலத்திற் கூறப்பட்டிருக்க, தமிழில் **நிகண்டுணர்ச்சி** என்றும், **யாப்புணர்ச்சி** என்றும் இரு கலைகளாகக் காட்டப்பட்டுள்ளது.

59.**வஸ்திரகோபனானி:** துணிகொண்டு மறைக்கும் வித்தை என்பது பொருள். தமிழிலே **ஆடையுடுத்தலிற் சாமர்த்தியம்** என்று காணப்படுகிறது. **மாறுவேடம் புனைதல்** என்னும் கருத்திலே ஆங்கில மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. உண்மையான விளக்கம் எது என்பது தெரியவில்லை. துணிகொண்டு மறைத்து, முன் இல்லாததை இருப்பதுபோல காட்டும் மாயவித்தை என்று கருதவும் இடமுளது.

60.**தியூதவிசேஷம்:** பல்வேறு வகைச் சூதாட்டம். தமிழில் **சூதாட்டம்** என்றே காணப்படுகிறது.

61.**ஆகர்ஷண கிரீடா:** கவரும் விளையாட்டு என்பது இதன் பொருள். தமிழில் இது **சொக்கட்டான் ஆட்டம்** எனத் தரப்பட்டுள்ளது. 'மந்திரத்தால் மற்றவர்களின் உடைமைகளைக் கவர்தல்' என்றவகையில் ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளது.

62.**பாலகிரீடனகம்:** சிறுவர் விளையாட்டு என்பது இதன் பொருள். **பொம்மை, பந்து** முதலியன வைத்து ஆடுகை எனத் தமிழிலே தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63.**வைநாயிகீனாம் வித்தியானாம் ஞானம்:** நன்னடத்தை விதிகள், சமூக விதிகள் ஆகியவற்றின் அறிவு என்பது இச்சொற் தொடரின் பொருள். தமிழ்ப்பட்டியலில் இக்கலை இடம் பெறவில்லை. இதனை நன்னடை யறிவு என்றோ நல்லொழுக்க வறிவு என்றோ மொழிபெயர்க்கலாம்.

64.**வைஜயிகீனாம் வித்தியானாம் ஞானம்:** போர்வெற்றி கருதிய கலையறிவு என்பது இதன் பொருள். தமிழிலே, இது யானை முதலியவற்றின் பயிற்சி என்றும், படைக்கலப் பயிற்சி என்றும் இரு வேறு கலைகளாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வடமொழியிலுள்ள சிவதந்திரம் என்னும் பழைய நூலிற் காணப்படும் அறுபத்து நான்கு கலைகளுமே மூலப்பட்டியல் என்று கொள்ளலாம். காமசூத்திரம் செய்த வாத்ஸ்யாயனர் தந்த பட்டியலும் இதுவும் பெரிதும் தம்முள் ஒத்துள்ளன.

# இந்து சமயமும் இக்கால விஞ்ஞானமும்

ஆதி மனிதன் காட்டு மிருகாண்டியாக வாழ்க்கை நடாத்திய அந்தப் பழங் காலத்திலே, இடிமுழக்கம், புயற்காற்று, பெருமழை, புவிநடுக்கம், சந்திரகிரகணம், சூரியகிரகணம் என்னும் இவைபோன்ற இயற்கைத் தோற்றப்பாடுகளைக் கண்டு, அச்சமுங் வியப்புங் கொண்டு, தனது சத்திக்கு அப்பாற்பட்ட மறைவான பெருஞ் சத்தியொன்று உண்டெனநம்பி, அச்சத்தியை அமைதிப்படுத்தி மகிழ்விக்க எண்ணி, தான் விரும்பி உண்ட உணவுவகைகளை அதற்குப் படைத்துப் பணிந்து வழிபடத் தொடங்கியபோது, சமயம் மனிதவாழ்க்கையில் ஆரம்பித்தது.

காலப்போக்கிலே, அறிவு வளர வளரச் சமுதாயம் மேன்மேலும் சிக்கலாக அமைய, மக்கள் கடவுள் என்னும் எண்ணக்கருவை வளர்த்து, அக்கடவுளை வழிபட்டு நலம்பெறலாம் என்று நம்பினர். இத்தகைய வழிபாட்டுமுறைகளே ஒரு மக்கட் சமுதாயத்தின் சமயமாக மலர்ந்தன. சிந்திக்கவல்ல சிலர் மனத்தை ஒருமுகப்படுத்தி அகநோக்காகவும் புறநோக்காகவும் ஆய்ந்து, இந்த உலகமும் முழுப்பிரபஞ்சமும் உண்டாவதற்கு ஒரு நிமித்த காரணம் இருக்கவேண்டுமென உய்த்தறிந்து, அந்தக் காரணத்துக்கே கடவுள் என்று பெயரிட்டு வழிபாடு செய்தனர். இவ்வாறே உலக மக்களிடையே பல சமயங்கள் தோன்றின.

இனி, விஞ்ஞானத்தை நோக்குவோம். அப் பழங் காலத்திலேயே, ஆதிமனிதன் மரக்கட்டையொன்றிற் கடைகோலை வைத்துக் கடைந்து, தீயைக் கண்டுபிடித்தபோது விஞ்ஞானம் தொடங்கியதெனலாம். நாகரிக வளர்ச்சியோடு கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாக மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்த விஞ்ஞானம், கடந்த முந்நூறு ஆண்டுகளில் விரைவாகவும், விரிவாகவும் பௌதிகவியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசாயனவியல், உயிரியல், மருத்துவவியல், வானவியல், புவியியல் முதலான பல துறைகளாகப் பிரிந்தும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டிலே விஞ்ஞான வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் முன்னேறியுள்ளது.

விஞ்ஞானம் என்பதற்கு ஒழுங்குபடுத்திய அறிவு என்று பொதுவாக வரைவிலக்கணம் கூறலாம். மனுக்குலம் பல நூற்றாண்டுகளாகப் பலப்பல துறைகளில் ஈட்டிய அறிவையெல்லாம் மனிதனை மையமாகக் கொண்டு ஒன்றிணைத்து ஒழுங்குபடுத்தித் தருவதற்கு இக்கால விஞ்ஞானிகள் முயல்கின்றனர். சமயமும் மனிதனை மையமாகக் கொண்டே உண்மை காண முயல்கிறது. விஞ்ஞானம் மனிதனையும் அவன் வாழும் பௌதிகச் சூழலையும் புறநோக்காக ஆராய்ந்து உண்மை காண முயல, சமயம்--குறிப்பாக இந்துசமயம், அவற்றை அகநோக்காக ஆராய்ந்து உண்மை கண்டு கூறியுள்ளது.

பொதுவாக, விஞ்ஞானமும் சமயமும் இருதுருவங்களாக, ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாகக் கருதப்பட்டு வந்தன. விஞ்ஞானிகள் பலர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்; கடவுளும் கடவுள் பற்றிய சமயக்கொள்கைகளும் மூடநம்பிக்கையின் விளைவுகளே என்று அவர் கூறுவர். ஆனாலும், இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான முன்னேற்றம் இந்துசமய மெய்யியற் கருத்தோடு ஓரளவு ஒத்துவருவது போலக் காணப்படுகிறது.

இந்த நூற்றாண்டிலே பௌதிகவியல், அண்டவியல் (Cosmology), உயிரியல் ஆகிய விஞ்ஞானத் துறைகளிற் புதிதாகக் கண்டறிந்த உண்மைகள், பிரபஞ்சத்தை (Universe) முன்னிலும் அதிகமாக விளங்கிக் கொள்ளவும் வியக்கவும் உதவுகின்றன.

பௌதிகவியலை எடுத்துக்கொண்டால், பிரபஞ்சத் தோற்றத்துக்குப் பின்னணியில் அறிவாற்றலுள்ள ஓர் அமைப்புத்திட்டம் உள்ளதோ என்று இக்காலப் பௌதிக விஞ்ஞானிகள் கருதுவதைக் காண்கிறோம். இப் பிரபஞ்சம் உயிர் வாழ்க்கை தோன்றி நிலை பெறுவதற்கு ஏற்ற முறையிலே தீர்மானிக்கப்பட்டது போலத் தோன்றுகின்றது. இவ்வாறு கருதுவதற்கு விஞ்ஞானிகள் கூறும் சில நியாயங்களாவன:

1. ஈர்ப்புச் சத்தி ஒரு சிறிது மேலே உந்தப்பட்டிருக்குமாயின், உடுக்கள் (Stars) விரைவாக எரிந்து போயிருக்கும்; அப்போது அவற்றைச் சுற்றிவரும் கோள்களிலே உயிர்வாழ்க்கை தோன்றி மலர்ச்சியெய்துவதற்கும் போதிய அவகாசம் இல்லாமற் போயிருக்கும்.

2. புரோத்தன்களதும் (Protons) நியூத்திரன்களதும் (Neutrons) சார்பளவான திணிவுகள் ஒரு மயிரளவாவது வேறுபட்டிருக்குமாயின், ஐதரசன் (Hydrogen) இல்லையாக, ஐதரசனை உட்கொள்ளும் உடுக்களும் தோன்றியிருக்கமாட்டா.

3. பிரபஞ்சம் உற்பத்தியானதற்குக் காரணமாக விஞ்ஞானிகள் நம்பும் பேரொலி வெடிப்பு (Big Bang) உண்டானபோது 'தொடக்க நிபந்தனைகள்'எனப்படும் சில அடிப்படை எண்கள் குழம்பியிருக்குமாயின், உடுமண்டலங்கள் (galaxies), உடுக்கள், கோள்கள் அல்லது உயிர்வாழ்க்கை தோன்றக்கூடிய வேறு உறுதியான தளங்கள் உருவாதற்கு வேண்டிய சடப்பொருளும் சத்தியும் ஒரு போதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்திருக்கமாட்டா. இவை போன்ற வேறும் பல நியாயங்களால், உயிர் வாழ்க்கை தோன்றி, ஆறறிவுள்ள மக்கள்வரை மலர்ச்சியடைவதற்கு ஏற்றதாக மிகமிக நுணுக்கமாகப் பிரபஞ்சம் அமைக்கப்பட்டுள்ளது என்று பௌதிக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## இக்காலப் பௌதிக விஞ்ஞானிகள் சிலர் கூறியுள்ள கருத்துக்கள் வருமாறு:

1. 'நான் கடவுளுடைய சிந்தனைகளை அறிய விரும்புகின்றேன்; மீதி எல்லாம் விவரங்களே'

--அல்பேட் ஐன்ஸ்டயின் (1879-1955)

2. 'இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையில் மிகமிக எளிமையான கருத்தொன்று இருக்கவேண்டுமென எனக்குத் தோன்றுகின்றது. நாம் முடிவாக அதைக் கண்டுபிடிக்கும்போது, அந்தக் கருத்து எவ்வளவோ கவர்ச்சியுடையதாக, எவ்வளவோ அழகியதாக இருக்கும்; அப்போது ஓ, அது எவ்வாறு வித்தியாசமானதாக இருந்திருக்கமுடியும்!' என்று நாம் எமக்குள்ளே வியந்து பேசுவோம்.'

-John Wheeler in 'THE CREATION OF THE UNIVERSE'

3. 'பௌதிகவியல், திட்டவமைப்பின் விளைவென்றால், இப்பிரபஞ்சத்துக்கு ஒரு நோக்கம் இருத்தல்வேண்டும்; இக்காலப் பௌதிகவியற் சான்று, அந்த நோக்கம் (மக்களாகிய) எங்களையும் உள்ளடக்கியது என்னும் கருத்தை எனக்கு அழுத்தந் திருத்தமாக எடுத்துக்கூறுகிறது.'

-Paul Davies in his book. 'SUPER FPORCE'

4. 'இப்பிரபஞ்சம் ஏன் உண்டாகியிருக்கின்றது என்பதற்கு நாம் விடை காண்போமாயின், மனிதனின் அறிவாராய்ச்சித் திறத்துக்கு அதுவே முடிவான வெற்றியாகும் – ஏனெனில், அப்போது நாம் கடவுளுடைய மனத்தை உண்மையிலேயே அறிந்து கொள்வோம்.'

-Stephen Hawking in 'A BRIEF HISTORY OF TIME'

இனி, உயிரியல் விஞ்ஞானத்தை எடுத்துக் கொண்டால், சடப்பொருளோடு உயிர் எவ்வாறு, எங்கிருந்து வந்து இயைந்தது என்னும் பிரச்சினை உயிரியல் விஞ்ஞானிகளைச் சிந்திக்க வைத்துள்ளது. இதற்கு விடைகாண உயிரியல் விஞ்ஞானம் மட்டும் போதாது என்று, இப்போது பல விஞ்ஞானத் துறைகள் விரவிய சிக்கற் கொள்கை(Complexity) என்னும் புதிய விஞ்ஞானத்துறை உருவாகியுள்ளது. விஞ்ஞானிகளைத் திண்டாடச் செய்யும் இவ்வினாக்களுக்கு விடைகாண எளிமையான ஒரு விதி இருக்க வேண்டும் என்றும்; அவ்விதி எதிர்காலத்திலே கண்டுபிடிக்கப்பட வேண்டியது என்றும்; அதை அறிந்து கொண்டால் உயிரின் உற்பத்தியை இலகுவாக விளக்கிவிடலாம் என்றும்; அந்த விதி 'முன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளுக்கென்று குறித்தொதுக்கப்பட்ட பங்கைத் தான் செய்யும்' என்றும்; இத்துறை விஞ்ஞானிகள் ஊகம் தெரிவிக்கின்றனர். வேறுசிலர், அந்த விதி கடவுளின் பங்கைச் செய்வதற்கு மாறாகக் கடவுளின் உண்மைக்குச் சான்றாக அமையும் என்று கருதுகின்றனர்.

விஞ்ஞானிகள் கடவுள் என்று சொல்லும் போது, சமயவாதிகள் பேசும் தெய்வத்தை, அதாவது நல்லோருக்கு நன்மை செய்து தீயோரைத் தண்டிக்கும் தந்தை போன்ற ஒரு பொருளாகக் கருதுவதில்லை. ஐன்ஸ்டயின் கூறுவது போன்ற கருத்திலேயே எல்லா விஞ்ஞானிகளும் கடவுள் பற்றிக் கருதுகின்றனர்.

**'கடவுள் உலகத்தோடு சூதாட விரும்புவார் என்று என்னால் நம்பமுடியவில்லை.'**

**'சமயவாதிகள் இறையியலிற் சொல்லும்–நன்மைக்கு வெகுமதியும் தீமைக்குத் தண்டனையும் வழங்கும்--கடவுளில் எனக்கு நம்பிக்கை-யில்லை.'**

**'விளங்குதற்கரிய பிரபஞ்சத்தில் வெளிப்படுகின்ற--காரணகாமிய ஆய்வுக்கு ஒத்துவருகின்ற-ஒரு மேம்பட்ட ஆற்றல் உளது என்பதே கடவுள் பற்றிய என் கருத்தாகும்.'**

இவ்வாறு, நொபெல் பரிசுபெற்ற பௌதிகவிஞ்ஞானியான அல்பேட் ஐன்ஸ்டயின் கடவுள் பற்றிய தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். இக்கால விஞ்ஞானிகளுட் பெரும்பாலார் இக்கருத்திலேயே 'கடவுள்' என்ற பதத்தை ஆள்கின்றனர்.

இந்தக் கருத்து, இற்றைக்கு ஏறத்தாழ 3000ஆண்டுகளிற்கு முன் இந்திய நாட்டில் வாழ்ந்த இருடிகள் பழைய உபநிடதங்களிற் பரம்பொருள் பற்றிக் கூறியுள்ள கருத்தோடு ஓரளவு ஒத்துவருகின்றது.

உபநிடதங் கண்ட இருடிகள், **'இந்த உலகம் எதனை ஆதாரமாகக் கொண்டுள்ளது?' 'எம்மைச் சூழவுள்ள உலகத்தில் நாம் புலன்களாற் கண்டறியும் பல பொருள்களையும் பற்றுவதற்கு நாம் அடைய வேண்டியுள்ள அந்தப் பொருள்தான் யாது?'** என்பன போன்ற வினாக்களை எழுப்பி அவற்றுக்கு விடைகாண முயன்றுள்ளனர். பல்வகைப்பட்டுக் காணப்படும் இந்த உலகத்தையெல்லாம் தனியொரு மூல மெய்ம்மையில் ஒடுக்கலாம் என்று அவர்கள் கருதினர். அந்த மெய்ம்மை நம் புலன்களுக்குப் பல்வேறு வடிவங்களிலே தன்னை வெளிப்படுத்துகிறது. அது நம் புலன்களுக்கு உட்படாது மறைந்தி-ருந்தாலும், காரணகாரிய ஆய்வுக்கு அகப்படக் கூடியது. மாற்றங்களுக்கு ஊடே எப்போதும் ஒருபடித்தாய் நிலைபெற்றிருக்கும் அந்த மெய்ம்மை யாது? என்னும் வினாவை உபநிடதங்கள் எல்லாம் எழுப்பி, 'இதுவன்று இதுவன்று' எனப் பல விடைகளை மறுத்து ஒதுக்கிவிட்டு, முடிவிலே 'அதுதான் பிரமம்' என்று அறுதியிட்டுக் கூறுகின்றன.

'ஸந் மாத்திரம் ஹி ப்ரஹ்ம' (ஸத்+ மாத்திரம் = ஸந்மாத்திரம்; பிரமம் என்பது உளதாந் தன்மை மட்டுமே) என்று பிருகதாரணியக உபநிடதம் வலியுறுத்திக் கூறுகின்றது. ஆகவே பிரமம் என்பதற்கு ஸத் (சத்து) என்னும் பெயரும் வேதங்களில் வழங்கப்படுகிறது. 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி' (உள்பொருள் ஒன்றே; அறிந்தோர் பலவாறு அதனைக் கூறுகின்றனர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இருக்கு வேதத்தில் வரும் ஒரு தொடர். உபநிடதங்கள் இந்தப் மெய்ப்பொருளை ஆண்பாலாகவோ, பெண்பாலாகவோ சுட்டாமல், எப்போதும் தத்(அது) என்று அஃறிணை ஒருமை வரிப்பாட்டாற் சுட்டுகின்றன; அந்த மெய்ப்பொருள் ஒன்றே(தத் - ஏகம்) என்றும் உரைக்கின்றன. அதற்குக் குணங்கள் இல்லை(நிர்குண பிரமம்). மனித மொழியால் அதற்கு ஏதேனும் விவரணம் கொடுத்தால், அளவில்லாததும் எல்லையில்லாததுமான அப்பொருளை எல்லைப்படுத்தி வரையறுப்பதாக முடியும்.

உபநிடதங்கள் பிரபஞ்ச உற்பத்தி பற்றிப் பேசுகையில், பிரமத்தின் நான்கு வெளிப்பாடுகள் பற்றிப் பேசுகினறன. அவையாவன:

1. **முழுமுதல் (பிரமம்)**
2. **படைப்புத் தெய்வம் (ஈசுவரன்)**
3. **உலகத் தெய்வம் (இரணிய கர்ப்பன்)**
4. **உலகம் (விராட்டு).**

மாண்டுக்கிய உபநிடதம் பிரமம் நாற்பாதமுடையது (சதுஸ்பத்) என்று கூறுமிடத்து மேற்சொன்ன நான்குமே குறிப்பிடப்படுகின்றன. முழுமுதலான பிரமம் பிரபஞ்சமாகத் தன்னைத் தானே வெளிப்படுத்தும் நிலையில் அது விராட்டு(விராஜ்) எனப்படுகிறது; அது(பிரமம்) பிரபஞ்சம் அடங்கலும் இயங்கும் நிலையில் இரணிய கர்ப்பன் (ஹிரண்யகர்ப) என்று பெயர் பெறுகிறது. அது(பிரமம்) படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்யும் கடவுளாகக் கருதப்படுகையில், ஈசுவரன் முத்தொழில் வேறுபாடு பற்றி முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன்(சிவன்) என்னும் பெயர்களைப் பெறுவான்.

இவ்வாறே இந்துசமயச் சிந்தனையாளர் பிரமத்தின் முழுமுதற்றன்மை பற்றியும், ஒருமை பற்றியும் பேசுகின்றனர். சற்றுப் பிற்பட்ட காலத்தில் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம் ஆகிய வைதிக சமயங்கள் தலையெடுத்துத் தத்தம் சமயக் கோட்பாடுகளை விரித்துக் கொண்டபோது, முறையே சிவன், விஷ்ணு, சக்தி, கணபதி, குமாரன் ஆகிய தெய்வங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இறைமை கூறும் பாங்கிற் சமயச் சார்பான உபநிடதங்களும், தாந்தாம் விதந்து கூறும் தெய்வங்கள் ஒவ்வொன்றும் ஒரே பிரமத்தின் வெளிப்பாடுகளே என்று வலியுறுத்திப் பிரம்மத்தின் ஒருமையைப் பேணுகின்றன. இனி, சைவத்துக்குச் சிறப்பு நூல்களாகிய சிவாகமங்கள் பிரமம் என்பதையே சிவம் என்று வேறு பெயராற் குறிப்பிடுகின்றன.

இதுகாறும் கூறியவாற்றால், இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னே இந்தியாநாட்டுச் சிந்தனையாளர் கண்ட முடிபோடு இக்கால மேனாட்டு விஞ்ஞானிகள் கூறுங்கருத்து ஓரளவேனும் ஒத்துவருவதைக் காண்கின்றோம்.

இப்போது, இன்னுமோர் ஒற்றுமையைப் பார்ப்போம்; இக்கால அண்டவியல் ஆராய்ச்சியாளர், பிரபஞ்ச உற்பத்தி பற்றி விஞ்ஞான முறையில் விளக்கம் தந்துள்ளனர். இவர்களது ஆராய்ச்சிக்கு, அமெரிக்க விஞ்ஞானிகள் பூமிக்கு 381 மைல் உயரத்திலே ஓர் ஒழுக்கில் (Orbit) இயங்க வைத்த மிகவும் ஆற்றல்வாய்ந்த ஹபிள் விண்வெளித் தொலைநோக்காடி (Hubble Space Telecope) பெரிதும் உதவி வருகிறது. இற்றைக்கு 100கோடி ஆண்டுகளுக்கும் 200கோடி ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ஒருகாலத்தில், அளவிடற்கரிய அடர்த்தியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிடற்கரிய வெப்பமும் கொண்டதும், ஒரு குண்டுசித் தலையிலும் பார்க்க சிறியதுமான ஒரு புள்ளி பேரொலியுடன் வெடித்துக் கற்பனை செய்யமுடியாத அளவு சத்தியை வெளியிட்டபோது, அந்த வெடிப்பின் சிதறல்களிலிருந்து எல்லா உடுமண்டலங்களும், உடுக்களும், கோள்களும் உருவாயின என்பதே விஞ்ஞானிகள் கண்ட முடிபு. இதற்குப் பேரொலி வெடிப்புக் (Big Bang) கொள்கை என்பது பெயர். இன்று, பெரும்பாலும் எல்லா விஞ்ஞானிகளும் இக்கொள்கையை நம்புகின்றனர்.

மேலும், இவ்வாறு தோன்றிய பிரபஞ்சம், மேன்மேலும் விரிந்து கொண்டே போகின்றது (Open Universe) என்றும்; எதிர்காலத்திலே அப்பிரபஞ்சம் விரிந்தவாறே ஒடுங்கி, முடிவில் அந்த ஒரு புள்ளியிலே அடங்கும் (Closed Universe) என்றும்; பின்னர் மீளவும் வெடித்து முன்போலவே பிரபஞ்சம் தோன்றும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இங்கே, சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்கள் கூறுவதைப் பார்ப்போம். சிவம் தன்னிற் பின்னமில்லாத சத்தியை இயக்க, அச்சத்தி மாயை என்னும் முதற்காரணத்திலிருந்து பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் என்பது சித்தாந்த முடிபு. (சிவஞானசித்தியார்--சுபக்கம்: 38முதல் 51வரையிலுள்ள விருத்தங்கள் பிரபஞ்சம் காரியப்படும் முறைமையை விரிவாக விளக்குகின்றன.) 52ஆம் விருத்தம், பிரபஞ்சம் சங்கார காரணனிடத்திலே ஒடுங்கி, மீளவும் அவனால் தோற்றுவிக்கப்படும் என்பதைக் கூறுகின்றது, இதனை மெய்கண்டார்,

**'அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்(து) உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்.'**

**(சிவஞான போதம் முதற்சூத்திரம்)**

எனுஞ் சூத்திரமாகச் சுருக்கிக் கூறியுள்ளார்.

(இதன் பொருள்: அவன், அவள், அது என்று பகுக்கப்படும் உலகத் தொகுதி, தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் ஆகிய மூன்று தொழிலுடைமையால், அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டு, நிலைபெறுவதேயாம். அது தான் ஒடுங்குதற்குக் காரணமான கடவுளாலேயே தோன்றுவது. ஆணவ மலம் தீர்ந்து ஒடுங்காமையால், அது ஒடுங்கியதோடு நில்லாது மீளவும் உண்டாகின்றது. அதற்கு ஒடுக்கமாய் முடிவைச் செய்யும் 'அந்தமாகிய கடவுளே ஆதியுமாகின்றான்' எனத் தருக்க நூலறிந்தோர் கூறுவர்.)

இனி, நடராசப் பெருமானுடைய ஐந்தொழிலை விளக்குவதாகத் திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனார் தாம் செய்த உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலிலே இவ்வாறு கூறுவர்:

**'தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்ற மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம் முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு'**

**(வெண்பா 35)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்: துடியை இயக்கும் திருக்கையிலே படைத்தற்றொழிலையும், அமைத்த திருக்கையில் காத்தற்றொழிலையும், தீ ஏந்திய திருக்கரத்தில் அழித்தற் றொழிலையம், முயலகன் மீது உறுதியாக ஊன்றும் திருவடியில் மறைத்தற் றொழிலையும், தூக்கிய திருவடியில் பாசத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பதாகிய அருளுதலையும் குறியீடாக எண்ணி அறிந்து கொள்.)

இதிலே, இறைவன் செய்யும் படைத்தற்றொழிலைத் துடியென்னும் மத்தள வகை குறிக்கின்றது. துடியை அடித்து ஒலித்து இறைவன் படைத்தலைச் செய்கின்றான். சைவசித்தாந்த நூல் கூறும் துடியொலி, இக்கால விஞ்ஞானிகள் கூறும் பேரொலி இடிப்பு (Big Bang) என்னும் கொள்கையை எமக்கு நினைவூட்டுகின்றது.

இருபதாம் நூற்றாண்டு முடியப்போகின்ற இறுதித் தசாத்தத்தில் (decade) விஞ்ஞானம் வியத்தகு வெற்றிகளை ஈட்டியிருப்பினும், அது உண்மையை இன்னும் முழுமையாகக் கண்டறியவில்லை. எதிர்காலத்தில், எப்போதோ கண்டுபிடிக்கப்படவேண்டிய அடிப்படையான பௌதிகவியலும், உயிரியலும் சார்ந்த விதியொன்று உள்ளதென்பதை இன்று விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

கூர்தல் (Evolution) நியதிப்படி, மாக்கள் (Hominids) நிலையிலிருந்து இக்கால மனிதர் (Homo Sapiens) நிலைவரையும் கூர்ப்பெய்தி வந்த மனிதமுளை எதிர்காலத்தில் (இன்னும் 10 இலட்சம் ஆண்டுக்காலத்திலோ, அதற்கு முன்போ) பூரண வளர்ச்சி பெறும்போது, விஞ்ஞானிகள் ஒருவேளை முழுஉண்மையையுங் கண்டு, விஞ்ஞான முறையில் விதிகூறி விளக்கலாம். ஆனால், இன்றோ விஞ்ஞானிகள் கூறும் விளக்கங்கள் உள்ளத்துக்கு நிறைவு தருவனவாயில்லை. நொபெல் பரிசு பெற்ற இக்காலப் பௌதிக விஞ்ஞானி ஏர்வின் ஷ்ரோடிங்கர் (Ervin Schrodinger. 1877-1961) இவ்வாறு கூறியுள்ளார்: 'என்னைச் சூழவுள்ள உண்மையான உலகம் பற்றிய விஞ்ஞான விளக்கம் மிகவும் குறைபாடுடையது. அது உண்மை நிகழ்ச்சிகள் பற்றிய பெருந்தொகையான தகவல்களைத் தருகின்றது; ஆனால், எம் இதயத்துக்கு உண்மையிலே அணுக்கமான, எமக்கு உண்மையிலே முக்கியமான எல்லா விடயங்கள் பற்றியும் கோரமான மௌனம் சாதிக்கிறது.' (Nature and the Greeks, Page 93). இவர் கூறுவது போன்றே கணிதவியலறிஞர் கார்ள் கவுஸ் (Carl Gauss) என்பாரும், 'கடவுளோடு எமக்குள்ள தொடர்பு, எமது விதி அமைவு, எமது எதிகாலம் என்பவை பற்றிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கே நான் கணிதப் பிரச்சினை-களைக் காட்டிலும் அதிக முதன்மை அளிக்கின்றேன்; அவற்றின் தீர்வு எமக்கு அப்பாற்பட்டது' என்று கூறுகிறார். (The New Story of Science', Page 55).

இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைச் சமயம் தருகின்றது. சமயம் என்றால், கண்மூடித்தனமாக நம்பவது என்று கருதுவது தவறு. எமது சைவசித்தாந்தத்தை எடுத்துக்கொண்டால் பிரச்சினைகளை எழுப்பி, அவற்றுக்குத் தருக்க முறையில் மிகமிக நுணுக்கமாக ஆராய்ந்து, முடிவு அது கூறுகிறது. மனிதனது முழுமையான வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் சமயமும் இன்றியமையாதவை. ஒன்றன் குறையை மற்றது நிறைவு செய்கிறது. இங்கே, 'சமயம் இல்லாவிட்டால் விஞ்ஞானமும் முடமாகும்; விஞ்ஞானம் இல்லாவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் குருடாகும்,' என்று அல்பேட் ஐன்ஸ்டயின் கூறியது சிந்திக்கத்தக்கது.

விஞ்ஞானிகள் கூறுவதுபோல, 'மனிதவியல்புள்ள' கடவுள் ஒருவர் உண்மையிலே இல்லாவிட்டாலும், 'அன்பே சிவம்' எனத் திருமூலர் கூறும் அன்புமயமான கடவுள் ஒருவர் உள்ளார் என்று நம்பி, அக்கடவுளிடமிருந்து ஊற்றெடுக்கும் அறநெறி, அன்பு, பரிவு, நடுவுநிலைமை, நல்லொழுக்கம், நீதி, நேர்மை, வாய்மை போன்ற நற்பண்புகளை வளர்ப்பதும், இயற்கையின் இன்பங்களை நயப்பதும், இயற்கையின் விந்தைகளை வியப்பதும், கடவுளின் அளப்பரும் பெருமைக்கு முன் எமது சிறுமையை எண்ணிப் பணிவதும் எல்லாம் நமக்கு நன்மை பயக்குமேயன்றி, ஒருபோதும் தீமை பயவா.

முடிவாக, பகுத்தறியும் ஆற்றலுள்ள மக்கள் சமயமோ, விஞ்ஞானமோ, எத்துறையிலாயினும் அறிவை ஈட்டுவதற்குத் திருவள்ளுவர் எமக்குத் தந்த இரு கட்டளைகளை இளந்தலைமுறையினர் கடைப்பிடிக்கும் வண்ணம் இங்கே எடுத்துக்கூறி அமைகின்றேன்:

**'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.' (423)**

**'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.' (355)**

# மொகஞ்ச தாரோவும் சிந்துவெளி நாகரிகமும்

## இடமும் பரப்பும்:

இந்தியாவின் வற்றாத பெருநதிகளுள் ஒன்றான சிந்துநதி திபேத்துப் பீடபூமியில் உற்பத்தியாகி, வடமேற்காகப் பாய்ந்து, இறுதியில் அராபியக் கடலில் விழுகின்றது. இந்தச் சிந்து நதியின் பள்ளத்தாக்கு (இப்பிரதேசம் 1947 இந்தியப் பிரிவினைக்குப் பின் பாக்கிஸ்தானில் இடம்பெற்றுள்ளது) வரலாற்று முற்காலத்தில் தனி சிறந்த ஒரு நாகரிகம் தோன்றிச் செழித்தோங்கி மறைவதற்கு நிலைக்களமாக விளங்கியது. இந்நாகரிகம் இன்றுள்ள சிந்து, பலூச்சித்தானம், பஞ்சாப், ராஜபுதானம், சௌராஷ்டிரம் ஆகிய இடங்களில் ஏறத்தாழ 1000மைல் நீளமும் 400மைல் அகலமும் உள்ள நிலப்பரப்பிற் பரவியிருந்தது.

இப்பிரதேசத்தின் தென்பகுதியல் மொகஞ்ச தாரோ (MOHENJO DARO) என்னும் ஒரு பெரியநகரமும் வடபகுதியில் அரப்பா (HARAPPA) என்னும் மற்றொரு பெரிய நகரமும் நாகரிக மையங்களாக விளங்கின. இவை ஒரு பெரிய இராச்சியத்தின் இரு தலைநகரங்களாய் அமைந்திருக்கலாம் என்று பிகொட் (PIGGOT) என்னும் ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இப்பெரிய நகரங்கள் தவிர, இப்பிரதேசத்திலே 30இற்கும் மேற்பட்ட சிறிய இடங்களிலும் இப்பெரு நாகரிகம் பரவியிருந்ததையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

நாட்டுப் பிரிவனைக்குப் பின்பு மேலும் 30 இடங்கள் கண்டறியப்பட்டன. அவற்றுள் 25 இடங்கள் ராஜஸ்தானத்தில் பிக்கானர் பிரிவில் உள்ளன. ஏனையவை பஞ்சாபில் அம்பாலாப்பிரிவிலும், சௌராஷ்டிரத்திலும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்:

சிந்துவெளி நாகரிகம் சிறந்தோங்கியிருந்த காலம் ஓராயிரம் ஆண்டுகள் என்று பெரும்பாலும் எல்லா ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொள்கின்றனர்; பொதுவாக இக்காலப் பகுதியை கி.மு.2500 முதல் கி.பி.1500 வரை என்று குறிப்பிடுவர். சிந்துவெளி நாகரிகத்தின் இறுதியும் இருக்குவேதகாலத்தின் தொடக்கமும் ஏறத்தாழ ஒன்றாகும். வரலாற்றாசிரியர் பெரும்பாலும் இருக்குவேத காலத்தொடக்கத்தை கி.மு.2000 எனக் கொள்வர். ஒரு சாரார் அதை கி.மு.1500 என்பர். இன்னும் ஒருசாரார், இருக்குவேத காலத்தொடக்கத்தை கி.மு.2750 என்றுங் கொள்வர். ஆகவே இருக்குவேத காலத்தொடக்கத்தை ஒட்டிச் சிந்துவெளி நாகரிக காலத்தையும் அவர்கள் முன்னே தள்ளுவர். இவ்வாறாக வரலாற்று ஆசிரியர் சிந்துவெளி நாகரிகத் தொடக்க காலத்தை கி.மு.3000 என்றும் கி.மு.3250 என்றும் கணிப்பிட்டுள்ளனர்.

## அகழ்வாராய்ச்சி:

1921-22ல் இந்தியத் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகமாயிருந்த சேர்.ஜோன் மார்ஷல் (SIR JOHN MARSHALL) என்னும் பிரித்தானியத் துரைமகனது தலைமையில் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பலர் சிந்து மாகாணத்தில் லார்க்கானர் மாவட்டத்தில் உள்ள மொகஞ்ச தாரோ (MOHENJO DARO) என்னும் இடத்தையும், பஞ்சாப்பில் மொன்ட்கமரி (MONTGOMERY) மாவட்டத்தில் உள்ள அரப்பா (HARAPPA) என்னும் இடத்தையும் அகழ்ந்து பண்டைக்காலச் சிந்துவெளி நாகரிகத்தின் சின்னங்களையும் சிதைவுகளையும் கண்டுபிடித்தனர். சேர் ஜோன் மார்ஷல் மொகஞ்ச தாரோ அகழ்வாராய்ச்சியிலே முக்கிய கவனஞ் செலுத்தித் தமது கண்டுபிடிப்புகளை மூன்று பெருந் தொகுதிகள் கொண்ட "MOHENJO DARO AND THE INDUS CIVILIZATION" என்னும் நூலில் 1931ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த வியத்தகும் ஆராய்ச்சிப் பெருநூல் வெளிவந்த பின், உலகத்து வரலாற்று ஆசிரியர்கள் இந்தியாவின் தொல் பழம் நாகரிகத்தை அறிந்து வியக்கத் தொடங்கினர். பின்னர் சேர். ஆர். மோட்டிமர் வீலர் (Sir. Mortimer Wheeler) என்னும் தொல்பொருளியல் ஆராய்ச்சியாளர் முக்கியமாக அரப்பா நகரை 1946ல் அகழ்ந்து ஆராய்ந்து தமது நூலை வெளியிட்டார். இவர்கள் தவிர, வேறு ஆராய்ச்சியாளர் சிலரும் இந்த நாகரிகம் பற்றி ஆராய்ந்து நூல்கள் வெளியிட்டுள்ளனர். அவர்களுள் E.MARKAY, M.S.VATS என்னும் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## மொகஞ்ச தாரோ:

இந்த நகரம் சிந்துநதியின் வடகரையிலே, அதன் முகத்திலிருந்து ஏறத்தாழ 250மைல் தொலைவிலே உள்ளது. மொகஞ்ச தாரோ என்பது இக்காலத்தில் அந்த இடத்துக்கு வழங்கும் பெயர். இதன் கருத்து 'இறந்தோர் நகரம்' என்பதாகும். இந்நகரம் ஆதியில் அமைக்கப்பட்ட பின்னர் வெள்ளத்தால் அழிந்துபோக, அதன்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கொட்டி மறுபடியும் அமைக்கப்பட்டதாகவும், அவ்வாறு ஏழுதரம் நிகழ்ந்துள்ளதாகவும் தோன்றுகின்றது. சேர். ஜோன். மார்ஷல் இந்நகரத்தின் காலத்தை ஆதி, நடு, பின் என மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காட்டுகிறார்.

## ஆதி காலம்:

எல்லாவற்றுக்கும் அடியிலுள்ள நகரம் அமைக்கப்பட்ட காலம் இது. ஆனால், நீர் நிற்பதால் அதைப் போதியளவு தோண்டி ஆராயமுடியவில்லை. ஆயினும், அடிநகரம் மேலுள்ள நகரத்திலும் வேறுபட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்காய் (MACKAY) என்னும் அறிஞர் ஒரு பெரிய குழி தோண்டி ஆராய்ந்தபோது, அடி நகரத்தில் பெரிய கட்டடங்கள் இருக்கவில்லை எனக் கண்டார். குவெட்டா நகரில் காணப்படும் மட்கலங்கள் இந்த அடிநகரத்திலும் காணப்பட்டமையால், அடிநகரம் சாதாரணமான ஒரு சிற்றூராகவே இருந்திருக்கவேண்டும் என்பது தெரியவருகின்றது. இத்தகைய சான்றே அரப்பாவிலும் (HARPPA), சானு தாரோ (CHANU DARO) என்னும் மற்றோர் அகழ்விடத்திலும் காணப்படுகின்றது.

## நடுக்காலம்:

இந்தக் காலத்திலே சுடாத செங்கல்லாலான அடித்தளத்தின் மீது சுட்ட செங்கல்லால் கட்டடங்கள் எழுப்பப்பட்டன. இந்தக் காலத்திலேதான் மொகஞ்சதாரோவில் உள்ள பெரிய கேணியும் மற்றப் பெரிய கட்டடங்களும் அமைக்கப்பட்டன.

## பிற்காலம்:

இந்தக் காலத்தில் நகரத்தின் நலிவு காணப்படுகின்றது. மூன்று காலங்களிலும் எழுந்த கட்டடங்களும் வேறுவேறானவை.

இந்த நகரத்தின் அமைப்பை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கும் உலகத்தில் முதன்முதலாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரம் மொகஞ்ச தாரோவே என்பது தெற்றெனப் புலப்படும். இந்நகரத்தில் கோட்டைப்பகுதி (CITA-DEL) நகரப்பகுதி என்னும் இரு பகுதிகள் காணப்படுகின்றன. கோட்டைப்பகுதியில் அரசர்களோ, ஆட்சியாளர்களோ வாழ்ந்திருக்கலாம்; நகரப்பகுதியில் மக்கள் வாழ்ந்திருக்கலாம். மொகஞ்ச தாரோ நகரமும் அரப்பா நகரமும் ஒரே மாதிரியான திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இரு நகரங்களிலும் இருந்த கோட்டைப் பகுதிகள் அளவிலும், அமைப்பிலும், பயன்பட்ட முறையிலும் ஒற்றுமையுடையனவாகவே உள்ளன. ஆகையால் இருநகரங்களையும் தனித்தனி விவரிக்காமல், பொதுவாக விவரிப்போம். ஒவ்வொரு நகரத்துக்கும் சிறப்பாக உள்ளவற்றை ஆங்காங்கே குறிப்பிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர அமைப்பு:

ஒவ்வொரு நகரத்துக்கும் மேற்கே கோட்டை அல்லது அரண் அமைந்திருந்தது. இவ்வரணானது 30-50 அடிஉயரமும், ஏறத்தாழ 400 X 200யார் பரப்பும் கொண்ட செவ்வக வடிவான ஒரு செயற்கை மேடையாகும். இதனைச் சூழ ஏப்புழை (அதாவது அம்பு எய்ய அமைக்கப்பட்டிருக்கும் மதிலின் துவாரம்) கொண்ட மதில்கள் காவலாக அமைந்திருந்தன. இந்த மேடையின் மேலே பொதுக் கட்டடங்கள் அரசாங்கத் தேவைக்காக எழுப்பப்பட்டிருந்தன. உண்மையான நகரம் இதன் கீழே அமைந்திருந்தது. ஒவ்வொரு நகரமும் பரப்பளவில் குறைந்த பட்சம் ஒரு சதுர மைல் கொண்டதாய் இருந்தது. பெருந்தெருக்கள் சில 30அடி அகலமுடையன. இவை மிக நேராக அமைந்து, நகரத்தைப் பெருந் துண்டங்களாகப் பிரித்துள்ளன. இத்துண்டங்களினுள்ளே திட்டமிடப்படாத பல ஒடுங்கிய ஒழுங்கைகள் குறுக்கும் நெடுக்குமாக வலை போல அமைந்துள்ளன.

இரு பெருநகரங்களில் ஒன்றிலாயினும் கற்கட்டடங்கள் காணப்படவில்லை. குடியிருக்கும் வீடுகள், பொதுக்கட்டடங்கள் ஆகிய யாவும் கட்டுவதற்கு நியம அளவுள்ள, நல்ல தரமான சுட்ட செங்கற்களே வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வீடுகள் பெரும்பாலும் இரண்டு அல்லது மேற்பட்ட மாடிகளை உடையன. அவை பருமனில் வேறுபட்டபோதும், ஏறத்தாழ ஒரே மாதிரியான திட்டத்திலே கட்டப்பட்டுள்ளன. ஒரு சதுர முற்றத்தைச் சுற்றிப் பல அறைகள் அமைந்திருப்பதே அத்திட்டம். வீட்டுவாயில்கள் வழக்கமாக முடுக்கர்களிலே அமைந்திருந்தன. தெருக்களை நோக்குஞ் சாளரங்கள் இல்லை.

வீடுகளில் குளிக்கும் அறைகள் உள்ளன. இவற்றின் அமைப்பை நோக்க, சிந்துவெளி மக்கள் இக்கால இந்தியரைப் போன்றே நின்ற நிலையில் நீரை வாளியில் அள்ளித் தலையில் ஊற்றிக் குளிக்கும் முறையையே விரும்பினர் என்பது தெரியவருகிறது. குளிக்கும் அறையில் வடிகால் அமைந்திருந்தது. இவ்வடிகால்வழி வரும் நீர், பெருந் தெருக்களின் கீழாகச் செல்லும் கழிநீர்க்கான்களிற் போய்விழ, அக்கழிவு நீரெல்லாம் இறுதியில் ஊறுகுழிகளில் (SOAK PITS) போய் விழுந்தது. கழிநீர்க்கான்கள் நெடுகலும் செங்கற்றகடுகளால் மூடப்பட்டிருந்தன. சிந்துவெளி மக்களின் ஈடுமெடுப்பும் இல்லாத இத்தகைய கழிவகற்றும் தொகுதியை யாதேனும் ஒரு மாநகர அமைப்புப் பேணிவந்திருத்தல் வேண்டும். இது, சிந்துவெளி மக்களின் அரிய சாதனைகளுள் வியத்தகு மாட்சிபெற்று விளங்குகின்றது. உரோமரின் நாகரிகம் தோன்றுவதற்குமுன், உலகிலே வேறு எந்தப் பண்டை நாகரிகமும் இத்தகு திறமைவாய்ந்த வடிகான் முறையொன்றைக் கண்டதில்லை.

## வீடுகள்:

சிந்துவெளி மக்கள் வாழ்ந்த வீடுகளில் ஒன்றை மாதிரிக்காக சேர்.மோட்டிமர் வீலர் பின்வருமாறு வருணிக்கின்றார்: 'ஐந்து அடி அகலமுள்ள மறுகிலுள்ள வீடு; தெரு வாயிலிருந்து உள்ளே போக ஓர் இடைவழி; வாயிலுக்கு நேரே ஒரு சிறிய அறை; தென்புறத்தில் கிணறுள்ள அறை; நடுவில் முற்றம் 33அடிச் சதுரமானது; கிணற்று அறையை ஒட்டிக் குளியலறை; அதன் தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகப் பொருந்தும் செங்கற்கள் பரவியது; கீழ்ப் பக்கமுள்ள அறையிலே தளத்தின் கீழாகச் சுட்டமண் குழாய் மூலம் குளியலறை நீர் தெருவிலுள்ள கழிநீர்க்கானுக்குச் (Gutter) செல்லும்; படிக்கட்டு இருப்பதால் மாடி உண்டென்பது தெரிகிறது.'

ஒரு வீட்டின் தரைத்தளத்தின் சராசரிப் பருமன் ஏறக்குறைய 30அடிச் சதுரமாயிருந்தது. ஆயினும், இதனிலும் பெரிய தளப்பரப்புள்ள வீடுகளும் இருந்தன. இதனால் 'சிந்துவெளி நகரங்களிற் செல்வச் செழிப்புள்ள பல குடும்பங்கள் இருந்தன' என்பது தேற்றம். எகிப்து, சுமேர் ஆகிய இடங்களின் சமகால நாகரிங்களில் வாழ்ந்த நடுத்தர வகுப்புகளிலும் பார்க்கப் பெரியதும், சமூக நிலையில் முதன்மை மிக்கதுமான நடுத்தர வகுப்பொன்று சிந்துவெளி நகரங்களில் இருந்ததாகலாம்.

இரு நகரங்களிலும் வேலையாளரின் உறைவிடங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மொகஞ்ச தாரோவில் இவை ஒவ்வொன்றும் 20x12அடி பரப்புள்ள, இரண்டறையுள்ள இல்லங்களாகச் சமாந்தர நிரைகளில் அமைந்துள்ளன. ஆயின், அரப்பாவில் இவ்வில்லங்கள் கணிசமான பருமன் உடையன. இவை இக்கால இந்தியாவிலே தேயிலைத் தோட்டங்களிலும் பிற பெருந்தோட்டங்களிலும் உள்ள 'கூலி இல்லநிரைகளை' ஒத்திருப்பது வியக்கற்பாலது. அரப்பாவில் இத்தகைய இல்ல வரிசைகள் தானியங்குற்றும் வட்டவடிவச் செங்கற்றளங்களை அடுத்துக் காணப்பட்டன. அவை நகரங்களில் வாழந்த குருமாருக்கும், பிரமுகர்களுக்கும் தானியங் குற்றிக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்ட வேலையாளர் வாழ்ந்த இல்லங்களாய் இருத்தல் கூடும். அவை அழகில்லாச் சிறு குடிசைகளேயாயினும், இக்கால இந்தியக் கூலியாளர் பலர் உறையும் இல்லங்களிலும் பார்க்கச் சிறந்தவை.

## பெருங் கட்டடங்கள்:

சிந்துவெளியில் பெருங் கட்டடங்கள் சிலவே உள்ளன. இவற்றுள் தனிசிறந்து விளங்குவது, மொகஞ்ச தாரோவின் நகரரண் பகுதியிலுள்ள நீராடுமிடமாகும். இது 39 X 23 அடிப்பரப்பும் 8 அடி ஆழமுங்கொண்ட செவ்வக வடிவமான ஒரு நீராடும் கேணியாகும். நீர் கசியாதவாறு 'பிற்றுமின்' (bitumen) சேர்த்துச் செங்கல்லால் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம், அதன் ஒரு மூலையில் உள்ள புழைவழியாக நீர் வடிந்தோடக் கூடிய அமைப்புடையது. இதைச் சுற்றி நாற்புறமும் மூடப்பட்ட நடைவழியொன்று அமைந்திருந்தது. இந்த நடைவழியை நோக்கியவாறு பல சிற்றறைகள் கட்டப்பட்டிருந்தன. ஓர் இந்துக்கோவிலிலுள்ள கேணிபோன்று, இதுவும் ஒருகால் சமயத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டதாகலாம். அங்கே அமைந்துள்ள சிற்றறைகள் குருமாரின் உறைவிடங்களாயுமிருக்கலாம்.

சிந்துவெளி மக்கள் உடலைத்தூய்மை செய்வதில் மிகவும் அக்கறையுள்ளவர்கள். பிறகாலத்து இந்துக்கள் போன்றே, இம்மக்களும் சமயச் சடங்காக நோக்குமிடத்து, 'தூய்மை செய்யும் ஆற்றல் நீருக்கு உண்டென்பதை உறுதியாக நம்பினர்' என்பதே இதனால் அறியக்கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை அகழந்து கண்டுபிடிக்கப்பட்ட பெருங் கட்டடங்களுள் மிகவும் பெரியது மொகஞ்ச தாரோவிலே காணப்பட்டது. 230X78 அடி வெளிமட்டப் பரப்புக் கொண்ட இக்கட்டடம் ஓர் அரண்மனையாக இருந்திருக்கலாம். அரப்பாவிலே நகரரணுக்கு வடக்கே பெருந் தானியக்களஞ்சியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கால் அழிவுறாதிருத்தற் பொருட்டு இது ஏறத்தாழ 150X200அடிப் பரப்புக் கொண்ட ஒரு மேடை மீது கட்டப்பட்டு, 50X20அடிப் பரப்புக் கொண்ட பல களஞ்சிய அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உழவர்களிடம் நிலவரியாகப் பெறப்பட்ட தானியத்தை சேர்த்து வைப்பதற்கு இக் கட்டடம் பயன்பட்டது என்பது வெளிப்படை. இதுபோன்ற தானியக் களஞ்சியமொன்று மொகஞ்ச தாரோவிலும் இருந்ததென்று நாம் கருதலாம். கோதுமை, வாற்கோதுமை, பட்டாணிவகை, எள் என்பனவே முக்கியமான உணவுப்பயிர்களாயிருந்தன. எள்ளிலிருந்து உணவுக்குப் பயன்படும் எண்ணெய் பெறப்படுவதால், அது இன்றுமே இந்தியாவில் ஒரு முக்கியமான உணவுப்பயிராக விளங்குகின்றது. நெல் வேளாண்மை செய்யப்பட்டதற்குத் தெளிவான சான்றில்லை. ஆயின், அரப்பா மக்கள் பருத்தி வளர்த்துப் பஞ்சைப் பயன்படுத்தியுள்ளனர். நீர்ப்பாய்ச்சல் இருந்திருக்கலாம். ஆயினும் சிந்துவெளி மக்கள் அதனை அறிந்திருந்தனர் என்று உறுதியாய்க் கூறமுடியாது.

## விலங்குகள்:

இக்காலத்தில் இந்தியாவிலுள்ள மனைவிலங்குகளாகிய ஏரியுள்ளனவும் ஏரியில்லாதனவுமான மாடுகள், எருமைகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள், கழுதைகள், நாய்கள், வீட்டுக்கோழிகள் என்னும் இவையெல்லாம் அக்காலத்திலேயே பழக்கப்பட்டுவிட்டன. யானையும் அக்காலத்தில் நன்கு அறியப்பட்டிருந்தது. அதனையும் அம்மக்கள் பழக்கியிருத்தல் கூடும். சிந்துவெளி மக்கள் குதிரைகளை அறிந்திருந்தனரோ என்பது ஐயத்துக்கிடமானது. ஆரியர் படையெடுப்புக்கு நெடுங்காலத்துக்கு முன்பே குதிரையேறிய நாடோடிகள் சிறு தொகையினராய் வடமேற்கு இந்தியாவை அடைந்துள்ளனர் என்பதற்குப் பலூச்சித்தான அகழ்விடமான இரானா குத்தாயியின் அதிகீழ்ப்படையிலே சில குதிரைப் பற்கள் காணப்பட்டமை சான்றாகும். சிந்துவெளி மக்களிடம் குதிரைகள் இருந்திருக்குமாயின், அவை மிகவும் அரிய விலங்குகளாகவே இருந்திருக்கும். எருதே வழக்கமான பொதிசுமக்கும் விலங்காகப் பயன்பட்டிருக்க வேண்டும்.

## ஆட்சி, பொருளாதாரம், வாணிகம்:

சிந்துவெளி நாகரிகம் ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளாக இடையறவு படாது நீடித்து இருந்தது. சிந்துவெளி மக்களின் எழுத்து வரிவடிவமும் அவர்தம் வரலாற்றுக் காலம் முழுவதும் மாற்றமின்றி ஒரு படித்ததாகவே இருந்துள்ளது. ஏனைய பழைய நாகரிகம் எதிலும் இது போன்று ஆட்சி இடையறாது நீடித்த-தில்லை. இந்த இணையற்ற தொடர்ச்சியானது **'ஆட்சி மன்றின் உலகியற்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான நிலையாமையை' உணர்த்தாமல், 'கோயிலின் மாறாத மரபுகளையே' குறிப்பாக உணர்த்துகின்றது என்று பேராசிரியர் பிகொட் (Professor S. PIGGOTT in PREHISTORIC INDIA) கருத்துக் தெரிவிக்கின்றார். உண்மையிலே சிந்துவெளி நாகரிகம் எகிப்து, மெசப்பொத்தேமியா என்பவற்றின் நாகரிகங்கள் போன்றே மதச் சார்புடையதாய் இருந்ததாகத் தோன்றுகின்றது.

சிந்துவெளி மக்கள் செழிப்பான ஒரு வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கை வசதி வாய்ந்த தமது நாகரிகத்தை அமைத்தனர். அவர்களின் மத்திய வகுப்பினர் இன்பூட்டும் இல்லங்களில் வாழ்ந்தனர். அவர்தம் வேலையாளருமே இரண்டறை கொண்ட செங்கற் குடிசைகளில், வாழுமளவுக்கு இன்ப வாய்ப்புப் பெற்றிருந்தனர். இவ்வேலையாளர் மத்திய வகுப்பாருக்கு ஊழியர்களாகவோ, அடிமைகளாகவோ இருந்திருக்கலாம்.

திறம்பட அமைந்த வாணிகத்தாலே இத்தகைய இன்ப வாய்ப்புகள் இயல்வனவாயின என்பது தெளிவு. இம்மக்கள் பலூச்சித்தானின் கிராமப் பண்பாடுகளுடன் வாணிகஞ் செய்தனர் என்பதில் ஐயமில்லை. சிந்துவெளி நாகரிகத்தின் எல்லைப்புறக்காவல் இக்கிராமங்களில் இருந்தமை அறியப்பட்டுள்ளது. ஆனால், சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய உலோகங்கள், மணிக்கற்கள் ஆகியவற்றிற் பல நெடுந்தொலைவிலிருந்து வரவழைக்கப்பட்டவை. காதியாவாரிலிருந்தும், தக்கணத்திலிருந்தும் அவர்கள் சங்குகளைப் பெற்று, அவற்றைத் தம் அலங்காரங்களில் தாராளமாகப் பயன்படுத்தினர். அன்றியும் பல மணிக்கற்களையும் அவ்விடங்களிலிருந்து பெற்றனர். வெள்ளி, தேர்க்கோயிஸ் (Turquoise) எனப்படும் பைஞ்ஞீலக்கல், நீலக்கல் என்னும் இவற்றைப் பாரசீகத்திலிருந்தும் அபுகானிஸ்தானிலிருந்தும் இறக்குமதி செய்தனர். செம்பை இராஜஸ்தானிலிருந்தேனும் பாரசீகத்திலிருந்தேனும் பெற்றிருக்கலாம்.

சிந்துவெளி மக்களின் நாகரிகம் ஏறத்தாழ இந்துநதி முகம்வரையும் பரந்திருந்தபோதும் அம்மக்கள் கடலிலே கருத்துச் செலுத்தியதாகத் தோன்றவில்லை. அவர்கள் விட்டுச் சென்ற எச்சப் பொருள்களுள் இரு கப்பல் உருவங்களே காணப்பட்டன. அவையும் ஆற்றிலோடும் சிறு மரக்கலங்களாகவே உள்ளன. சிந்துவெளியின் ஆக்கப் பொருள்கள் கடல்வழியாகவோ, தரைவழியாகவோ, மெசப்பொத்தேமியாவை அடைந்துள்ளன. ஏனெனில், சிந்துவெளிக்கே சிறப்பாக உரிய பல இலச்சினைகளும் (seals) வேறுசில பொருள்களும் சுமேரிலே ஏறத்தாழ கி.மு.2300 இற்கும் கி.மு.2000 இற்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய தளமட்டங்களிற் காணப்பட்டமையால் என்க. சுமேரிலிருந்த சிந்துவெளிக்குப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டதற்குக் கிடைக்குஞ் சான்று அற்பமாயும் உறுதியற்றதாயும் உளது. அவ்வாறு இறக்குமதியான பொருள்கள் விலையுயர்ந்த உலோகங்களும் மூலப் பொருள்களுமேயென நாம் கொள்ளலாம். சிந்துவெளி வணிகர் உண்மையாகவே மெசப்பொத்தேமியாவில் தங்கியிருந்தனர் என்பதை அங்கே காணப்பட்ட சிந்துவெளி இலச்சினைகள் குறிப்பாய் உணர்த்துகின்றன. அவர்களது முக்கிய வியாபாரப் பொருள் பருத்திப் பஞ்சாய் இருத்தல் கூடும். பஞ்சு என்றுமே இந்தியாவின் முதன்மையான ஏற்றுமதிப் பொருள்களுள் ஒன்றாய் இருந்திருக்கின்றது. பிற்காலப் பாபிலோனியாவிலும் இப்பஞ்சு பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலச்சினைகள்:

வாணிகர் ஒவ்வொருவரிடமும், அல்லது வாணிகக் குடும்பம் ஒவ்வொன்றிடமும் ஓர் இலச்சினை இருந்தது போலும். இவ்விலச்சினை பெரும்பாலும் சமயச் சார்பான ஒரு சின்னத்தைக் கொண்டிருந்தது. அன்றியும், அதனில் இக்கால ஆராய்ச்சியாளரையெல்லாம் மலைக்க வைப்பதும் பொருள் கண்டறிய முடியாததுமான ஓர் எழுத்து வரிவடிவிலே ஒரு பெயரோ சுருக்கமான வாசகமோ பொறிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்துக்குரிய நியமமான இலச்சினை சதுரமான அல்லது செவ்வக வடிவமான ஒரு சிறு கற்றகடாகும். இது வழக்கமாகத் தீத்தைற்று (Teatite) எனப்படும் ஒருவகைப் பட்டுக்கல் கொண்டு செய்யப்பட்டு, நேர்த்தியான சித்திரம் பொறிக்கப்பட்டுச் சூளையிலிட்டு வன்மையாக்கப்பட்டுள்ளது. மெசப்பொத்தேமியா நாகரிகமோ உருளைவடிவான இலச்சினைகளைக் கையாண்டது. இவை முத்திரை யமைந்த களிமண்ணாலான கட்டளைத் தகட்டின்மீது உருட்டப்பட்டு, இலச்சினை அடையாளமும் வாசகமும் பொறிக்கப் பெற்றவை. இத்தகைய இலச்சினைகளுள் இரண்டொன்று மொகஞ்ச தாரோவிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆயின், அவற்றின் அடையாளப் பொறிப்பு, சிந்துவெளி நாகரிகத்துக்குரிய வகையில் அமைந்துள்ளது. இதுவரை சிந்துவெளியில் 2000இற்கு மேற்பட்ட இலச்சினைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால், அங்கே முதன்மை பெற்றிருந்த குடிகள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் இலச்சினை உடையவராயிருந்தனர் என்று கருத இடமுளது. சொத்து உரிமையைக் குறிப்பதே இவ்விலச்சினைகளின் முக்கிய நோக்கமாயிருக்கலாம்; ஆனால், அவை தாயத்து(Talisman) ஆகவும் பயன்பட்டன என்பதில் ஐயமில்லை. அதனால், அவற்றை உடையோர் எப்போதுமே அவற்றைத் தம்மோடு கொண்டு சென்றனர். பொதுவாக அவை காளை, எருமை, வெள்ளாடு, புலி, யானை போன்ற விலங்குகளையோ, சமயச்சார்பான பழங்கதைகளிலிருந்து எடுக்கப்பட்டனவாகத் தோன்றும் காட்சிகளையோ சித்திரித்துக் காட்டுவன. அவற்றிற் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் சுருக்கமானவை; அவ்வாசகங்கள் ஒருபோதும் இருபது குறியீடுகளுக்கு மேற்பட்டதில்லை; வழக்கமாகப் பத்துக்குறியீடுகளே காணப்பட்டன. சிந்துவெளி மக்களின் எழுத்துவரிவடிவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இன்று எமக்குக் கிடைப்பவையெல்லாம் இவ்விலச்சினை வாசகங்களேயாம்.

## சிந்துவெளி மக்களின் மொழி:

சிந்துவெளி மக்களின் வரிவடிவில் ஏறக்குறைய 270 எழுத்துக்குறிகள் உண்டு. இவை தொடக்கத்திற் சித்திரவெழுத்துக்களாகவே இருந்தன என்பது வெளிப்படை. இக்குறியீடுகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கருத்துக்களையோ, அசைகளையோ (Syllables) குறித்து நின்றன. இதன் தோற்றத்துக்கு ஆதிமுதலிலிருந்த சுமேரியரின் வரிவடிவம் தூண்டுதல் அளித்திருத்தல் கூடும். சுமேரியரின் வரிவடிவோ இதற்குச் சற்றே முற்பட்ட காலத்தில் தோன்றியதாகலாம். மத்திய கிழக்கு நாடுகளின் பண்டை வரிவடிவங்களுள் ஒன்றோடு இதனை தொடர்புபடுத்தச் சிலர் முயன்றுள்ளாரெனினும், இது அவற்றுள் எதனோடும் அவ்வளவு ஒற்றுமையுடையதன்று. சிந்துவெளி மக்கள் எழுதுவதற்கு எக்கருவியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தினரோ யாமறியோம். இம்மக்கள் தங்கள் ஆண்பனைகளாய்க் களிமட்டகடுகளிற் பொறித்திலர் என்பது தேற்றம். அவ்வாறு பொறித்திருப்பின், அவற்றிற் சிலவேனும் அவர்தம் நகரங்களின் எச்சப்பொருள்களுட் காணப்பட்டிருக்கும்.

சிந்துவெளி மக்களின் மொழியை வாசித்து விளங்குவதற்கு அறிஞர் பலர் காலத்துக்குக் காலம் முயன்றாரெனினும் முழுமையாக வெற்றிகண்டிலர். வரலாற்று அறிஞரும் திராவிட மொழிகளைக் கற்றவருமான ஹெராஸ் பாதிரியார் (FR. HERAS) இந்த மொழியை வாசித்தறியமுயன்று, பல சொற்களைத் தமிழ்ச் சொற்களாகவே வாசித்து, சிந்துவெளி மக்களின் மொழி தமிழின் பழைய வடிவம் என்ற முடிவுக்கு வந்தார். அவருக்குப் பின், அண்மைக்காலத்திலே இரசிய (Russian) மொழி வல்லுநர் சிலர், சிறந்த தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தி இம்மொழியை வாசிக்க முயன்று, ஹெராஸ் பாதிரியார் கண்ட முடிவையே கண்டனர். ஆயினும், எகிப்பதியரின் சித்திர எழுத்துக்களை வாசிப்பதற்கு உதவியாயிருந்த ரொஸெட்டா (ROSETTA STONE) கல்வெட்டுப் போல், இருமொழிகளில் அமைந்து, அவற்றுள் ஒன்று அறியப்பட்ட மொழியாயுமுள்ள பொறிப்பு ஒன்று சிந்துவெளியிலே கிடைக்கவில்லை. ஆகையால், சிந்துவெளி மக்களின் மொழியை ஐயத்துக்கு இடமின்றி இன்னும் வாசித்தறிய முடியவில்லை என்றே ஆராய்ச்சியாளர் பொதுவாகக் கருதுகின்றனர்.

## சிந்துவெளி மக்களின் சமயம்:

மொகஞ்ச தாரோ, அரப்பா ஆகிய இரு நகரங்களிலும் நிலத்தின் கீழே பல படைகளிற் புதையுண்டு கிடந்த ஏராளமான இலச்சினைகளும் உருவச்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலே இன்று வழங்கும் சிவநெறியின் கருவை ஆராய்ச்சியாளர் கண்டு தெரிவிக்கின்றனர். இலச்சினைகளிற் பொறிக்கப்பட்ட உருவங்களுள்ளே கருத்தை மிகவும் கவருவதாய் விளங்குவது யோகி போல அமர்ந்திருக்கும் கொம்புடைத் தெய்வத்தின் உருவமாகும். இத்தெய்வத்தின் தலையணி விந்தையானது; அதிலே இருபக்கங்களிலும் உட்கவிந்த இருகொம்புகள் உள்ளன. இக்கொம்பகளுக்கிடையே செடிபோல வளர்ந்துள்ள ஒரு பொருள் காணப்படுகிறது; தலையின் வலப்புறத்தும் இடப்புறத்தும் இரு புடைப்புகள் காணப்படுகின்றன. இவற்றை இருவேறு முகங்களாகக் கொண்டு, அந்த மும்முக மூர்த்தியை 'முந்து சிவன்' என்ற சேர் ஜோன் மார்ஷல் துணிந்து கூறியதை, இன்று பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். இம் மும்முகங்களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறிப்பனவாகலாம். இத் தெய்வத்தின் உடல் ஆடையின்றி அம்மணமாயுள்ளது. இது சிவபெருமானுக்குப் பிற்காலத்திலே தேவாரங்களில் வழங்கிய 'நக்கன்' என்னும் பெயரை நினைவூட்டுகின்றது. இன்னும், இத்தெய்வம் குதிகள் இரண்டும் ஒன்றையொன்று தொடுமாறு கால்களை மடக்கி (பத்மாசன முறையில்) இருப்பதோடு, மூக்கு நுனியை நோக்குமாறு கண்களை பாதி மூடிய நிலையில் வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. சிவபெருமானே யோகியர்களுக்கு எல்லாம் தலைவனாய் **'யோகீசுவரன்'** என்றும், **'மகாயோகி'** என்றும் பிற்காலச் சைவத்தில் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதற்கான காரணத்தை இத்தோற்றம் விளக்கிக் காட்டுகின்றது. மேலும் இக்கடவுள் உருவத்தைச் சூழ யானை ஒன்றும், புலியொன்றும், காண்டாமிருக மொன்றும், எருமையொன்றுமாக நான்கு காட்டுவிலங்குகள் காணப்படுகின்றன. இக்கடவுள் அமர்ந்திருக்கும் பீடத்துக்குக் கீழே இரு மான்கள் காணப்படுகின்றன. இத்தோற்றம் விலங்குகளுக்கு (அதாவது பசுக்களுக்கு) இறைவனாய் (பதியாய்) விளங்கும் பசுபதியே இக்கடவுள்உரு என்பதை உறுதிப்படுத்துகின்றது. (பசுபதி) என்பது பிற்கால ஆகமங்களில் வழங்கும் வடமொழிப் பெயர்; இதற்கு ஆணவத்தாற் கட்டுண்ட உயிர்களுக்கு (பாசத்தாற் கட்டுண்ட பசுக்களுக்கு) சிவபெருமான் தலைவராய் விளங்குகின்றார் என்று சைவ சித்தாந்தம் விளக்கம் கூறும். மேலே குறிப்பிட்ட இலச்சினையுருவம் '**பசுபதி**' என்னும் கருத்தையே சித்திரித்துக் காட்டுகின்றது என்பர் சேர். ஜோன் மார்ஷல்.

சிவன் என்னும், ஆண் தெய்வத்தைப் போலவே, அம்மையாகிய பெண்தெய்வமும் சிந்துவெளி மக்களின் சமய வாழ்விலே சிறப்பிடம் பெற்றிருந்தது. இத்தெய்வம் தாய்த்தெய்வமாகவோ, நிலத்தெய்வமாகவோ, (பூமாதேவி) இயற்கைத் தெய்வமாகவோ சிந்துவெளி மக்களால் வழிபடப் பட்டிருக்கலாம். அரப்பாவிலே காணப்பட்ட ஓர் இலச்சினையிலே, பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடியொன்று வளருவது போல் உருவம் அமைந்துள்ளது. "புவி ஏழையும் பூத்தவள்" என்பது போலப் பிற்காலச் சைவசமயத்திலே விவரிக்கப்பட்ட சத்தி தத்துவத்தை உட்கொண்டதாய் இது ஆழ்ந்த தத்துவக் கருத்தை விளக்குவதாய் விளங்குகின்றது.

இவை தவிர, பிற்காலச் சைவ சமயத்திற் காணப்படும் சிறப்பு அம்சங்கள் சிலவும் சிந்துவெளி மக்களின் சமய வாழ்க்கையில் இடம்பெற்றிருந்தன. புனித நீராடல் (தீர்த்தம் ஆடல்), அரசு போன்ற புனித மரங்களை வழிபடல் (தல விருட்சம்), காளை மாட்டை வழிபடல் (நந்தி), பாம்பு வழிபாடு (நாகதம்பிரான் வழிபாடு) என்பவற்றை இவ்வகையிற் குறிப்பிடலாம். இவற்றுள்ளே சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கது சிவலிங்க வழிபாடு ஆகும். அரப்பா நகரில் சிவலிங்க வடிவில் அமைந்த ஒரு கருநிறக் கல் காணப்பட்டது. அன்றியும் அந்நகரிலே அகழ்ந்து எடுக்கப்பட்ட கூம்புருவான பல பொருள்கள் சிவலிங்க வடிவங்கள் என்றே கருதப்படுகின்றன. இலிங்கம் என்பது சிவனைக் குறிக்கும் அடையாளம் (லிங்க = அடையாளம்) ஆகும். பீடம் சத்தியைக் குறிப்பது. பீடலிங்கம் சத்தியும் சிவமும் இணைந்து உலகைப் படைக்கும் தத்துவத்தைத் விளக்குவது. படைத்தலால் உலகைச் சித்திரிப்பது இலிங்கம் எனவும் பெரியோர் (ஆறுமுகநாவலர்) 'லிங்கம்' என்ற வடமொழிச் சொல்லுக்குப் பொருள் விரிப்பர் (லிங்கயதி = சித்திரிக்கிறான்). சிவபெருமானை, அவருடைய உருவத்திருமேனியில் வைத்து வழிபடுவதைக் காட்டிலும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தில் வைத்து வழிபடுவதே பிற்காலச் சைவத்திற் பெருவழக்காயுள்ளது. சிவவழிபாடு, அதாவது முழுமுதற் கடவுளை அம்மையப்பராக வழிபடும் சைவசமயம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளியில் தோன்றி நிலவியது என்பது உறுதியாகின்றது. ஆதலால், '**சைவ சமயமே உலகில் வாழும் சமயங்கள் எல்லாவற்றிலும் மிகவும் தொன்மையானது**' என்று சேர் ஜோன் மார்ஷல் கூறுகிறார். அன்றியும் 'சிவன்' என்னும் பெயர் சிந்துவெளி மக்கள் வைத்த தமிழ்ப் பெயரே என்றும், அது 'செந்நிறமுடையோன்' ('சிவனெனும் நாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கேயுடைய செம்மேனி எம்மான்' என்பது அப்பர் வாக்கு) எனப்பொருள் படுவதாய்ச் 'சிவ' (சிவத்தல், சிவப்பு, சிவலை, செம்மை, செம்பு முதலிய தமிழ் சொற்களின் அடி) என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்தது என்றும், சிந்துவெளி மக்கள் பெரிதும் போற்றிய இத் தெய்வத்தின் பெயரைப் பின்னர் படையெடுத்து வந்த ஆரியர் ருத்திரன் என்னும் தமது தெய்வத்துக்கு ஏற்றி வேதத்தில் வழங்கியுள்ளனர் என்றும் பேராசிரியர் எஸ்.கே. சட்டர்ஜி (S.K Chattergi) எழுதியிருக்கின்றார். (பார்க்க: HISTORY AND CULTURE OF THE INDIAN PEOPLE, Bharatiya Vidya Bhavan publication, Volume I - The Vedic age - Chapter: Race Movements and pre.historic culture. Pages 160-166)

## சிந்துவெளி மக்களின் கலைத்திறன்:

சுமேரியர், பாபிலோனியர் ஆகியோரிடம் இருந்தவை போன்ற சமயக் காவியங்களையுடைய இலக்கியம் சிந்துவெளி மக்களிடமும் இருந்ததென்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த இலக்கியம் எமக்கு என்றுமே கிடையாதவாறு அழிந்தொழிந்து போய்விட்டன. இம் மக்களின் வீடுகளின் உட்சுவர் சேற்றுச் சாந்தினால் பூசப்பட்டவை. அச்சுவர்களில் ஓவியங்கள் எவையேனும் தீட்டப்பட்டிருப்பின், அவை அடியோடு மறைந்துவிட்டனவாதல் வேண்டும். தெருவை நோக்கியிருந்த வெளிச்சுவர்கள் வெறுஞ் செங்கற்களால் அமைந்தவை. அவர்-தம் கட்டடக்கலை கண்டிப்பாக பயன்பாடு கருதியதாயே அமைந்துள்ளது. ஒப்பனை வேலைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவை யெல்லாம் சில எளிய அலங்காரச் செங்கற் கட்டடங்கள் மாத்திரமேயாம். கிடைத்த எச்சப் பொருள்களில், அழியாது நிற்கும் பெருஞ்சிற்பம் யாதுங் காணப்படவில்லை. பெருங்கட்டடங்களாயுள்ளவை எவையேனும் கோயில்களாய் இருந்தனவாயின், அவற்றிலே பெரிய உருவச் சிலைகள் இல்லையாதல் வேண்டும்; அன்றி இருந்தனவேல், அவை மரத்தாலோ, அழியக் கூடிய பிறபொருளாலோ ஆக்கப்பட்டனவாதல் வேண்டும்.

சிந்துவெளி மக்கள் கலைச் சிறப்புடைய பொருள்களைப் பெரிய அளவிலே படைக்க முடியாது போயினும், சிறிய அளவில் அவற்றைச் செய்வதில் திறமை பெற்று விளங்கினர். கலைப்படைப்பிலே அவர்கள் காட்டிய வியத்தகு கைத்திறன் அவர்களுடைய இலச்சினைப் பொறிப்புச் சித்திரங்களிலே விளங்குகின்றதாகலாம். விலங்குருவங்களை அவர்கள் ஆற்றல்வாய்ந்த மெய்யியல்போடும், அகத்திலடங்கா ஆர்வத்தோடும் சித்திரித்துள்ளனர். அவை தாடி பல கொண்ட பெரும் ஆனேறும், புடைத்து மடிந்து போர்க்கவசம் போன்றிருக்கும் தடித்த தோலுடைய காண்டாமிருகமும், வெருவர உறுமும் வேங்கையும், வேறுள்ள பல விலங்குகளும் எல்லாந் தாம் உருவடிக்க எடுத்துக்கொண்ட பொருள்களை ஊன்றி நோக்கி, உள்ளத்தாற் காதலித்து வடித்த கம்மியரின் கைவண்ணங்களாகும்.

இவ்விலங்குருவங்கள் போன்றே மனிதப் பதுமைகள் சிலவும் மனத்தைக் கவர்வனவாய் உள்ளன. செம்மணற்கல்லால் ஆன ஆண்மகனது உடற்குறையானது உள்ளதை உள்ளவாறு காட்டும் அதன் மெய்யியல்பாற் சிறப்பாக உள்ளத்திற் பதியவல்லது. சற்றே பருத்த மாதிரியில் அதன் வயிற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகத்தை உருவாக்கியமை பிற்கால இந்தியச் சிற்பப் பாணியை முன்னறித்து செய்ததுபோலத் தோன்றுகின்றது. 'தீத்தைற்று' என்னும் ஒருவகைப் பட்டுக்கல்லாற் செய்யப்பட்ட மற்றோர் ஆண் உருவத்தின் மார்பளவுச் சிலை, மெய்யுருவம் அமைக்கும் முயற்சியைக் காட்டி நிற்பதாகத் தோன்றுகின்றது. இது, தியான நிலையில் பாதி மூடிய கண்களுடன் தோன்றும் ஒரு குருவின் சிலையெனச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால், அம்மனிதன் மொங்கோலிய வகையைச் (Mongoloid type) சேர்ந்தவனாயிருத்தல் கூடும். இவ்வகை மக்கள் சிந்துவெளியில் இருந்தனரென்பது மொகஞ்ச தாரோவிற் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு தலையோட்டினால் நிறுவப்பட்டுள்ளது.

வெண்கலத்தாலான நடனமாதின் பதுமையே ஒருகால் அவ்வுருவங்களுளெல்லாம் கவர்ச்சிமிக்கதாகலாம். ஆடை யாதும் அணியாமல், கழுத்தில் ஓர் ஆரமும், கையொன்று பெரும்பாலும் முற்றதாக மறைய நிரையாக வளையல்களும் அணிந்தவளாய்க் கூந்தலை வாரிச் சிக்கலான முறையில் ஒப்பனை செய்துவிட்டுக் காண்பவரை மயக்கும் நிலையில் ஒரு கையை இடையில் வைத்தும், நீண்டு மெலிந்த ஒரு காலை ஓரளவு மடித்தும் நிற்கும் இவ்விள நங்கை, ஏனைய பண்டை நாகரிகங்களின் கலைப்படைப்புக்கள் எவற்றுக்கும் இல்லாத ஒருவித துடுக்குத் தன்மை தோன்ற நிற்கின்றாள். அன்றியும், ஆண்பிள்ளையின் உருவம் போன்ற அவளது மெலிந்த உருவமும், மற்று அழகில்லாத அம்மை உருவங்களும் அக்காலத்துச் சிந்துவெளி மக்கள், பெண்மை அழகுபற்றிக் கொண்டிருந்த சுவை வரம்புகள் பிற்காலத்து இந்தியர் கொண்டவற்றினும் பெரிதும் வேறுபட்டவை என்பதைக் காட்டி நிற்கின்றன.

சிந்துவெளி மக்கள் விலங்குருவங்களை வியக்கத்தக்கவாறு இயற்கைச் சாயலுடன் செய்தனர்: ஊசித் தலைகளாகவும், உருண்டை மணிகளாகவும் பயன்படுத்தப்பட்ட சின்னஞ்சிறு குரங்குகளும், அணில்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அம் மக்கள் தம் சிறார்கள் விளையாடுவதற்கெனத் தலையாட்டும் மாடுகளையும், நூலிற் சறுக்கும் மாதிரிக் குரங்குகளையும், சிறுதேர்களையும், குருவியுருவிலமைந்த ஊதுகுழல்களையும் சுடுமண் கொண்டு செய்தனர். அன்றியும் அவர் சுடுமண்ணாற் செப்பமற்ற சிறு பெண்ணுருவங்களையும் செய்தனர். இப்பெண்ணுருவங்கள் எல்லாம் பொதுவாக அம்மணமாய், அன்றேல் ஏறத்தாழ அம்மணமாய் அமைக்கப்பட்டுள்ளன. ஆயின், அவை விரிவான முறையிற் செய்த தலையணி உடையன. இவையெல்லாம் அம்மையின் (Mother goddess) உருவங்களேயாம். இவை எண்ணிறந்து காணப்படுகின்றமையாற் பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் வைத்துக் வணங்கப்பட்டனவெனக் கருத இடமுண்டு. ஆயின், இவை செப்பமில்லா வகையிற் செய்யப்பட்டிருத்தலின், கைதேர்ந்த கம்மியரை ஏவல்கொண்ட மேல்வகுப்பார் அம்மை வழிபாட்டை ஆதரித்திலர் என்றும், பொதுமக்களின் தேவையை நிறைவேற்ற ஏழைக் குயவரே பெருந்தொகையாக இவ்வுருவங்களைச் செய்தனர் என்றும் கொள்ளல் வேண்டும்.

## உலோகங்களின் பயன்பாடு:

சிந்துவெளி மக்கள் கற்கருவிகளை முற்றாகக் கைவிடவில்லையானாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் செம்பாலும் வெண்கலத்தாலும் செய்த கருவிகளையும் பயன்படுத்தினர். ஆயினும், மெசப்பொத்தேமியாவுடன் ஒப்பிடுகையில், இம்மக்கள் தொழினுட்பத்துறையில் பல வழிகளிற் பின்னிடைந்திருந்தனர். மிகப்பழைய காலத்திலேயே சுமேரியர் கத்திகள், ஈட்டித்தலைகள் ஆகியவற்றை வலிமை கூட்டுவதற்காக நடுவில் நரம்போடும், கோடரியலகுகளைக் காம்பு பொருத்துவதற்காகத் துளையோடும் புதியனவாக ஆக்கினர். ஆனால், சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய கத்தி முதலியவற்றின் அலகுகள் தட்டையாகவும் எளிதில் நெளியக்கூடியவையாகவும் இருந்தன. அவர்களுடைய கோடரி அலகுகள், காம்பொடு கயிறால் வரிந்து கட்டப்படவேண்டியிருந்தன. எனினும், சிந்துவெளி மக்கள் ஒருவகையில் தம்மோடு ஒத்த காலத்தவரான ஏனைய நாகரிக மக்களிலும் பார்க்கத் தொழினுட்பத்தில் மேம்பட்டு விளங்கினர். அன்னார் அலைநெளிவான பல்லோடு கூடிய அரிவாள் ஒன்றை அமைத்திருந்தனர்; அவ்வாள் அரியும்போது மரத்தூளைத் தடையின்றி விழவிட்டுத் தச்சரின் வேலையை எளிதாக்கியது. இதிலிருந்து அம்மக்கள் தச்சுத் தொழிலில் தனிப்பட்ட திறமை பெற்றிருந்தனரெனக் கருதலாம். ஓரளவு விலையுயர்ந்த கற்களைக் கொண்டு அவர்கள் அழகிய மணிமாலைகள் செய்தனர்; அன்றியும் அலங்கார மட்கலன்களையும் செய்தனர். அவற்றுட் சில நேர்த்தியாக வண்ணம் பூசப்பட்டும் உள்ளன.

## ஆடையணிகள்:

சிந்துவெளி மக்களில், ஆடவர் ஒற்றைத் தோளை மட்டும் மறைக்கும் அங்கிகளை அணிந்திருந்தனர். மேல் வகுப்பார் அணிந்த உடை அழகிய அலங்கார வேலைப்பாட்டாற் பொலிவு பெற்றிருந்தது. ஆடவர் தாடி வைத்திருந்தனர். ஆண், பெண் இருபாலாருமே தலைமயிரை நீள வளர்த்திருந்தனர். அம்மை உருவங்களின் விரிவான வேலைப்பாடுடைய தலையணிகள் போன்றவற்றைச் செல்வ மகளிர் ஒருகால் விழாவணியாக அணிந்தனராகலாம். பெண் தெய்வங்கள் பெரும்பாலும் சிறு பாவாடை யொன்றே அணிந்துள்ளன. ஆயின், ஓர் இலச்சனையிற் பெண்கள் முழங்காலுக்குச் சற்றுக் கீழாக நீண்டுள்ள பாவாடைகளுடன் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளனர். இப்பெண்கள் ஐயைமார் (Priestesses) போலும். மகளிரின் கூந்தல் ஒப்பனைகள் பெரும்பாலும் மிக விரிவானவை; பின்னலும் இக்கால இந்தியாவில் இருப்பது போன்றே, அன்றும் பெருவழக்கில் இருந்தது. பெண்கள் நகைகளையும் விரும்பி அணிந்தனர். அவர்கள் கனத்த வளையல்களைக் கைந்நிறைய அணிந்தனர்; அவற்றோடு கழுத்திற் பெரிய மாலைகளையும் காதிற் குழைகளையும் அணிந்தனர்.

## இறந்தோர் உடலை அகற்றல்:

1946ல் சேர் மோட்டிமர் வீலர் அரப்பாவிலே தம் ஆராய்ச்சி வேலையைத் தொடங்கும்வரை, இம்மக்கள் இறந்தோர் உடலை எவ்வாறு அகற்றினர் என்பது பற்றி யாதும் உறுதியாக அறியப்பட்டிலது. ஆயின், அவ்வாண்டில் ஓர் இடுகாடு கண்டுபிடிக்கப்பட்டது. குறைந்த பட்சம் ஐம்பத்தேழு பிணக்குழிகளேனும் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. இதனால், இறந்தோர் உடல்களைப் புதைப்பதே பொதுவான வழக்கமாயிருந்தது என்பது புலனாகின்றது. அவ்விடுகாடு முழுவதும் அகழப்படவில்லை. ஆயின், சிந்துவெளி மக்கள் பிணங்களை நேராக நீட்டிப் படுக்க வைத்து அவற்றோடு மட்கலங்களையும் இறந்தோரின் உடைமையாகிய அணிகலன்களையும் ஒருங்கு சேர்த்துப் புதைத்தனர் என்பது தெளிவு.

## இப்பெரு நாகரிகத்தை அமைத்த மக்கள் யார்?

சேர் ஜோன் மார்ஷல் இம் மக்களைத் திராவிடர் என்றே கூறுகின்றார். இக்கருத்தையே இக்கால வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர். **'திராவிடர்'** என்னும் பெயர் மொழியடிப்படையில் உண்டான பெயர். தமிழ்மொழியை ஆரியர் **'திராவிட பாஷா'** என்று குறிப்பிட்டனர். ஆகவே, **திராவிடர்** என்பது **'தமிழர்'** என்றே பொருள்படும். மொழியியலார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய ஓரின மொழிக் குடும்பத்தின் தாய்மொழியைத் 'திராவிடம்' என்று கூறுவர். அவ்வாறு கருதுமிடத்து, திராவிடர் என்பது பழந்தமிழர் என்றே பொருள்படும். இத்திராவிட மக்கள் ஆதியில் எங்கே தோன்றியவர் என்பதிலே ஆராய்ச்சியாளர் இரு வேறுபட்ட கொள்கைகளை உடையவராய்க் காணப்படுகின்றனர்.

ஒரு சாரார் இம்மக்கள் தென் இந்தியாவையே பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும்; இப்போதுள்ள தென் இந்தியா பல கடல்கோள்களாற் சுருங்கியுள்ளது என்றும்; பண்டைக்காலத்திலே அது தெற்கே இன்னும் பரந்திருந்ததென்றும்; அவ்வாறு கடல்கொள்வதற்கு முன்னிருந்த தென்னாட்டிலே இதனைக் **குமரிக்கண்டம்** என்றும்; **இலெமூரியாக் கண்டம்** என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டனர். பழந்தமிழர் (திராவிடர்) தோன்றிப் பழங்கற்காலம், புதுக்கற்காலம் முதலான நாகரிகப் படிகளில் முன்னேறி, ஒருகாலத்தில் இந்தியா அடங்கலும் பரவியிருந்தனர் என்றும்; இந்தியாவுக்கு அப்பால் எகிப்து, பாரசீகம், மெசப்பொத்தேமியா ஆகிய இடங்களிலும் கடல்வழியாகவும், தரைவழியாகவும் சென்று குடியேறினர் என்றுங் கூறுவர். உதாரணமாகக் கலாநிதி எச். ஆர். ஹோல் (Dr. H.R.Hall) என்னும் அறிஞர் ("THE ANCIENT HISTORY OF THE NEAR EAST") என்னும் தமது ஆராய்ச்சி நூலில் பின்வருமாறு கூறுகிறார்: 'அப்பழங்காலத்திலே மேல்நாடு சென்று நாகரிகத்தைப் பரவச் செய்த சுமேரியர், பாபிலோனியர் முதலான மக்கட் குழுவினருந் தமிழ்மக்களே; அவர்கள் ஆரியர் வருவதற்கு முன்னமே பஞ்சாப்பு, சிந்து, பலூச்சித்தான் மாகாணங்களைத் தமக்கு உறைவிடமாகக் கொண்டு அங்கிருந்து மேல் நாடுகளுக்குத் தரைவழியாகவும் கடல்வழியாகவுஞ் சென்று வாணிகம் நடாத்தினர்; அங்ஙனம் அவர்கள் மேல்நாடுகளுடன் வாணிகம் நடாத்தியபோது அவருள் ஒரோவொரு கூட்டத்தார், அந்நாடுகளிற் பற்பல இடங்களிற் குடியாக வைகியும் வாழ்ந்து வந்தனர்; அவர்கள் தாம் கொண்டு சென்ற தமிழ்ச் சித்திர எழுத்துக்களே பின்னர் பாபிலோனிய தேயத்தில் ஆப்பெழுத்து (Cunei form) வடிவத்தை எய்தின.'

மொகஞ்ச தாரோ நாகரிகத்தை ஆராய்ந்த சேர். ஜோன் மார்ஷல் தமது நூலில் இவருடைய கூற்றை நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார். (Sir. John

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Marshall - MOHENJO DARO AND THE INDUS CIVILIZATION, vol.I). மேலும், பீ.டீ.ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்னும் ஆராய்ச்சியறிஞரும் தமிழர் தென் இந்தியாவையே பிறப்பிடமாய்க் கொண்டவர் என்னுங் கருத்தை அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார். (பார்க்க: P.T. Sriniyasa Iyengar: (1) STONE AGE IN INDIA (2) PRE-ARYAN TAMIL CULTURE, (3) HISTORY OF THE TAMILS FROM THE EARLIEST TIMES TO 600 A.D.).

மற்றொருசாரார் ஆராய்ச்சியாளர், மனித இனவகை (HUMAN RACE TYPE) அடிப்படையில் திராவிடர் (பழந்தமிழர்) மத்திய தரை வகையைச் சேர்ந்தவர் என்றும், அவர்கள் தொல் பழங்காலத்தில் மத்தியதரைக் கடலை அடுத்துள்ள பிரதேசத்திலிருந்து (இப்போது கீரிசு, சின்னாசியா (ASIA MINOR) முதலிய இடங்கள் அமைந்த பிரதேசத்திலிருந்து ) கூட்டங் கூட்டமாய், நாடோடிகளாக வந்து சிந்தநதிப் பள்ளத்தாக்கிலும், பின்னர் தெற்கு நோக்கிப் பெயர்ந்து தென் இந்தியாவிலும் குடியேறியவர்கள் என்றும் கூறுவர். உதாரணமாக, பேராசிரியர் ஈ.ஜே.ராப்ஸன் அவர்களும் (E.J.RAPSON-ANCIENT INDIA CAMBRIDGE HISTORY OF INDIA, VOL I) முன்னே கூறப்பட்ட பேராசிரியர் எஸ்.கே. சட்டர்ஜி அவர்களும் (S.K.CHATTERGI, RACE MOVEMENTS AND PRE-HISTORI CULTURE, IN THE HISTORY AND CULTURE OF THE INDIAN PEOPLE, VOL. I) இக்கொள்கையை ஆதரிக்கின்றனர்.

சிந்துவெளியிலே இதுவரை பரிசோதனை செய்த மனித எலும்புக்கூட்டு எச்சங்களைக் கொண்டு நோக்க, இம் மக்களிற் சிலர் நீண்ட தலையும் ஒடுங்கிய மூக்கும் மெலிந்த உடலுங் கொண்ட மத்தியதரை மக்கள் வகையைச் சேர்ந்தவர் என்பது தெரியவருகின்றது. இவ்வகையைச் சேர்ந்த மக்கள் பண்டைக்காலத்து மத்திய கிழக்கு நாடுகள் எங்கணும் பரந்து காணப்பட்டனர். அன்றியும், அன்னார் எகிப்திலும் காணப்பட்டனர். இந்தியாவின் இப்போதைய குடித்தொகையில் இம் மத்தியதரை வகையினர் ஒரு முக்கிய கூறாகவும் அமைந்துள்ளனர்; மற்றொரு கூறாக அமைந்துள்ளவர் தட்டை மூக்கும், தடித்த உதடுகளும் கொண்ட முந்து அவுஸ்திரேலிய வகை மக்களாவர். இம் மக்கள் அவுஸ்திரேலிய ஆதிக் குடிகளுக்கும் இன்று இந்தியாவிலுள்ள முரட்டுதனமான இயல்புடைய குன்று வாழ் குலத்தவருக்கும் (HILL TRIBES) இனமானவர். சிந்துவெளியிலே மொங்கோலியா வகையைச் சேர்ந்த தலையோடு ஒன்றும், குறுந்தலையுடைய அல்பைன் (Alpine) வகையைச் சேர்ந்த தலையோடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முன்னே குறிப்பிட்ட பட்டுக்கல்லாலான தாடியுடைய தலை பிற்போந்த இருவகைகளின் மூலக் கூறுகளையும் கொண்டுள்ளது. வெண்கலத்தாலான நடன மாதின் உருவச் சிலை, அவள் முந்து அவுஸ்திரேலிய வகையின் பாற்பட்டவளெனக் காட்டுகிறது. இவற்றை வைத்து நோக்க, இன்றுபோலவே அன்றும் வடமேற்கு இந்தியா, பல்லின மக்கள் கலந்து வாழ்ந்த ஓர் இடமாக இருந்தது என்று கருத இடமுண்டு.

இன்றுள்ள தென்னிந்தியர், சிந்துவெளி நாகரிகத்தின் முக்கியமான இரு மக்கள் வகைகளுக்கும் காரணமாய் அமைந்த மத்தியதரை வகையினர், முந்து அவுஸ்திரேலிய வகையினர் ஆகிய இரு திறத்தார் இயல்புகளும் விரவப் பெற்றவராகவே பொதுவாகக் காணப்படுகின்றனர். மேலும், சிந்துவெளி மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமானது திராவிட நாட்டிலே சிறப்பாகச் செல்வாக்குப் பெற்றுள்ள இந்து சமயத்தின் மூலதத்துவங்களோடே பலவகையில் ஒற்றுமையுடையதாய்க் காணப்படுகிறது. நால், சோபு என்னும் பண்பாடுகள் உள்ள தம் சிறு கிராமங்களை அமைத்த பலூச்சித்தானின் குன்றுகளிலே வாழும் பராகுயீ மக்கள், இன்று மக்கட் பாகுபாட்டு வகையாற் சிறப்பாக இரானியரேயாயினும், தமிழோடு நெருங்கிய உறவு கொண்ட மொழியையே பேசுகின்றனர். இப்பிராகுயீமொழியையும், வடஇந்தியாவின் வேறு பல பாகங்களிலும் பழங்குடியினர் வழங்கும் கோண்டு **(GOND)** ராஜ்மால் **(RAJMHAL)** போன்ற மொழிகளையும் சேர்த்துத் தமிழோடு, அதற்கு இனமான வேறு பதின்மூன்று மொழிகளும் திராவிட மொழிக்குடும்பம் ஆகும் என்று கால்டுவெல் ஐயர் **(Rev. Robert Caldwell)** திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் **(a comparative grammar of the dravidian languages)** என்னும் அரிய ஆராய்ச்சி நூலிற் குறிப்பிடுகின்றனர். அன்றியும் அவ்வாசிரியர் மிகப்பழைய காலத்தே இந்தியத் தேயம் முழுவதும் பரவியிருந்தவர்கள் பழந்தமிழ் மக்களே யாவர் என்றும், அவர் வழங்கியவை தமிழும் தமிழின் திரிபுகளான மொழிகளுமேயாகும் என்றும் அறுதியிட்டுச் சொல்லியிருக்கின்றார்

இந்நிலையில், சிந்துவெளி மக்கள் மொழியடிப்படையில் திராவிடரான பழந்தமிழரே என்றும், அன்னாரின் வழித்தோன்றியோர் இக்காலத்தும் இந்தியக்குடிகளிடை வாழ்ந்து வருதல் வேண்டும் என்றுந் துணிந்து கூறலாம்.

## சிந்துவெளி நகரங்களின் இறுதி:

சிந்துவெளி நகரங்கள் முதற்கண் அமைக்கப்பட்ட காலத்தில் ஞாயிலுடைய பெருமதிலொன்று அவற்றைப் பாதுகாத்து வந்தது. அம் மதில் 40 அடி அகலமும் 35 அடி உயரமுங் கொண்டது. பல நூற்றாண்டுக் காலப்போக்கில் அம் மதிலின் முகம் முன்னையிலும் திண்ணியதாய்ப் புதுப்பிக்கப்பட்டது எனினும், அந்த நகர்களுக்குக் கேடு விளைவிக்கத் தக்க பகையச்சம் இருந்தமைக்குச் சான்று ஏதும் இல்லை. ஆயின், அரப்பா நகரின் இறுதிக் காலத்தில் அதன் பாதுகாப்புகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. வாயிலொன்று முற்றாகவே அடைக்கப்பட்டது. மேற்கிலிருந்து பேரிடர் அச்சுறுத்தியது.

சிந்துவெளி மக்கள் மிகச் சிறந்த நாகரிகத்தைத் தோற்றுவித்தாரெனினும் பகைவரை எதிர்த்து வெல்லும் படைப்பலத்தை உடையவர்களாய் இருக்கவில்லை. அவர்கள் அமைதியை விரும்பிய அமைதியில் நம்பிக்கைகொண்ட மக்களாயிருந்தமையால், போருக்கு ஆயத்தம் செய்திருக்கவில்லை. மத்திய ஐரோப்பாவிலிருந்து ஆரியத் தொல் குலத்தார் வெவ்வேறு திசைகளிற் புலம்பெயர்ந்து சென்றனர். கிழக்கு நோக்கிச் சென்று இரானிய மேட்டுநிலத்திற் பரவியவர் **இந்தோஐரேனியர்** என்று சொல்லப்பட்டனர். அங்கிருந்து அவர்களில் பெருந்தொகையானோர் வடமேற்குக் கணவாய்கள் மூலம் சிந்து வெளிக்குட் புகுந்து, எல்லைப்புறக் கிராமங்களை வெற்றிகொண்டனர். சிந்துவெளி நகரங்களின் பண்டைச் சட்டங்களும், கட்டுக்கோப்பும் நிலைகுலைந்து நலிவுறத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவராக இந்தியாவிற் புகுந்த ஆரியர் பகட்டில்லாத எளிய வாழ்க்கை வாழ்ந்தனரெனினும், சிறந்த கருவிகளையும் படைக்கலங்களையும் உடையவராயிருந்தனர். அவர்கள் உயரமான தோற்றமும் வலிமையும் உடையவர்கள். குதிரையில் ஏறிப் போர்புரிவதிலும் வல்லவராயிருந்தனர். இந்த அனுகூலங்களைக் கொண்டு இவ்வாரியக் குழுவினர் சிந்துவெளி மக்களைப் போரில் வென்று புறங்கண்டனர்.

இறுதி வந்தபோது மொகஞ்ச தாரோ மக்களிற் பெரும்பாலோர் இரிந்தோடி விட்டனர்போலும். அங்கிருந்த வீடுகள் ஒன்றில் பல எலும்புக் கூடுகள் கூட்டமாக நொருங்கிக் கிடந்தன. கிணற்றுப் படியொன்றில் ஒரு பெண்ணின் எலும்புக்கூடு காணப்பட்டது. இவ்வெலும்புக் கூடுகள் ஓடாமல் பின்தங்கி நின்றோர், படையெடுத்து வந்த பகைவர் கையிற் சிக்கி மடிந்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இப்பெரு நிகழ்ச்சிகளின் காலத்தை மத்திய கிழக்கு நாடுகளின் சமகால நிகழ்ச்சிகளைக் கொண்டு ஏறத்தாழ கி.மு.1600 அளவாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். எமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய இலக்கியச் சான்று **இருக்கு வேதமே** யாகும். இதிற் பெரும்பாகம் கி.மு.2ஆம் ஆயிரவாண்டின் பிற்பாதியிலே இயற்றப்பட்டுள்ளது. அது படையெடுத்து வந்த மக்கட் கூட்டத்தாரின் படைப்பென்பது வெளிப்படை. இதனை இயற்றியபோது அன்னார் வடமேற்கு இந்தியாவில் முதற் குடியிருந்தோரை இன்னும் முற்றாக அடிப்படுத்தவில்லை. மொகஞ்ச தாரோவின் அகழ்வு பற்றிய தமது பெரிய அறிக்கையில் **சேர். ஜோன் மார்ஷல்,** சிந்துவெளி நகரங்களின் வீழ்ச்சிக்கும் ஆரியர் படையெடுப்புக்குமிடையில் இருநூற்றாண்டுக் காலமோ, அதற்கு மேற்பட்ட காலமோ கழிந்துள்ளது என்னுங் கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஆயின், அரப்பாவிலும் பிற இடங்களிலும் அண்மைக்காலத்தில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சி, பாபிலோனியாவின் திருத்தியமைக்கப்பட்ட காலவரையறை, இருக்குவேதத்திற் காணப்படும் குறிப்புகள் ஆகிய இவற்றின் கூட்டுவிளைவாக இந்த இடைவெளி இன்று சுருங்கிவிட்டது. **சேர். ஆர். மோட்டிமர் வீலர்** முதலான தகுதிவாய்ந்த சான்றோர் பலர் அரப்பா ஆரியராலே அழிவுற்றதென நம்புகின்றனர். அரப்பாவின் பிந்திய இடுகாட்டில் அடக்கஞ் செய்யப்பட்டவை **'உண்மையான வேதகால ஆரியனின்'** பிணங்களே என்றும், இருக்குவேதத்திலே போக்கடவுளான இந்திரனைப் புகழ்ந்துபாடும் பாடல்களில் அவனால் அழிக்கப்பட்டவை என்றும் சொல்லப்படும் அரண்கள், நகரங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் சிந்துவெளி நகரங்களான மொகஞ்ச தாரோவும் அரப்பாவும் அடங்கும் என்றும் ஆராய்ச்சியாளர் கருத்து வெளியிட்டுள்ளனர். சிந்துவெளி நகரங்களைக் கட்டழித்தோர் இந்த ஆரியத் தொல்குடியினரே என்று துணிந்து கூறுவதற்குப் போதிய வேறு சான்றுகள் கிடைக்கவில்லையாயினும், கி.மு.2ஆம் ஆயிரவாண்டிலே முழு நாகரிகவுலகத்தின் முகத்தையே மாற்றியமைத்த, குதிரை பூட்டிய தேரூரும் மக்களின் இயக்கத்தில் இப்பெருநாகரிகத்தின் வீழ்ச்சியும், ஒரு நிகழ்ச்சியாய் இருந்திருத்தல் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நாகரிகத்துக்குச் சிந்துவெளி மக்களின் பங்களிப்பு:

உண்மை எதுவாயினும், ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியா வேளாண்மைத் துறையில் சில முன்னேற்றங்களை எய்தியிருந்தது உறுதி. இம் முன்னேற்றங்கட்காக உலக முழுவதுமே இந்தியாவிற்குக் கடமைப்பட்டுள்ளது. யாம் அறிந்த வரையிற் சிந்துவெளி மக்களாலேயே பருத்தி முதன் முதற் பயன்படுத்தப்பட்டது. சிந்துவெளி மக்கள் அறிந்த நீர் எருமை பிற்பட்ட காலத்திலே சீனாவில் இடம் பெற்றுள்ளது.

வரலாற்றுக் காலத்துக்கு முந்திய உலகுக்கு அளித்தவற்றுள் எல்லாம் பல்லோராலும் பாராட்டப்பட்டது, ஒருகால் மனைக் கோழியே போலும். மனைவளர் கோழி இனங்கள் எல்லாம் இந்தியக் கானங் கோழியிலிருந்தே தோன்றியவையென ஆராய்ச்சியாளர் ஒருமுகமாக உரைக்கின்றனர். சிந்துவெளி மக்கள் மனைக்கோழியை அறித்திருந்தாரெனினும், அதன் எச்சமிச்சங்கள் அருகியே காணப்பட்டன. ஒருகால், கங்கைப் பள்ளத்தாக்கிலிருந்த புதுக்கற்கால இந்தியரே அதனை முதன்முதல் மனைவளர் பறவையாகப் பழக்கினாராகலாம். அங்கிருந்து பர்மா (Burma) வழியாக அது சீனாவுக்குப் போனதாகலாம். சீனாவில் அது 2ஆம் ஆயிரவாண்டின் நடுப்பகுதியிற் காணப்படுகிறது. ஏறத்தாழ, அதே காலத்தில் எகிப்தியர் அதனை ஓர் அரிய, பெருவாழ்வுக்குரிய பறவையென அறிந்திருந்தனர். இத்தொல் பழங்காலத்திலுமே, இந்தியா உலகின் ஏனைய நாகரிகப் பகுதிகளோடு தொடர்பு கொண்டிருந்தது என்பது தெளிவு.

## அழிவுக்குப் பின்:

ஆரியர்களின் படையெடுப்பால் சிந்துவெளி நாகரிகம் அழிந்ததேயாயினும் சிந்துவெளி மக்களின் செல்வாக்கு இந்து சமயத்தில் என்றுமே அழியாது. படையெடுப்புக்கு அஞ்சியோடிய சிந்துவெளி மக்கள் இந்தியாவின் தெற்கிலும் கிழக்கிலும்சென்று ஆங்காங்கே வாழலாயினர். ஓடாமல் நின்றோருள் போரில் கொல்லப்பட்டவர் போக, கணிசமான தொகையினர் அங்கேயே வாழ்ந்தனர். ஆரியர் பஞ்சாப்பிலும் பின்னர் கங்கைச் சமவெளியிலும் குடியேறி வாழ்ந்து, "ஆர்யா வர்த்தம்" என்னும் தமது இராச்சியத்தை அமைத்தனர். தாம் வெற்றி பெற்றதால் தம்மை உயர்ந்தோர், மேன்மக்கள் என்று சொல்லிக் கொண்டனர். முதலிலே ஓர் இடத்தின் பெயரால் உண்டான ஆர்யர் என்னும் சொல் இப்போது "உயர்ந்தோர்" என்னும் பொருளுடையதாயிற்று. ஆரியர் தம்மால் வென்று அடிப்படுத்தப்பட்ட மக்களைக் "கரிய நிறமுடைய தஸ்யுக்கள்" என்று இழிவாகக் கூறினர். "தஸ்யு" என்னுஞ் சொல் தெய்வங்களுக்குப் பகைவன், "கீழ்மகன்" என்று பொருள்படும். ஆரியர் தம்மால் வெல்லப்பட்ட மக்களை இழித்ததுமன்றி, அவர்கள் வழிபட்ட கடவுளையும் பழித்தனர். நாம் இருக்கு வேதத்தில் இத்தகைய இப்பழிப்புரைகளைக் காண்கிறோம். ஆனால் காலப்போக்கில், ஆரியர் அந்தத் திராவிட மக்களின் தெய்வங்களையும் அவர்களின் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். வேதங்களிற் பிற்பட்ட அதர்வ வேதம் இதற்குச் சான்றுபகர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் ஆரியருடைய வைதிகப் பண்பாடு திராவிட மக்களின் சமயப்பண்பாட்டோடு ஒன்றுகலந்து விட்டது. அதன் விளைவே இந்துசமயம். 'வெற்றிவீரர்களின் பண்பாட்டைத் தோற்ற மக்களின் பண்பாடு இப்போது வென்றுவிட்டது' என்று வரலாற்று ஆசிரியர் எஸ்.கே. சட்டர்ஜி முன்னே குறிப்பிட்ட நூலிற் கூறுகிறார். அவர் மேலும் வியப்பூட்டும் பல உண்மைகளை அந்நூலில் எடுத்துக் கூறுகிறார். அவற்றை யெல்லாம் எழுதுவதாயின் வரம்பின்றி நீண்டுவிடும் ஆதலால் சில கருத்துக்களை மாத்திரம் சுருக்கமாகத் தருவாம்:

1. இருக்கு வேதத்தில் ஆரியர் வழிபட்ட இந்திரன், வருணன், அக்கினி. சோமன், சூரியன், உஷஸ், பூஷன், பர்ஜன்யன் என்பன போன்ற தெய்வ-ங்கள் எல்லாம் பின்னணியிற் போய் மங்கி மறைய, சிந்துவெளித் திராவிடரின் சிறப்புடைய தெய்வங்களான சிவனும் உமையும் (அப்பனும் அம்மையும்) இந்து சமயத்தில் முதன்மை பெறுகின்றனர். சிவன் (செந்நிறமுள்ளவன்) என்னும் தமிழ்ப் பெயரை ஆரியர் தமது மொழியில் ருத்ர (Rudra) என்று மொழி பெயர்த்து, அப்பெயர் தமது 'புயற் கடவுளாகிய' ருத்ரன் (Rudra) பெயரோடு ஒற்றுமை உடையதாயிருக்கக் கண்டு, அந்த உருத்திரனையே சிவன் என்று அழைத்தனர். இதனால் ஆரியருடைய உருத்திரனும் தமிழருடைய சிவனும் ஒருவராயினர்.

2. சிவனும் உமையும் போலவே விஷ்ணுவும் ஸ்ரீயும் இந்து சமயத்தில் முக்கியம் பெறுகின்றனர். விஷ்ணு என்னும் தெய்வமும் ஆரியர்களது தெய்வம் ஒன்றும், திராவிடரது தெய்வம் ஒன்றும் ஒன்றிணைந்த ஒரு கூட்டுத்தெய்வமாகும். ஆரியர்களது விஷ்ணு முதன்மையில்லாத ஒரு சூரியத் தெய்வம் (Sun god) ஆகும். சிந்துவெளித் திராவிடர்கள் விண்ணோன் என்பது போன்ற பெயருடைய ஒருதெய்வத்தை உடையவராயிருந்தனர். இத்தெய்வத்தின் பெயர் விண் (ஆகாயம்) என்னும் தமிழ்ப் பெயரடியாகப் பிறந்தது. விண்ணின் நிறமான நீலநிறமுடையவரே இக்கடவுள். வடநாட்டுப்பேச்சு வழக்கு மொழியான பிராகிருதத்தில் இப்பெயர் விண்ணு (Vinhu) என்று வழங்குவதால் அது தமிழ்ப் பெயரோடு நெருங்கிய ஒற்றுமையுடையது. தென் இந்தியத் தமிழர் இக்கடவுளை மாயோன் (கருநிறமுடையன்) என்றே முற்காலத்தில் வழங்கினர்.

3. சிவனை யோகியாக வழிபட்ட சிந்துவெளித் திராவிடர்கள் தம் வழிபாட்டின் ஓர் அங்கமாக யோகப் பயிற்சிகளும் செய்தனர். சிந்துவெளி மக்களிடம் வழிவழியாகப் பயின்று வந்த யோகக் கலை பிற்காலத்திலே சைவ ஆகமங்கள் ஆக்கப்பட்டபோது, ஆகமத்தின் ஒரு பகுதியாக அமைந்தது. சைவ ஆகமங்கள் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாகங்களை உடையன. யோக சூத்திரம் என்னும் நூல் செய்த பதஞ்சலி முனிவர், சிவாகமங்களிலிருந்து இக்கலையை அறிந்திருக்கலாம்; அல்லது அவர் வடநாட்டில் ஆரியரோடு வாழ்ந்த திராவிட மரபில் வந்தவராகலாம்.

4. ஆரியரின் தெய்வ வழிபாடு, தீவளர்த்து அவிசொரிந்து வேட்கும் ஓமமாகும் (ஹோமம்). இந்து சமயத்தில் இப்போது இவ்வழக்கம் அருகி வர, திராவிடரின் பூசை முறையே பெருவழக்காய் இருக்கிறது. பூவைக்கொண்டு செய்வதால் இவ்வழிபாடு பூசெய் எனப்பட்டது. இத் தமிழ்ச்சொல் பின்னர்ப் பூசை என்று மருவிற்று. ஆரியர்கள் இச் சொல்லைப் 'பூஜா' என்று தமது மொழியில் ஆக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். ஆரியர்கள் தமிழரிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்த வழிபாட்டு முறை முதன்முதலில் பகவத்கீதையில் ஆட்சி பெற்றுள்ளது. அத்தியாயம் 1 X. செய்யுள் 26.

**'இலையேனும் பூவேனும் கனியேனும் நீரேனும் அன்புடன் எனக்கு அளிப்பவன் ஆயின், முயற்சியுடைய அன்னவன் அன்புடன் அளித்ததை உண்பேன் யான்'**

-(சுப்பிரமணிய பாரதியார் மொழி பெயர்ப்பு)

**இச் சுலோகத்தில் ஸ்ரீ பகவான் கூறுவது உண்மையிலேயே தமிழர் வழிபாட்டு முறையான பூசையே.**

**உசாத்துணை நூல்கள்**


1. S.PIGGOTT--PREHISTORIC INDIA
2. E.J. RAPSON -- ANCIENT INDIA,
3. E.J. RAPSON -- CHAPTER IN CHAMBRIDGE HISTORY OF INDIA, VOL.1
4. E. MACKAY--EARLY INDUS CIVILIZATIONS.
5. SIR JOHN MARSHALL --MOHENJO DARO AND THE INDUS CIVILIZATION, 3 VOLS.
6. SIR R. MORTIMER WHEELER- HARAPPA
7. P.T. SRI NIVASA IYENGAR-
    1. PRE. ARYAN TAMIL CULTURE
    2. STONE AGE IN INDIA
    3. HISTORY OF THE TAMILS **(from the earliest times to 600 A.D.)**
8. S.K. CHATTERGI AND OTHERS- HISTORY AND CULTURE OF THE INDIAN PEOPLE, VOL.I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க வழிபாடு பரவலும் பழைமையும்

சிவலிங்க வழிபாடு பாரத நாட்டில் வடக்கே காசுமீரம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையும் பரவிக் காணப்படுகின்றது. சிவபூமி என்று திருமந்திரம் குறிப்பிடும் இலங்கையிலும் இவ்வழிபாடு தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. இற்றைக்கு ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்திற் சிவலிங்க வழிபாடு பரவலாகக் காணப்பட்டது. மொகஞ்ச தாரோ, அரப்பா ஆகிய புதையுண்ட புராதன நகரங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான சிவலிங்க உருக்கள் இதற்குச் சான்று பகர்வனவாய் உள்ளன. சிந்துவெளி நாகரிகம் இந்தியாவுக்குள் ஆரியர் வருகையோடு தொடங்கிய வேதகாலத்துக்கு (கி.மு.2000) முற்பட்டது; ஆரியர் அல்லாத இனத்து மக்களுக்கு (இம் மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறுகின்றனர்) உரியது. சிவலிங்க வழிபாடு தம்மினத்தவர் அல்லாத பழங்குடிகளிடம் காணப்பட்டமையால் ஆரியர் அதனைப் பழித்தனர் என்பதற்கு இருக்கு வேதத்திற் சான்றுண்டு. ஆயினும், காலப்போக்கிலே பழங்குடிகளின் பண்பாட்டுக் கூறுகள் ஆரிய மக்களின் வாழ்க்கையிற் புகுந்த பின்னர் வடநாட்டிலே ஆரியரும் சிவலிங்க வழிபாட்டை ஏற்றுக்கொண்டனர். இருக்கு வேத காலத்து ஆரியரின் இயற்கைத் தெய்வங்கள் சிறப்பிழந்து போக, சிவ வழிபாடும், திருமால் வழிபாடும் இதிகாச காலத்திலே தலையெடுத்தன. இக்காலம் முதலாகச் சைவம், வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களும் வைதிக சமயங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறு, இருக்குவேத காலத்திலும் அதற்கு முன்பும் திராவிட இனத்தைச் சேர்ந்த பழங்குடிகளிடம் காணப்பட்ட சிவலிங்க வழிபாடு, இதிகாச கால முதல் இந்தியா எங்கணும் பரவலாயிற்று. இந்தியாவின் வடகோடி தொட்டுத் தென்கோடி வரையும் பரவியுள்ள பன்னிரு சிவாலயங்களில் உள்ள சிவலிங்கங்கள் மிக்க பழைமை வாய்ந்தவை என்று நூல்கள் கூறும். காசியிலுள்ள விசுவேசுவரலிங்கம், குசராத்திலுள்ள சோமநாதலிங்கம், உச்சயினியிலுள்ள மகாகாளலிங்கம், அமரேசுவரலிங்கம், இமயமலையிலே கேதாரத்திலுள்ள திருக்கேதாரநாதலிங்கம், வங்கத்திலுள்ள வைத்தியலிங்கம், நருமதைக் கரையிலுள்ள ஓங்காரநாதலிங்கம், நாசிக்கிலுள்ள திரயம்பகேசுவரலிங்கம், கௌதமேசலிங்கம் ஆந்திராவிலே தக்கினியிலுள்ள பீமசங்கரலிங்கம், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள சீபர்ப்பதநாத (ஸ்ரீசைவ) லிங்கம், இராமேசுவரத்திலுள்ள இராமேச்சரலிங்கம் என்பவையே இப்பன்னிரண்டு இலிங்கங்களுமாகும்.

இன்றும் வடநாட்டிலே சிவனை வழிபடுவோர் இலிங்கங்களை மட்டுமே நிறுவி வழிபடுகின்றனர். ஆளுருவில் அமைந்த சிவமூர்த்தங்களை ஆலயங்களில் நிறுவி வழிபடும் வழக்கம் அங்கே இல்லை. சிவவழிபாடு சிறந்து விளங்கும் தென்னாட்டிலே எண்ணிறந்த சைவத் திருக்கோயில்கள் உள்ளன. இங்கே சிவபிரானுடைய பல்வேறு ஆள் வடிவ மூர்த்தங்களைச் சிவாலயங்களில் நிறுவி வழிபடும் வழக்கம் உளதாயினும் மூலத்தானம் எனப்படும் கருவறையிலே சிவலிங்கம் மட்டுமே காணப்படும். தென்னாட்டில் வேதகாலத்துக்கு முற்பட்ட கற்காலத்திலேயே இலிங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். திருப்பதியை அடுத்துள்ள குடிமல்லம், களத்தூர், குடுமியான்மலை என்னும் இடங்களிலுள்ள பழைய கோயில்களிற் காணப்படும் இலிங்கங்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை (கி.மு. 2ஆம் நூற்றாண்டின) என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவிலில் கல்லாலான, பழைய இலிங்கங்கள் இரண்டு இன்றும் உள்ளன. இவை பீடமற்ற இலிங்கங்களாதலினால், மிகவும் பழங்காலத்தன என்று கருதப்படுகின்றன.

தென்னாட்டு வழிபாட்டு முறையே நிலவிவரும் இலங்கையிலும் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம், நகுலேச் சரம் என்பவை தொன்மைச் சிறப்பு வாய்ந்த சிவாலயங்களாய்த் திகழ்கின்றன. இவற்றுள் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் இரண்டும் தேவாரம் பெற்ற சிறப்புடையவை. இலங்கையின் ஆதிக்குடிகளாகிய நாகர்களது தலைசிறந்த வழிபாட்டுத் தலமாக, விஜயன் இலங்கைக்கு வந்தபோது (கி.மு 5ஆம் நூ. ஆ) விளங்கியது என்று வரலாறு கூறுகின்றது. கி.பி. 16ஆம் நூற்றாண்டுவரை நிலவிப் பின்னர் மூன்று நூற்றாண்டுகளாக மண்மூடிக் கிடந்த பழைய கோயில் இருபதாம் நூற்றாண்டிலே மீள நிறுவப்பட்டுள்ளது. அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய மகாலிங்கம் தொன்மைச் சிறப்புடன் இன்றும் விளங்குகின்றது.

## சங்ககாலத்திற் சிவலிங்க வழிபாடு:

தமிழகத்திலே கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய சிவலிங்கங்கள் காணப்பட்டுள்ளமையால், சங்ககாலத்தில் இவ்வழிபாடு இங்கு நிலவியது என்பது பெறப்படும். ஆயினும் 'சிவன்' என்னுஞ் சொல்லோ, 'இலிங்கம்' என்னுஞ் சொல்லோ சங்கத் தொகை நூல்களிற் காணப்படவில்லை. இச்சொற்கள் சங்ககாலத்துக்குப் பின்னரே, திருமூலரின் திருமந்திரத்திலும் நாயன்மார்கள் அருளிய நூல்களிலும் பயின்றுவரக் காண்கின்றோம். ஆயின் 'சிவன்' என்னும் கடவுளைக் குறிப்பதற்கு 'ஆலமர் செல்வன்', 'கறைமிடற்று அண்ணல்', 'முக்கணான்' முதலிய வேறு பல பெயர்கள் சங்கத்தொகை நூல்களிலே காணப்படுகின்றன. இவ்வாறே 'இலிங்கம்' என்பதைக் குறிப்பதற்கும் 'சுந்து' ('கந்தம்' எனவும் வழங்கும்) என்னுஞ் சொல் தொகைநூல்களிற் காணப்படுகின்றது. 'கடவுள் உறையுந் தறி' என்றே பழைய உரையாசிரியர்மார் இதற்கு விளக்கங் கொடுத்துள்ளனர்.

**'கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்**
**பலிகண் மாறிய பாழ்படு பொதியில்'**
**'......................மரஞ்சேர் மாடத்து (புறநானூறு 52)**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**
**ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை' (அகநானூறு 167)**
**'மரையேறு சொறிந்த மாத்தாள் கந்தின்**
**சுரையிவர் பொதியில் அங்குடிச் சிறூர்**
**நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை' (அகநானூறு, 287)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்**
**கடவுள் போகிய கருத்தாட் கந்தத்து'** **(அகநானூறு, 307)**
**'கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ**
**வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்'**
**(பட்டினப்பாலை, வரிகள் 246-249)**

**சங்கத் தொகைநூல்களில் வரும் இக்குறிப்புகளிலிருந்து நாம் அறியுஞ் செய்திகள் வருமாறு:**

கந்துகள் கல்லாலேனும் மரத்தாலேனும் செய்யப்பட்டு, மக்கள் வழிபாட்டுக்காகப் பலர் கூடும் அம்பலங்களில் (பொதியில்) நிறுவப்பட்டிருந்தன. இக்கந்துகளின் அடிப்பாகம் பருத்திருந்தது. மாத்தாள் கருந்தாள் - இத்தொடருக்குக் கருநிறமுடைய அடிப்பாகம் என்று உரை எழுதப்பட்டிருந்தது. இவை நிறுவப்பட்ட இடத்தில் பலிபீடம்(இட்டிகை) அமைக்கப்பட்டிருந்தது. இப்பலிபீடம் மெழுகிய திண்ணையாகவும் (மெழுகாப் புன்றிணை) அமைந்திருந்தது. மக்கள் இப்பலிபீடத்தில் மலர்களை இட்டு வழிபட்டனர் (மலரணி மெழுக்கம்). மாலைப் பொழுதில் மகளிர் நீராடி அவியாவிளக்கை (நந்தா விளக்கு) ஏற்றி வந்தனர். கடவுள் உறையும் இடமாகிய இக்கந்துகளுக்கு முன்னால் யாழும் முழவும் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன (கலிகெழு கடவுள் கந்தம்).

(போரினால் அழிவுற்ற ஊர்களில் இப்பொதியில்கள் பாழடைந்து கிடந்தன; கடவுட்கு நாட்பலி இடுவதும் இல்லையாயிற்று. கந்துகளிலிருந்து கடவுள் நீங்கி விடவே, விலங்குகள் உடலின் தினவு போக்க அவற்றிலே உராய்ந்தன.)

இங்கே குறிக்கப்பட்ட கந்து, சிவலிங்கமே என்பதை ஆசிரியர் மறைமலை அடிகள் அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார். டாக்டர் மா. இராசமாணிக்கனாரும் இக்கருத்தையே கொண்டுள்ளார். பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையில் ஆசிரியர் மறைமலை அடிகள் பின்வருமாறு கூறியுள்ளார்.

'இனி, முன்னாளிற் கடவுளைத் தொழுதல் வேண்டிச் சமைக்கப்பட்ட கோயில்கள் 'அம்பலங்கள்', என்னும் பெயருடையவாயிருந்தன. அவற்றின்கட் கடவுளை வழிபடுவதற்குத் தொழுகுறியாக நிறுத்தப்பட்ட உரு, 'கந்து' எனப்பெயர் பெற்றது. அவ்வுருவினையே இக்காலத்திற் 'சிவலிங்கம்' என வழங்கி வருகின்றனர். இந்நாளிற்போல அந்நாளில் மக்களுருவையொப்பச் செய்த திருவுருவங்கள் பெரும்பாலும் கிடையா. 'சிவலிங்கம்' எனப்படுகின்ற கந்து உருவையே வழிபட்டு வந்தனர். இச்சிவலிங்க உருத்தான் மிகப் பழைய நாட்டொட்டு எல்லாச் சாதியாராலும் எல்லாத் தேயத்தாராலும் வணங்கப்பட்டு வந்ததென வரலாற்று நூலாராய்ச்சிவல்ல புலவோர்கள் உரை நிறுவுகின்றனர். இதனாலன்றே சிவபிரான் திருக்கோயில்கடோறும் முதன்மையான கரு இல்லில் இச்சிவலிங்க அருட்குறியும், முதன்மையில்லா ஏனைய இடங்களில் ஏனைய உருவங்களும், நிறுத்தப்பட்டிருக்கின்றன. நச்சினார்க்கினியருங் 'கந்து' என்பதற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெய்வமுறையுந்தறி' என்றுரை கூறினாராகலின், ஈண்டு அது சிவலிங்கமேயாதல் வேண்டுமெனத் தெற்றெனத் துணியப்படும். திருமுருகாற்றுப்படையிலும் நக்கீரனார் 'கந்துடைநிலையினும்' என்று அருளிச் செய்தமை காண்க. அற்றேல், நாகரிகம் நிரம்பிய பண்டைநாளில் மக்களுருப்போல் திருவுருவங்கள் சமைத்து வழிபடாமை என்னையெனின்: காணவுங் கருதவும் படாத முதல்வனுக்குத் தாந்தாம் நினைந்தவாறு உருவங்கள் சமைத்து வணங்கல் பொருந்தாதாகலின், அம் முதற்பொருளை ஒரு பிழம்பாகக் கொண்டு வழிபடுதற்கு ஓர் அறிகுறியாகப் பிழம்பு வடிவான கந்துரு நிறுத்தினாரென்க. பிழம்புருவின் வழிபாடுபோல ஏனைய உருவின் வழிபாடுகள் சிறவாமை உண்மை நூல்களுட் கண்டு தெளிக.

## சிவலிங்க வழிபாடு பற்றிய பொருந்தாக் கூற்று:

இலிங்கம் எதனைக் குறிக்கின்றது? இவ்வழிபாட்டின் நோக்கம் என்ன? இவ்வினாக்களுக்குப் பலர் பலவாறு விளக்கங் கூறியுள்ளனர். சிவலிங்க வழிபாட்டு மரபை உள்ளவாறு அறிந்து கொள்ளாத மேனாட்டு ஆராய்ச்சியாளர், அரைகுறையாகச் செய்திகளை அறிந்துகொண்டு தம் மனம் போனவாறு விளக்கங் கூறியுள்ளனர். சிவலிங்க வழிபாடு தாம் வெற்றிகொண்ட பழங்குடிகளின் வழிபாடாதலால், இருக்கு வேதகால ஆரியர் அதனை எள்ளி இகழ்ந்தனர். பின்னர் ஆரியரும் அவ்வழிபாட்டை ஏற்றுக்கொண்டனராயினும், புராதன காலத்திலே சைவம், வைணவம் ஆகிய இரு பெருஞ் சமயங்களுக்கு மிடையே எழுந்த பூசல் காரணமாக ஒன்றையொன்று இழித்துப் பழிக்கும் பாங்கிலே புராணங்களும் பிறநூல்களும் ஆரிய மொழியிலே தோன்றின. இவ்வாறு சைவத்தைப் பழிக்கும் நோக்கமாக எழுந்த சில புராணங்களிற் சிவலிங்க வழிபாடும் திரித்துக் கூறப்பட்டுள்ளது.

காழ்ப்பு மனப்பான்மையால் எழுந்த நூல்கள் சான்றாகக் கொள்ளத்தக்கனவல்ல. சைவ மரபிலே தோன்றிய நூல்களே உண்மையை அறிவதற்கு உதவுவன. காமிகம், காரணம், வாதுளம், மகுடம் போன்ற சைவாகமங்களும், திருமந்திரம், சிவஞான சித்தியார் போன்ற தமிழ்ச் சாத்திர நூல்களும் சிவலிங்கம் பற்றிய விளக்கம் தருகின்றன. மேலும் தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளிலும் ஆங்காங்குச் சில பல குறிப்புகள் உள்ளன. இத்தகைய உண்மை நூல்களை ஆதாரமாகக் கொண்டே சிவலிங்க வழிபாட்டிற்கு விளக்கங் காணப்படல் வேண்டும்.

## சிவலிங்க வழிபாடு தீப்பிழம்பு வழிபாடே:

கட்புலனாகாக் கடவுளை எண்ணி வழிபடுவதற்கு வாயில்களாய் இயற்கையில் நிற்பவை ஞாயிறு, திங்கள், தீ என்னும் முச்சுடர்களுமேயாம். இவற்றுள்ளும் ஞாயிறே தனது ஒளியினாலும், வெப்பத்தினாலும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையுஞ் செய்யவல்லதாய் இருப்பதால், அதனிடமே கடவுளுடைய அருட்செயலைப் பண்டைக்காலத்தில் மக்கள் கண்டனர். இதனாற் சூரியனைக் கடவுளாக வழிபடும் வழக்கம் பாரத நாட்டில் மட்டுமன்றி, பண்டைய நாகரிகங்கள் தோன்றிய எகிப்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரீசு, பாபிலோனியா முதலிய பிற நாடுகளிலும் நிலவியது. இனி, இஞ்ஞாயிறு தானும் விண்ணிலே எட்டாத தொலைவில் விளங்குவதால் மண்ணிலே மக்களுக்கு எட்டக்கூடிய நிலையில் ஞாயிற்றின் இயல்புகளை ஓரளவு கொண்டு விளங்கும் தீப்பிழம்பு இறைவழிபாட்டிற்கு ஏற்றதாயிற்று. ஆகவே கட்புலனாகாக் கடவுளை நினைந்து வழிபடுவதற்குக் கட்புலனாகுந் தீப்பிழம்பு சாலவுஞ் சிறப்புடையதாகக் காணப்பட்டது.

இனி, இத் தீப்பிழம்பு தானும் கட்புலனாற் காணுமளவுக்கே இடந்தரவல்லது. அன்புமேலீட்டால் அணைப்பதற்கும், பூச்சாந்தம், ஆடையணிகள் முதலியவற்றால் ஒப்பனைசெய்து கண்டுகளிப்பதற்கும் இடந்தருவதன்று. ஆகவே, இவ்வாறெல்லாம் செய்து வழிபடுவதற்கு அத் தீப்பிழம்பின் வடிவமாகக் கல்லினாலும் மரத்தினாலும் உலோகத்தினாலும் திரண்டு நீண்டு தலை குவிந்த திருவுருவம் செய்யப்படலாயிற்று. ஒளிவடிவமாய் நின்று உலகுயிர்களைப் படைத்துக் காத்து அருள் செய்யும் முதல்வனுக்கு அடையாளமாகவே இவ்வுருவம் அமைத்துக்கொள்ளப்பட்டது. இந்த அருட்குறியைப் பழந்தமிழர் 'கந்து' என்று வழங்கினர் என்பதை மேலே கண்டோம். ஆரிய மொழியில் இது 'லிங்கம்' எனப்பட்டது. அம்மொழியிலும் இச்சொல்லுக்கு 'அடையாளம்' அல்லது 'குறி' என்பதே பொருளாகும். சிவனைக் குறிக்கும் அடையாளமாதலின் இது 'சிவலிங்கம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாயிற்று.

தீப்பிழம்பு வடிவமாகக் கல் முதலிய பருப்பொருள்களாற் செய்யப்பட்ட இவ்வருட் குறியை நிறுத்துவதற்கு ஆதாரமாக வட்ட வடிவமான ஒரு பீடம் அமைக்கப்பட்டது. இப்பீடம் அத்தீப்பிழம்பு எரிந்து நிற்கும் குண்டத்துக்கு அடையாளமாகும். இவ்வாறு பீடத்திற் பொருத்தப்பட்ட அருட்குறியே பீடலிங்கம் எனப்படுவது. நாம் பொதுவாகச் சிவலிங்கம் என்று வழங்கும்போது பீடலிங்கத்தையே கருதுகின்றோம். பீடமில்லாத இலிங்கங்களும் பண்டைக்காலத்தில் இருந்தனவென்பதற்குக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் இருக்கும் இரண்டு பழைய இலிங்கங்கள் சான்றாகும்

சிவபெருமான் தீப்பிழம்பு வடிவினன் என்று சைவத்திருமுறைகள் பல இடங்களிலே குறிப்பிடுகின்றன. அவனருளே கண்ணாக, அவனைக் கண்டு தேவார திருவாசகங்களைப் பாடிய நாயன்மார் கூற்றுகள் சில வருமாறு:

**'தழல் சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்.'**

**(முதலாந் திருமுறை, திருமுதுகுன்றம், 7)**

**'தீயினார் திகழ் மேனியாய் தேவர்தாந்தொழு தேவன் நீ'**

**(இரண்டாந் திருமுறை, திருஅறையணிநல்லூர், 5)**

**'பொங்கழல் உருவன் பூதநாயகன்'**

**(மூன்றாந் திருமுறை, திருஆலவாய், 1)**

**இவை ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்குகளாகும்.**

**'முழுத்தழல் மேனித் தவளப் பொடியன்'**

**(நான்காந் திருமுறை, தனித்திருவிருத்தம், 5)**

**'அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வனா நீயலையோ'**

**(நான்காந் திருமுறை, தனித்திருவிருத்தம், 3)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நெருப்புருவு திருமேனி வெண்ணீற்றானை'**

**(ஆறாந் திருமுறை, திருவலம்புரம், 3)**

**இவை திருநாவுக்கரசரின் திருவாக்குகளாகும்.**

**'தண்ணார் மதிசூடி தழல்போலுந் திருமேனி'**

**(ஏழாந் திருமுறை, திருவெண்ணெய் நல்லூர், 6)**

**'செய்வகை யறியேன் சிவலோகா தீவணா சிவனே'**

**(ஏழாந் திருமுறை, திருவிடைமருநூர், 8)**

**'நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை'**

**(ஏழாந் திருமுறை, திருக்கோலக்கா, 6)**

**இவை வன்றொண்டர் வாக்குகளாகும்.**

**'அந்தமில் பெருமை அழலுருக் கரந்து'**

**(திருவாசகம், கீர்த்தித் திருவகவல், வரி 92)**

**'விரிந்தே யெரியுஞ் சுடரனையாய்'**

**( நீத்தல் விண்ணப்பம், 38)**

**'தீமேனி யானுக்கே சென்றூ தாய் கோத்தும் பி'**

**( திருக்கோத்தும்பி, 20)**

**'செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி'**

**( திருப்பள்ளியெழுச்சி, 8)**

**இவை மாணிக்கவாசகர் மணிவாக்குகளாகும்.**

இவ்வாறு சைவத்திருமுறைகளிற் சிவபிரானைத் செந்தழல் உருவினன் என்று பல்காலும் கூறும் குறிப்புகளை நோக்குமிடத்துச் சிவனது அடையாளமாக அமைந்த சிவலிங்கம் தீப்பிழம்பின் வடிவமே என்பது தேற்றமாம்.

## சிவலிங்கத் தோற்றம் பற்றிய புராணக் கதை:

சிவலிங்கத்தின் தோற்றத்தை விளக்கும் கதையொன்று புராணங்களிற் கூறப்படுகின்றது. அக்கதையின் சுருக்கம் வருமாறு:

படைத்தற் கடவுளாகிய பிரமனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் ஒருகால் இறுமாப்புக் கொண்டு, தமக்குள் யார் பெரியவன் என்பதை முடிவு செய்ய முனைந்தனர். பிரமன் உலகங்களைப் படைப்பதால் தானே பெரியவன் என்று வாதிட்டான். அப்படைப்புகளை எல்லாங் காப்பதால் தானே பெரியவன் என்று எதிர்வாதஞ் செய்தான் திருமால். இருவரும் கலகம் விளைத்தபோது அவர்கள் நடுவே பேரொளிப் பிழம்பொன்று தோன்றியது. அதன் அடியும் முடியும் கண்ணுக்கு எட்டாதவாறு எல்லை கடந்து தோன்றவே, பிரமனும் திருமாலும் அவ்வராய்ச்சியில் ஈடுபட்டனர். பிரமன் அன்னத்தின் உருவங்கொண்டு முடியைத் தேடி மேலே பறந்தான். திருமால் பன்றி உருக்கொண்டு அடியைத்தேடி பாதாளம்வரை அகழ்ந்து சென்றான். இருவரும் தம் முயற்சியில் தோல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு செருக்கொழிந்து மீண்டனர். பின்னர் இருவரும் வேண்ட, ஒளிப்பிழம்பாய் நின்ற சிவபிரான் அப்பிழம்பினின்றும் தமது திருவுருவத்தை அவர்களுக்குக் காட்டித் திருவருள் நல்கினார்.

இக்கதை பதினெண் புராணங்களுள் இடம்பெறும் சிவமகா புராணத்திலும் வாமன புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. திருமூலர் இதனைப் பின்வரும் பாடல்களிலே குறிப்பிடுகின்றார்:

**'பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்**
**பிரமன்மால் தங்கள்தம் பேதைமையாலே**
**பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க**
**அரனடி தேடி அரற்றுகின் றாரே.'**

**'அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்**
**படிகண் டிவர்மீண்டும் பார்மிசைக் கூடி**
**அடிகண்டிலேன் என் றச்சுதன் சொல்ல**
**முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே.'**

தேவார திருவாசகங்களிலும் இக்கதை பலமுறை குறிப்பிடப்படுகின்றது. திருஞானசம்பந்தர் பதிகந்தோறும் 'ஒன்பதாம் பாடலில், இக்கதையை ஒரு நியதியாய்க் குறிப்பிடுகின்றார். திருமாலுக்கும் பிரமனுக்கும் இடையே நின்ற ஒளிப்பிழம்பே சிவலிங்கமூர்த்தி என்றும், அவ்வொளிப்பிழம்பினின்று சிவபிரான் தமது உருவத் திருமேனியை அவ்விருவருக்குங் காட்டிய வடிவமே இலிங்கோற்ப மூர்த்தி என்றும் புராணங்கள் கூறும். புராணங்கள் சிவனுக்குக் கூறும் மூர்த்தி பேதங்கள் அறுபத்து நான்கினுள் முதற்கண் இலிங்கமும் அதனை அடுத்து இலிங்கோற்பவரும் வைக்கப்பட்டிருப்பதும் கருதத்தக்கது. அனற்பிழம்பாகிய இலிங்கத்திலிருந்து சிவபிரான் வெளிப்படும் பாவனையில் அமைக்கப்பட்டிருப்பதே இலிங்கோற்பவ மூர்த்தியாகும். இலிங்கத்தின் முற்பக்கத்தின் நடுவே அண்ட வடிவில் வரைந்து, அதனுள்ளே சிவனது உருவம் நெற்றியிலிருந்து முழந்தாள் வரையும் வெளியிலே தெரியுமாறு உருவாக்கப்படுவதே இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்பாகும். அடிமுடி தேடிய புராணக்கதையும், சிவலிங்கமாவது தீப்பிழம்பின் வடிவமே என்பதை ஐயத்துக்கிடமின்றி நிலைநாட்டுகின்றது. சேக்கிழார் பெருமான் சிவலிங்கத்தின் உண்மை இயல்பைப் பின்வரும் ஒரு பாடலிலே மிக அழகாக விளக்கியுள்ளார்.

**"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்**
**நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்**
**நாணாது தேடியமால் நான்முகனுங் காணநடுச்**
**சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்"**

இவ்வருமைத் திருப்பாடலிலே 'லிங்கம்' என்னும் வடமொழிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுக்கு உரிய உண்மைப் பொருள் இதுவென்பதையும் (2ஆம் அடி), சிவலிங்கம் திருமாலுக்கும் பிரமனுக்கும் காட்டிய தழற்பிழம்புத் தோற்றமே என்பதையும் (3ஆம் 4ஆம் அடிகள்), அது முதல்வனின் அருவத் திருமேனிக்கும் உருவத் திருமேனிக்கும் காரணமான அருவுருவத் திருமேனி என்பதையும் (1ஆம் அடி) சேக்கிழார் பெருமான் விளக்கியிருக்குந் திறன் வியந்து பாராட்டத்தக்கது.

## அடிமுடி தேடிய கதையின் உட்பொருள்:

அடிமுடி தேடிய செய்தி கதைவடிவிலே புராணங்களிற் கூறப்பட்டிருப்பினும் அதற்குள் அரிய தத்துவப் பொருள் பொதிந்திருப்பதைப் பெரியோர் விளக்குவர். திருமூலர் ஒரு விளக்கந் தருகின்றார். திருமால் சிவலிங்க மூர்த்தியின் அடியை அறியமுடியவில்லையென்றால், அவன் சிவபெருமானது சத்தியை, அதாவது அருளை உணரமுடியவில்லை என்பதே உட்பொருளாகும். அடி என்பது சத்தியைக் குறிப்பது; சத்தியே திருவருளாகும். பிரமன் முடியைக் காணாதபோதும் கண்டதாகப் பொய் சொன்னான். சிவலிங்கத்தின் முடி சிவஞானமாகும். ஆகவே பிரமன் சிவஞானத்தை உணரமுடியவில்லை என்பதே உட்பொருள். பிரமன் வேதங்களை ஓதுபவன் என்று சொல்லப்படுவதால், வேதங்கள் சிவஞானத்தை உணரவில்லை என்று கொள்ளல் வேண்டும். உண்மையான சிவஞானத்தைச் சிவாகமங்களே உணர்த்தவல்லன. அவ்வாறாகவும் இருக்கு முதலாம் நான் மறைகள் சிவஞானத்தை (மெய்ப்பொருளை) உணர்த்துவன எனக்கூறுவது பொய்யுரையாம். இதுவே 'பிரமன் முடியைக் கண்டதாகப் பொய் சொன்னான்' என்பதன் விளக்கமாகும். இது பற்றியே மணிவாசகரும்

**"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே"**
**(சிவபுராணம் வரி 34-35)**

என்று அருளிச் செய்தார். திருமூலர் அடிமுடி தேடிய கதைக்குத் தரும் இவ்விளக்கம் பின்வரும் பாடல்களில் அமைந்துள்ளது:

**"காலுந் தலையும் அறியார் கலதிகள்**
**காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்**
**பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்**
**காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே."**

**"தலையடி யாவ தறியார் காயத்தில்**
**தலையடி உச்சியில் உள்ளது மூலந்**
**தலையடி யான அறிவை அறிந்தோர்**
**தலையடி யாகவே தானிருந் தாரே".**

இப்பாடல்களுள் அடியே முடியைக் காட்டவல்லது என்பதும், அவ்வாறு கண்டவரே வீடுபெற்றவராவர் என்பதும், பிரமவிட்டுணுக்கள் காலுந் தலையும் அறியாமையினாலேயே கலகம் விளைத்தனர் என்பதும், அடியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியால் முடியை அறிந்தோர் அந்த அடியிலே தம்முடியை வைத்து அமர்ந்திருப்பார் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன.

இனி, அடிமுடி தேடிய புராணக்கதைக்கு திரு.வி.கலியாணசுந்தர முதலியார் இன்னுமொரு நுட்ப விளக்கந் தருகின்றார். அதன் பொழிப்பு வருமாறு:

"பெயரில்லா இறைவனுக்கு வழங்கும் பல பெயர்களுள் 'சச்சிதானந்தம்' என்பது தனிச்சிறப்புடையது. சத்(உண்மை) - சித்(அறிவு) - ஆனந்தம்(இன்பம்) என்னும் மூன்றுஞ் சேர்ந்ததே சச்சிதானந்தம். இம்மூன்றும் தனித்தனியே பிரிந்து நிற்பனவல்ல. அகலம், நீளம், உயரம் என்னும் முப்பரிமாணங்களும் ஒரு பொருளிற் பிரிவின்றிக் கிடத்தல் போலச் சத்தும் சித்தும் ஆனந்தமும் முதல்வனிடத்திற் பிரிவின்றிக் காணப்படுவன. இம் மூன்றுமே முறையே பிரமன், திருமால், சிவன் என்று நூல்வழக்குப் பெற்றுள்ளன. பிரமன் படைப்பவன் என்றும், திருமால் காப்பவன் என்றும், சிவன் அழிப்பவன் என்றும் நூல்கள் கூறும். பிரமன் படைப்பால் உலகம் தோன்றுகின்றது என்பது நூற்கூற்று. கண்ணுக்குப் புலனாகும் உலகைக் கொண்டே கடவுளுண்மை உணரப்படுகின்றது. காரியப் பொருளாய உலகத்துக்குக் காரணம் ஒன்று உண்டு. அக்காரணமே சத்து(உண்மை) எனப்படுகிறது. காரணமாகிய சத்து உலகமாகக் காரியப்படுவதே படைப்பு என்று சொல்லப்படும். சத்தாகிய இறை உலகைப் படைக்கும் போது பிரமன் என்று பெயர்பெறும். ஆகவே அப்பிரமன் சச்சிதானந்தத்தின் ஒரு கூறாகிய சத்தே என்பது தெளிவாம்.

உலகை ஆராயும் தத்துவஞானி அதன் உண்மை கண்டபின், மேலுந் தொடர்ந்து ஆராய்கையில், அவனுக்கு உலகெனுஞ் சத்தினூடே நீக்கமின்றிக் கலந்துள்ள சித்தின்(அறிவின்) உண்மை விளங்குகின்றது. சித்தும் சச்சிதானந்தத்தின் ஒரு கூறாகும். அது நீக்கமற நிறைந்திருப்பதால், அதற்கு 'விஷ்ணு' எனப் பெயர் சூட்டப்பட்டது. விஷ்ணு என்னுஞ் சொல் 'எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது' என்னும் பொருள் கொண்டது. இப்பெயரே தமிழில் திருமால் எனப்படுவது. சத்தினூடே கலந்துள்ள சித்தின் உண்மை உணர்ந்ததும் தத்துவ விசாரகனுக்கு ஓர் ஐயம் பிறக்கின்றது. சத்திலிருந்து (பிரமனிலிருந்து) சித்து (விஷ்ணு) பிறந்திருக்குமா, அல்லது சித்திலிருந்து சத்துப் பிறந்திருக்குமா என்பதே அந்த ஐயம். இந்த ஐயத்தாற் கலக்குண்டு உண்மை காணக் கீழும் மேலும் நோக்கி நோக்கிச் சிந்தித்து அலையும் ஒரு நிலை உண்டாகின்றது. இதனையே பிரமவிட்டுணுக்கள் சிவனது முடியையும் அடியையும் தேடி அலைந்ததாகப் புராணங்கள் கதை கட்டிவிட்டன.

பின்னர் சிந்தனையால் தெளிவு பிறக்கின்றது. தெளிவில் ஆனந்தம் தோன்றுகின்றது. ஆனந்தம் சச்சிதானந்தத்தின் மற்றொரு கூறு. ஆனந்தமாகிய சிவம் விளங்கியதும், அச்சிவத்தின் வேறாகச் சத்தும் (பிரமனும்), சித்தும் (விஷ்ணுவும்) விளங்காமை புலனாகும். புராணக் கதையின் இந்த நுட்பத்தை விளங்கிக் கொண்டால் பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் முதல்வனின் பிரிவில்லாக் கூறுகளே என்னுந் தெளிவு பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவசித்தாந்தந் தரும் விளக்கம்:

கடவுள் என்னும் மெய்ப்பொருள் உயிர்களின் அறிவைக் கடந்து நிற்பதோடு, உயிருக்கு உயிராக உள்ளே நின்று அவற்றைக் கடவுவதாயும்(இயக்குவதாயும்) உள்ளது. உரையுணர்விறந்த இந்த உட்பொருளைப் பிரமம் என்று உபநிடதங்கள் பேசுகின்றன. உலகுயிர்களைச் சாராத நிலையில் அது நிர்க்குணப்பிரமம் என்றும், உலகுயிர்களைச் சார்ந்த நிலையில் சகுணப்பிரமம் என்றும் இரு நிலைகளில் வைத்துப் பேசப்படுகின்றது. இவற்றையே சைவசித்தாந்த நூல்கள் முறையே சொரூபசிவம் என்றும், தடத்தசிவம் என்றும் கூறும். சிவத்தின் மிக மேலான நிலையே சொரூபசிவம் எனப்படுவது. அது மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாதது; மக்களுக்குத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாதது. அந்தச் சிவமே உயிர்களின் மேல் வைத்த அருளினால் ஒரு படி இறங்கித் தடத்தநிலை அடைகின்றது. இது சகளநிலை என்றுஞ் சொல்லப்படும். இந்த நிலையிலே சிவமானது சிவன் என ஆண்பால் வாய்பாட்டாலும், அவனோடு பின்னமின்றி விளங்கும் அருள், சத்தி எனப் பெண்பால் வாய்பாட்டாலும் நூல்களிலே பேசப்படும். சைவநூல்கள் பதி(இறை), பசு(உயிர்), பாசம்(தளை) என்னும் முப்பொருளுண்மை கூறும். அநாதியாகவே பாசத்தால் (மூலபலமான ஆணவத்தால்) கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு வீடுபேறு அளிப்பதற்காகவே சொரூபசிவம் படியிறங்கித் தடத்தசிவமாகின்றது. இந்த நிலையிலேயே சிவத்தோடு இரண்டறக் கலந்துநிற்கும் சத்தி தொழிற்படத் தொடங்குகின்றது. ஆன்மாக்களுக்கு அருள்செய்யுமுகத்தால் சத்தியே அணுக்கமாய் நிற்பதால், நாம் இறையை அம்மையப்பராக வைத்து வழிபடுவதில் மனநிறைவு கொள்ளுகின்றோம்.

தடத்தநிலையிலே(சகளநிலையிலே) முதல்வனுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று திருமேனிகள் உண்டெனச் சித்தாந்த நூல்கள் கூறும். அருவத் திருமேனி கொண்டருளியபோது முதல்வனுக்குச் சிவம், சத்தர், இலயசிவன், நிட்களசிவன் என்னும் பெயர்கள் வழங்கும். முதல்வனது அருவத் திருமேனியானது கைகால் முதலிய உறுப்புகள் இல்லாதது; ஆன்மாக்களின் கண் முதலிய ஐம்பொறிகளுக்குப் புலனாகாதது. சிவம், சத்தி, நாதம், விந்து எனப்படும் நான்கு தத்துவங்களும் இந்த அருவத் திருமேனியிலே அடங்கும். இறைவழிபாட்டிலே, மேம்பட்ட நிலையிலுள்ள யோகியருக்குத் தத்துவ வடிவாகப் புலனாவது இத்திருமேனி ஆகும். அன்னார்க்குச் சிதாகாசம் எனப்படும் பரவெளியே தியானப் பொருளாய் அமையும். திருச்சிற்றம்பலம் (அல்லது சிதம்பரம்) எனப்படுவது இச்சிதாகாசமே. இத்தகையோர் பார்க்கும் இடமெங்கும் நீக்கமறப் பரம்பொருளைக் காணவல்ல பக்குவம் எய்தியவராவர்.

இனி, இறைவனது உருவத் திருமேனியானது கை கால் முதலிய உறுப்புகளோடு கூடி மக்களின் ஊனக்கண்ணுக்குப் புலனாவது. இறைவன் உருவத்திருமேனி கொண்டருளியபோது மகேசுரன், பிரவிருத்தர், அதிகாரசிவன், சகளசிவன் என்னும் பெயர்களைப் பெறுவன். 'படைப்பு முதலிய பஞ்சகிருத்தியங்கள் செய்தற் பொருட்டும், பத்தர் தியான பாவனை செய்தற் பொருட்டும், வேதாகமங்களின் பொருளை உணர்த்தற் பொருட்டும், ஆன்மாக்களுக்குப் போகத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுத்து முத்தியை அளித்தற் பொருட்டும் முதல்வன் உருவத் திருமேனிகொள்வன்' என்று அருணந்தி சிவாசாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங் கூறுவர். 'சிவபெருமானுடைய உருவம், ஆன்மாக்கள் செய்யம் தியானம் பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசத்தியாகிய திருவருட் குணங்களுள் 'இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் உருவம்' என்று ஆறுமுகநாவலர் கூறுவர். இவ்வாறு உருவத்திருமேனி கொள்ளும் மகேசுரனுக்கு இருபத்தைந்து வடிவங்கள் கூறப்படுகின்றன. அவையாவன: சபாபதி, சந்திசேகரர், உமாமகேசர், இடபாரூடர், கல்யாணசுந்தரர், பிட்சாடணர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், சகமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர்,சுகாசீனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பனவாம். 'புராணங்கள் இவற்றை மேலும் விரிவாக்கி, அருவுருவத் திருமேனியாகிய இலிங்கம் முதலாக அறுபத்துநான்கு மூர்த்தி பேதங்களைக் கூறுகின்றன.

இவற்றுட் சில போகவடிவமும், சில கோரவடிவமும், சில யோகவடிவமுமாக அமைவன. அவ்வாறு அமைவது முறையே உயிர்களுக்குப் போகம் புரிதற்பொருட்டும், வினையினைக் கெடுத்தற்பொருட்டும், யோகமுத்தி உதவுதற் பொருட்டுமாம். இவை, இறைவழிபாட்டிற் கீழ் நிலையில் உள்ளவர்கள் தியானித்து வழிபடுவதற்கு உகந்தவாறு பாவனைசெய்து, சைவக்கோயில்களிலே விக்கிரகங்களாக அமைத்து நிறுவப்படுவன. நாம் கோயிலில் இத்திருவுருவங்களை வழிபடும் போது ஒவ்வோர் உருவ அமைப்பையும், அது சுட்டும் வரலாற்றையும், உருவத்தின் திருக்கரங்களில் விளங்கும் படைக்கலங்களின் குறிப்பையும், கைகள் காட்டும் முத்திரைகளையும், அணிந்திருக்கும் அணிகள் உணர்த்தும் பொருளையும் கருத்திற் பதித்துத் தியானித்தல் வேண்டும். அவ்வாறு தியானிக்க, இறைவன் கொண்ட இத்திருக்கோலம் எல்லாம் தன்பொருட்டாகாது, உயிர்களின் பொருட்டே என்னும் உண்மை தெளிவாகும்.

இனி கட்புலனாகாத அருவத்திருமேனிக்கும், கட்புலனாகும் உருவத்திருமேனிக்கும் இடைநிகர்த்ததாகக் கொள்ளப்படுவதே அருவுருவத்திருமேனி எனப்படுவது. சூக்குமப் பொருள் தூலமாகும்போது, இடையிலே சூக்குமமுமாகாது, தூலமுமாகாது அவ்விரண்டிற்கும் பொதுவானதோர் நிலையும் உண்டெனபது பெறப்படும். அதுவே அருவுருவத் திருமேனியாம். உருவத்துக்கு வேண்டிய கை, கால், முதலிய உறுப்புகள் இன்மையால் அருவமாயும், கண்ணாற் பார்த்துக் கையால் தொடத்தக்கதாய் இருப்பதால் உருவமாயும், இருநிலைகளும் விரவியிருப்பதே அருவுருவம். இந்நிலையில் உள்ள முதல்வன் சதாசிவன் எனப்படுவன். இவனுக்கு உத்தியுத்தர், போகசிவன், நிட்களசகளசிவன் என்னும் பெயர்களும் வழங்கும். ஆன்மாக்கள் தியானித்தும், பூசித்தும் வழிபடுவதற்குரிய சதாசிவ வடிவமே இலிங்கம் எனப்படுவது. இது சிவனுக்கு மட்டுமே சிறப்பாக உரியதாகையாற் சிவலிங்கம் எனப்படுகின்றது.

உருவம் இல்லாத கடவுளை மக்கள் தியானித்து வழிபடுவதற்காகவே நம் முன்னோர் முன் கூறிய மூன்று நிலைகளில் வைத்து இறைவழிபாடு செய்யும் முறையை வகுத்துள்ளனர் எனலாம். இது வழிபடுவோரின் மனத்தை ஒருமுனைப்படுத்திப் பருப்பொருளிலிருந்து நுண்பொருள்வரை படிப்படியாய் உயர்த்திச் செல்வதற்கும், அவ்வாற்றால் சொரூப சிவத்தை ஓரளவாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து கொள்வதற்கும் உபாயமாகப் பயன்படுகின்றது. முற்சொன்ன மூன்று நிலைகளையும் ஏறுவரிசையில் வைத்துக் கூறின், அவை உருவம், அருவுருவம், அருவம் என்று அமையும். இறைவனை இம்மூன்று நிலைகளில் வைத்து வழிபடுவோரும் முறையே சரியை நெறியினர், கிரியை நெறியினர், யோக நெறியினர் என முத்திறத்தினராவர். இம் முத்திறத்தினரும் பக்குவ நிலையிற் படிப்படியே மேம்பட்டவராவர்.

## சிவலிங்க தத்துவம்

சிவலிங்கம் சைவசித்தாந்தத்தின் உயிர்நிலையை உணர்த்தி நிற்கின்றது. சொரூபசிவம் தடத்தசிவமாகப் படியிறங்குவதற்கு உரிய காரணத்தைக் காட்டி நிற்கின்றது. சிவலிங்கத் திருமேனியில் மும்மூர்த்திகளும், முப்பத்தாறு தத்துவங்களும், ஆறு அத்துவாக்களும் அடங்கியுள்ளன என்று நூல்கள் கூறும். இதன் விளக்கம் வருமாறு:

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதியாக உள்ளவை; பசுக்கள் அநாதியாகவே பாசத்தால் கட்டுண்டிருப்பவை; அவற்றைப் பாசத்தினின்றும் நீக்கி முத்தியடையச் செய்வதற்காகவே பதி தனது சொரூபநிலையிலிருந்து தடத்த நிலைக்குப் படியிறங்கி வருகின்றது. இந்நிலையிலே சிவத்தோடு கலந்து நிற்கும் சத்தி வெளிப்பட்டுச் செயலாற்றுகின்றது. சத்தியும் சிவமும் வேறன்மையிற் சத்தியின் செயல்கள் எல்லாம் சிவத்தின் செயல்களாகவே பேசப்படும். இதனால், சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் சத்தியைத் துணையாகக் கொண்டு செய்வன் என்று நூல்கள் கூறுகின்றன. படைத்தல் முதலிய தொழில்களுக்குச் சிவன் நிமித்த காரணம், சத்தி துணைக்காரணம், மாயை முதற்காரணம்.

மாயை என்னும் முதற்காரணத்திலிருந்து உயிர்களுக்குத் தனுகரணபுவன போகங்களை ஆக்கி, அவ்வுயிர்கள் பிறப்பெடுக்கச் செய்வதே படைத்தல் எனப்படும்; பிறப்பெடுத்த உயிர்களைக் குறித்த காலம் உடலிலும் உலகிலும் நிறுத்தி வைத்தல் காத்தல் எனப்படும்; பலப்பல பிறப்புகளில் பிறந்து இறந்து உழலும் உயிர்களுக்கு ஓய்வுதரும் பொருட்டு அவற்றுக்காகப் படைத்த தனுகரணபுவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதல் அழித்தல் எனப்படும்; உயிர்கள் இருவினைப் பயன்களாகிய இன்பத்துன்பங்களை நுகரும்வண்ணம் அவற்றை உலகப் பொருள்களில் அமிழ்த்தல், மறைத்தல் எனப்படும்; பக்குவம் எய்திய உயிர்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்தை விளக்குதல், அருளல் எனப்படும். இவற்றுள் மறைதலைக் காத்தலிலும், அருளலை அழித்தலிலும் அடக்கி முதல்வன் தொழில்களை முத்தொழிலாகக் கூறுவதும் சைவமரபு. படைத்தற்றொழிலைச் செய்யும்போது முதல்வன் பிரமனை நிலைக்களமாகவும், காத்தற்றொழிலைச் செய்யும்போது விட்டுணுவை நிலைக்களமாகவும், அழித்தற்றொழிலைச் செய்யும்போது உருத்திரனை நிலைக்களமாகவும் கொண்டு நிற்பன் என்று நூல்கள் கூறும்.

சிவலிங்க உருவம் படைத்தல் முதலிய முத்தொழில்களையும் (அல்லது) ஐந்தொழில்களையும் குறித்து நிற்கின்றது. படைத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பது என்பதனால், இக்குறி இலிங்கம் எனப்பட்டது என்று இதற்குப் பொருள் விளக்கப்படுகின்றது. 'லிங்கம்', என்னும் வடமொழிச் சொல்லுக்கு அடையாளம் அல்லது குறி என்பது நேரான பொருளாகும்.' அச்சொல் லிங்கயதி (லிங்-வினையடி) எனவரும் வினைச்சொல்லின் அடியாகப் பிறந்த பெயர்ச் சொல்லாகக் கொள்ளப்படுமிடத்து, அதற்குச் சித்திரிப்பது என்பது பொருளாகும். சைவநூலோர் இருவகையாகவும் பொருள் கொள்வர்.

சிவலிங்கத்தின் அமைப்பிலே இலிங்கம், பீடம் என்னும் இருபாகங்கள் உள்ளன. இலிங்கம் நிறுத்தப்பட்டிருக்கும் ஆசனமே பீடம் எனப்படுவது. இந்த அமைப்புக்குப் பீடலிங்கம் என்னும் பெயர் சிறப்பாக வழங்கும். இதிலே பீடம் சத்தியையும், இலிங்கம் சிவத்தையும் குறிக்கும். பின்வரும் சிவஞான சித்தியார்ப் பாடல் இதனை உணர்த்துகின்றது:

**"சத்தியம் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்**
**ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக**
**வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்**
**இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்."**

சத்தி பாகமான பீடத்தை ஆவுடையார் என்று சொல்லும் வழக்கம் உண்டு. திருமந்திரத்திலே இது ஆவுடையாள் எனப் காணப்படுகின்றது. இதற்குச் 'சீவான்மாக்களை உடைமைப் பொருளாகவுள்ள தேவி' என்று பொருள் கூறப்படுகின்றது. இச்சொல் ஆளுடையாள் என்பதன் திரிபு என்றும் அறிஞர்கள் சிலர் கூறுவர். எவ்வாறாயினும், அது சிவசத்தியைக் குறிக்கின்றது என்பது தேற்றம். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையான் நடுவுள் நீயிருத்தி' என்று மணிவாசகர் கூறுமிடத்தும் 'உடையாள்' என்பது இப்பொருளிலே ஆளப்பட்டிருத்தல் காண்க.

உயிர்களுக்கு உபகரிக்கும் பொருட்டுப் பதியாகிய பரமசிவம் திருவருளைத் துணையாகக் கொண்டு படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும்போது சுத்த மாயையை நிலைக்களமாகக் கொண்டு அவ்வாறு செய்யும். அவ்வாறு செய்யும் போது திருவருள், இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்பட விளங்கித் தொழிற்படும். இவற்றுள் இச்சை யாண்டும் ஒரு படித்தாக நிகழும். ஏனைய இரண்டும் தனித்தும், ஒத்துக்கூடியும், ஏற்றக் குறைவாகக் கூடியும் தொழிற்படும். இவ்வேறுபாட்டிற்கு ஒப்பச் சுத்தமாயையில் உண்டாகும் விருத்திகள் நாதம், விந்து, சாதாக்கியம் (அல்லது சதாசிவம்) மகேசுரம் (அல்லது ஈசுரம்), சுத்தவித்தை என ஐவகைப்படும். இவை ஐந்தும் சிவ தத்துவங்கள் (அல்லது சுத்த தத்துவங்கள்) என்று சொல்லப்படும். இத்தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சிவனும் அவ்வச் சத்தி பேதத்தால் வெவ்வேறு பெயர் பெறுவன். இவற்றுள் 'நாதம்' என்பது ஞானமாய் இருப்பது, அறிவுருவமான சிவனுக்கு இருப்பிடம்; 'விந்து' என்பது கிரியையாய் இருப்பது, செயல்வடிவான அருளுக்கு இருப்பிடம்; 'சாதாக்கியம்' (அல்லது 'சதாசிவம்') என்பது ஞானமும் கிரியையும் ஒத்திருப்பது, அறிவுஞ் செயலும் ஒத்த சதாசிவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடம். இவன் அனுக்கிரகஞ் செய்பவன். 'மகேசுரம்' (அல்லது 'ஈசுரம்') என்பது கிரியை ஏறி ஞானங் குறைந்திருப்பது, மகேசுரனுக்கு இருப்பிடம்; இவன் மறைத்தல் செய்பவன். 'சுத்தவித்தை' என்பது ஞானமேறிக் கிரியை குறைந்திருப்பது, உருத்திரனுக்கு இருப்பிடம்; இவன் அழித்தல் செய்பவன்.

இவற்றுள் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் பதியின் அருவத் திருமேனி வடிவங்களாகும். சதாசிவன் அருவுருவத்திருமேனி வடிவமாகும். மகேசுரன், உருத்திரன் என்னும் இருவரும், இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரம விட்டுணுக்களும் உருவத்திருமேனி வடிவங்களாகும். இவ்வொன்பது வடிவங்களும் சிவலிங்கத்திலே அடங்கும் என்று திருமந்திரம் கூறுகின்றது.

**"மலர்ந்த வயன்பால் உருத்திரன் மகேசன்**
**பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்**
**நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்**
**பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே."**

பீடலிங்க அமைப்பின் அடியிலே பிரமனும் முடியிலே சிவனுமாக, ஒன்பது மூர்த்தங்களும் ஏறுவரிசையில் இருக்கும் பான்மையை இப்பாடல் குறிப்பிடுகின்றது. இங்கே 'ஐம்முகன்' என்பது சதாசிவனைக் குறிக்கும். பொதுப்பட நோக்கும்போது சிவமும் சத்தியும் அத்துவிதமாகக் கலந்து நிற்கும் இயல்பைப் பீடலிங்கம் உணர்த்துகின்றது; பகுத்து நோக்குமிடத்து ஞானசத்தியையும் (இலிங்கம்) கிரியாசத்தியையும் (பீடம்) ஒத்திருக்கும் சாதாக்கிய நிலையை, அதாவது பதியின் அருவுருவத் திருமேனியை அது குறிப்பதைக் காணலாம். மேலும் நுட்பமாகப் பகுத்து நோக்கும்போது பதியின் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனியிலும் அடங்கியுள்ள ஒன்பது வடிவங்களையும் இப்பீடலிங்கம் குறித்து நிற்பதைத் தெளியலாம். இன்னுமொரு கோணத்தில் நோக்கும்போது பிரமா(அடிப்பாகம்), விட்டுணு(நடுப்பாகம்), உருத்திரன்(மேற்பாகம்) ஆகிய மும்மூர்த்திகளும் சிவலிங்கத்திலே அடங்கியிருப்பதையும் உணரலாம்.

இன்னும் விந்து சத்தியானது பீடரூபமாக விளங்கிச் சுத்தமாயா காரியமும், அசுத்தமாயா காரியமும், பிரகிருதி காரியமுமாகிய மூவகை அத்துவாக்களையும் முப்பத்தாறு தத்துவங்களையும் வியாபித்து நிற்கும். ஞானசத்தி இலிங்க ரூபமாய் நின்று அவ்விந்து சத்தியைக் காரியப்படுத்தும் இயல்பே பீடலிங்கரூபமாம்.

## இலிங்க வகைகள்:- திருமூலர் கூறுவன.

திருமூலர் தமது திருமந்திர நூலின் ஏழாந் தந்திரத்திலே அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என ஆறுவகை இலிங்கங்கள் பற்றிக் கூறுகின்றார். இலிங்கம் என்பதற்கு 'இறைவன் திருமேனி' என்றே அவர் பொருள்கொண்டுள்ளார் என்பது இவற்றிலிருந்து அறியக்கிடக்கின்றது. தலைசிறந்த யோகியான திருமூலர் யோகக் காட்சியில் தாம் கண்ட இறைவன் திருமேனியை இங்கே விவரிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. அண்டலிங்கம்:**

இறைவன் படைப்பு முழுவதையும் தன்னுள் அடக்கி நிற்கும் அண்டமே இலிங்கவடிவமாகப் பேசப்படுகின்றது. இந்த இலிங்கத்தின் அடி பூமியாகும்; முடி வானமாகும்; உடல் விசும்பாகும்.

**“போது புனைகழல் பூமிய தாவது**
**மாது புனைமுடி வானக மாவது**
**நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்**
**ஆதி யுறநின்ற தப்பரி சாமே.”**

(**போது புனை கழல்** - அன்பர்கள் சூட்டும் மலரால் அலங்கரிக்கப்படும் திருவடி, **மாது புனை முடி** - கங்கையைத் தரித்த திரு முடி, **விசும்பு** - திசை, **ஆதி உற நின்றது** - அண்ட உருவாய் நின்றது)

இந்த இலிங்கத்தின் சத்திபாகம் தரையாகும்; சிவபாகம் விண்ணாகும்; இதற்கு மஞ்சனசாலை கடலாகும்; மலை முடிகளில் உறையும் மேகம் சொரியும் நீர் அபிடேகநீராகும்; விண்மீன்களே தலைமாலையாகும்; திக்கே ஆடையாகும்.

**“தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணும்**
**திரைபொரு நீரது மஞ்சன சாலை**
**வரை தவழ் மஞ்சுநீர் வானுடு மாலை**
**கரையற்ற நந்தி கலையுந் திக்காமே.”**

(**தரை உற்ற சத்தி** - பூமியே ஆவுடையார்; **இலிங்கம் விண்** – ஆகாயமே இலிங்கம்; **திரைபொருநீர்** - கடல்; **மஞ்சனசாலை** - நீராடுமிடம்; **வரைதவழ் மஞ்சு** - மலைகளில் தவளும் முகில்கள்; **வானுடுமாலை** - விண்மீன்களே மாலை, **கலை** - ஆடை; **கரையற்ற நந்தி** - எல்லையற்ற சிவம்)

சிவாலயம் அண்டத்தின் வடிவாக அமைக்கப்படுவதால், அதன் விமானம் தூலலிங்கம் என்றும், கருவறையில் இருக்கும் சதாசிவம் சூக்குமலிங்கம் என்றும், பலிபீடம் பத்திரலிங்கம் என்றும் பெயர் பெறும் என்பதும் இப்பகுதியிலே சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீருத்திராபிஷேகம் செய்வதற்கு முன்பு சொல்லப்படும் ‘ஆபாதல’ எனத் தொடங்கும் தியான சுலோகம் அண்டலிங்கத்தையே குறிப்பிடுகின்றது. ‘பாதாளம் முதல் ஆகாச பரியந்தம் எல்லையில்லாத ஆனந்த சொருபமாய்ப் பிரகாசிக்கின்ற இலிங்கத்திற்கு அபிடேகம் செய்கிறேன்’ என்பது அதன்பொருள்.

**2. பிண்டலிங்கம்:**

அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு. இங்கே பிண்டம் என்பது மனித உடம்பைக் குறிக்கும். இறைவன் உயிருக்கு உயிராய் உள்ளே இருப்பதால் இந்த உடம்பும் சிவலிங்க வடிவினதே என்பர் திருமூலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கடத்தே."

**3. சதாசிவலிங்கம்:**

ஞானமுங் கிரியையும் ஒத்திருக்கும் சாதாக்கிய தத்துவத்திலுள்ள முதல்வனே சதாசிவமூர்த்தி. இத்திருவுருவம் சைவதத்துவங்களை நிலைக்களனாகக் கொண்டது. அருவம் உருவம் இரண்டுக்குங் காரணமான அருவுருவத் திருமேனியே சதாசிவலிங்கம். இது மிகவும் உயரிய நிலையிலே வைத்துத் தியானித்தற்கு உரியது. மேலே விந்துவும், நாதமும், பராசத்தியும், பரமசிவனும் அமையக், கீழே மகேசுரனும், உருத்திரனும், திருமாலும், பிரமனும் அமைய இருதிறத்து மூர்த்திகளுக்கும் நடுவே பொதுவாக இருப்பவர் சதாசிவமூர்த்தி.

"வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியும் அந்தச் சிவனோடும்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே."

(**வேதா** - பிரமன்; **மேலீசன்** - உருத்திரனுக்கு மேலுள்ள மகேசுரன்; **மீதான ஐம்முகன்** - மகேசுரனுக்கு மேற்பட்ட சதாசிவன்; **ஆதாரசத்தி**-பராசத்தி; **அந்தச் சிவன்** - பராசத்தியோடு நிற்கும் பரமசிவன்; **சாதாரணமாம்** - பொதுவான. 'சதாசிவன்' மேலமைந்த விந்து, நாதம் பராசத்தி, பரமசிவன் ஆகிய நால்வர்க்கும் கீழமைந்த மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் நால்வர்க்கும் நடுவே நிற்பதால் சாதாரணமாஞ் சதாசிவம் எனப்பட்டது).

பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் ஐந்து சத்திகளும் சுத்த மாயையிலே பதிந்தபொழுது உண்டான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து மந்திரங்களைத் திருமேனியாக உடையவனாதலினால் சதாசிவன் ஐம்முகன் எனப்படுவன்.

இலிங்கத்தில் இவ்வைந்து முகங்களும் செதுக்கி அமைக்கப்படும்போது, அது முகலிங்கம் எனப்படும். நான்கு வாயில்கள் கருவறையில் இருப்பின், கிழக்கே தற்புருட முகமும், தெற்கே அகோரமுகமும், மேற்கே சத்தியோசாத முகமும், வடக்கே வாமதேவ முகமும் அமையுமாறு இலிங்கம் அமைக்கப்படும். இத்தகைய முகலிங்கத்துக்கு ஈசானமுகம் உச்சியில் அமைந்திருக்கும். சதாசிவலிங்கத்தின் இயல்புகளைத் திருமந்திரம் மிக விரிவாகக் கூறுகின்றது.

**4. ஆத்மலிங்கம்:**

ஆன்மாவில் இறைவன் உறைவதால், ஆன்மா இலிங்கம் எனப்பட்டது. எல்லா உயிர்களிலும் மிக நுட்பமாகக் கலந்திருக்கும் இறைவன் அன்பர் தம் உள்ளமே கோயிலாக அமர்ந்து இன்பஞ் செய்வான். பக்குவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ந்தவர்கள் ஆன்மலிங்கத்திலே இறைவனைக்கண்டு அவனோடு ஒன்றி நிற்பர்.

**"பராபரன் எந்தை பனிமதி ஆடி**
**தராபரன் தன்னடி யார்மனக் கோயிற்**
**சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னு**
**மராமரன் மன்னி மனத்துறைந் தானே."**

(**தராபரன்** - தரையாகிய உலகங்களுக்கு இறை; **சிராபரன்** - மேலான இறைவன்; **மராமரன்** - (மரு ஆம் அரன்), பூவின் மணம் போன்றிருக்கும் சிவன். அரும்பாக இருக்கும்போது வெளிப்படாது நுட்பமாயிருக்கும் மனம் அரும்பு மலராகும்போது வெளிப்பட்டுத் தோன்றும்; அவ்வாறே பக்குவமற்ற உயிரிடம் மிகநுட்பமாக உறையும் இறைவன் பக்குவமடைந்த ஆன்மாவில் வெளிப்பட்டுத் தோன்றுவான் என்பது இதனால் உணர்த்தப்பட்டது).

**5. ஞானலிங்கம்:**

பரம சிவத்தின் உண்மை நிலை ஞானமாதலால், அந்த ஞானவடிவம் ஞானலிங்கம் எனப்பட்டது. உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலையிலும் நிற்கும் பரமசிவன் பக்குவர்க்குக் குருவாய் நின்று அந்த மேலான ஞானத்தைத் தருவான். சத்தி தத்துவத்துக்கு மேலேயுள்ள பரை என்னும் சத்தியே சுத்த (நின்மல) சிவத்துக்க இடமாகும். அது யாவினும் தொடக்கற்று நிற்கும் தூய ஒளி (ஞான) வடிவானது. அந்தச் சிவம் பராசத்தியோடு கூடியும் கூடாமலும் நிற்கும். அதுவே சிவத்தின் உண்மை நிலையாகும்.

**"சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே**
**சுத்த சிவபதந் தோயாத தூவொளி**
**அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்**
**ஒத்தவு மாமீசன் தானான வுண்மையே."**

(**சத்திக்கு மேலே** - சத்தி தத்துவத்துக்கு, அதாவது விந்து தத்துவத்துக்கு மேற்பட்டதான; **பராசத்தி தன்னுள்ளே** - பரை என்னும் சத்தியினுள்; **சுத்த சிவபதம்**- சொருபசிவம்; தோயாத தூவொளி-உலகுயிர்களோடு தொடக்கற்று நிற்கம் தூயஞானவொளி; **(அந்தநிலையில் அது) அத்தன் திருவடிக்கு அப்பாலைக் கப்பாலாம்** - தடத்த சிவத்தின் திருவடியாகிய திருவருளுக்கு அப்பாற்பட்டது; **ஒத்தவுமாம்** - திருவருளைத் தன்னுள்ளே முற்றாகக் கரந்து வைத்திருத்தலால் அதனோடு(பராசத்தியோடு)கூடியும் இருக்கும்; **ஈசன் தானான உண்மை** - இதுவே சிவத்தின் உண்மை நிலையாம்; உயிர்களுக்கு உதவும் தடத்த நிலையிலே சிவத்துடன் சத்தி சேர்ந்துதான் உருவ உலகம் தோற்றுவிக்கப்படுகின்றது. இதனைச் **'சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி'** என்னும் பாடல் விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. சிவலிங்கம்:**

அண்டமாய்'விரிந்து பரந்து, தூய ஞானவொளியாய் எங்கும் வியாபதித்துள்ள சிவபரம்பொருளை வரைத்து வலஞ் செய்வதற்கு வழியாய் அமைந்துள்ளது இவ்வுரு. இது பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவன் என்னும் ஒன்பது மூர்த்திகளின் வடிவாகி இருப்பது. நீரும் மலருங்கொண்டு அருச்சித்துச் சிவநாமங்களை ஓதி வழிபடுவோர்க்குச் சதாசிவ வடிவத்தில் நின்று முத்திப் பலனைக் கொடுக்கவல்லது.

**"வரைத்து வலஞ்சசெய்யு மாறிங்கொன் றுண்டு**
**நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி**
**உரைத்தவன் நாமம் உணர வல்லார்க்குப்**
**புரைத் தெங்கும் போகான் புரிசடை யோனே."**

(வரைத்து-வரையறுத்து, எல்லைப்படுத்தி; புரைத்தெங்கும் போகான்-தப்பிப் போகமாட்டான். எனவே நின்று பலனளிப்பான் என்பது பெறப்பட்டது).

**இலிங்க வகைகள், ஆகமங்கள் கூறுவன:**

சிவாலயங்களில் நிறுவி வழிபடுவதற்கும், தனிப்பட்டவர் வைத்து வழிபடுவதற்கும் உரிய இலிங்கங்களின் வகைகளையும், அவை அமைக்கப்படும் முறையையும் அவற்றை வழிபடும் முறைகளையும் காமிகம், மகுடம் போன்ற ஆகமங்கள் விரித்துக் கூறுகின்றன. அவை கூறும் செய்திகளைச் சுருக்கித் திரட்டி ஆறுமுகநாவலர் இரண்டாம் சைவவினாவிடையிலே 'சிவலிங்கவியல்' என்னும் பகுதியில் தந்துள்ளார்.

ஆகமங்கள் கூறுமாறு, சிவலிங்கம் பரார்த்தலிங்கம் எனவும் ஆன்மார்த்தலிங்கம் எனவும் இருபெரும் பிரிவில் அடங்கும். பரார்த்தலிங்கம் பிறர்பொருட்டாக ஆலயங்களில் நிறுவி வழிபடப்படுவது. இது தாவரலிங்கம்(நிலையாயிருக்கும் இலிங்கம்) எனவும், அசலலிங்கம்(அசையாத இலிங்கம்) எனவும் சொல்லப்படும். ஆன்மார்த்தலிங்கம் தன்பொருட்டாக, செல்லுமிடமெங்கும் கொண்டு சென்று பூசிக்கப்படுவது. இது இட்டலிங்கம் எனவும், சங்கமலிங்கம் (நிலைபெயரும் இலிங்கம்) எனவும், சலலிங்கம் (அசையும் இலிங்கம்) எனவும் சொல்லப்படும்.

## 1. பரார்த்தலிங்கத்தின் வகைகளாகக் காமிகாமம் பின்வரும் ஆறைக் கூறும்.

**1. சுயம்புலிங்கம் (அல்லது சுவாயம்பவம்):**

இது தானே தோன்றிய இலிங்கமாகும். (கங்கை முதலிய ஆறுகளிலே பாயும் நீரால் உருட்டிக் கொண்டு வரப்படும் பாறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உராய்வினாலும், அரிப்பினாலும் உருண்டு திரண்டு செயற்கையாகச் செய்த இலிங்கம் போலக் காணப்படுவதுண்டு. இவ்வாறே எரிமலைத் தொழிற்பாட்டினால் நிலத்துக்கு அடியிலே இருந்து தீப்பிழம்புபோல வெளித்தள்ளப்படும் பாறையும் ஒரோவொருகால் இலிங்க வடிவிற் காணப்படுவதுண்டு. இத்தகைய பாறையுருக்களே சுயம்புலிங்கம் என்று சொல்லப்பட்டன).

**2. காணலிங்கம்:** (அல்லது காணபம் அல்லது காணபத்தியம்): கணபதி முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது.

**3. தைவிகலிங்கம்:** (அல்லது தைவதம்): விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது.

**4. ஆர்டலிங்கம்:** இருடிகளால் தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர் முதலாயினோரால் தாபிக்கப்பட்டதும் அது. (நாவலர்)

**5. மானுடலிங்கம்:** மனிதரால் தாபிக்கப்பட்டது.

**6. பாணலிங்கம்:** (அல்லது வாணலிங்கம்):- வாணனால் பூசிக்கப்பட்டது. மகுடாகமம், சுயம்புலிங்கம் பாணலிங்கம் என்னும் இரண்டையும் தவிர்த்து ஏனைய நான்கையுமே குறிப்பிடுகின்றது. ஆறுமுகநாவலர் பாணலிங்கத்தைத் தவிர்த்து ஏனைய ஐந்தையுமே பரார்த்தலிங்கத்தின் வகைகளாகக் கூறுவர். இவ் வகை இலிங்கங்களுள் மானுடலிங்கத்திலும் உயர்ந்தது ஆனிடலிங்கம்; அதனின் உயர்ந்தது தைவிக லிங்கம்; அதனின் உயர்ந்தது காணலிங்கம்; அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

**11. ஆன்மார்த்த (இட்ட) லிங்கத்தின் வகைள் பல: நாவலர் ஆறு வகைகளைக் கூறியுள்ளார்.**

**1. வாணலிங்கம்:** வாணன் என்னும் அசுரனால் பூசிக்கப்பட்ட லிங்கம்; இதனைக் காமிகாகமம் பரார்த்தலிங்க வகைகளுள் வைத்துக் கூறுகின்றது.

**2. படிகலிங்கம்:** பளிங்கினாற் செய்யப்பட்டது.

**3. இரத்தினலிங்கம்:** வைடூரியம், புட்பராகம், மரகதம், பவளம், முத்து முதலிய இரத்தினங்களாற் செய்யப்பட்டது.

**4. லோகலிங்கம்:** பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை முதலிய உலோக்களினால் செய்யப்பட்டது.

**5. சைவலிங்கம்;** சிலையால் (அதாவது கல்லால்) செய்யப்பட்டது.

**6. க்ஷணிகலிங்கம்:** பூசித்தவுடன் கைவிடப்படும் இலிங்கம். இது மண், அரிசி, சோறு, ஆற்று மணல், சாணம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், சருக்கரை, மா, மலர் மாலை, தருப்பை ஆகிய பன்னிருவகைப் பொருள் களாலும் பூசனை செய்யும்போது உருவாக்கிப் பின் களையப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர, மரத்தாற் செய்யப்படும் இலிங்கம் தாருஜலிங்கம் எனப்படும். கருங்காலி, சந்தனம், வில்வும், மருது, அரசு, வன்னி, இலுப்பை, இலந்தை, தேவதாரு முதலிய பல மரங்கள் இதற்கு உரியவையெனக் காமிகம் கூறும்.

## கோயில்களிற் சிவலிங்கத்தை நிறுவும் வினைமுறை:

திருக்கோயிலிற் சிவலிங்கத்தை நிறுத்தும்போது செய்யப்படும் வினைமுறைகள் ஆழ்ந்த கருத்துடையவை. இவை மந்திரஜபம் (மந்திரமோதல்) அஷ்டமந்தன கும்பாபிஷேகம்(நிலைநாட்டற் குடமுழுக்கு) எனப்படும். சிவலிங்கச் சிலை அசைவின்றியிருப்பதற்காக அதன் அடியிடத்திலே சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமை வெண்ணெய், குங்கிலியம், நற்காலி என்னும் எண்வகைப் பொருள்களும் சேர்ந்த கூட்டுச்சரக்குச் சாத்தப்படும். இக்கூட்டுச் சரக்கே அஷ்டபந்தனம் எனப்படுவது. இவ்வாறு நிறுவப்பட்ட சிவலிங்கத்தின் முன்னே வேள்விக்குண்டம் அமைத்து அதனகத்தே தீவளர்க்கப்படும். பின்னர், புதிய கலங்களில் நீரை நிறைத்து, அவற்றை வேள்விக் குண்டத் தீயின் எதிரே வைத்து தீயின்கண் விளங்கும் இறைவனது ஒளியை அக்குடத்து நீரினுள் இறங்குமாறு வினைமுறை தெரிந்த குருமார் மந்திரங்களால் இடையறாது சிலநாள்காறும் வேண்டுவர். இச் செயன்முறையே மந்திரஜபம் எனப்படுவது. பின்னர் ‘எளியேங்கள் பொருட்டு ஐயனே, இத்திருவுருவத்தின்கட் புகுந்து எழுந்தருளி, அடியேங்கட்கு என்றும் அணுக்கராய் விளங்கியிருந்து அருள் வழங்கல் வேண்டும்’ என இரந்து வேண்டி, அந்நீரை அத்திருவுருவத்தின்மீது பெய்வர். இவ்வினைமுறையே கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) எனப்படுகின்றது. இவ்வாறு செய்யவேண்டிய கிரியைகள் எல்லாம் செய்த முடித்த பின்னரே கல்லாலான அத்திருவுருவம் வழிபடுவதற்கு ஏற்ற கடவுட்டன்மை உடையதாகின்றது. இவ்வினைமுறைகள் எல்லாம் சிவலிங்கத் திருவுரு தீப்பிழம்பின் வடிவமாகவே அமைக்கப்பட்டது என்னும் உண்மையை உறுதிப்படுத்துனவாய் உள்ளன.

### குறிப்பு விளக்கம்

**1. திருமந்திரம் 9:28:2701. மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை...**

**2. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, மறைமலைஅடிகள்: மூன்றாம் பதிப்பு, 1930; பக்கங்கள் 73-74.**

**3. சைவசமயம், டாக்டர் மா. இராசமாணிக்கனார், முதற்பதிப்பு, 1955 பக்கம் 30.**

**4. தமிழர் மதம், மறைமலையடிகள், முதற்பதிப்பு 1941, மறுபதிப்பு 1958 பக்கங்கள் 152-161 சிவஞானபோத ஆராய்ச்சி. மறைமலைப்படிகள்: முதற்பதிப்பு 1958: பக்கங்கள் 137-158**

**5. சிவஞானசித்தியார்: சுபக்கம் சூ-1 அதி-2: செய்யுள் 89,**

**6. திருமந்திரம்: இரண்டாந் தந்திரம், 8 அடிமுடிதேடல், 1,2 (358, 359).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சைவத் திருக்கோயிற் கிரியைநெறி, கலாநிதி கா.கைலாசநாதக் குருக்கள், முதற்பதிப்பு 1963: பக்கங்கள் 121-125.
8. ஷ பக்கங்கள் 123-125.
9. பெரிய புராணம் சாக்கிய நாயனார் புராணம் 8.
10. திருமந்திரம், எட்டாந் தந்திரம், 7 அடிதலையறியுந்திறங்கூறல் 1,2 (2386, 2387).
11. பெரிய புராணம், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் இயற்றிய அரும்பொருள் விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும்: திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் 476 ஆம் பாடலின் உரைவிளக்கம்.
12. சிவஞானசித்தியார் சுபக்கம்: பதியிலக்கணம், 74.
13. இரண்டாம் சைவ வினாவிடை, ஆறுமுகநாவலர்: பதியியல் -17.
14. ஷ பதியியல் - 23.
15. முற்சொன்ன சைவத் திருக்கோயிற் கிரியைநெறி: பக்கம் 121-122.
16. முற்சொன்ன இரண்டாம் சைவவினாவிடை: பதியியல், 22.
17. சிவஞானசித்தியார், சுபக்கம்: சூத்-1 அதி 2. செய்யுள் 89.
18. திருமந்திரம் எட்டாந் தந்திரம் 5 ஆறாந்தம், செய் 15 (2343) ஆவுடை யானை யரன்வந்து கொண்டபின்..
19. ஷ ஏழாந்தந்திரம்: 7 சிவலிங்கம், செய்யுள் 4 (1745).
20. சிவஞானசித்தியார் சுபக்கம், மு. திருவிளங்கம் புத்துரை, சூத்-1 அதி-2 செய்யுள் 89 உரைவிளக்கம்.
21. திருமந்திரம், ஏழாந் தந்திரம் 2.12 (1964).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் வழிபாடு

## அ. வரலாற்றுப் பின்னணி:

### 1. நாயன்மாரும் நால்வரும்:

'நால்வர்' என்னுந் தொகைப் பெயர் சிறப்பாகச் சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரைக் குறித்தே தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. இவர்களுள் தேவாரம் பாடிய முதல் மூவரும் 'நாயனார்' என்று தனித்தனியே சொல்லப்படுவர்; திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரை 'நாயனார்' என்று குறிப்பிடும் வழக்கம் இல்லை.

'நாயனார்' (=நாயன் + ஆர்) என உயர்வுப் பொருள்படும் 'ஆர்' விகுதி கொடுத்துக் கூறப்படும் சொல்லுக்குத் 'தலைவர்', 'வழிகாட்டுபவர்', 'பெருமையிற் சிறந்தோர்' என்னும் பொருள் உண்டு. திருமுறை இலக்கியத்திலும் சோழர் காலக் கல்வெட்டுக்களிலும் 'நாயனார்' என்னுஞ் சொல் சிவபெருமானைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. (உ-ம்: 'வாயினால் இப்போதே மன்றில் நடமாடும் நாயனார் என்றுரைப்போம் நாம்' பதினோராம் திருமுறை: பட்டினத்துப்பிள்ளையார்: கோயில் நான்மணிமாலை செய்யுள் 13). பதினோராந் திருமுறையிலே கபிலதேவநாயனார் அருளிச்செய்த 'மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை' என்னும் பிரபந்தத்தில் 'மூத்த நாயனார்' என்பது விநாயகக் கடவுளைக் குறிக்கின்றது.

இனி 'நாயனார்' என்னுஞ் சிறப்புப் பெயர், பெரியபுராணத்துட் பேசப்படும் தனியடியார்கள் அறுபத்து மூவருள் ஆண்பாலார் ஒவ்வொருவருக்கும் ஆளப்பட்டுள்ளது. பெண்ணடியார்களான இசைஞானியார் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரையும் 'நாயனார்' என்றோ, அச்சொல்லின் பெண்பால் வடிவமான 'நாய்ச்சியார்' என்றோ வழங்குதல் பெரியபுராணத்திற் காணப்படவில்லை. ஆனால், வைணவர் வழக்கிலே ஆண்டாள் என்னும் பெண்ணடியார் 'நாய்ச்சியார்' என்றே சிறப்பாகக் கூறப்படுகின்றார்.

இன்னும், 'பொய்யடிமையில்லாத புலவர்' எனச் சுந்தரமூர்த்தி-நாயனார் குறிப்பிட்ட தொகையடியாரை, வழிநூல்செய்த நம்பியாண்டார் நம்பி 'தரணியிற் பொய்ம்மையிலாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்' என்று பெயர் சுட்டி விரித்துக் கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரையுங் கருதியுள்ளார். சேக்கிழாரோ பெயர் சுட்டாமல் முதனூல் வழிநின்று பொதுப்படப் பாடினார். பதினொராந்திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பியின் கருத்தைத் தழுவி நக்கீரதேவநாயனார், கல்லாடதேவநாயனார், கபிலதேவநாயனார், பரணதேவநாயனார் எனப் புலவர் நால்வரை 'நாயனார்' என்று குறிப்பிட்டுள்ளார். இப்புலவர்கள் நால்வரும் இப்பெயருடைய கடைச்சங்கப் புலவரின் வேறானவர் என்றும், இவர்கள் காலத்தாற் பிற்பட்டவர்கள் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இம்மரபை நோக்குமிடத்துச் சிவனடியார் சிவனைப் போலவே மதிக்கப்பட்டனர் என்னும் உண்மை புலப்படுகிறது.

சிவனடியாரைச் சிவனைப் போலவே பாவித்து வழிபட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுங் கருத்தை எடுத்துக் கூறிய பெருமை சுந்தரமூர்த்திநாயனாருக்கே உரியது. அவருக்கும் விறன்மிண்ட நாயனாரே இந்த உணர்வைத் தூண்டியவராவர். சுந்தரமூர்த்தி தமது காலத்துக்கு முன்பிருந்த சிவனடியார்களையும் தமது காலத்தில் இருந்த சிவனடியார்களையும் பெயர்சுட்டி, அவர்களுக்க 'அடியேன்' என்றும், அவர்களுடைய 'அடியார்க்கும் அடியேன்' என்றும் தமது திருத்தொண்டத் தொகைப் பதிகத்திற் பாடியுள்ளார். இப்பதிகத்திலே அவர் அறுபத்திரண்டு தனியடியார் பெயர்களையும், ஒன்பது தொகையடியார் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். தனியடியார்களுள் மாணிக்கவாசகர் பெயர் இடம் பெறவில்லை. மாணிக்கவாசகர் சுந்தரர் காலத்துக்கு முன்போ, அவர் காலத்திலோ வாழ்ந்திருந்தால் அவருடைய பெயரைச் சுந்தரர் கூறாமல் விட்டிருக்கமாட்டார். மாணிக்கவாசகர் சுந்தரரது காலத்துக்கு - அதாவது கி.பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு பின் வந்தவராதலாலே அவர் சுந்தரராற் பாடப்படவில்லை. மாணிக்கவாசகர் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகவேனும் 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகவேனும் இருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுவர்.

இனி, சுந்தரர் தம்மையும் ஒருவராக அடியார் வரிசையில் வைத்துப் பாடினார் எனல் சாலாது. திருத்தொண்டத் தொகை இறுதிப் பாடலில் அவர்

**"என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்**
**இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்**
**அன்னவனாம் ஆரூர னடிமைகேட் டுவப்பர்**
**ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே."**

என்று தம்முடைய 'அடியார்க்கு அடிமைத் தன்மையைக் ' குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு தம்மைக் குறிப்பிடுகையிலே, அரனடியை அடைந்திட்ட தம் பெற்றோராகிய சடையனாரையும் இசைஞானியாரையும் பெயர் சுட்டி 'சடையன் இசைஞானி காதலன்' என்று தம்மையும் கூறியுள்ளார். சுந்தரருக்குப்பின், 11ஆம் நூற்றாண்டில் வந்த நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டத்தொகையை முதனூலாகக் கொண்டு, திருத்தொண்டர் திருவந்தாதி என வழிநூல் செய்தார். அவ்வந்தாதியிலே, நம்பி சடையநாயனார், இசைஞானியார் என்னும் இருவரையும் சிவனடியார் வரிசையிற் சேர்த்ததோடு, இவ்வாறு அடியார் வழிபாட்டைச் சிறப்பித்துப் பாடிய சுந்தரருக்குத் தனிச் சிறப்பும் அளித்துள்ளார். இந்நூலிலேயே தனியடியார் எண்ணிக்கை அறுபத்து மூன்று என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனைய அடியார்களை ஒவ்வோர் இடத்திலே ஒரு செய்யுளாலேனும் இரு செய்யுளாலேனும் பாடிய நம்பி, சுந்தரமூர்த்திநாயனாரைப் பத்து இடங்களிலே பத்துச் செய்யுள்களாற் பாடிச் சிறப்பித்துள்ளார். இக்குறிப்பை உணர்ந்தே, கி.பி.12ஆம் நூற்றாண்டிலே 'திருத்தொண்டர் புராணம்' எனப்படும் பெரியபுராணத்தைக் காவியமாகப் பாடிய சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தியைக் காவியநாயகனாக்கி, அவர் வரலாற்றைத் தடுத்தாட் கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காமர் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்னும் நான்கு இடங்களில் தழுவி, நக்கீரதேவநாயனார், கல்லாடதேவநாயனார், கபிலதேவநாயனார், பரணதேவநாயனார் எனப் புலவர் நால்வரை 'நாயனார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிட்டுள்ளார். இப்புலவர்கள் நால்வரும் இப்பெயருடைய கடைச்சங்கப் புலவர்களினின்றும் வேறானவர் என்றும், இவர்கள் கடைச்சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்தவர்கள் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இந்த மரபை நோக்குமிடத்து, சிவனடியார் சிவபெருமானைப் போலவே மதிக்கப்பட்டனர் என்னும் உண்மை புலப்படுகின்றது. சிவனடியார் சிவனைப் போலவே பாவித்து வழிபடுதற்குரியவர் என்னுங் கருத்தை எடுத்துக் கூறிய பெருமை சுந்தரமூர்த்தி நாயனாருக்கே உரியது. அவருக்கும் விறன்மிண்ட நாயனாரே இந்த உணர்வைத் தூண்டியவராவர். சுந்தரமூர்த்தி நாயனார் தமது காலத்துக்கு முன்பு வாழ்ந்த சிவனடியார்களையும், தமது காலத்தில் வாழந்த சிவனடியார்களையும் பெயர் சுட்டிக் கூறி, அவர்களுக்கு 'அடியேன்' என்றும் அவர்களுடைய அடியார்க்கும் 'அடியேன்' என்றும் தமது திருத்தொண்டத் தொகைப் பதிகத்திற் பாடியுள்ளார். இப்பதிகத்திலே அவர் அறுபத்தின்மர் தனியடியார் பெயர்களையும் ஒன்பது தொகையடியார் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் தம்மையும் தனியடியாருள் ஒருவராக வைத்துப் பாடினார் எனல் சாலாது. பதிகத்தின் இறுதிப் பாடலில் அவர்,

**"என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்**
**இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்**
**அன்னவனாம் ஆரூர னடிமைகேட் டுவப்பார்**
**ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே."**

என்று, தம்முடைய அடிமைத் திறத்தைக் கூறியுள்ளார். தம்மைக் கூறுகையிலே தம் பெற்றார் இருவரையும் பெயர் சுட்டிக் கூறியிருக்கின்றார். பின்னர் வழிநூல் செய்த நம்பியாண்டார் நம்பி, சடையனார், இசைஞானியார் என்னும் இருவரோடு சுந்தரமூர்த்தியையும் சேர்த்துத் தனியடியார் எண்ணிக்கையை அறுபத்து மூன்றாக்கி விட்டார். நம்பி தான் செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதியிலேயே' இப்பட்டியலை வைத்துப் பாடிமுடித்துள்ளார்.

நால்வருள் மாணிக்கவாசகர் ஒழிந்த மற்றைய மூவர் வரலாறுகள் பெரியபுராணத்திலே மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர், நம்பியாண்டார் நம்பி காலத்திலும் சேக்கிழார் காலத்திலும் நன்கு அறியப்பட்டவராயிருந்தாலும், அவர் இவ்விருவர் செய்த நூல்களிலும் இடம்பெறாமற் போனதற்குக் காரணம் இவற்றிற்கு முதனூலாகிய திருத்தொண்டத் தொகையிலே குறிப்பிடப்படாமையையே. மாணிக்கவாசகர் வரலாறு பின்னர் தோன்றிய வேம்பத்தூரர் திருவிளையாடற்புராணம், பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய பலநூல்களிற் கூறப்பட்டுள்ளது. இவற்றள் வேம்பத்தூரர் திருவிளையாடற் புராணமே முற்பட்டது (கி.பி. 13ஆம் நூற்றாண்டு).

திருத்தொண்டத் தொகையும் பெரியபுராணமும் தோன்றிய பின்னர், அறுபத்து மூவர் நாயன்மார்கட்குச் சிவாலயங்களிலே திருவுருவம் அமைத்து வழிபடும் வழக்கம் விரைவிலே தமிழ்நாட்டிற் பரவத்தொடங்கியது. கி.பி.12ஆம் நூற்றாண்டிற்குரிய இராசராசபுரக் கோயிற் சிற்பங்களிலே பெரியபுராணத்துட் பேசப்படும் நாயன்மார்களுட் பலருடைய பெயர்களுடன் 'ஆண்டார்' என்னுஞ் சிறப்புச் சொல்லும் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் சிவனடியாரைச் சிவனோடு ஒப்பவைத்துப் பெருமைப்படுத்தும் வழக்கத்துக்குச் சான்று பகருகின்றது.

நம்பியாண்டார் நம்பி காலத்தவனான முதலாம் இராசராசசோழன் (கி.பி.985-1014) தில்லைத் திருக்கோயிலிலே மூவர் முதலிகளின் கைச்சாத்தோடு காப்பிட்டுப் பூட்டி வைக்கப்பட்ட தேவார ஏடுகளை எடுப்பித்தற்கு மூவர் சிலைகளையுங் கொண்டு வந்தான் என வரலாறு கூறுகின்றமையால், மூவருக்கும் சிலைசெய்து வழிபடும் வழக்கம் கி.பி. பதினொராம் நூற்றாண்டளவிலே இருந்ததெனக் கருதலாம். ஆனால், தேவாரம் பாடியருளிய மூவரோடு திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரையும் சேர்த்து 'நால்வர்' என வைத்து வழிபடத் தொடங்கிய காலம் எதுவென்பது தெளிவாகப் புலப்படவில்லை. சைவத்திருமுறை வகுப்பிலே மூவர் முதலிகள் பாடிய தேவாரப் பதிகங்கள் முதல் ஏழு திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியாரால் வைக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே, நம்பியின் காலமாகிய கி.பி. பதினொராம் நூற்றாண்டிலே மாணிக்கவாசகரும் 'சிவனடியார்' என்று சைவத் தமிழ் உலகினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார் என்பது தெளிவு. அன்றியும், பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருவிடை மருதூர் மும்மணிக்கோவையைப் பாடிய பட்டினத்துப் பிள்ளையார்,

> 'வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
> திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்'

என மூவரையடுத்து மாணிக்கவாசகரை வைத்துப் பாடியிருப்பதால், பட்டினத்துப் பிள்ளையார் காலத்திலேயே (அஃதாவது, கி.பி.10ஆம் நூற்றாண்டில்) 'நால்வர் என்னும் மரபு நிலவியிருந்தது என்றும் கருத இடமுளது.* எவ்வாறாயினும், கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கும் 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 'சமய குரவர் நால்வர்' என்னும் மரபு தோன்றி நிலைபெற்றுவிட்டதெனக் கொள்ளலாம். அதே வேளையில் நால்வரும் அருளிச்செய்த தேவார திருவாசகங்கள் '**தமிழ்வேதம்**' என்றும் போற்றப்படலாயின.

தமிழ் உலகிலே-குறிப்பாகச் சைவத் தமிழ் உலகிலே-சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் அழியாச் சுவடுகளைப் பதித்துவிட்டனர். அவர்கள், வழி வழியாக வந்த மக்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் வழிபாட்டுக்கும் ஆளாகிவிட்டனர். சைவத் தமிழ் உலகம் இந்நால்வரையும் சமய ஆசாரியார்கள் என்றும், சமய குரவர்கள் என்றும் ஏத்திப் போற்றியது. நால்வரும் பொதுமக்களிடையே எத்துணைச் செல்வாக்குப் பெற்று விளங்கினர் என்பதை, இன்றும் 'நாலுபேர் சொன்னபடி நடக்க வேண்டும்' எனப் பொதுமக்கள் வழிவழியாக வழங்கும் அறிவுரையைக் கொண்டு அறியலாம். இங்கே 'நாலுபேர்' என்பது தெருவழியே செல்லும் எவரேனும் நால்வரையோ, வீட்டில் உள்ள பெரியவர்கள் நால்வரையோ குறிப்பதன்று. அது உண்மையிலே

---

நம்பியாண்டார் நம்பி தொகுத்தவை முதல் ஏழுதிருமுறைகளே என்றும் 8,9,10,11 ஆகிய திருமுறைகள் நம்பிக்குப்பின் நாளடைவிலே (11-13 ஆம் நூற்றாண்டுகளில்) சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் 'பெரிய புராண ஆராய்ச்சி' என்னும் நூலிலே கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய குரவர் நால்வரையுமே குறித்துத் தோன்றியது. காலப்போக்கில் மக்கள் அதன் உண்மைக் கருத்தை மறந்து ,போயிருக்கலாம். ஆயினும், பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஓர் அறிவுரை வாக்கியம் இன்றளவும் பொதுமக்களிடையே நிலைத்திருப்பது, சமய குரவர் நால்வருடைய அருள்ச்செயல்கள் பொதுமக்களின் வாழ்க்கையிலே எவ்வாறு பின்னிப் பிணந்துள்ளன என்பதை உணர்த்துகின்றது. நால்வரும் சைவசமயத்துக்கும் தமிழ்மொழிக்கும் சமூகத்துக்கும் ஆற்றிய அளப்பருந் தொண்டுகளை உள்ளவாறு மதிப்பிடுவதற்கு அக்காலச் சமயநிலையையும் சைவ வரலாற்றையும் ஓரளவு அறிந்திருத்தல் வேண்டும்

## 2. சைவ வரலாறு:

சிவ வழிபாடு தென்னாட்டுக்கே சிறப்பாக உரியது.

**'தென்னா டுடைய சிவனே போற்றி**
**எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'**

என்று மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலிலே பாடுவது இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றது. பழந்தமிழ் மக்கள் சிவநெறியைப் பேணிவந்தனர். தொல் பழங்காலத்தில் மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனையும், காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் திருமாலையும், வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருதத்தில் வாழ்ந்த மக்கள் இந்திரனையும், கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் வருணனையும், பாலையும் பாலை சார்ந்த நிலமுமாகிய பாலைநிலத்தில் வாழ்ந்த மக்கள் கொற்றவையையும் சிறப்பாக வழிபட்டு வந்தனராயினும், எல்லா நிலத்தார்க்கும் சிவவழிபாடு பொதுவாய் அமைந்தது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்தோர் பழந்தமிழரின் சமயம் இயற்கையோடு இயைந்த சிவநெறி என்றே அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

கடைச்சங்க காலத்தில், தமிழ்நாட்டிலே சிவவழிபாடும் திருமால் வழிபாடும் ஒன்றுபட்டு நிலவிவந்தன. அவற்றிடையே பிணக்கும் பூசலும் இருக்கவில்லை. சிவனை வழிபட்டோர் திருமாலைச் சிவனுடைய ஒரு கூறாகவே மதித்தனர். அவ்வாறே, திருமாலை வழிபட்டோர் சிவனைத் திருமாலின் ஒரு கூறாக மதித்தனர். சங்க காலத்திலே வடநாட்டு ஆரியருடைய வைதிக சமயம் தமிழ்நாட்டிலே சிறிது சிறிதாகத் தாக்கம் விளைக்கத் தொடங்கிவிட்டது. வடநாட்டிலே வைதிக சமயத்துக்கு மாறாகத் தோன்றிய சமணசமயமும் பௌத்தசமயமும் தென்னாட்டிலும் பரவிவந்தன. ஆயினும், தமிழ்நாட்டுக்கு வந்த சமணமுனிவரும் பௌத்தத்துறவியரும் பழந்தமிழ் மக்களின் சமய நெறியுடன் பிணங்காமல், ஆங்காங்கே பள்ளிகளை அமைத்து, அமைதியாகத் தத்தம் சமயக் கொள்கை-களைப் பரப்பி வந்தனர். அவர்கள் தமிழ்மொழியை நன்கு கற்று, அம்மொழியிலே இளைஞர்க்கும் வளர்ந்தோர்க்கும் நூல்களை எழுதி, அந்நூல்களைக் கற்பிக்கும் முகமாகக் தம் சமயக் கொள்கைகளை மக்களிடையே பரப்பினர். ஆகவே, சங்க காலத்தில், தமிழ்நாட்டிலே தமிழர் சமயமும் (சிவவழிபாடும் திருமால்வழிபாடும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணம், பௌத்தம், வைதிகம் ஆகிய வேற்றுச் சமயங்களும் தம்முட் கலகம் விளைக்காமல், தத்தம் நெறிகளில் நின்று அன்பையும் அறத்தையும் அறிவையும் பெருக்கி வந்தன. இந்த இனிய சூழ்நிலை கி.பி.250-300 வரை நிலவியதெனலாம்.

அதன் பின்னர், தென்னாட்டிலே வைதிகசமயத்தின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. வைதிகர், தமிழர் சமயத்தை வைதிகமயமாக்கும் முயற்சியை முடுக்கி வெற்றியுங் கண்டனர். தமிழர் பண்பாடும் ஆரியர் (வைதிகர்) பண்பாடும் இணைந்து 'சைவம்', 'வைணவம்' ஆகிய இரு தனிச் சமயங்களாக வளர வழிகோலின. இந்நிலையிலே, வைதிகத்துக்கு மாறான சமணசமயமும் பௌத்த சமயமும் இப்போது தமிழ்நாட்டிலும் தமது போராட்டத்தினை நடத்த முற்பட்டன.

தமிழ் நாட்டு அரசியற் சூழ்நிலை இதற்கு வாய்ப்பாக இருந்தது. தமிழ் நாட்டு அரசியலிலே வேற்றுநாட்டவர் ஆதிக்கம் முதன்முதலாகத் தோன்றியது. 'களப்பிரர்' எனப்படும் ஒரு கூட்டத்தார் தமிழ்நாட்டுக்கு வடக்கிலிருந்து படையெடுத்து வந்து, சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ்நாட்டு மூவேந்தர் ஆட்சியைக் கைப்பற்றினர். களப்பிரர் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் 'இருண்ட காலம்' எனப்படும். களப்பிரர் தமிழ்மொழி பேசியோரல்லர்; தமிழர் சமயத்தைத் தழுவினோருமல்லர். அவர்கள் வடநாட்டுப் பாகதமொழி பேசியவர்கள். அவர்களுடைய ஆட்சியிலே சமண சமயமும் பௌத்த சமயமும் தலையெடுத்தன. ஏறத்தாழ 200 ஆண்டுகள் களப்பிரர் ஆட்சி நீடித்தது. பின்னர் கி.பி.450 அளவில் 'பல்லவர்' என்னும் மற்றொரு வடநாட்டு வயவர் படையெடுத்து வந்து, களப்பிரர் ஆட்சியைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தமது தலைநகராகக் கொண்டு தமது ஆட்சியை நிறுவினர். நாளடைவிலே பல்லவர் தமிழ்நாட்டிலே ஒரு பேரரசை நிலை நாட்டிவிட்டனர். பல்லவ மன்னரும் தொடக்க காலத்திலே சமணசமயத்தை ஆதரித்தனர்; வடமொழிக் கல்வியையும் புகுத்தினர். காஞ்சி மாநகரம் ஒரு பல்கலைக்கழக நகரமாக விளங்கியது. சமணர், பௌத்தர், வைதிகர் ஆகியோர் தத்தம் சமயக் கொள்கைகளை வாதிப்பதற்கும் பரப்புவதற்கும் காஞ்சிமாநகர் ஒரு களமாக விளங்கியது.

பல்லவர் ஆட்சிக் காலத்திலே பழைய மூவேந்தர் மரபினர் மீண்டும் தத்தம் அரசுகளை நிறுவ முற்பட்டுப் பல்லவப் பேரரசர்க்குத் திறைகொடுக்கும் சிற்றரசர்களாய் ஆங்காங்கே ஆட்சி செய்து வந்தனர். அவர்களுடைய இராச்சியங்களில் சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் ஓரளவு நிலைபெற்றிருந்தன. ஆயினும், சமணமும் பௌத்தமுமே தமிழ்நாடு எங்கும் ஆதிக்கம் பெற்று விளங்கின. ஆதியில் அன்பையும், அறத்தையும், அருளையும் உயிர்நிலையாகக் கொண்டு தோன்றிய இச்சமயங்கள், இப்போது ஆதிக்க வெறிபிடித்துச் சைவத்தைத் தகர்த்தொழிக்கத் தலைப்பட்டுவிட்டன. அச்சமயத்தவர் தமது அடிப்படைக் கொள்கையைக் கைவிட்டு, சைவருக்கு இன்னா செய்வதில் ஈடுபடலாயினர்; நாட்டை ஆளும் அரசரின் ஆதரவைப்பெற்று வைதிக சமயங்களை முற்றாகவே ஒழித்துவிடப் பல்லாற்றானும் முயற்சி செய்தனர்.

நாளடைவிலே, பௌத்தரை விடச் சமணர் ஆதிக்கம் பெருகியது. பல்லவ மன்னரும் பாண்டிய மன்னரும் சமணத்தைப் பல்வகையாலும் ஆதரித்து வந்தனர். சமண முனிவர்கள் வடமொழி, தென்மொழி ஆகியவற்றிற் பல நூல்கள் யாத்தனர். மடங்களும் பள்ளிகளும் பல்கின. இத்தகைய சூழ்நிலைகளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் பல பகுதிகளிற் சைவ வைணவ சமயங்கள் நிலைகுலைந்தன. இவ்வாறே கி.பி.7ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரையிற் சைவம் புறச் சமயங்களாற் பெரிதும் தாக்குண்டு கலங்கியது.

இக்கால கட்டத்திலே திருநாவுக்கரசரும் (அப்பர்) திருஞானசம்பந்தரும் (சம்பந்தர்) தோன்றிச் சைவத்துக்குப் புத்துயிரளித்துத் தலையெடுக்கவைத்தனர். முதலிற் சமண சமயத்தவனாயிருந்த மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி.615-630) அப்பராற் சைவசமயத்துக்கு மாறினான். நெல்வேலியிற் போர்வென்ற நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னன் (கி.பி.7ஆம் நூற்றாண்டு) சம்பந்தராற் சைவனானான். பின்வந்த பல்லவரும் பாண்டியரும் சைவத்தை ஆதரித்து வளர்த்தனர். கி.பி.9ஆம் நூற்றாண்டிலே சோழ அரசர் தமது பழைய முதன்மையை நிலைநாட்ட முயன்று, பல்லவரைப் போரில் வென்று, சோழப் பேரரசு தோன்றுவதற்கு வித்திட்டனர். சோழப் பேரரசருள் முதலாம் இராசராசன், இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன் போன்றோர் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றி அழியாப் புகழை நாட்டினர். கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரையுள்ள சோழப் பேரரசர் காலம் தமிழ் நாட்டு வரலாற்றிலே 'பொற்காலம்' எனப் போற்றப்படும். சோழ மன்னரின் ஆதரவிலே சைவமும் தமிழும் செழித்தோங்கின; பெரிய பெரிய கோயில்கள் கட்டப்பட்டன; பேரிலக்கியங்கள் இயற்றப்பட்டன; சைவத்திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டன; நாயன்மார் வழிபாடும் நால்வர் வழிபாடும், சைவர் வாழ்க்கையில் முக்கியம் பெற்றன.

தென்னாட்டிற் சைவம் செழிப்புற்றிருந்த அக்காலத்தில் வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இச்சமயத் தொடர்பு இருந்து வந்தது. பைரவர், பாசுபதர், மாவிரதியர், காளாமுகர், காபாலிகர் என்னும் சைவ உட்பிரிவினராகிய சிவனடியார் பலர் வடநாட்டினின்றும் போந்து தென்னாட்டிலே சஞ்சரித்தனர். தென்னாட்டு நாயன்மார் அவர்களைப் பெருமதிப்புடன் போற்றினர். பெரிய புராணத்துட் பேசப்படும் சைவ நாயன்மார் யாவரும் தென்னாட்டவர். துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள காம்பீலிநகரம் முதல் தென்பாண்டி நாட்டிற் குமரிமுனை வரையிலுள்ள நிலப்பரப்பில் இவர்கள் தோன்றி அருந்தொண்டாற்றி, அழியாப்புகழ் பெற்றவராவர். இந்நாயன்மார்கள் ஆதிசைவர், பிராமணர், அரசர், வணிகர், வேளாளர், இடையர், வேட்கோவர், சான்றோர், வேடர், புலையர், ஏகாலியர், மாமாத்திரர், பரதவர், செக்கவர், பாணர் எனப் பல சாதியினராவார். சாதியிலும் சமய வாழ்க்கையே உயர்ந்தது என்பதைச் சைவத்தமிழ் உலகம் ஒப்புக்கொண்டு, கடைபபிடித்தும் வந்தது. நால்வரும் தம் வாழ்க்கையில் இக்கொள்கையைப் பின்பற்றிக் காட்டினர். இதனால், பிறப்பினால் சாதி வேற்றுமை பாராட்டும் கண்மூடித்தனமான வழக்கம் தளர்ந்தது. தொண்டர் குலமே தொழுகுலம் என்னும் மனப்பான்மையும் வளர்ந்தது.

மேலும் ஆண்பாலாரேயன்றிப் பெண்பாலாரும் சமயத் தொண்டாற்றிப் பெருமையுற்றனர். சிவனடியார்களை உபசரித்து, அவர்களைச் சிவமாகவே பாவித்து வழிபடும் அன்பின் மேன்மை பெண்ணடியவர்க்கு மிகுதியாக உண்டு. காரைக்காலம்மையார் வரலாற்றில் இதைக் காணலாம். இயற்பகைநாயனார், இளையான்குடிமாறநாயனார், அப்பூதியடிகள், சிறுத்தொண்டநாயனார் முதலியோர் வரலாற்றிலும் இது சிறப்பிடம் பெற்றுள்ளது. திலகவதியார் தம் தம்பிக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பேணியதோடு, சமணசமயம் புக்க தம்பியைச் சைவத்துக்கும் மீட்பித்தார். மங்கையர்க்கரசியார் தம் கணவன் சமணராயிருந்தபோதும், தாம் சைவத்தைப் பற்றி நின்று, கணவராகிய கூன்பாண்டியரையுஞ் சைவத்துக்குக் கொண்டு வந்தார்; அன்றியும் பாண்டிய நாட்டையும் சைவத் திருநாடாக்கினார்.

இனி, ஆண்பாலாரே வீடு பெறுவதற்கு உரியர் என்பது சமணர் கொள்கை. ஆனால், ஆண்பாலார் போலவே பெண்பாலாரும் சமயநெறி நின்று வீடுபேறு அடைதற்குரியர் என்பது சைவத்தின் தாராளக் கொள்கை. எல்லா வகையாலும் தாராளமானதும், செம்மையானதும், ஒப்புயர்வில்லாததுமான சைவசித்தாந்த மெய்யியலைக் கி.பி.13ஆம் நூற்றாண்டிலே மெய்கண்டதேவர் வகுத்தருளினார். இதற்கு ஆதாரமான அடிப்படை உண்மைகளைத் தமது மெய்யுணர்வால் எடுத்துக் கூறியோர் சைவ சமய குரவராகிய நால்வருமே யாவர்.

## ஆ. நால்வர் வாழ்க்கையும் சாதனையும், போதனையும்:

நால்வருள்ளும் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தருமும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவருள்ளே திருநாவுக்கரசர் மூத்தவர். சம்பந்தர் இளையவர். இவர்கள் முதன் முதல் ஒருவரையொருவர் சந்தித்தபோது, நாவுக்கரசரின் பழுத்த சைவத் தோற்றத்தைக் கண்ட சம்பந்தப்பிள்ளையார் அன்புப் பெருக்கால் 'அப்பரே' என்று அழைத்தார். அன்று முதல் நாவுக்கரசருக்கு 'அப்பர்' என்னும் பெயரே பொதுவாக வழங்கலாயிற்று. சம்பந்தர், மூன்றாம் ஆண்டிலே உமையம்மையின் ஞானப்பால் உண்டு ஞானசம்பந்தரானவர். அதனால், திருமுறை வகுப்பிலே நம்பியாண்டார் நம்பி, ஞானசம்பந்தருக்கு முதலிடங் கொடுத்து, அவர் பாடியருளிய பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாவும், அப்பருடைய பதிகங்களை அடுத்த மூன்று (அதாவது, நான்காம், ஐந்தாம், ஆறாம்) திருமுறைகளாகவும் வைத்தார். நாம் இங்கே காலவரன் முறைப்படி நால்வர் வாழ்க்கையையும் சமயத் தொண்டுகளையும் கவனிப்போம்:

## 1. திருநாவுக்கரசர் (அப்பர்)

### 1.1 வாழ்க்கைச் சுருக்கம்:

இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், தென்னார்க்காடு மாவட்டத்தில், திருவாமூரில், வேளாளர் குலத்தில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகவாகத் தோன்றினார். இவரது பிள்ளைப் பருவப்பெயர் மருணீக்கியார். இளமையிலே பெற்றோர்களை இழந்து தமக்கை திலகவதியாரின் ஆதரவில் வளர்ந்தார். வாழ்க்கை நிலையாமையை இளமையிலே கண்ட மருணீக்கியார் துறவு மனத்தோடு சமண மதம் புகுந்து, சமண நூல்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்று வல்லவராகித் தருமசேனர் என்னும் பெயருடன் மதத்தலைவராய் விளங்கினார். அது கண்ட திலகவதியார் தமது குறையைத் திருவதிகைச் சிவபிரானிடம் விண்ணப்பிக்க, சிவபிரான் மருணீக்கியார்க்குச் சூலை நோயை ஏவினார். அந்நோய் சமணரது மருந்தினாலும் மந்திரத்தினாலும் மாறாது உடற்றவே, மருணீக்கியார் திலகவதியாரை அடைந்து, அவரால் திருநீறு பூசிச் சைவத்துக்கு மீட்கப்பட்டார்.

தமக்கையார் மருணீக்கியாரைச் சிவசந்நிதிக்கு அழைத்துச் செல்ல, அவர் முன்செய்த தவப்பேற்றால் இறைவனுக்கப் பாமாலை சாத்தும் உணர்வு பெற்றுக் **'கூற்றாயின வாறு விலக்ககிலீர்'** என்னும் பதிகம் பாடிச் சூலை நோய் நீங்கப் பெற்றார். இறைவன் **'திருநாவுக்கரசு'** என்னும் பெயர் தந்தார். பின்னர், தருமசேனர் சைவத்துக்கு மாறியதை அறிந்த சமணர், பல்லவ மன்னனின் ஆதரவு பெற்று, தருமசேனரை அழைத்து நீற்றறையிலிட்டும், நஞ்சூட்டியும், மத யானையை ஏவியும் கொல்ல முனைந்தனர். ஆனால், சிவனையே தியானித்து, அச்சம் என்பது அணுவளவேனும் இல்லாமல் தம்மை இறைவனிடம் ஒப்படைத்திருந்த நாவுக்கரசர் சாகவில்லை. சமணர் வெகுண்டு நாவுக்கரசரைக் கல்லோடு பிணைத்துக் கடலில் இட்டனர். அப்போது, **'சொற்றுணை வேதியன்'** என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாகத் திருப்பாதிரிப் புலியூரிற் கரையேறினார். பின்னர்த் திருநாவுக்கரசர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்களுக்குச் சென்று தரிசித்துத் திருப்பதிகம் பாடி வரலானார்.

பல்லவ மன்னன் நல்லறிவு பெற்று, உண்மை தெளிந்து, திருநாவுக்கரசரையடைந்து வணங்கிச் சிவனடியானானான். பாடலி புத்திரத்திலிருந்த சமணப் பள்ளிகளையும், பாழிகளையும் இடித்துத் திருவதிகையிலே குணபர வீச்சரம் என்னும் சிவாலயத்தைக் கட்டினான். பல்லவ மன்னன் சைவனானமையால், சமணமதம் வீழ்ச்சியடையச் சைவசமயம் தழைக்கலாயிற்று.

திருநாவுக்கரசர் திருத்தல தரிசனஞ் செய்து பதிகம் பாடுவதோடு, திருக்கோயிற் சுற்றாடலைத் தூய்மையாய் வைப்பதற்கு உழவாரத் திருப்பணியும் செய்து வந்தார். சீகாழியிலே திருஞானசம்பந்தப் பிள்ளையார் ஞானப்பாலுண்டு, தெய்விகச் செயல்கள் புரிவதை அடியார்கள் மூலம் கேள்விப்பட்டு, அங்கே சென்று, பிள்ளையாரைக் கண்டு அளவளாவி, அவரோடும் சேர்ந்து பல திருத்தலங்கட்குச் சென்று தரிசனஞ் செய்து வந்தார். நாயன்மார் இருவரினதும் அடியார் கூட்டம், தலங்கள் தோறும் கூட்டு வழிபாடு செய்து, சைவ முழக்கம் செய்து வந்தது. இவ்வாறு தமிழ்நாடு அடங்கலும் உள்ள சிவத்தலங்கள் பலவற்றுக்குஞ் சென்று உழவாரத்தொண்டு செய்தும் திருப்பதிகம் பாடியும் ஆங்காங்கே இறைவன் திருவருளால் அற்புதங்கள் செய்தும் வந்த நாவுக்கரசர் பொன்னாசை, பெண்ணாசை போன்ற மாயைகளை யெல்லாம் வென்றவராய்ப் பெருந்தவ நிலையிலே பழுத்த ஞானம் எய்தி நின்றார். இறுதியில் திருப்புகலூர்ப் பெருமானைத் தரிசித்து, **'உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே'** எனவருந் திருத்தாண்டகத்தைப் பாடித் தமது எண்பத்தொராம் வயதிலே, சித்திரைச் சதய நாளிலே சிவன் சேவடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 திருநாவுக்கரசரின் சாதனைகள்:

திருநாவுக்கரசர் தாம் சைவசமயத்திற் பிறந்தும், அச்சமயத்தை விட்டுப் புறச்சமயமாகிய சமணசமயம் புகுந்து, அல்லற்பட்டு, மீண்டுஞ் சைவத்துக்கு வந்த காரணத்தால், தம்மை ஆட்கொண்ட இறைவனுக்குத் தாம் என்றுமே ஊழியனாயிருந்து பணிசெய்வது தான் தக்கது எனத் துணிந்தார். அதனால், தலைவன்பால் ஊழியனுக்குள்ள அன்புநெறியான தாசமார்க்கத்தில் நின்று சரியை வழிபாடு செய்து வந்தார். இறைவனுடைய பெருமையையும் பெருங்கருணைத் திறத்தையும் எண்ணி யெண்ணி உருகுவதும், தம்முடைய குறைபாடுகளைக் கூறிக்கூறி இரங்குவதும் அவரது இயல்பு. ஆதலால், அவர் பாடல்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடல்களைப் பார்க்கிலும் மிகுதியாக நம்முள்ளத்தை உருக்குகின்றன. சிவபிரான் இராவணனைத் தண்டித்து அருள்செய்த புராண வரலாறு அப்பருடைய உள்ளத்தில் அழுந்திப் பதிந்துவிட்டது. இராவணன் வெற்றிச் செருக்கினால், கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது, சிவபிரான் காலால் நெரித்து அவனை அடர்த்துப், பின்னர் அவன் தன் பிழையை உணர்ந்து கசிந்துருகி வேண்டுதல் செய்தபோது, அவனுக்கு இரங்கி அருள்செய்தார் என்பது புராண வரலாறு. அந்த அருளாலே அப்பெருமான் தமது பிழையையும் பொறுத்து, தம்மைத் தடுத்தாட் கொண்டார் என்று அப்பர் உணர்ந்தார். அதனாலே, அவர் தம் பதிகந்தோறும் இறுதிப்பாடலிற் சிவபிரான் இராவணனுக்கு அருள்செய்தமையைச் சொல்லியுள்ளார். ஊழியன் தன் தலைவன் பெருமைகளை வியப்புணர்ச்சியுடன் எடுத்துச் சொல்வது போலவும், தான் பலபல குறைபாடு உடையவன் என்று தன்னைக் குறைத்துப் பேசுவது போலவும், தன் தலைவனை அடைந்தால் பல நன்மைகள் பெறலாம் என்று தன்னைப் போன்ற பிறருக்கு நல்வழி காட்டுவது போலவும் அப்பர் பெருமான் பாடியுள்ளார்.

இவ்வாறு ஆண்டானுக்கு அடிமையாய்ப் பணிவு என்னும் பண்பிலே நின்றாலும், தம்மை இறைவன் தாங்கிக்கொள்வான் என்ற அசையாத நம்பிக்கையினாற் பிறந்த அஞ்சாத நெஞ்சுரம் உடையவராய் விளங்கினார் அப்பர். அந்த நெஞ்சுரத்தினாலேயே, **'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்'** என்று பல்லவன் ஆணைக்கும் பணிய மறுத்தார். பின்னர், அரசன் ஆணையால் தம்மீது மதயானை ஏவப்பட்ட போதும், **'அஞ்சுவது யாதொன்ற மில்லை, அஞ்ச வருவது மில்லை'** என்று பேராண்மையோடு நின்றார். முதுமையால் தளர்ந்த உடலினராயினும் பத்தியால் வயிரம் பாய்ந்த உள்ளமுடைய அப்பருக்கு முன் மத யானை மட்டுமன்றிப் பல்லவப் பேரரசனுமே பணிந்து போனது வியப்பன்று.

அப்பருடைய இந்த நெஞ்சுரத்தை வேறு சந்தர்ப்பங்களிலும் காண்கின்றோம். திருப்பழையாறிலே வடதளி என்னும் சிவாலயத்தை அப்பர் தரிசிக்கச் சென்றிருந்தார். அங்கே சிவலிங்கப் பெருமான் சமணர்களின் விமானத்தால் மறைக்கப்பட்டிருந்தமை கண்டு, மனம் வருந்தினார். அங்கே அவர் ஓரிடத்திலே ஒதுங்கி யிருந்து, சிவபெருமான் திருவடியைச் சிந்தித்து, 'ஐயனே, சமணர் வஞ்சம் ஒழிதல் வேண்டும், உன் திருவுருவைக் கண்டு தொழாது யான் போகேன்' என்று கூறி, உண்ணாநோன்பிருந்தார். இறைவன் அருளால் அரசன் செய்தி யறிந்து, அவ்விடம் போந்து, சமணர்களை அழித்துச் சிவலிங்கப் பெருமானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி, அப்பரும் மற்ற அடியார்களும் கண்ணாரவும் மனமாரவுங் கண்டு தொழ வழிசெய்து தந்தான்.

அப்பர் வடகயிலையைத் தரிசிக்கவிரும்பி வழிநடந்த நிகழ்ச்சியும் அவரது மனவலிக்கு மற்றொரு சான்றாகும்: அவர் காளத்தியிலிருந்து கால்நடையாகக் காசிவரை சென்று, கற்சுரங்களில் நடக்கலானார்; பாதங்கள் தேய்ந்தன. கைகளால் தாவிச் சென்றார்; கைகளுந் தேய்ந்தன. மார்பினால் ஊர்ந்து சென்றார்; மார்பும் நைந்து தேய்ந்தது; எலும்புகளும் முறிந்தன. புரண்டு புரண்டு பார்த்தார்; உடலும் தேயலாயிற்று. மெல்ல மெல்ல நகரமுயன்றார்; அதற்குமேற் செயலற்றவரானார். அந்நிலையிற் சிவபெருமானே ஒரு முனிவராய் அவர் முன் வந்து, அவரது முயற்சியைக் கைவிடுமாறு அறிவுறுத்தினார். 'கயிலைக் காட்சி கண்டல்லால் யான் திரும்பேன்' என்று விடைபகர்ந்தார் அப்பர். அப்பருடைய உள்ளத்தின் உரத்தை உலகறியச் செய்தபின் சிவபெருமான் அப்பருக்குத் திருவையாற்றிலே திருக்கயிலைக் காட்சியை வழங்கியருளினார்.

இவ்வாறு இறைவன்பால் வைத்த உறுதியான நம்பிக்கையாலும், பத்தி வைராக்கியத்தாலும் திருநாவுக்கரசர் பெற்றிருந்த பெருவீரம், சைவமக்களுக்கு எஞ்ஞான்றும் எழுச்சியூட்டுவதாயிருக்கின்றது.

## 1.3 நாவரசர் வாழ்க்கையிலிருந்து நாமறிய வேண்டிய அரிய உண்மைகள்:

(i) புறச் சமயம் புக்க தம்பியாரை மீண்டும் சைவத்திற் சேர்க்க விரும்பிய திலகவதியார், அன்போடு திருநீற்றைத் திருவைந் தெழுத்தோதிக் கொடுத்ததேயன்றி, வேறு பிராயச்சித்தம் எதுவும் செய்திலர். இறைவனும் உலகோரும் அ∴தே சாலும் என்று ஒப்புக்கொண்டனர்.

(ii) திருநாவுக்கரசருக்கு ஞானகுரவராய் அமைந்தவர் தபோதினியாய் விளங்கிய தமக்கையாரே. "திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் 'பெருவாழ்வு வந்தது' எனப் பெருந்தகையார் பணிந்தார்." அவர் தாம் புதுப்பிறப்புப் பெற்றுவிட்டதாக உணர்ந்தார். தம் குரவராகிய தமக்கையார் செய்த சிவவழி-பாடெல்லாம் தமது சொந்த வழிபாடென உணருமளவுக்கு அந்நேரத்தில் அவர் குரவரோடு ஒன்றி நின்றார். இதனாலே அவர் திருவதிகைப் பெருமானிடம் சூலை நோயைத் தீர்த்தருளும்படி வேண்டிப் பாடிய முதலாம் பதிகத்திலே.

**'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையா தொருபோதும் இருந்தறியேன்'**

என்றும்,

**'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'**

என்றும்,

**'நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்'**

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் இடையறாது சிவவழிபாடு செய்துவந்ததாகப் பாடியுள்ளார். அவர் சமணசமயம் புக்கு, நெடுங்காலம் தருமசேனர் என்னும் பெயருடன் மடத்தலைவராய் வாழ்ந்தவர். அக்காலத்தில் அவர் சிவவழிபாடு செய்தவரல்லர். பின்னர் அவர்பாடிய பல பாடல்களில் சிவனை நினையாதிருந்ததை எடுத்தும் கூறியுள்ளார். (உ-ம் திருவாரூர்ப் பழமொழிப் பதிகம்: 4:5: 1-10). ஆகவே, தம்முடைய குரவராய தமக்கையாருடன் சென்று திருவதிகைத் திருத்தலத்திலே முதன் முதலாகத் திருப்பதிகம் பாடியபோது, திலகவதியார் செய்த வழிபாட்டைத் தமது சொந்த வழிபாடாகக் கொண்டு தாம் இடையறாது சிவவழிபாடு செய்ததாகப் பாடியுள்ளார் என்று அமைதி கூறுவதே பொருத்தமானது.

(iii) குற்றத்தை உணர்ந்து உண்மையாக வருந்துபவர்க்கு ஈடேற்றம் உண்டு; அறியாமையினால் அடாதன செய்தாரும் பின்னர் அறிவு விளங்கிச் செய்த குற்றத்தை எண்ணி இரங்கி உண்மையாகவே மனம் வருந்துவாராயின், ஆண்டவன் அன்னார்க்கு அருள் புரியக்காத்துக் கொண்டிருக்கிறான் என்பது. திருநாவுக்கரசர் ஆண்டவன் கருணைத் திறத்துக்கு ஓர் அறிகுறியாக இராவணன் செய்தியைக் குறிப்பிடுவதன் நுட்பம் இதுவே.

(iv) திங்களூரில் வாழ்ந்த அப்பூதியார் என்னும் அந்தணர் திருநாவுக்கரசரின் பெருமையைக் கேள்வியால் அறிந்து, வேளாளரான இவரையே தமது ஆசாரியராகக் கொண்டார். அவர் தம் மைந்தர்களுக்கும், தாம் செய்துவந்த அறப்பணிகளுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே அமைத்து அன்பு செலுத்தி வந்தார். திருநாவுக்கரசர் திங்களூருக்கு எழுந்தருளியபோது, அப்பூதியார் அவரை அன்புடன் தமது இல்லத்துக்கு அழைத்து, மனைவி மக்களுடன் அவர் தாளில் வீழ்ந்து வணங்கினார். பின்னர் அப்பூதியார் தம் மைந்தருடன் திருநாவுக்கரசர் மருங்கிலே அமர்ந்து அவருக்கு அமுது வழங்கித் தாமும் உண்டார். சமயவுணர்வும் ஒழுக்கமும் விஞ்சிய விடத்துச் சாதிவேற்றுமை மறைந்தொழிந்துபோம் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

(V) திருநாவுக்கரசர் சம்பந்தருடன் தலயாத்திரை செய்துவருகையில் திருவீழிமிழலையை அடைந்தபோது, மிழலை நாட்டிற் பஞ்சம் நிலவியதால், அடியார்கள் ஆதரிப்பாரின்றி வருந்துவதைக்கண்டு உளம் நொந்தார். பெரியார் இருவரும் மிழலை நாதருக்கு விண்ணப்பித்தனர். மிழலை நாதர் திருக் கொயிலிற் குறித்த இரண்டு இடங்களில் இருவருக்கும் நாடோறும் பொற்காசு வைக்க, இருவரும் அப்பணத்தைக் கொண்டு அடியார்களுக்கு அன்னமிடுவித்தனர். கைத்தொண்டு செய்யும் அடியவரான அப்பருக்கு கிடைத்தது வாசியில்லாக் காசு; சம்பந்தருக்குக் கிடைத்ததோ வாசியுடைய காசு. பின்னர், சம்பந்தர் பதிகம் பாடி வாசி தீர்ந்த காசு பெற்றார். இந்த நிகழ்ச்சி கைத்தொண்டின் சிறப்பை உணர்த்துவதோடு, நாயன்மார்களின் சமூகவுணர்வையும் எடுத்துக் காட்டுகிறது. சமய ஒழுக்கம் சமூகத் தொண்டுடன் கூடிய வழியே பெரும்பயன் உடையதாகும். அத்தகைய சமூகத் தொண்டு செய்தலே ‘இறைபணி நிற்றல்’ எனப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.4 திருநாவுக்கரசர் தேவாரம்:

சுந்தரமூர்த்திநாயனார், 'இணைகொள் ஏழெழுநூறிருப்பனுவல் ஈன்றவான் நாவினுக்கரையன்' என்றும், நம்பியாண்டார் நம்பி 'பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி பரசுதா வரசான பரமகாரணவீசன்' என்றும் பாடியிருப்பதை நோக்க, திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் 4900 என்று தெரியவருகிறது. ஆனால், நம்பியினால் தொகுக்கப்பட்டு, இப்போது அடங்கன் முறையிலே நமக்குக் கிடைத்திருப்பவை 312 பதிகங்களேயாம். இனி, திருமுறை கண்டபுராணத்திலே 'நண்புற்ற நாவரசன் முந்நூற் றேழ் மூன்றில்' என வருதலால், திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்தில் 321 பதிகங்கள் கிடைத்திருத்தல் வேண்டும்.

இப்பதிகங்கள் அடங்கன் முறையில் நான்காம், ஐந்தாம், ஆறாந் திருமுறைகளாக வைக்கப்பட்டுள்ளன. பதிகந்தோறும் பெரும்பாலும் பத்துப்பாடல்களே உள்ளன. சில பதிகங்களில் பதினொரு பாடலும், அதற்கு மேலும் உள்ளன. ஆனால், சம்பந்தருடைய பதிகங்களில் உள்ளது போன்ற 'திருக்கடைக்காப்புப்' பாடல் நாவுக்கரசர் பதிகங்களில் இல்லை. சில பதிகங்களில் சில பாடல்கள் அகப்படவில்லை.

நான்காந் திருமுறையிலே இந்தளம், காந்தாரம், காந்தார பஞ்சமம், குறிஞ்சி, கொல்லி, சாதாரி, சீகாமரம், பழந்தக்கராகம், பழம்பஞ்சமம், பியந்தைக் காந்தாரம் என்னும் பத்துப்பண்களில் 79 பதிகங்கள் உள்ளன. 22 முதல் 79 வரையுள்ள பதிகங்கள் 'திருநேரிசை' என்ற வகையில் அமைந்தவை. இவற்றுக்குப் பண் 'கொல்லி' என்று தனியே குறிக்கப்பட்டிருத்தலின், 'திருநேரிசை' என்பது யாப்பு நோக்கிய பெயராகலாம். இப்பாடல்கள் எல்லாம் அறுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்களாய் அமைந்துள்ளன. 80 முதல் 113 வரையில் உள்ள பதிகங்கள் 'திருவிருத்தம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இவையும் யாப்புப் பற்றியே பெயரிடப்பட்டனவாகலாம். இப்பாடல்கள் கட்டளைக் கலித்துறைப் பாடல்களாகக் காணப்படுகின்றன.

ஐந்தாந் திருமுறை முழுவதும் 'திருக்குறுந்தொகை' என்று குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பண் இன்னது என்று குறிக்கப்படவில்லை. இப்பாடல்கள் யாவும் 'கலிவிருத்தங்களாய்' உள்ளன. இத் திருமுறையில் அடங்கியுள்ள பதிகங்கள் நூறு.

ஆறாந் திருமுறை முழுவதும் 'திருத்தாண்டகம்' எனப்படும் பாடல்களால் அமைந்த பதிகங்களைக் கொண்டுள்ளது. இதுவும் யாப்பு நோக்கிய பெயரே. பாடல்கள் பெரும்பாலும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களாய் அமைந்துள்ளன. தாண்டகங்கள் மனத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை. பல தாண்டகங்கள் சிவபெருமானுடைய திருவுருவத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன; வேறு பல தாண்டகங்களில் சிவபெருமான் அடியார்கள் பொருட்டுச் செய்த திருவிளையாடல்கள் புராணக்கதைகளின் அடிப்படையிலே பேசப்படுகின்றன. 'சேத்திரக்கோவை', 'அடைவு' என்னும் திருத்தாண்டகப் பதிகங்களில் நாவுக்கரசர் பல சிவத்தலங்களைத் தொகுத்துக் கூறியுள்ளார். (அவர் 126 திருத்தலங்களுக்குப் பதிகங்கள் பாடியிருக்கிறார்). தாண்டகங்களின் தனிச்சிறப்பு நோக்கி நாவுக்கரசர் 'தாண்டக வேந்தர்' எனவும் 'தாண்டகச் சதுரர்' எனவும் பாராட்டப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கரசர் ஆண்டான்-அடிமை நெறி (தாச மார்க்கம்) நின்ற பத்தி செய்தவராயினும், இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் வைத்துப் பல பதிகங்கள் பாடியிருக்கிறார். பத்திநெறியின் பல படிகளிலும் ஏறிச் சென்ற நாயனார், பழுத்த ஞானியாயும் விளங்குகின்றார். பல காலம் உலகில் துன்பமும் இன்பமும் நுகர்ந்து வாழ்ந்தவராகலின், இவருடைய பாடல்களிலே உலக அனுபவத்தைக் காட்டும் கருத்துக்கள் பலவற்றைக் காண்கின்றோம். சைவசித்தாந்தக் கருத்துக்களையும் மக்களுக்கு விரிவான உபதேசங்களையும் நாவுக்கரசர் தம் பாடல்களிலே அள்ளி வழங்கியுள்ளார்.

## 1.5 திருநாவுக்கரசர் நமக்குக் கூறும் உபதேசம்:

உலகப் பொருள்கள் எல்லாம் இறை(பதி), உயிர்(பசு), தளை(பாசம்) என்னும் முப்பொருள்களிலே அடங்கும். இறைவன் ஒருவனே. அவன் ஆணும் பெண்ணுமாய்-சிவமும் சத்தியுமாய்-அத்துவிதக் கலப்பாய் நின்று உயிர்களுக்கு அருள் செய்கின்றான். நாம் எவ்வுருவில் அவனைப் பாவித்து வணங்குகின்றோமோ, அவ்வுருவில் நின்று அவன் அருள் செய்வான். அவன் விறகில் மறைந்துள்ள தீப்போலவும், பாலில் மறைந்துள்ள நெய்போலவும், மணியில் மறைந்துள்ள சோதிபோலவும் மறைந்துள்ளான்; பக்குவர்களுக்கு அவரவர் பக்குவநிலைக்குத் தக்கவாறு தன்னை வெளிப்படுத்துவான். விறகில் உள்ள தீ 'முறுக வாங்கிக் கடைய முன்னிற்கும்'; அதுபோலத் தாமதகுண-முள்ளவர்க்கு, இறைவன், மிக்க முயற்சி செய்து தம்மனத்திலே பத்தியை நிலைநாட்டித் தீவிரமாக விவேகத்தால் உண்மைப் பொருளை மீண்டும் மீண்டும் சிந்திப்பதன் பயனாக விளங்குவான். பாலில் உள்ள நெய் 'வாங்கிக் கடைய, முன்னிற்கும்'; அதுபோல, இராசத குணமுடையவர்க்கு, இறைவன் அவ்வளவு முயற்சியின்றிப் பத்தியோடும் விவேகத்தால் மீண்டும் மீண்டும் சிந்திப்பதன் பயனாக விளங்குவான். மணியிலுள்ள சோதி 'கடைய முன்னிற்கும்'; அதுபோல, சத்துவகுணம் உள்ளவர்களுக்குச் சிறிது முயற்சியுடன் தியானித்த அளவிலே, பத்தியால் விளையும் விவேகத்தினால் இறைவன் முன்னிற்பான்.

உயிர்கள் எண்ணற்றவை; பாசத்தாற் கட்டுண்டு, வினைக்கு ஈடாகப் பிறப்பு-இறப்பு என்னும் சுழலிலே இயங்குபவை. பந்தித்த வினைகள், அம்மையிற் செய்தவை இம்மையில் வந்து சந்திக்கும். அவ்வினையை அறுக்கும் வழி இறை வழிபாடே. இறைவன்பால் உறுதியான அன்பு வேண்டும்; அந்த அன்பும் முறுகி வளர்ந்து அளவுகடந்து ததும்ப வேண்டும்; கற்புடைய தலைவி தன் காதற் கணவன்பால் வைக்கும் களங்கமற்ற காதல்போலக் கரைபுரண்டு பெருகவேண்டும்.

இறைவன் தன்பால் அன்புவைத்தொழுகும் அடியவரைக் கைவிடான்; அவர்களை நரகத்தில் வீழவொட்டான். அடியாரைத் தாங்குதல் அவன் கடன்; நம் கடன் பணி செய்து கிடப்பதே. சரியை வழிபாடு செய்வது யாவர்க்கும் இயல்வது. அந்த வழிபாட்டில் நின்றால், மனம் படிப்படியே பக்கவப்பட்டு மேலான ஞானம் பெற்று விளங்கும்; அந்த ஞானம் வீடுபேற்றுக்கு இட்டுச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. திருஞானசம்பந்தர்:

## 2.1 வாழ்க்கைச் சுருக்கம்.

இவர் கி.பி.7ஆம் நூற்றாண்டிலே, சோழநாட்டில் உள்ள சீர்காழியிலே, கவுணிய வேதியர் குலத்திலே, சிவபாதவிருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் மகவாகத் தோன்றினார்; தமது மூன்றாம் வயதில் உமையம்மையால் வழங்கப்பட்ட ஞானங் கலந்த பாலமுதை உண்டு, சிவஞானம் பெற்றுத் '**தோடுடைய செவியன்**' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பச்சிளம் பருவத்திலே பராசத்தியாலும் பரமசிவனாலும் ஆளப்பட்டமையால் இவர் ஆளுடையபிள்ளையார் என்றும், சிவஞானப்பால் உண்டமையால் திருஞானசம்பந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிள்ளையார் வேதமுதலிய சகல கலைகளையும் ஓதாது உணர்ந்ததோடு, இசை மலிந்த இனிய தமிழிலே சிவபெருமான் பெருமைகளையெல்லாம் பாட வல்லவராயும் விளங்கினார்.

பிள்ளையார் தந்தையாரின் தோளின்மீது அமர்ந்து திருத்தலங்களுக்குச் சென்று பதிகம் பாடும் பணியை மேற்கொள்ளலானார். அவர் திருக்கோலக்காவில் 'மடையில் வாளை பாய' எனத் தொடங்கும் பதிகத்தைக் கையால் தாள ஒத்தறுத்துப் பாடி, இறைவன் அருளால் பொற்றாளம் பெற்றார். பிள்ளையாரின் புகழைக் கேள்வியுற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது மனைவியாருடன் சீர்காழிக்கு வந்து, பிள்ளையாரைக் கண்டு வணங்கி, அவரைப் பிரியாதிருக்க வரம்பெற்று, அவர் பாடும் பாடல்களைத் தமது யாழிலே வாசிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார். திருநெல்வாயில் அரத்துறையிலே சிவபிரான் ஆணைப்படி, பிள்ளையாருக்கு முத்துக்குடை, முத்துச்சிவிகை, முத்துச் சின்னம் ஆகியன வழங்கப்பட்டன.

அது முதல் பிள்ளையார் முத்துச் சிவிகையில் அமர்ந்து, அடியார் கூட்டம் தொடரச் சிவாலய தரிசனம் செய்து வந்தார். இவ்வாறிருக்கையில், திருநாவுக்கரசுநாயனார் பிள்ளையாரின் பெருமையைக் கேள்வியுற்று, அவரைக் காணவந்து, நட்புப் பூண்டார். பிள்ளையார் தலயாத்திரை செய்து வருகையில், திருப்பாச்சிலாச்சிராமத்திற்கு வந்தபோது, அங்கே கொல்லி மழவன் என்னும் அரசனுடைய புதல்வி முயலகன் நோயினால் வருந்துவதைக்கண்டு, மனமிரங்கி இறைவனை வேண்டித் '**துணிவளர் திங்கள்**' என்னும் பதிகம் பாடி, அப்பெண்ணின் நோயைத் தீர்த்தார். பின்னர்க் கொடிமாடச் செங்குன்றூரிலே அடியார்கள் நளிர் சுரத்தால் வாடியது கண்டு, '**அவ்வினைக் கிவ்வினை**' என்னும் திருநீலகண்டப் பதிகம்பாடி, அந்நோயை நாட்டை விட்டே அகற்றினார். பிள்ளையார் பட்டீச்சுரத்துக்குப் போனபோது கோடை வெயிலுக்குப் பிடிக்க இறைவன் அருளால் முத்துப்பந்தர் பெற்றார். திருவாவடுதுறையிலே தந்தையார் வேள்வி செய்வதற்குப் பொருள் வேண்டுமென்றபோது, பிள்ளையார் இறைவனுக்குத் தமிழ் மாலை சாத்தி ஆயிரம் பொன்கொண்ட ஒரு கிழியைப் பெற்றுக் கொடுத்தார்.

இவ்வாறு பிள்ளையார் தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்களுக்கு அடியார் கூட்டத்துடன் சென்று வணங்கித் தமிழ்மாலை சாத்தி வருகையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீலநக்கநாயனார், சிறுத்தொண்டநாயனார், முருகநாயனார், குங்குலியக் கலயநாயனார் போன்ற சமகால நாயன்மார்களையும் கண்டு, அளவளாவி அனைவருக்கும் மகிழ்வூட்டி வந்தார். அவர் திருமருகற் பெருமானை வணங்க வந்தபோது, அங்கே அவலத்தால் அழுதுபுலம்பிய வணிகக் கன்னியொருத்தியின் பொருட்டு, பாம்புக் கடியால் இறந்த வணிகனை, '**சடையாய் எனுமால்**' என்னும் பதிகம்பாடி உயிர்ப்பித்ததோடு, அவ்விருவருக்கும் திருமணமுஞ் செய்வித்தார்.

பிள்ளையார் அப்பர் சுவாமிகளுடன் திருவீழிமிழலை ஈசனைத் தொழச் சென்றபோது, மழை வளங்குன்றியதால் அங்கே பஞ்சம் நிலவியது; அதனால் அடியவர்கள் வருந்தாதிருத்தற் பொருட்டு மிழலைப் பெருமானை வேண்டி, இருவரும் பொற்காசு பெற்றுப் பஞ்சம் ஒழியும் வரையம் நாடோறும் சிவனடியார்களுக்க அமுதூட்டி வந்தனர். பின்னர், பெரியார் இருவரும் திருமறைக் காடு சென்றனர். அங்கே வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருக்கோயிற் கதவை அப்பர்சுவாமிகள் பதிகம் பாடித் திறப்பிக்க, சம்பந்தர் '**சதுரம் மறை**' என்று பதிகத்தைத் தொடங்கி அடைப்பித்தார். அன்று முதல் அடியார் வழிபடுவதற்கு வசதியாகத் திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வருவதாயிற்று.

அந்நாளில் பாண்டி நாட்டில் சமணம் பெருகிச் சைவம் அருகிற்று. பாண்டியனும் சமணனானான். குடிகளிற் பலரும் அவன் வழி நிற்பாராயினர். ஆயினும், பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் சைவநெறியிலே நின்றனர்.அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்று, பாண்டியனுக்கு நேர்ந்த வெப்பு நோயைத் திருநீறு தடவி '**மந்திரமாவது நீறு**' என்னுந் திருநீற்றுப் பதிகம் பாடித் தீர்த்தார். பாண்டியன் நோயைத் தீர்ப்பதில் தோல்வியடைந்த சமணமுனிவர்கள், பிள்ளையாரை அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றுக்கு அழைத்து அவற்றிலும் தோல்வியே கண்டனர். பிள்ளையார் அரசன் அவையிலே '**போகமார்ந்த**' என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏட்டைத் தீயிலிட்டுப் பச்சையாய் எடுத்துக் காட்டினார்; '**வாழ்க அந்தணர்**' என்னும் பதிகமெழுதிய ஏட்டை வைகையின் ஓடு நீரிலே இட்டு எதிரேறிச் செல்ல வைத்தார். தோல்வியுற்ற சமணர்கள் அரசன் வெறுப்புக்கு ஆளாகிக் கழுவேறினர். பாண்டியன் சைவனானான். '**வேந்தனும் ஓங்குக**' என்று பிள்ளையார் வாழ்த்தியதால், அவனுடைய கூனும் நிமிர்ந்தது. கூன்பாண்டியன் நெடுமாறன் ஆனான். பாண்டிநாடு மீண்டும் சைவத்தமிழ் நாடாய் விளங்கியது.

பிள்ளையார் முள்ளிவாய்க்கரை அடைந்தபோது, ஆற்றுப்பெருக்கு அதிகமாயிருந்தமையால், ஓடக்காரர் ஓடங்களைக் கரையில் நிறுத்திவிட்டுப் போய்விட்டார்கள். ஆற்றுக்கு அக்கரையில் உள்ள திருக்கொள்ளம் பூதூரைத் தரிசிக்க விரும்பிய பிள்ளையார், ஓடம் ஒன்றிலே அடியார்களுடன் ஏறி, '**கொட்டமே கமழும்**' என்னும் திருப்பதிகம்பாடி, ஓடத்தை ஆற்றிற் செலுத்தி, மறுகரை சேர்ந்தார்.

பின்னர்ப் பௌத்தர்கள் நிறைந்த போதிமங்கை என்னும் பதிக்கு அடியார் கூட்டத்துடன் பிள்ளையார் எழுந்தருளியபோது, பௌத்தர்கள் வாதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தனர். பிள்ளையாரின் பதிகங்களை ஏட்டில் எழுதிவந்த அன்பர் சம்பந்தசரணாலயர், பௌத்தர்களுடன் பிள்ளையார் முன்னிலையிலே சமயவாதத்தில் ஈடுபட்டு அவர்களைத் தோல்வியுற வைத்தார். பிள்ளையார் தம்மைப் பணிந்த பௌத்தர்களுக்கு திருநீறு அளித்து அருள் செய்தார்.

திருவோத்தூரிலே சிவப்பணிக்கெனப் பனைகளை வளர்த்த அன்பர் ஒருவர், அப்பனைகள் எல்லாம் ஆண்பனைகளாய்க் காயாதிருந்தமையால், சமணர்களின் எள்ளலுக்கு ஆளாகி வருந்தினார். அந்த அன்பரின் முறையீட்டைக் கேட்டு இரங்கிய பிள்ளையார் **'பூத்தேர்ந்தாயென'** என்னும் திருப்பதிகத்தைப் பாடி, ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியருளினார். இந்த அற்புதங்கண்ட சமணர்களிற் பலர் ஊரைவிட்டு ஓடினர்; சிலர் திருநீறணிந்து சிவநெறி நின்றனர்.

திருமயிலாப்பூரிலே, சிவநேசச் செல்வர் என்னும் செட்டியார் ஒருவர், தமது அருமை மகள் பூம்பாவையைத் திருஞானசம்பந்தருக்கே மணஞ்செய்து கொடுப்பதாக உறுதிபூண்டிருந்தார். ஒருநாள் பூம்பாவை பூக்கொய்யும் வேளையிற் பாம்பு தீண்டியதனால் இறந்து போனாள். செட்டியார் பெரிதும் கவன்று, பெண்ணின் உடலை எரித்து, எலும்பையும் சாம்பலையும் குடத்திலே சேமித்து வைத்திருந்து, திருஞானசம்பந்தர் அப்பதிக்கு எழுந்தருளியபோது, நடந்தவற்றைச் சொல்லி முறையிட்டார். பிள்ளையார் கபாலீச்சரம் என்னும் கோயிற் கோபுரத்துக்கு எதிரே 'எலும்புக் குடத்தை' வைப்பித்துத் திருவருளைச் சிந்தித்து **'மட்டிட்ட புன்னையும்'** என்னும் திருப் பதிகத்தை எடுத்து, **'போதியோ பூம்பாவாய்'** என்று பாடலானார். பாடினதும் குடம் உடைந்தது. பூம்பாவை பன்னிரண்டு வயதினளாய் வெளித் தோன்றினாள். சிவனருளால் தாம் உயிர்ப்பித்த அப்பெண்ணைத் திருமணம் செய்தல் தகாது என்று பிள்ளையார் சிவநேசருக்குத் தேறுதல் கூறிச் சென்றார்.

இப்போது திருஞானசம்பந்தருக்கு வயது பதினாறு ஆயிற்று. பெற்றோரும் மற்றோரும் வேண்டத் திருமணத்துக்கு இசைந்தார் சம்பந்தர். நல்லூரிலுள்ள நம்பாண்டார் நம்பியின் மகளை மணம்பேசி, பெற்றோரும் சுற்றத்தாரும் திருமணம் நடத்தினர். சம்பந்தர் மணப் பெண்ணின் கரத்தைப் பற்றி எரியை வலம்வரும் போது திருக்கோயிலுக்கு ஏக வேண்டும் என்று எண்ணினார்; 'இவ்வில்லொழுக்கம் வந்ததே; இவளோடும்நான் இறைவனடி சேர்வேன்' என்று உறுதிகொண்டார்; கொண்டவாறே பெருமணம் என்னும் கோயிலுக்கு போனார். திருமணத்துக்கு வந்திருந்த அனைவரும் உடன் சென்றனர். பிள்ளையார், ஆண்டவன் திருமுன்னே நின்று, **'கல்லூர்ப் பெருமணம்'** என்னும் பதிகத்தைப் பாடினார்; பாடி, 'அம்மை அப்பனே, உன் திருவடி நீழலை அடையும் சமயம் இதுவே' என்று வேண்டினார். அப்போது சிவபெருமான், 'ஞானசம்பந்தனே, நீயும் உன்மனைவியும் திருமணங் காணவந்த மக்களும் இச் சோதியினுள்ளே வந்து சேருங்கள்' என்று திருவாய்மலர்ந்து, திருக்கோயில் முழுவதும் சோதிமயமாக்கி, அதன்கண் ஒரு வாயிலையும் வகுத்துக் காட்டினார். அது கண்ட பிள்ளையார், **'காதலாகிக் கசிந்து'** என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தை ஓதினார். பிள்ளையார் திருமணக் கூட்டத்தாரை நோக்கி, 'எல்லீரும் இச்சோதியுட் புகுமின்' என்று அருளினார். எல்லாரும் புகுந்தனர். திருஞானசம்பந்தப் பெருமான் தம் மனைவியாரைக் கைப்பற்றிச் சிவசோதியை வலம் வந்து, அதனுள் நுழைந்து, இரண்டறக் கலந்தார். சோதி மறைந்தது. திருக்கோயில் பழையபடி விளங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 திருஞானசம்பந்தரின் சாதனைகள்:

(1) திருஞானசம்பந்தரின் வாழ்க்கை முதலிலிருந்து முடிவுவரையும் அற்புதங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. மூன்றாம் வயதிலேயே அவருக்கு முன்னைத் தொடர்பு உணர்வு தோன்றியது. தீர்த்தக்கரையில் தனியே இருந்தபோது, அவர் தோணியப்பர் கோயிற் சிகரத்தைப் பார்த்து 'அம்மே, அப்பா' என்று அழுதார். அக்குரல் தீர்த்தத்தில் மூழ்கியிருந்த தந்தையார் செவியிற்படவில்லை; ஆனால் சிவபெருமானாகிய தந்தையார் செவியிற்பட்டது. படவே, இறைவன் உமையுடன் பிள்ளையார் முன் தோன்றி, அம்மையின் பாலமுதை ஊட்டுவித்து, அழுகையைத் தீர்த்து மறைந்தார். அந்நிலையிலே பிள்ளையார் சிவஞானம் பெற்றுத் தமது ஞானத் தந்தையாரை உணர்ந்து கொண்டார். அதுமுதல், பிள்ளையார் சிவபெருமானைத் தந்தையாகவும் உமையம்மையாரைத் தாயாகவும் பாவித்து அன்புசெய்துவரலானார். இந்தவகையான இறையன்பு 'சற்புத்திர மார்க்கம்' எனப்படும். அதற்கு ஏற்றவாறு பிள்ளையார் திருத்தலங்கள் தோறுஞ் சென்று, திருப்பதிகம் பாடி வழிபடுகையில், தந்தையின் பெருமைகளையும், எழிலையும் அவர் படைத்த படைப்பின் எழில் நலங்களையும் பெருமிதத்துடன் பாடிக் களித்தார். தந்தையைப் பாடும்போதெல்லாம் தமக்கு ஞானப்பால் ஊட்டிய தாயையும் நினைவுகூர்ந்தார். இவ்வாறு இறைவனும் இறைவியுமாகிய தந்தைதாயரின் அன்பணைப்பிலே என்றும் இருப்பதாக உணர்ந்ததால், பிள்ளையாருக்கும் கவலையோ, துன்பமோ, மனப்பயமோ ஒருபோதும் உண்டாகவில்லை. அவர் இரங்கியதும், இறைவனை வேண்டியதும் எல்லாம் தம்பொருட்டாகவன்றிப் பிறர்பொருட்டாகவேயாம். இறைவரும் தமது திருமகனாருக்குத் துன்பம் தோன்றாமல் பார்த்துக்கொண்டார்: குழந்தை கைகளால் தாளம் போட்டுப் பாடியபோது, கைகள் நோகாதவாறு பொற்றாளம் அருளினார்; காலால் நடந்து தலயாத்திரை செய்தால் குழந்தை வருந்தும் என்று முத்துச்சிவிகை அருளினார்; கோடை வெயிலால் வாடாதிருக்க முத்துப்பந்தர் கொடுத்தார். வயது முதிர்ந்த அன்பரொருவர் இறைவனைத் தந்தையாகப் பாவித்து அன்புசெய்வதைக் காட்டிலும், இளம்பிள்ளை யொருவர் அப்படிப் பாவனை செய்வது இயற்கை நயம் விஞ்சியதாயிருக்கும். அத்தகு தனிச்சிறப்பை நாம் சம்பந்தரின் இறையன்பிலே காண்கின்றோம்.

பிள்ளயையார் குழந்தைப் பருவத்திலே அம்மையூட்டிய பாலையுண்டு இறைவரால் ஆட்கொள்ளப்பட்டதற்கும், பாடல்களைப் பாடியதற்கும் சம்பந்தர் தேவாரத்திலே அகச் சான்றுகள் உண்டு. அவைகளுள் இரண்டொன்று வருமாறு:

**'போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்**
**தாதையார் முனிவுறத் தானென்னை ஆண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
**பேதையா ளவளொடும் பெருந்தகை இருந்ததே'.**

பிள்ளையார் குழந்தையாயிருந்தமையினால், அவரை அவர் தந்தையார் தமது தோள்மீது தூக்கிக்கொண்டு திருத்தல வழிபாட்டுக்குச் சென்றார். அதனைச் சம்பந்தர் பின்வரும் பாடலடியிற் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடல்... பதியான முனிவன்.. அத்தர் பியன்மேலிருந்து இசையால் உரைத்த பனுவல்' - (திருநனிபள்ளி. 11)

திருஞானசம்பந்தர் சமணரோடு வாது புரிய ஏகியபோது, சமணர் வஞ்சனைகண்டு அஞ்சிய மங்கையர்க்கரசியாரைப் பார்த்து அவர் பாடியது:
'பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்' - (திருவாலவாய்.1)

இவ்வாறு சிவபெருமானைத் தந்தையாகவும் தம்மைச் சற்புத்திரனாகவும் கொண்டு அன்புசெய்த சம்பந்தர், சிவபெருமானைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் பாவித்தும் பல பாடல்கள் பாடியுள்ளார். 'தோடுடைய செவியன்' என்ற முதற் பதிகமே இந்த வகையில் அமைந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களிலே தூய அன்பின் ஐந்திணைக் காதலைப் பாடினர் தமிழ்ப்புலவர்கள். அந்தக் காதலையே தெய்வக் காதலாக மலரச் செய்தார் சம்பந்தர்.

(2) திருஞானசம்பந்தர் தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ்நாட்டில் சமணம், பௌத்தம் ஆகிய புறச் சமயங்கள் ஆதிக்கம் பெற்றிருந்தன. அச்சமயங்களைத் தோற்றுவித்த ஆதிநாதரும் கௌதமபுத்தரும் போதித்த அன்புநெறியினின்றும் முற்றாக விலகிப் பிற்காலத்தில் சமணரும் பௌத்தரும் வைதிக நெறியையும், சைவநெறியையும் அழித்தொழிப்பதிலே முனைந்து நின்றனர். வஞ்சனை செய்தல், இன்னாசெய்தல், கொலைசெய்தல் போன்ற கொடுமைகளைத் தயங்காமற் செய்தனர். தமிழ்நாட்டு அரசரைத் தம்வயப்படுத்தி, ஆள்வோரின் துணையோடு அடாதன செய்வதில் ஈடுபட்டிருந்தனர். சங்கத்தமிழர் கண்ட இயற்கை நெறியான சிவநெறியை இல்லாமல் ஒழிக்கவே கங்கணம் கட்டிநின்றனர். இந்தச் சூழ்நிலையிலே செந்நெறியை ஒம்பவல்ல ஒரு புதல்வரைப் பெறுவதற்காகத் தவங்கிடந்தார் சிவபாதவிருதயர். அத்தவத்தின் பயனாகப் பிறந்தவரே சம்பந்தர். ஆகவே, சம்பந்தர் சிவநெறியை மீண்டும் தழைத்தோங்கச் செய்வதிலும், அவநெறிகளாகிய சமண பௌத்தங்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதிலும் தம்வாழக்கையைச் செலவிட்டார். சம்பந்தர் தாம் பாடிய ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாம் பாடலில் அக்காலச் சமண பௌத்தர்களின் பொய்ம்மையைச் சாடியுள்ளார்.

(3) திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டுக்குச் சென்று, பாண்டியனது வெப்புநோயைத் தீர்த்து, அவனைச் சைவனாக்கிச் சமணர்களை வாதில்வென்று, பாண்டிநாட்டைப் பழையபடி சைவத்துக்கு மீட்ட செயலே திருஞானசம்பந்தரின் சிறந்த சாதனை யெனலாம். அக்காலத்தில் பாண்டிநாட்டிலே ஆனைமலை முதலிய எட்டுமலைகளில் எண்ணாயிரம் சமணமுனிவர்கள் இருந்தனர் என்று நூல்களின் வாயிலாக அறிகிறோம். அவர்கள் பாண்டிய மன்னனைத் தம்வயப்படுத்தி, வழிவழியாகச் சைவமும் தமிழும் வாழ்வதற்கு இடமாயிருந்த பாண்டிநாட்டைச் சமணமயமாக்கி வந்தனர். பாண்டிமன்னவன் தேவியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் மறைவாகச் சைவத்தைப் போற்றிவந்தனர். அவர்களின் அழைப்பை ஏற்றுச் சம்பந்தர் மதுரைக்குச் செல்ல ஆயத்தமானார். அவருடன் இருந்த அப்பர்சுவாமிகள் சமணர்களின் வஞ்சனையையும் வன்கண்மையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறிச் சம்பந்தரைத் தடுக்க முயன்றார்; நாளும் கோளும் நல்லாயில்லை என்றும் கூறிப்பார்த்தார். இறைவன் தமக்குத் துணைநிற்பதை உணர்ந்த சம்பந்தர் "ஈசன் அடியார்க்கு நாளும் கோளும் என்றும் நல்லனவே" என்று கோளறு பதிகம் பாடித் திருநாவுக்கரசரிடம் விடைபெற்று மதுரைக்குச் சென்றார். அங்கே அவர் அடியார் கூட்டத்துடன் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர்கள் வஞ்சனையாகத் தீக்கொளுவிய செயல், அக்காலச் சமணர் சைவத்தை ஒழிப்பதற்குச் செய்த அடாத முயற்சிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். வாதத்தில் தோற்ற சமணர்கள் கழுவேறினார்கள் என்றும், கழுவேற்றப்பட்டார்கள் என்றும் புராணங்கள் மாறுபட்டுக் கூறுகின்றன. ஆனால், சம்பந்தருடைய தேவாரத்தில் இதற்கு அகச்சான்று ஒன்றும் காணப்படவில்லை. எப்படியோ மதுரை மன்னன் அவையிலும் பாண்டி நாட்டிலுமே சமணரின் ஆதிக்கம் ஒழிந்தது; சைவத்துக்கு மாறிய பாண்டியன், சமணர்களை ஏதாவது ஒரு வழியிலே தண்டித்திருப்பான் என்று நம்பலாம்.

(4) சோழ நாட்டிலே போதிமங்கை என்னும் இடத்தில் பௌத்த தேரர்கள் ஆதிக்கஞ் செலுத்தி வந்தனர். அப்பதிக்குத் திருஞான சம்பந்தர் திருக்கூட்டத்தாருடன் எழுந்தருளியபோது, திருக்கூட்டத்தார் எழுப்பிய ஆரவாரமும், திருச்சின்ன ஓசையும், சிவநாம முழக்கமும் பௌத்தர்களுக்கு நாராசம் போலிருந்தன. அவர்கள் புத்தநந்தியைத் தலைவனாகக் கொண்டு திருக்கூட்டத்தாரைத் தடுத்து, தம்முடன் வாதஞ்செய்ய வருமாறு வலிந்து அழைத்தனர். திருஞானசம்பந்தர் வாதத்துக்கு இசைந்தார். அதற்கிடையில் நெருக்கடி மிகலும், சம்பந்தரின் பதிகங்களை ஏட்டில் எழுதி வந்த சரணாலயர் என்னும் அன்பர், சம்பந்தர் பாடிய "புத்தர் சமண் கழுக்கையர்" என்னும் பாடலை ஓதி "அத்திரமாவன அஞ்செழுத்தும்மே" என்று முடித்தார். உடனே புத்த நந்தியின் தலையில் இடிவிழுந்தது. நிலை கலங்கிய பௌத்தர்கள் சாரி புத்தனைத் தலைவனாகக் கொண்டு மீண்டும் வாதத்துக்கு வந்தனர். பிள்ளையார் திருமுன்னிலையிலே சாரிபுத்தன் கூறிய தங்கள் சமய உண்மைகளைச் சம்பந்த சரணாலயர் தருக்க முறைப்படி மறுத்து, அவன் கூறிய தத்துவம் பொய்யென நிறுவினார். வாயடைத்த பௌத்தர்கள் சம்பந்தரைப் பணிந்தனர். சம்பந்தர் எல்லாருக்கும் திருநீறு அளித்து அருள்செய்தார். பௌத்தர்களிற் பலர் சைவத்துக்கு மாறியிருத்தல் கூடும்.

(5) இறைவன் திருவருளால் திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்களும், ஓதாமலே வேதமுதலிய பல்கலைகளையும் உணர்ந்து பாடிய பதிகங்களும், அடியார் கூட்டத்துடன் தமிழ்நாடு அடங்கலுமுள்ள திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து சிவநாம முழக்கஞ் செய்தமையும் எல்லாம் சமணபௌத்த மதங்களின் ஆதிக்கத்தில் மங்கி மறைந்து கொண்டிருந்த சிவநெறியாம் செந்நெறிக்குப் புத்துயிரும் புதுக்கிளர்ச்சியும் ஊட்டின. வைதிக சைவம் தலையெடுத்தது; மறைநெறி மறுமலர்ச்சியடைந்தது; சிவநெறியே இயற்கையோடு ஒத்த இணையற்ற செந்நெறியென நிலைநாட்டப்பட்டது.

(6) இசைவளம் மலிந்த சம்பந்தரின் தமிழ்ப் பாடல்கள் தமிழிசைக்கு ஆக்கம் அளித்தன. சம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் இருபத்து மூன்று பண்களில் அமைந்துள்ளன. இவை கருநாடக இசைக்கு முற்பட்ட தமிழ் இசைக்குரிய பண்களாகும். சமணரும் பௌத்தரும் இசை, நடனம் போன்ற இன்பியற் கலைகள் காம உணர்ச்சியைத் தூண்டுவன எனக்காரணங் கூறி, அவற்றை வெறுத்தொதுக்கினர். இதனால், முத்தமிழின் ஒரு கூறாய் வளர்ந்த பழைய இசைத்தமிழ் இலக்கியங்கள் மறைந்தொழிந்தன. திருஞானசம்பந்தர் தோன்றித் தமிழர் வளர்த்த இசைக்கலைக்கு மறுவாழ்வுதந்தார். அத்துடன் இசையால் இறைவனை மகிழ்வித்து முத்தியும் அடையலாம் என்னும் உண்மையை நிலைநாட்டி இசைக்கலைக்கு ஏற்றமளித்தார். தேவார ஆசிரியர்கள் மூவருமே இசைத்தமிழுக்கு இலக்கியஞ் செய்து தந்துள்ளனராயினும், அவர்களுள்ளே சம்பந்தரின் தேவாரங்கள் இசைவளத்தாலும் தமிழ் வளத்தாலும் ஈடும் எடுப்பும் இல்லாப் பீடுபெற்று விளங்குகின்றன.

### 2.3. சம்பந்தர் வாழ்க்கையிலிருந்து நாம் அறியவேண்டிய அரிய உண்மைகள்:

(1) திருஞானசம்பந்தர் வினைக்கீடாகப் பிறவி தாங்கியவரல்லர்; உலகத்தில் இயற்கை நெறியான செந்நெறி (அதாவது சிவநெறி) புறச்சமய இருளால் மூடிமறைக்கப்பட்டபோது, அவ்விருளை அகற்றி மீண்டும் செந்நெறியைத் துலங்க வைப்பதற்காக இறைவனால் உலகுக்கு அனுப்பப்பட்டவர்; முன்பு அவர் சிவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாத சிந்தையராய்ச் சிவபெருமானுக்கு அணுக்கராய் இருந்தவர். இவ்வுண்மையைச் சம்பந்தரே பின்வருமாறு கூறியிருக்கிறார்:

'...துருத்தியாய் திருந்தடி......................,)

மறக்குமா றிலாத என்னை மையல் செய்திம் மண்ணின்மேல்'

பிறக்குமாறு காட்டினாய்' (திருத்துருத்தி. 5).

திருஞானசம்பந்தர் மகன்மை நெறியில் (சற்புத்திரமார்க்கத்தில்) நின்றமையால், அவர் முருகக்கடவுளின் அவதாரமாய்ப் பிறந்தவர் எனச் சிலர் கூறுவர். மானுடத் தாயின் வயிற்றிற் பிறக்கும் அவதாரக் கொள்கை சைவத்துக்கு ஒவ்வாமையால், முருகபதம் பெற்றிருந்த முருகனடியார் ஒருவரே அவ்வாறு அவதரித்தார் என்று சிவஞான முனிவர் அக்கருத்துக்கு விளக்கங் கூறுவர். அருணகிரிநாதர், திருஞானசம்பர் செய்த அற்புதங்களை முருகக் கடவுளுக்கு ஏற்றிக் கூறியுள்ளார். சேக்கிழார் பெருமான் வெளிப்படையாக இதுபற்றி ஒன்றும் கூறினாரல்லர். எவ்வாறெனினும், திருஞானசம்பந்தரை இறைவனின் திருக்குமாரர் என்று சைவ உலகம் ஏற்றுப் போற்றிவருகின்றது.

**(II)** உலகில் திருவருள் நெறிக்கு உற்ற கேடு நீங்கவேண்டும் என்பதனாலும், அது கருதித் தவங்கிடந்த சிவபாதவிருதயரின் கருத்து நிறைவேற வேண்டும் என்பதனாலுமே சிவபெருமான் தமது திருவடியை மறவாத தன்மையுடையவரை 'மையல் செய்து' இம்மண்ணுலகிற்கு அனுப்பினார். உலகுக்கு அனுப்பப்பட்ட பிள்ளையார் உலகவாசனை தொடர்தற்கு முன்னரே, குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டுப் பழையபடி பிள்ளையாராய்த் திருஞானசம்பந்தரானார். அவர் பகவதியம்மையாரின் கருவில் இருந்த காலத்தும் பிறந்து மூன்றாண்டு வரையுள்ள காலத்தும் (அதாவது உமையம்மையாரால் பாலமுது ஊட்டப்படுவதற்கு முன்னுள்ள காலத்தும்) மாத்திரமே சிவனோடுள்ள தொடர்பு தற்காலிகமாக அற்றிருந்தது. அதுவே 'மையல் செய்யப்பட்ட' காலமாகும். அக்காலப்பகுதியிலே அவர் சிவபெருமானைப் பிரிந்திருந்தார். ஆனால், மூன்றாம் வயதிலே ஆட்கொள்ளப்பட்டதும் முன்னைத் தொடர்ப மீண்டும் உண்டாவதாயிற்று. பிள்ளையார் உணர்வோடுள்ள காலம் முழுவதும் சிவபெருமானுடன் தொடர்பு அறாமலே இருந்துள்ளார்.

**(III)** திருஞானசம்பந்தர் வேதம், ஆகமம் முதலிய கலைகளையும், முத்தமிழ்க் கலைகளையும் ஆண்டவன் அருளால் ஓதாது உணர்ந்தவர். அவருக்கு உபநயனம், வேதபோதனை முதலியன வேண்டியிருக்வில்லை. ஆயினும், வேதியர்கள் உலகியல் முறைப்படி அவைகளை நிகழ்த்தினர். ஞானசம்பந்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர், தமக்கு வேதமந்திரங்களை ஓத வந்தவர்களுக்கு அவர்கள் வியக்குமாறு எண்ணிறந்த புனித வேதக் கருத்துக்களை அறிவுறுத்தினார். இதனால் ஞானிகளுக்குப் புறக்கோலப் பூனூல், வேதமோதல், சடங்கு சம்பிரதாயங்கள் முதலியன வேண்டுவதில்லை என்பது புலனாகிறது. பிள்ளையார், அவைகள் தமக்கு வேண்டியதில்லை என்று அறிந்திருந்தும், தம் தந்தையாரும், மூத்த வேதியரும் மனம் நோவாமல் இருத்தற்பொருட்டு அவற்றை ஏற்றுக்கொண்டார் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(IV)** திருஞானசம்பந்தர் சிவஞானம் பெற்றதும் சின்னாளிலே அவருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் ஆகியன இறைவன் ஆணைப்படி அளிக்கப்பட்டன. பிற்கால வழக்குப்படி ஆசாரிய அபிடேகம் பெற்றவர்களுக்கே சிவிகை, குடை சின்னம் முதலியன சிறப்பாக உரியனவாகக் கொள்ளப்பட்டன. ஆதலால், திருஞானசம்பந்தரே சைவர்களுக்கு முதற்குருவாக இறைவனால் நியமிக்கப்பட்ட பெரியாராவார். உயிர்களைத் திருஞானத்துடன் சம்பந்தப்படுத்தும் ஒருவர் குருவெனப்படுவர். ஆதலால், உலகில் எங்கெங்கே மக்களை உண்மை ஞானத்துடன் சம்பந்தப்படுத்தும் அருளாளர் தோன்றுகின்றனரோ, அவரெல்லாம் திருஞானசம்பந்தரே யாவர். அவருக்குப் பல மொழிகளிற் பல பெயர்கள் வழங்கப்படலாம். மொழியளவில் நிற்போர் அவரை வேறுவேறு ஆளாகக் கருதுவர்; ஆனால், உண்மை ஞானம் கைவரப்பெற்றோர்க்கு அவரெல்லாம் ஒருவரே என்பது நனி விளங்கும்.

**(V)** திருஞானசம்பந்தர் கவுணிய கோத்திரத்துப் பிராமணர்; திருநீலகண்ட யாழ்ப்பாணரோ தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர். அவ்வாறிருந்தும், சம்பந்தர் பாணருடைய சிவபத்தியை மதித்து அவருடன் நட்புப்பூண்டு, அவரைத் தமது பக்கத்தில் வைத்துச் சிறப்புச் செய்தார். பிறப்பினால் அன்றி, ஒழுக்கத்தாலே ஒருவர் உயர்வுபெறுவர் எனச் சைவம் போதிக்கும் உண்மைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

**(VI)** திருஞானசம்பந்தரும் அவரையொத்த ஏனை நாயன்மாரும் சாதாரண உணர்வோடு உலகவரம்புக்கு உட்பட்டு வாழும் நன்மக்கள் நிலையைக் கடந்து மேற்சென்றவர்கள். இவர்களை அதீதானுபவ உணர்ச்சியாளரோடு (Mystics) ஒப்பிடலாம். இவர்கள் இம்மையில் தம் உடம்பில் உள்ளபோதே கால மும்மையுங் கடந்து, என்றுமுள்ள சத்தாகிய செம்பொருளின் வாழ்விற் கலந்து, அத்தொடர்பின் உணர்ச்சி மாறாது உலகில் வாழ்பவர்கள். இவர்கள் உடம்போடிருக்கு நிலையிலும் அச்செம்பொருட் காட்சியில் விளையும் பேரானந்த நிகழ்ச்சியை மறவாது, அப்பொருளின் திருமுன்னிலையிலேயே தமது முக்கரணங்களும் தொழிற்படுகின்றன என்று உணர்வதால், இவர்கள் சாதாரண மக்கள் மனநிலைக்கு மேம்பட்ட உணர்வு நிலையில் உள்ளவர்கள். இவர்களையே பசுகரணம் நீங்கிச் சிவகரணம் பெற்றவர்கள் என்று சித்தாந்த சாத்திரம் கூறும். திருஞானசம்பந்தரின் திருவாக்கில் இந்த உண்மைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1. சம்பந்தர் எந்தவொரு செயலைச் செய்யுமுன்னும் 'சிவபெருமான் திருவுள்ளம் அறிவேன்' என்று திருக்கோயில் போந்து இறைவனைக் கேட்பது வழக்கம். உதாரணமாக, சமணரோடு வாது செய்து அழிப்பதற்குமுன் பிள்ளையார் ஆலவாய்ப் பெருமான் கோயில் சென்று விடைபெற்று வந்தார்:

**(அ) 'காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்**
**நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்**
**வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை**
**ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே.'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) 'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே'

(இ) 'கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி சமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே'.

(2) சம்பந்தர் சிவபெருமானோடு ஒன்றித்து நின்ற உணர்வினால், தாம் உரைப்பவை சிவபெருமான் உரையெனவே கூறுகின்றார்:

(அ)'நெய்த்தானம், நிலையினால் எனதுரை தனதுரையாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்'
'பெருஞ் செல்வன் எனதுரை தனதுரையாகப் பெய்பலிக் கென்றுழல்
பெரியவர் பெருமான்' (இலம்பையங் கோட்டூர்).

(3) ஓரிடத்திலே பிள்ளையார், 'தன்னியல்பில்லாச் சண்பையர்கோன் சீர்ச் சம்பந்தன்' என்று தம்மைக் குறிப்பிடுகின்றார்.

(4) மேலும் அவர், 'ஆன சொன்மாலை யோதும் அடியவர்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' என்றும் பாடுகிறார்.

**(VII)** இவ்வாறு இறைவனோடு ஒன்றித்த ஒருநிலையிலே நின்று திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் இறைவன் செயல்கள் என்றே கொள்ளல் வேண்டும். ஆண்பனைகளைக் குரும்பையீனும் பெண்பனைகளாக்கியதும், நெருப்பில் ஏட்டையிட்டுக் கருகாமல் எடுத்ததும், ஆற்றில் ஏட்டை எதிரேறச் செய்ததும், எலும்பைப் பெண்ணுருவாக்கியதும் பிறவும் விஞ்ஞான அறிவுக்கு அப்பாற்பட்ட செயல்கள். இவற்றைச் சாதாரண அறிவு கொண்டு நாம் விளக்குதல் இயலாது.

**(VIII)** திருஞானசம்பந்தர் எல்லாவற்றையும் சிவமாகப் பார்ப்பவர். திருமணச் சடங்கிலே தீயை வலம்வரும்போது, 'தீயாவார் சிவபெருமானே' என்று எண்ணலானார். அவ்வெண்ணம் தோன்றுதலும், பிள்ளையார் திருநல்லூர்ப் பெருமணத் திருக்கோயிலுக்குப் போகவேண்டும் என்று புறப்படுகிறார். அவர் எது குறித்து உலகுக்கு வந்தாரோ, அது முற்றுப் பெற்றுவிட்டது. 'இனி அவரை அழைத்துக் கொள்ள வேண்டும்' என்று இறைவன் திருவுள்ளம் பற்றினான். அது சம்பந்தர் சிந்தையில் விளங்கியது. 'நாம் இனி இவ்வுலகத்தில் இருத்தல் கூடாது; இச்சமயத்திலே, இங்கே இந்த இல்வாழ்வு வந்து சூழ்ந்தது; என் செய்வது? இவளையும் உடனழைத்துச் சிவன் தாள் சேர்வேன்' என்று உறுதி கொண்டார். அவ்வாறே இறைவன் தோற்றுவித்த சோதியில் மனைவியாரையும் கைப்பிடித்துச் சென்று கலந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(IX)** ‘பெண்பிறவிக்கு வீடு பேறு இல்லை’ என்பது திகம்பர சமணரின் கொள்கை. இக்கொள்கையால் உலகுக்கு நேர்ந்த துன்பத்தை ஒழிக்கப் போந்த திருஞானசம்பந்தர், பெண்ணை வெறுத்துத் தள்ளிவிட்டத் தாம் மட்டும் சிவன்தாள் சேர விரும்புவாரா? பெண்ணினல்லாளொடும் இருக்கும் பெருந்தகையின் நெறியைப் பேணவந்த சம்பந்தர் பெண்ணை வெறுப்பாரா? ஆகையால், ‘இவள் தன்னோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வேன்’ என உறுதிகொண்டு, அவ்வாறே செய்தார். திருஞானசம்பந்தரின் மனைவியார் பெயர் சொக்கியார் என்பது கல்வெட்டு ஆராய்ச்சியாற் தெரியவந்துள்ளது.

**(X)** சம்பந்தப் பெருமான் தம்மோடு சென்றார் அனைவருக்கும் தாம் பெற்ற பேற்றை அடையச்செய்தார். அவருடன் சமகாலத்தில் வாழ்ந்து, திருமணங் காணச்சென்ற திருநீலநக்கநாயனார், முருகநாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் முதலியோர் தங்கள் தங்கள் மனைவிமார்களுடனும், சுற்றத்தவர்களுடனும் சோதியிற் புகுந்தார்கள் என்று சேக்கிழார் கூறுகிறார். ஆனால், சம்பந்தருடைய கெழுதகை அன்பரான அப்பர் சுவாமிகள் அவ்வேளை அங்கிருக்கவில்லை. சம்பந்தருடைய திருமணநாளில் அப்பர் உயிருடன் இருந்திருந்தால் அவர் கட்டாயம் திருமணத்துக்குச் சென்றிருப்பார். ஒன்றில், அப்பர் அக்காலததுல் வடகயிலை யாத்திரையை மேற்கொண்டு வடக்கே சென்றிருக்கலாம்; அன்றேல், அவர் சம்பந்தருடைய திருமணத்துக்கு முன்னமே சிவன்தாள் சேர்ந்தாராகலாம்.

**(XI)** சமணர்களைக் கழுவேற்றிய செயல் திருஞானசம்பந்தரின் அருளுடைமைக்கு இழுக்காகும் என்று இக்காலத்திற் சிலர் வாதிடுவர். இதுபற்றிய குறிப்பொன்று இங்கே கூறுத்தகும்:

‘சமணர்கள் எல்லாவாதங்களிலும் தோற்றபின்னர்த் தாங்கள் முன்னே கூறிய உறுதியுரைப்படி கழுவேறக் கடமைப்பட்டவரே. எனவே பாண்டியன் அமைச்சரை நோக்கி, ‘இச்சமணர்கள் முன்னே பிள்ளையார்க்குக் கேடு சூழ்ந்தார்கள்; மும்முறை தோற்றார்கள்; இவர்கள் சொற்படி இவர்களைக் கழுவேறக் செய்க’ என்றான். அப்போது திருஞானசம்பந்தர் தம்மனத்தில் காழ்ப்பு இல்லாது, பகைமை பாராட்டாது, இருந்தாராயினும், சைவர் இருந்து வாழும் மடத்துக்குத் தீ வைத்த சமணரின் தகாத செயலுக்கு அரசன் தண்டனையளிப்பது சாலும் என்று அதனை விலக்காமல் இருந்தார். குலச்சிறையார் கழுமரங்களை நாட்டினார். சமணர்கள் எண்ணாயிரவரும் அம்மரங்களில் ஏறினார்கள். இவ்வாறு பெரிய புராணம் கூறுகின்றது. கழுவேறிய செய்தியை முதன்முதற் குறிப்பிட்டவர் நம்பியாண்டார் நம்பி யாவர். அவர் கூறியதைப் பின்பற்றிச் சேக்கிழார் இச்செய்தியைக் கூறினராகலாம். பின்னே தோன்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்கள் சமணர்கள் கழுவேறியதைப் பலவாறு கூறலாயின. கதைப் போக்குகளில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. சமணர்கள் தாங்களே கழுவேறினார்கள் என்றும், வலிந்து கழுவேற்றப்பட்டார்கள் என்றும் புராணங்கள் மாறுபடக் கூறுகின்றன. சமணர்களைக் கழுவேறாதவாறு சம்பந்தர் தடுத்தார் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. சமணர் கழுவேறிய பதி திருப்பூவணம் என்றும், அவ்விடம் பின்னே ‘கழுவர் படைவீடு’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வழங்கப்பட்டது என்றும் அப்புராணம் கூறுகின்றது. திருஞானசம்பந்தர் திருநாள், திருவருட் செயல்கள் முதலியன தமிழ்நாடெங்கும் கொண்டாடப்படுகின்றன. சமணர்கள் கழுவேறிய விழா பாண்டிநாட்டில் மட்டும் நடைபெறுகிறது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சமணர்கள் கழுவேறிய குறிப்பு அகச்சான்றாக ஒன்றும் இல்லை. சமணர்கள் நூல்களிலும் அதுபற்றிய சான்றில்லை. சீன யாத்திரிகர்கள் எழுதியுள்ள தமிழ்நாட்டுக் குறிப்புகளிலும் சமணர்கள் கழுவேறிய செய்தி காணப்படவில்லை. இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் திருஞானசம்பந்தர் எண்ணாயிரவர் சமணர்களைக் கழுவேற்றுவித்தார் என்று உறுதியாக நம்புவதற்கில்லை'.

## 2.4 திருஞானசம்பந்தர் தேவாரம்:

திருஞானசம்பந்தர் பாடியவை 16,000 பதிகங்கள் என்று நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். ஆனால், அடங்கன் முறையில் இப்போது கிடைத்துள்ளவை 383 பதிகங்களே. கல்வெட்டிலிருந்து திருவிடைவாய் என்னும் தலத்தில் சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று புதிதாகக் கிடைத்துள்ளது. அதனையும் சேர்த்துப் பார்த்தால் 384 பதிகங்கள் இப்போது கிடைத்துள்ளன எனலாம்.

இப்பதிகங்கள் அடங்கன் முறையில் முதல் மூன்று திருமுறைகளாக வைக்கப்பட்டுள்ளன. இவை கால அடைவிலே கோக்கப்படாமல், பண்அடைவிலே கோக்கப்பட்டுள்ளன.

முதலாந் திருமுறையில் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, யாழ்முரி என்னும் எட்டுப் பண்களில் பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாந்திருமுறையில் இந்தளம், சீராகம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறுபண்களிற் பதிகங்கள் காணப்படுகின்றன. மூன்றாந் திருமுறையில் காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக்குறிஞ்சி என்னும் ஒன்பது பண்களில் பாசுரங்கள் அமைந்துள்ளன. ஆக, திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இருபத்து மூன்று பண்களுக்குரிய பாடல்கள் உள்ளன.

திருஞானசம்பந்தர் பாடல்பெற்ற தலங்கள் 213. திருவிடைவாய் என்னும் தலத்தையும் சேர்த்தால் இவ்வெண்ணிக்கை 214 ஆகும்.

திருஞானசம்பந்தரின் பதிகங்கள் ஒவ்வொன்றிலும் பதினொரு பாடல்கள் உள்ளன. சில பதிகங்களில் பன்னிரண்டு பாடல்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு பதிகத்திலும் 8ஆம் பாடலில் இராவணன் கயிலையை எடுக்க, சிவபிரான் அவனை நெரித்துப், பின் அவன் பாட, அவனுக்கு அருள்புரிந்த வரலாறு கூறப்படுகிறது. 9ஆம் பாடலில் திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரியவன் சிவன் என்ற கருத்து வருகின்றது. 10ஆம் பாடலில் சமணர் பௌத்தர்களைப் பற்றிய செய்தி சொல்லப்படுகிறது. சம்பந்தருடைய பதிகங்களில் உள்ள பத்தாம் பாடல் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் அக்காலச் சமணர் பௌத்தர்களின் பொல்லாங்குகளை அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராம் பாடல் திருக்கடைக்காப்பு எனப்படும். இதிலே சம்பந்தர் பதிகப் பாடல்கள் தம்மாற் பாடப்பட்டவை என்று முத்திரையிட்டு, அவற்றைப் படிப்பவர்கள் பெறும் பயனையும் கூறுகிறார். இப்பாடலிற் சம்பந்தர் தம் பெயரைச் சொல்லுகையில் தம்முடைய சிறப்புகளையும் எடுத்துரைக்கின்றார். சாதாரணக் கண்கொண்டு பார்ப்பவருக்கு இக்கூற்றுகள் தற்புகழ்ச்சியாகத் தோன்றக்கூடும். இதனாலே போலும் 'சம்பந்தன் தன்னைப் பாடினான்' என்னும் பழமொழி வழங்குகின்றது. இது பின்வருமாறு சிவனார் கூறியதாகவும் வழங்குகின்றது:

**'என்னப்பன் என்னைப் பாடினான்;**
**சம்பந்தன் தன்னைப் பாடினான்;**
**சுந்தரன் பொன்னைப் பாடினான்'.**

சம்பந்தர் தம்மியல்பில்லாது சிவகரணம் பெற்று நின்றவர்; ஆதலால், சிவபெருமானே 'எனதுரை தனதுரையாக' என்றவாறு அவரிடம் நின்ற அவ்வாறு பாடுவித்தார் எனல்வேண்டும். மேலும், தம்மூடாக இறைவன் வெளிப்படுத்தும் பாடல்கள் தமிழ்மறை என்றும் கருதியமையால், சம்பந்தர் இவ்வாறு தம்பெயரால் முத்திரையிட்டார் என்றும் விளக்கலாம். நாம் மேலே கண்டதுபோல, சம்பந்தர் இறைவனால் அனுப்பப்பட்ட திருக்குமாரரும் சைவசமய முதற்குருமூர்த்தியும் ஆவர். அவர் தம்மைப் பற்றிக்கூறிய புகழ் உரையெல்லாம் சிவபெருமானுக்குரிய புகழாகவே கொள்ளல் வேண்டும்.

சம்பந்தர் பல இடங்களில் தம்மைத் 'தமிழ் விரகர்' என்று கூறிக் கொள்கிறார். அதற்கு ஏற்றபடி அவருடைய பாடல்களில் தமிழ்நடை தனித்த இனிமையும் வளமும் வனப்பும் பெற்று விளங்குகின்றது. இயற்கை எழிலை இறைவனோடு இணைத்து வருணிக்கும் திறத்தில் சம்பந்தர் ஈடும் எடுப்பும் இல்லாதவர். இங்கே இரண்டொரு உதாரணங்கள் தரப்படுகின்றன:

**(I)** 'பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை யேனற் கதிர் கொணர்ந்து வாய்ப் பெய்யும்
கேதாராமே'

**(II)** 'நீலமா மலர்ச்சுனை வண்டு பண்செய்ய நீர்மலர்க்
குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலநாறும் பொழில் இலம்பயங் கோட்டூர் இருக்கையாப்
பேணி என்னெழில் கொள்வதியல்பே'

சம்பந்தர் பாடல்களில் இளம்பருவ மிடுக்கும், சிறுகுழந்தையின் இயல்பான இயற்கை எழில் நயப்பும் இணைந்து வரக் காண்கின்றோம். இயற்கைக் காட்சிகளையும் சிவபெருமான் திருவுருவத்தையும் தலங்களின் தோற்றத்தையும் செடிகொடி விலங்குகளின் இயல்பையும் சுவைததும்ப எழில்படப் பாடுவது சம்பந்தரின் சிறப்பியல்பு. மேலும், சம்பந்தர் தேவாரம் பண்ணமைதியிற் சிறந்த பதிகங்களையுடையது. சம்பந்தருடைய திருவாக்கில் செந்தமிழ் ஓசையும், பொருட் செறிவும், அழகிய உருவ வருணனையும் நிரம்பியிருக்கும். அப்பர் சுவாமிகளைப் போல நைந்துருகிப் பணிவு நலந்தோன்றப் பாடுவதும், சுந்தரரைப் போலக் கெஞ்சியும் மிஞ்சியும் பாடுவதும் இவர் பாடல்களில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், முடுகாகவரும் திருவிராகம், ஓரடியே வேறுவேறு பொருளில் வரும் திருஇயமகம், சந்த வகையிலும் எழுத்தமைப்பு முதலியவற்றிலும் வேறுபடும் நாலடிமேல்வைப்பு, திருவிருக்குக்குறள், திருமுக்கால், மாலைமாற்று, மொழிமாற்று, திருவேகபாதம், திருவெழுகூற்றிருக்கை, ஈரடிமேல்வைப்பு, திருச்சக்கரமாற்றம் முதலிய பல சித்திரக் கவிவகைகளையும் சம்பந்தர் திறமையாகக் கையாண்டுள்ளார். சுருங்கச் சொல்லின் இவர் நாவில் இசைத்தமிழும் இயற்றமிழும் இணைந்து களிநடம் பயில்கின்றன எனலாம்.

## 2.5 சம்பந்தர் நமக்குக் கூறும் உபதேசம்:

சம்பந்தருடைய தேவாரத்தில் உலகினருக்குச் செய்யும் உபதேச உருவில் அமைந்த பாடல்கள் சிலவே உள்ளன. சைவ சித்தாந்த உண்மைகளான பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் இலக்கணங்களைத் தெளிவாக இவர் ஓதியுள்ளார். உயிர்கள் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களைக் கொண்டன. இவ்வுயிர்களுக்கு உயிராகி இறைவன் நிற்கின்றான். அந்த இறைவனே பிரமனாகப் படைப்புத் தொழிலையும், அரியாகக் காத்தல் தொழிலையும், உருத்திரனாக அழித்தல் தொழிலையும் நடத்துகிறான். உயிர்கள் பாசத்தாற் புலன்களாற் கட்டுப்பட்டன. இறைவன் பாசங் கடந்தவன்; புலன்களை வென்றவன். உயிர்கள் இன்பத்துன்பங்கட்கு உட்பட்டன; இறைவன் அவற்றைக் கடந்தவன். இறைவன் உயிர்களை வினையில் ஈடுபடுத்தி, படிப்படியாக அவ்வினைகளை அறுத்து, இறுதியில் முத்தியருள்கிறான். இறைவனை அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை வழிகள் உள்ளன. ஆயினும் பத்திநெறியே இறைவனை எளிதிற் பெறும் வழியாகும். பத்திப் பெருக்கத்துக்கு ஆக்கம் தந்து உதவுவது மெய்யடியாரோடு இணக்கமாகும். ஆகவே, இறைவனுக்கு அடியாரானால், அவன் நமக்கு அருள்புரிவான்.

**'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு**

**இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்'**

என்பது சம்பந்தர் எமக்குக் கூறும் உபதேசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சுந்தரமூர்த்தி நாயனார்

## 3.1 வாழ்க்கைச் சுருக்கம்:

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில், (சுந்தரர் காலத்தை கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர்.) திருமுனைப் பாடிநாட்டிலே, திருவாரூரிலே, ஆதிசைவர் குலத்திலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புதல்வராய்ப் பிறந்தார் சுந்தரர். இவருடைய பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர் என்பது. குழந்தைப் பருவத்திலே நம்பியாரூரர் அந்நாட்டு மன்னராகிய நரசிங்கமுனையர் மாளிகையிலே, அந்தணர் நெறியில் வளர்க்கப்பட்டார். இவரது பதினாறாம் வயதில், இவருக்குத் திருமணமாகும் சமயத்தில், சிவபெருமான் ஒரு கிழவேதியராய் வந்து, அடிமை ஓலை யொன்றைக் காட்டித் தடுத்தாட் கொண்டார். புத்தூர்த் திருமணம் தடைப்பட்டது. வாதாடி வென்ற கிழவேதியர் திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலுட் புகுந்து மறைந்தார். பின்தொடர்ந்து சென்ற நம்பியாரூரர், வந்தவர் சிவபெருமானே என்றுணர்ந்து, ஞானம் பெற்று, முன்னைத் தொடர்புணர்ந்து உருகினார். இறைவர் 'நீ என்னைத் தமிழ் பாடுக' என்று பணித்துப், 'பித்தா' என அடியெடுத்துக் கொடுத்தருளினார். ஆரூரரும் 'பித்தாபிறை சூடி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அதுமுதல் ஆரூரர் தலவழி பாடு செய்து தமிழ்பாடப் புறப்பட்டார். அவர் இறைவனோடு வன்மைபேசி வாதாடிய காரணத்தால் 'வன்றொண்டர்' என்னும் பெயரையும் பெற்றார்.

வன்றொண்டர் திருத்துறையூரிலே இறைவனைப் பாடித் தவநெறி வேண்டினார்; திருவதிகைக்கு அருகில் திருவடி சூட்டப் பெற்றார்; தலங்கள் பலவற்றைத் தரிசித்து வழிபாடு செய்து மீண்டும் திருவாரூரை அடைந்து, தியாகேசப் பெருமானை வணங்கி, அகங்குழைந்து உருகினார். அப்பொழுது திருவருளால் 'நமது தோழமையை உனக்குத் தந்தோம்; நாம் உன்னைத் தடுத்தாட் கொண்ட போது, நீ பூண்டிருந்த திருமணக் கோலத்தை என்றும் பூண்டுகொண்டிருப்பாயாக; வேட்கை தீர வாழ்வாயாக' என்ற வாக்கு எழுந்தது. அன்று தொட்டு அடியவர்கள் வன்றொண்டரைத் 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கலாயினர்.

முன்பு, தம்பிரான் தோழர் கயிலையிற் காதலித்த கமலினியார் என்பவர் திருவாரூரிலே உருத்திரகணிகையர் குலத்திற் பிறந்து, 'பரவையார்' என்னும் பெயருடன் சிவபத்தி நெறியில் நின்று, நாடோறும் திருவாரூர்ப் பெருமானை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தம்பிரான் தோழர் வழக்கம் போலக் கோயிலுக்குப் போனபோது, அங்கே பரவையாரைக் கண்டு காதலித்தார். பரவையாரும் ஆரூரரைக் கண்டு காதலித்தார். இறைவன் திருவருளால் இருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் இன்ப வாழ்வு நடாத்தி வந்தனர். ஒருநாள், ஆரூர்க் கோயிலிலே தேவாசிரிய மண்டபத்திலே கூடியிருந்த திருத்தொண்டர்களை வணங்காது நம்பியாரூரர் ஒருவாறு ஒதுங்கிச் சென்றதைக் கண்ட விறன்மிண்ட நாயனார், 'திருத்தொண்டர்களுக்கு வன்றொண்டனும் புறம்பு; அவனை ஆண்ட சிவனும் புறம்பு' என்று கடிந்துரைத்தார். அது கேட்ட நம்பியாரூரர் அடியார்களுக்கு அடியனாக வேண்டும்' என்று தியாகேசப் பெருமானை வேண்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்கத் '**தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**' எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகைத் பதிகத்தைப் பாடி, அடியார் கூட்டத்தை வணங்கிச் சென்றார்.

திருவாரூரிலே தம்பிரான் தோழரும் பரவையாரும் முட்டின்றி இல்லறம் நடத்துவதற்குக் குண்டையூர்க் கிழவர் என்னும் அன்பரொருவர் நெல், பருப்பு முதலியவற்றைப் பரவையார் மாளிகைக்கு அனுப்பிவருவது வழக்கம். ஒருமுறை, போதிய நெல் கிடையாமற் போதலும் கிழவர் மனம் வருந்த, சிவபிரான் குண்டையூர் முழுவதும் மலையாக நெல்லைக் குவியச்செய்தார். செய்தி அறிந்த நம்பியாரூரர் '**நீளநினைந் தடியேன்**' என்னும் பதிகம்பாடி, அந்த நென் மலையைத் திருவாரூரிற் சேர்ப்பித்தார். திருநாட்டிவந்தான் குடியில் வாழ்ந்த கோட்புலிநாயனார் தம் புதல்வியராகிய 'சிங்கடியார்', 'வனப்பகையார்' என்னும் இருவரையும் அழைத்துக் கொண்டு வந்து, அவர்களை நம்பியாரூரர் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டியபோது, ஆரூரர் அப்பெண்களைத் தம் புதல்வியராகப் பாவித்துத் தம்மைச் '**சிங்கடியப்பன்**' என்றும் '**வனப்பகையப்பன்**' என்றும் தம் பதிகங்களிலே அமைத்துப் பாடினார். பங்குனி உத்திரத் திருநாள் நெருங்கியபோது, பரவையாருக்குச் செலவுக்குப் பொன் தேவையென்று திருப்புகலூர்ப் பெருமானை வேண்டிச் செங்கற்கள் பொன்கற்களாகக் கிடைக்கப் பெற்றார். நம்பியாரூரர் திருவாரூரினின்றும் புறப்பட்டு, வழியிலே பல திருத்தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடித் திருப்பேரூருக்குச் சென்ற போது அங்கே சிவபெருமான் அவருக்குத் தில்லைக் கூத்துத் தரிசனம் காட்டியருளினார். பின்னர், ஆரூரர் திருக்கூடலையாற்றூருக்குப் போகாது, திருமுதுகுன்றை நோக்கி நடந்தபோது, சிவபெருமான் கிழவேதியராய்த் தோன்றி அவருக்குத் திருக்கூடலையாற்றூருக்கு வழிகாட்டி மறைந்தருளினார். திருமுதுகுன்றத்தில் இறைவன் அளித்த பன்னீராயிரம் பொன்னை மணிமுத்து நதியிலே இட்டு பின்பு அது திருவாரூர்க் குளத்திலே வந்துசேரப் பெற்றெடுத்தார். நம்பியாரூரர் திருக்குருகாவூருக்குச் சென்ற போது வழியில் பசியும் தாகமும் வருத்தவே, இறைவர் ஒரு வேதியர் உருவத்தில் அவருக்கு பொதிசோறும் தண்ணீருங் கொடுத்து இளைப்பாற்றினார். திருக்கச்சூரில் நம்பியாரூரர் பசித்திருந்த வேளை, இறைவரே ஒரு மறையவர் வடிவத்தில் வந்து, சோறுங் கறியும் இரந்து, அவருக்கு உண்ணக் கொடுத்தார்.

நம்பியாரூரர் தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடி வந்து திருவொற்றியூரிலே இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்தார். அவ்வூரிலே, முன்பு சுந்தரராற் காதலிக்கப்பட்ட அநிந்திதை என்பார் ஞாயிறுகிழவர் என்னும் வேளாளரக்கு மகளாய்ப் பிறந்து, சிவபெருமானுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார். ஒருநாள் நம்பியாரூரர் திருக்கோயிலுக்குச் சென்றபோது, அங்கே சங்கிலியாரைக் கண்டு, காதல் கொண்டு, அவரைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்று இறைவனை வேண்டினார். இறைவன் அருளால் சங்கிலியாரும் திருமணத்துக்கு இசைந்தார். நம்பியாரூரர் சங்கிலியார் கேட்டுக் கொண்டபடி திருக்கோயில் மகிழின்கீழ் 'யான் சங்கிலியை விட்டுப் பிரியேன்' என்று சபதஞ் செய்து கொடுத்து, அவரை மணஞ் செய்து கொண்டு திருவொற்றியூரில் வாழ்ந்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறிருக்கும் காலத்தில், நம்பியாரூரருக்குத் திருவாரூர் நினைவு வரவே, அவர் தாம் சங்கிலியாருக்குச் செய்துகொடுத்த சபதத்தையும் மறந்து, திருவாரூருக்குப் போகப் புறப்பட்டார். அவர் திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும், சபதம் தவறிய காரணத்தால் இருகண் பார்வையையும் இழந்தார். உடம்பில் அடுநோயும் வந்து வருத்தியது. 'சபதம் தவறியதாலே இத்துன்பம் நேர்ந்தது' என்று உணர்ந்த ஆரூரர், சிவநாதனைப் பாடியே துன்பத்தைப் போக்கத் துணித்தார். திருவாரூருக்குப் போகவேண்டும் என்னும் உறுதியினின்றும் ஆரூரர் பிறழவில்லை. சிலர் வழிகாட்ட அவர் பிரயாணத்தைத் தொடர்ந்தார்; **'அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்'** என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்; அதில் **'ஒழுக்க என்கணுக் கொரு மருந்துரையாய்'** என்றும், **'ஊன்றுகோல் எனக்காவ தொன்றருளாய்'** என்றும் வேண்டுதல் செய்தார். ஊறு நீங்கவில்லை. திருமுல்லை வாயிலுக்குச் சென்று **'சங்கிலிக்காக என் கண்கொண்ட பண்ப'** என்று பாடினார். அங்கிருந்து திருவெண்பாக்கம் சேர்ந்து **'திருக்கோயில் உள்ளீரோ?'** என்று சிவபெருமானைக் கேட்டார். சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து, **'உளோம் போகீர்'** என்றார். பின்னர் காஞ்சீபுரத்தில் ஆரூரர் இடக்கண் பார்வையைப் பெற்றார்; திருத்துருத்தியில் தமக்கு உற்ற உடல்நோய் தீரப் பெற்றார்; திருவாரூர் வந்து சேர்ந்து வலக்கண் பார்வையையும் பெற்றார்.

திருவாரூருக்கு வந்து சேர்ந்த நம்பியாரூரர் பரவையார் வீட்டிற்குப் போக விரும்பினார். சங்கிலியாரை மணந்திருந்த செய்தியைக் கேள்விப்பட்டிருந்த பரவையார், ஆரூரரை வீட்டுக்கு வராதபடி தடுத்து ஊடல் கொண்டார். நம்பியாரூரர், தம் தோழராகிய இறைவரையே பரவையாரின் ஊடலைத் தணிக்க ஒருமுறைக்கு இருமுறையாகத் தூதுவிடுத்தார். சிவபெருமான் பரவையாரின் ஊடலைத் தணித்து, இருவரையும் முன்போலக் கூட்டிவைத்தார்.

இங்ஙனம் இறைவரைத் தூதனுப்பியது அடாத செயல் என்று நம்பியாரூரரை ஏயர்கோன் கலிக்காம நாயனார் வெறுத்தார். அது காரணமாகக் கலிக்காமருக்கு இடர் நேர்ந்தது. நம்பியாரூரர் இடைரச் சிவனருளால் போக்கினார். இருவரும் நண்பராயினர். திருவாரூரிலே நம்பியாரூரர் இருக்கையில், சேரநாட்டரசரான சேரமான் பெருமாள் அவரிடம் வந்து நட்புப்பூண்டிருந்தார். பின்னர்ச் சேரமான் பெருமாள் நம்பியாரூரரைத் தமது நாட்டுக்கு அழைத்துச் சென்றார். வழியிலே காவிரியாறு பெருக்கெடுத்து ஓடியதால், ஆரூரர் **'எதிர்த்து நீந்த மாட்டேன்'** என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, ஆற்று நீரை ஒருபுறம் நிற்கச் செய்து, மறுகரையிலுள்ள திருவையாற்றை வழிபட்டு, மலைநாட்டை அடைந்தார். அங்கே சேரமானது அரண்மனையில் சில நாள் தங்கி, ஆரூரர் அரசரளித்த உபசாரங்களைப் பெற்றுப் பின்னர்த் திருவாரூருக்கு மீண்டார். அவ்வாறு திரும்பிவரும் போது இறைவர் ஆணைப்படி பூதகணங்கள் வேடர்களாக வந்து ஆரூரருக்குச் சேரமான் தந்த பொருள்களை எல்லாம் பறிக்கவே, ஆரூரர் திருமுருகன் பூண்டித் திருக்கோயிலை அடைந்து, **'கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்'** என்றெடுத்து **'எத்துக் கிங்கிருந்தீர் எம்பிரான் நீரே'** என்று பாடினார். இறைவன் அருளால் இழந்த பொருள்களை மீளப் பெற்றுக் கொண்டு நம்பியாரூரர் திருவாரூரை அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாரூரர் மீண்டும் சேரமானைக் காண விரும்பி மலைநாட்டுக்குச் செல்லும் வழியில் திருப்புக்கொளியூரிலே, சில ஆண்டுகளுக்குமுன் ஏரியிலே முதலையுண்ட பிராமணச் சிறுவனை, அவன் பெற்றோரின் அழுகைக்காக இரங்கி, அம்முதலையையே ஏரிக்கரையில் உயிருடன் உமிழும்படி செய்தார். மலைநாடு சென்று, சேரமானைக் கண்டு அளவளாவித் திருவஞ்சைக் களத்திலே இறைவரை வழிபட்டு 'வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்' எனவரும் பாடலைக் கொண்ட 'தலைக்குத் தலைமாலை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அப்போது இறைவன் அனுப்பிய வெள்ளையானைமீது ஏறித் தந்தோழராகிய சேரமான் பெருமானை நினைத்துக் கொண்டே தமது பதினெட்டாம் வயதில், ஆடிச் சுவாதியிற் கைலையை அடைந்து தமது பழைய தொண்டை மேற்கொண்டார். பரவையாரும் சங்கிலியாரும் வினைத் தொடக்கறக் கைலை சேர்ந்து முன்போலத் தேவியிடம் பணி பூண்டனர். நம்பியாரூரர் கைலை செல்கின்றாரெனக் கேள்விப்பட்டதும் சேரமான் பெருமான் ஒரு குதிரைமீது ஏறி அதன் செவியிலே சிவமந்திரத்தை ஓதலும், குதிரை மேலே எழும்பிச் சுந்தரர் சென்ற வெள்ளையானையைக் கிட்டி, அதனை வலம் வந்து முன்னே சென்றது. கைலையை அடைந்த சேரமான், சிவபெருமானை வணங்கிக் கணத்தலைவராய்த் தொண்டாற்றி வரலானார்.

## 3.2 சுந்தரரின் சாதனைகளும் தனிச் சிறப்புகளும்:

(1) நம்பியாரூரர் முன்பு திருக்கயிலையிலே ஆலாலசுந்தரர் என்னும் பெயருடன் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராயிருந்தவர் என்றும், ஒருகால் நந்தவனத்திலே பூக்கொய்யப் போனவிடத்து உமாதேவியாரின் சேடியர்களாகிய அனிந்திதையார், கமலினியார் என்னும் பெண்களைக் கண்டு காதல் கொண்டவர் என்றும், அக்காரணத்தால் அவர்களைக் கூடி அனுபவித்தற் பொருட்டு மண்ணுலகிற்கு அனுப்பப்பட்டவர் என்றும் பெரிய புராணம் கூறுகின்றது. கயிலையில் நிகழ்ந்தவை பற்றிச் சுந்தரர் தேவாரத்தில் யாதொரு குறிப்பும் காணப்படவில்லை.

**'வறிதே நிலையாத இம்மண்ணுலகின் நரனாக வகுத்தனை'** (திருநெல்வாயில்-திருஅரத்துறை-2) என்ற ஒரு குறிப்பால், சிவபெருமான் அவரை மண்ணுலகில் மனிதப் பிறப்பெடுக்கச் செய்தார் என்பது தெரியவருகின்றது. முடிவில் அவர் சிவபெருமான் அனுப்பிய வெள்ளானை மேல் கயிலைக்குச் சென்றதைத் 'திருநொடித்தான் மலைப் பதிகத்தில்' கூறியிருப்பதால், அவர் முன்னரும் அங்கிருந்தே மண்ணுலகிற்கு வந்தவர் என்றும் உய்த்தறியலாம். பின்னே மண்ணுலகில் நடந்த நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு, புராணகாரர் கயிலையில் நடந்த காதற் காட்சியைக் கற்பனையாற் படைத்தாரெனலாம்.

அப்பர் சுவாமிகள் **'சுந்தரனைத் துணைக்கவரி வீசக்-கொண்டார்'** (தனித் திருத்தாண்டகம்-5) என்று பாடியிருப்பதால் சுந்தரர் கயிலையிலே சிவபெருமானுக்குக் கவரிவீசும் அணுக்கத் தொண்டராய் இருந்தவர் என்பதும் பெறப்படும்.

**(II)** சுந்தரர் ஆதிசைவப் பிராமணர் குலத்திலே பிறந்து அரசர் மாளிகையிலே வளர்ந்தவர். சுந்தரரின் தந்தையாராகிய சடையனார் திருநாவலூரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்' மரபிலே வந்தவர். சுந்தரர் தமது பதினாறு ஆண்டளவும் அந்தணர்க்குரிய ஒழுக்கத்தோடு அரசகுமாரரென வளர்ந்து, கலைகளில் வல்லவராய் விளங்கியவர். புத்தூர்த் திருமணம் தடைப்பட்டு, இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டது முதலே, சுந்தரரின் வாழக்கையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. சிவபெருமான் கிழவேதியராய் வந்து சபைமுன் ஆவணங்காட்டி அடிமைகொண்ட செய்தியைச் சுந்தரர் தம்பாடல்களிற் பலவிடத்திலே எடுத்துக்கூறியுள்ளார். சில உதாரணங்கள் வருமாறு:

**(1) 'தன்மையினால் அடியேனைத் தாமாட் கொண்ட நாட் சபைமுன்**
**வன்மைகள் பேசிட வன்தொண்டனென்பதோர் வாழ்வு தந்தார்'**
**- (திருநாவலூர்-2)**

**(2) 'அன்று வந்தெனை அகலிடத்தவர் முன் ஆனதாகவென் (று) ஆவணங்காட்டி**
**நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த நித்திலத்திரள் தொத்தினை...'**
**- (திருக்கோலக்கா-5)**

**(3) 'மண்ணின் மேல்மயங்கிக்கிடப் பேனை வலியவந் தெனை ஆண்டுகொண்டானே'**
**- (திருவாடுதுறை-2)**

இந்த நிகழ்ச்சியின் பின்னரே ஆரூரர் சிவபெருமானைக் கண்டும், கேட்டும், உற்றும், உணர்ந்தும் அறிந்து அநுபவிக்கும் பக்குவ நிலையை அடைந்தார்.

**(III)** சுந்தரர் இறைவனைத் தோழனாகப் பாவித்துப் பத்திசெய்தவர். இத்தகைய பத்திநெறி 'சகமார்க்கம்' எனப்படும் தோழமை நெறியாகும். திருவாரூரில் சுந்தரர் வழிபட்டபோது, 'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்' என்னும் அசரீரி வாக்கு இறைவன் அருளால் எழுந்தது. அதனை ஆரூரர் **'தன்னைத் தோழமையருளி'** (திருநள்ளாறு-8) என்றும், **'என்றனை ஆள்தோழனை'** (திருக்கானப்பேர்-9) என்றும், **'என்னுடைய தோழனுமாய்'** (திருவாரூர்-10) என்றும் பல இடங்களிலே சொல்லிப் பாடியுள்ளார். இறைவனை ஆண்டானாகவும், தந்தையாகவும் பாவித்துப் பத்தி செய்வதைக் காட்டிலும், தோழனாகப் பாவித்துப் பத்திசெய்வது அருஞ்செயலாகும். இறைவனைத் தோழனாகப் பாவிக்கும் அன்பரின் அகத்திலே அவன் எப்போதும் ஆண்டானே என்பதும், நாம் எப்போதும் அடிமையே என்பதும் நிலையாகப் பதிந்திருக்கும். அவ்வாறு உணர்ந்து கொண்டே அன்புமிகுதியால் அவனைத் தோழனாகக் கொண்டு நட்பாடுதலும் வேண்டும். இத்தகைய நிலையிலேயே சுந்தரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைக் கெஞ்சியும் மிஞ்சியும் பேசுகிறார். பரவையாரைத் தமக்குத் தருமாறு கேட்கும் போதும், சங்கிலியாரை விரும்பிக் கேட்கும்போதும், பின், பரவையாரின் ஊடலைத் தணிக்கக் கேட்கும் போதும் எல்லாம் தோழனிடம் கெஞ்சிக் கேட்பதுபோல இறைவனை வேண்டுகிறார். திருப்பாச்சிலாச்சிரமத்திலே இறைவன் தமக்குப் பொன் அளிக்கவில்லையென்று உள்ளம் புழுங்கி 'இவரல்லா தில்லையோ பிரானார்' என்று மிஞ்சிக் கேட்கிறார். திருமுருகன் பூண்டி வழியிலே சேரமான் கொடுத்த பொருள்களை யெல்லாம் வேடுவர் பறித்தபோது, சுந்தரர் கோயிலினுள் நுழைந்து '**எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரான் நீரே**' என்று சினங் கொண்டவர்போலக் கேட்கின்றார். எந்த நிலையிலும் சுந்தரருடைய உள்ளன்பு சிறிதும் குறையவில்லை. தோழமை நெறி யோகமார்க்கமுமாகும்.

**(IV)** சுந்தரர் யோகநெறி கைவந்தவர். அவர் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின்னர்த் திருத்துறையூருக்குச் சென்று இறைவனை வணங்கித் தமக்குத் தவநெறி தந்தருளுமாறு வேண்டினார். இத் தவநெறி ஐம்புலனும் ஒருமையிற் பொருந்தும்படி சுந்தரர் விரும்பிய யோகநெறியேயாகும். திரு ஆமாத்தூர்த் திருப்பதிகத்தில் இதற்கு அகச்சான்றும் காணப்படுகிறது:

**'தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்**
**நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்**
**மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே**
**ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூரெம் அடிகட்கே' (9)**

சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் அளவிறந்த அன்பு வைத்து வழிபட்டு வந்த பெருமிழலைக் குறும்பநாயனார், அவ்வழிபாட்டின் பயனாய் அட்டமாசித்திகளும் கைகூடப் பெற்று யோகப் பயிற்சியில் முதிர்ச்சியடைந்திருந்தார் என்று பெரியபுராணம் கூறுகின்றது. சுந்தரர் கயிலைக்குப் போவதை, முதல் நாளே தமது யோகக்காட்சியாற் கண்ட பெருமிழலைக் குறும்பர், அவரைப் பிரிந்து உலகில் வாழ விரும்பாமையினால், தமது யோகத்தால் சுந்தரருக்கு முன்னரே கயிலையை அடைந்தார். பெருமிழலைக் குறும்பருக்குக் குருவாய் விளங்கிய சுந்தரர், யோகக் காட்சியினாலேயே தமது திருக்கயிலை யாத்திரையைக் கண்டு, திருநொடித்தான் மலைப்பதிகத்தைப் பாடினார் என்று கருத இடமுளது.

**(V)** சுந்தரமூர்த்தி சுவாமிகள் மானிட யாக்கையோடு திருக்கயிலைக்குச் சென்றமை ஓர் அரிய நிகழ்ச்சியாகும். முன்னே அப்பர் சுவாமிகள் திருக்கைலைக்குப் போகமுயன்றபோது காசிக்கு அப்பால் அவர் செலவு தடைப்பட்டது. சிவபெருமானே ஒரு முனிவர் வேடம் பூண்டு வந்து, 'மானுடர் காணுந் தகையதன்று திருக்கைலை; ஆதலால் நீர் திரும்பிச் செல்லலே நுமக்குக் கடன்' என்று தடுத்தார். அப்பரின் அசையாத மனவுறுதிகண்டு, அப்பருக்குத் திருவையாற்றிலே கைலைக் காட்சியை அளித்தருளினார். இங்கே சுந்தரருக்குச் சிவபெருமான் கட்டளைப்படி திருமால், பிரமன் முதலிய தேவர்கள் வெள்ளையானையைக் கொண்டுவந்தார்கள். திருவஞ்சைக் களத்திலே '**தலைக்குத் தலைமாலை**' என்னும் திருப்பதிகத்தைப் பாடிச் சிவபெருமானை நினைந்து தம்மை மறந்து நின்ற சுந்தரரைத் தேவர்கள் யானைமீது ஏற்றினார்கள். சுந்தரர் தந்தோழராகிய சேரமான் பெருமானை நினைந்து கொண்டு திருக்கைலைக்கு ஏகினார். ஏகும் போதே '**தானெனை முன்படைத்தான்**'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருப்பதிகத்தை எடுத்து 'மத்தயானை அருள்புரிந்து ஊனுயிர் வேறு செய்தான்' என்றும், 'இந்திரன் மால்பிரான் எழிலார்மிகு தேவரெல்லாம்-வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து' என்றும் பாடிக்கொண்டே திருக்கைலையை அடைந்தார். சுந்தரரின் உற்ற தோழர் சேரமானும் அவ்வாறே குதிரைமீதேறி, அதன் செவியில் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, மானிட யாக்கையோடு கைலையை அடைந்தார். இவர் இருவரும் யோகநிலை கைவந்த சித்தர் கணத்தைச் சேர்ந்தவராதலாலே உடலுடன் கைலைக்கு ஏகும் இயல்பினராயினர். இச்சிறப்பை நம்பியாண்டார் நம்பி பின்வருமாறு பாடுகின்றார்:

'ஞானவா ரூரரைச் சேரரை அல்லது நாம் அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற் கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள்
கூட்டத்திலே'

- (திருத்தொண்டர் திருவந்தாதி -86)

சுந்தரர் கைலைக்கு எழுந்தருளியபோது, பேரொளிப் பிழம்பாய்த் தோன்றினார் என்றும்; திருமலையின் அடியிலே இருந்த உபமன்னியமுனிவரும் அவரைச் சூழந்திருந்த வேறு பல முனிவர்களும் சிவயோகிகளும் அக்காட்சியைக் கண்டனர் என்றும்; சிவபெருமானையன்றி எவரையும், எதையும் தொழாத உபமன்னிய முனிவர் 'இப் பேரொளிப் பிழம்பாய் எழுந்தருளுவோர் நம்பியாரூரர் என்னும் திருப்பெயருடையவர்; அவர்தஞ் சிந்தை என்றுஞ் சிவத்தில் அழுந்திக் கிடக்கும்; அவரே இறைவர்; இறைவரே அவர்; அவர் நாம் வணங்குந் தகுதி வாய்ந்தவர்' என்று மற்ற முனிவர்களுக்கு அமைதி கூறினார் என்றும் சேக்கிழார் 'திருமலைச் சிறப்பு' என்னும் பகுதியிற் கூறியுள்ளார். இதனாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஐம்புலன்களை வென்று, மெய்ஞ்ஞானம் பெற்றுப் பேரொளியாய் விளங்கினார் என்று அறியக் கிடக்கின்றது.

**(VI)** சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தியானித்துப் பேறு பெற்றவர்கள் சிலரைப் பெரிய புராணம் கூறுகின்றது. இவர்களுள் புத்தூர்த் திருமணம் குழம்பியபின், நம்பியாரூரையே என்றும் சிந்தையில் இருத்திக் கன்னியாகவே வாழ்ந்த சடங்கவி சிவாசாரியாரின் அருமைப் புதல்வியார் முதலாவதாகப் பேறு பெற்றவராவார். அறுபான்மும்மை நாயன்மாருள் சோமாசிமாறநாயனாரும், பெருமிழலைக் குறும்பநாயனாரும் அவ்வாறே சிவகதி பெற்றவர்கள். இதனால், சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தியானிப்பதால் சிவலோகத்தை எளிதிற் பெறக்கூடும் என்று உணரத்தகும்.

## 3.3 சுந்தரரின் வாழ்க்கையிலிருந்து நாம் அறியவேண்டிய உண்மைகள்:

(1) முன்செய் நல்வினைப் பயனால் கடவுளிடத்து அன்பு பூண்டு, திருவருள்வழி நின்று, அத்திருவருள் கூட்டுவித்த கருமத்தை முடிக்கக் கடவுளை வேண்டினால், கடவுள் அக்கருமத்தை முடித்து வைப்பார். ஆனால், கடவுளிடத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லாமல் உலகப் பற்றே காரணமாக நாம் ஒரு காரியத்தை முடிக்கும்படி கடவுளை வேண்டினால் நமது வேண்டுகோளுக்கு அவர் இணங்கமாட்டார். சில சமயங்களில் காரியத்தை முற்றுவித்தாலும், துன்பத்தை விளைவிப்பார்.

(2) எவராயினும் நெறிதவறி நடந்தால், கடவுள் நடுநிலைமையிலிருந்து அவரைத் தண்டிப்பார். சுந்தரர் சங்கிலியாருக்குச் செய்த வாக்குறுதியை மீறியமையால் கண்குருடாயினார்; உடலிலும் அடுநோய் பீடித்து வருத்தியது.

(3) கடவுள் அப்படித் தண்டித்த போதும், தவறு செய்தவர் தம்முடைய குற்றத்தை உணர்ந்து வருந்தி, மெய்யன்போடு கடவுளிடம் முறையிட்டுத் தம்முடைய துயரைப் போக்க வேண்டும் என்று வேண்டுவாராயின், கடவுள் அருள்புரிவார் என்பது திண்ணம்.

(4) சிவபெருமான், தம்பால் பேரன்பு பூண்டு, என்றும் தம் திருநாமங்களையே நாவினாற் சொல்லிக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் கண்ணிழந்த துன்பத்தை உடனே நீக்கவில்லை. முதலில் ஊன்றுகோல் கொடுத்து, பின்பு ஒரு கண்கொடுத்து, அதன் பிறகு மற்றைக் கண்ணும் கொடுத்தார். ஆகையால், கடவுள் நம்முடைய துன்பங்களை உடனே போக்கவில்லை என்று நாம் குறைகூறிக் கடவுள் நம்பிக்கையை இழத்தலாகாது. சுந்தரர் இறுதிவரையும் இறைவனை நம்பி இருந்தமையாலேயே தந்துயரமெல்லாம் தீர, இன்பநிலை எய்தினார்.

(5) 'நான்', 'எனது' என்னும் பற்றுகளால் துன்பங்கள் உண்டாகின்றன என்றும் அத்துன்பங்கள் எல்லாம் நாம் உலகப் பற்றுகளை விடுத்துக் கடவுளிடம் அன்பு செலுத்திப் பேரின்பம் அடைவதற்காகக் கடவுளாற் கொடுக்கப்படுவன என்றும் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

(6) உலகபோகங்களும் கடவுளாலே கொடுக்கப்படுகின்றன. அவற்றை நாம் அனுபவிக்கும்போது திருவருள் வழிநின்றே அனுபவித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதால் நம்மனம் உலகபோகங்களிலேயே அழுந்திவிடாமல், மெல்ல மெல்ல அவற்றை விட்டு, மேலானதும் என்றும் அழியாததுமான இறையனுபவத்தில் பேரின்பங் கண்டு அமைதிபெறும். அதாவது, சிற்றின்பங்களைத் திருவருள்வழிநின்று அனுபவித்தால், அச்சிற்றின்பங்களே பேரின்பமாக மாறுகின்றன என்பதாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரோடும் சங்கிலியாரோடும் அனுபவித்த இன்பம் பேரின்பம் என்பதை அவர் சரித்திரம் கூறுகின்றது.

## 3.4 சுந்தரர் தேவாரம்:

சுந்தரர் தேவாரமாக இன்று நமக்குக் கிடைத்திருப்பவை நூறு பதிகங்களே. இவற்றில் மொத்தமாக 1036 பாடல்கள் உள்ளன. பதிகம் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் பத்துப்பாடல்கள் உள்ளன. சில பதிகங்களில் பத்துக்கு மேற்பட்ட பாடல்களும் காணபபடுகின்றன. சில பதிகங்களில் சில பாடல்கள் இல்லை. கிடைத்திருக்கும் பாடல்களிற் சில இடைச்செருகலாகும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஒவ்வொரு பதிகத்தையும் ஊன்றி ஆராயின், அதில் வரும் ஒவ்வொரு பாடலும் முத்திரையிட்டது போன்ற அடிகள் பெற்று அமைந்திருப்பதைக் காணலாம்; அன்றியும் அவை பாட்டிற்குரிய இலக்கண அமைதியும் செறிவும் பெற்று விளங்குகின்றன. இந்த அளவுகோலைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்செருகல்களை நீக்கிவிடலாம். சுந்தரார் தேவாரம் ஏழாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரங்களின் தொகுதி (அதாவது முதல் ஏழு திருமுறைகளும் சேர்ந்த தொகுதி) 'அடங்கன்முறை' என்று வழங்கப்படுகின்றது.

ஏனைய இருவர் பாடல்கள் போலச் சுந்தரர் பாடல்களும் பண்ணொடு பயின்ற இசைப்பாடல்களாகும். இவை **இந்தளம், தக்கராகம், நட்டராகம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், பழம்பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கவுசிகம், செந்துருத்தி, பஞ்சமம்** என்னும் பதினேழு பண்களில் அமைந்துள்ளன.

சுந்தரர், திருஞானசம்பந்தர் தேவாரத்தையும் திருநாவுக்கரசர் தேவாரத்தையும் ஈடுபாட்டுடன் ஓதிப்பயின்றவர் என்பது, அவர் **'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்'** (திருவலிவலம்-5) என்று சிவபெருமானைக் குறித்துப் பாடுவதால் அறியலாம். சுந்தரர் தேவாரத்தைப் பயில்வார், மற்ற இருவர் பாடல்களையும் அவர்கள் கூறும் முடிபுகளையும் அறிந்தவராவர்.

சம்பந்தர் பாடல்களிற் காணப்படுவது போன்ற இயற்கைக் காட்சி வருணனைகளும் சந்தநயமும் சுந்தரர் பாடல்களிலும் பயின்று வருகின்றன. சில உதாரணங்கள் வருமாறு:

**(அ) 'சள்ளை வெள்ளையங் குருகு தானது வாமெனக் கருதி**
**வள்ளை வெண்மல ரஞ்சி மறுகியோர் வாளையின் வாயில்**
**துள்ளு தெள்ளுநீர்ப் பொய்கைத் துறைமல்கு வாஞ்சியத் தடிகள்**
**வெள்ளை நுண்பொடிப் பூசும் விகிர்தமொன் றொழிகிலர் தாமே'**
**(திருவாஞ்சியம்-4)**

**(ஆ) 'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட**
**அணிமயில்கள் நடமாடு மணிபொழில்சூ ழயலின்**
**கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்**
**கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே'**
**(திருக்கலயநல்லூர்-1)**

சிவபெருமான் திருவிளையாடல்களாகக் கருதப்படும் செய்திகளைச் சுந்தரர் அழகிய பாட்டோவியங்களாககத் தீட்டியுள்ளார். மேலும் அவர் சிவபெருமானைப் **'பண்ணாரின் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே'** **(திருமழபாடி-5) என்றும், 'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்' (திருக்குருகாவூர்-6)** என்றும், 'ஏழிசையாய் இசைப்பயனாய்' (திருவாரூர்-10) என்றும் பல இடங்களில் பாடியிருப்பது அவருடைய தமிழ்ப்பற்றினையும் இசைத்தமிழ் ஈடுபாட்டையும் இனிது புலப்படுத்தும்.

தோழமை நெறியில் நின்ற சுந்தரார், தாம் நாயகியாக நின்று நாயகனாகிய சிவபெருமானிடம் வண்டு, பறவை முதலியவற்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதனுப்புவதாகவும் பாடல்களைப் பாடியுள்ளார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை அடியார் வழிபாட்டின் பெருமைக்கு என்றும் சான்றாக நிற்பது. 'அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' எனச் சுந்தரர் குறிப்பது தமிழ்நாட்டிலன்றி எந்நாட்டிலிருப்பினும் ஆண்டவனிடம் மெய்யன்பு பூண்டு ஒழுகுபவர் நம்மால் வணங்கப்படுதற்கு உரியவர் என்னும் உண்மையைப் புலப்படுத்தும்.

## 3.5 சுந்தரர் நமக்குக் கூறும் உபதேசம்:

இறைவனே எமக்குக் பற்றுக்கோடாய் இருப்பவன்; அவனே உற்ற துணையாவான்; அவனை நம்பி அன்பொடு வேண்டினால், அவன் எமக்கு இவ்வுலக வாழக்கைக்கு வேண்டிய பொன் தருவான்; சோறுங் கூறையுந்தருவான்; போகமும் புணர்ப்பிப்பான்; பற்றறுப்பான்; பிறவாமைக்கு வேண்டிய மெய்ப்பொருள் தருவான்; முடிவில் திருவும்(வீட்டின்பம்) புணர்ப்பிப்பான்.

உலகவாழ்வு நிலையற்றது; துன்பம் நிறைந்தது. பரிந்த சுற்றமும், மற்றுவன் துணையும் பலரும் கண்டு அழுதெழ உயிர் உடலைப் பிரிந்துபோம். ஆதலால், உடலை வருத்தி அருமாநிதி இயற்றி என்றும் வாழலாம் எனப் பேசுவதும் பொய்யே.

உடலைப் பெற்றதால் பிறவிப் பயனை எய்தவேண்டும். அதற்கு உலகப் பற்று ஒழியவேண்டும். பற்று ஒழிவதற்குக் கடவுள் ஒருவரின் பாதத்தையே பற்றவேண்டும். இறைவனை நீளநினைந்து நித்தலும் கைதொழவேண்டும். மனம் வாக்குக் காயங்களால் இறைவனை வழிபடுதல் வேண்டும். இறைவனை உள்ளன்பால் நினைந்து உருகி அழுதல் வேண்டும். அவ்வாறு கசிந்தவர்க்கு 'இம்மையோடு அம்மையில் இன்பம் பெருக்குவான் இறைவன்'. அடியார்க்கு ஆட்செய்தல் இறைவழிபாட்டில் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மாணிக்கவாசகர்

## 4.1 வாழ்க்கைச் சுருக்கம்:

(ஒரு குறிப்பு: தேவாரத் திருமுறைகளை அருளிச்செய்த மூவர் முதலிகளுக்கும் சேக்கிழார் பெருமான் சிறந்த வாழ்க்கை வரலாறுகளைப் பாடித்தந்துள்ளார். தேவாரங்களில் வரும் அகச்சான்றுகளையும் தமக்குக் கிடைத்த பல்வேறு புறச்சான்றுகளையும் நுணுகி ஆராய்ந்து சேக்கிழார் எமக்குத் தந்துள்ள அவ்வரலாறுகள் நியமமான உண்மை வரலாறுகளென்று கொள்ளப்படுகின்றன. அத்தகைய ஒரு வாழ்க்கை வரலாறு மாணிக்கவாசகருக்கு இல்லை. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலிய நூல்களிலே மாணிக்கவாசகர் வரலாறு காணப்படுகிறது. இப்புராணங்கள் கூறும் செய்திகளில் முரண்பாடுகள் காணப்படுவதால், ஆராய்சியாளர் இவற்றை வரலாற்றுண்மை கூறும் நூல்களாகக் கொள்ளத் தயங்குவர்.)

மாணிக்கவாசகர் பாண்டிநாட்டிலே, திருவாதவூரிலே, அமாத்தியப் பிராமணர் குலத்திற் பிறந்து, கலையெலாங் கற்றுப் பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்தார். அவர் அரசனுடைய கருமங்களைச் செய்து வந்தாலும், அகத்திலே மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, ஞானகுரவர் ஒருவரைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்று இறைவனை இறைஞ்சி வந்தார். ஒருநாள் குதிரைகள் வாங்கிவரும்படி பெருந்தொகையான செல்வத்தை வாதவூரரிடம் கொடுத்துப் பாண்டியன் அவரைச் சோழநாட்டுக்கு அனுப்பினான். திருவாதவூரர் வழியிலே திருப்பெருந்துறையிலே ஒரு குருந்தமர நிழலிலே குருமூர்த்தியொருவரைக் கண்டு, அவரது ஞானமொழியைக் கேட்டு, அழலிடைப்பட்ட மெழுகுபோல் உருகிப் பதிகங்கள் பாடித்துதித்தார். சிவபெருமானே குருமூர்த்தியாய் வந்து தம்மை ஆட்கொண்டருளினார் என்று துணிந்தார். குருமூர்த்தியும் வாதவூரன்பர் மணிவார்த்தைகளைக்கேட்டு அவருக்கு மாணிக்கவாசகர் என்று பெயர் சூட்டினார். மாணிக்கவாசகரும் அமைச்சர் கோலத்தை விடுத்துத் துறவுக்கோலம் பூண்டு, தாம் கொண்டுசென்ற பொன்னெல்லாவற்றையும் சிவப்பணியிற் செலவிட்டு, ஞானநிலையில் நின்றார்.

பாண்டியன் திருவாதவூரரை அழைப்பித்துக் குதிரைகள் எங்கே என்று கேட்டான். குருமூர்த்தி கூறியவாறே மாணிக்கவாசகரும் குதிரைகள் ஆவணி மூலத்தில் வருமென உரைத்தார். இவர் சொன்னது பொய்யென்று பாண்டியன் இவரை ஒறுத்தான். ஆவணி மூலத்தன்று சிவபெருமானே குதிரை விற்குந் தலைவராக வந்து, குதிரைகளை அரசனிடம் ஒப்புவித்தார். ஆனால், வந்த குதிரைகள் அன்றிரவே நரிகளாகிக் காட்டுக்குள் ஓடிவிட்டன. பாண்டியன் கோபங்கொண்டு மறுபடியும் வாதவூரரை ஒறுத்தான். அப்போது சிவபிரான் வைகைநதியில் வெள்ளம் பெருகச் செய்தார். சிவனடியாரை ஒறுத்த குற்றத்தாலே வைகை பெருக்கெடுத்தது என்று அச்சங்கொண்ட பாண்டியன் திருவாதவூரரைச் சிறையினின்றும் விடுவித்து, அவருடைய ஆலோசனைப்படி, ஊர்மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகைக்கு அணைகட்டும்படி ஆணை பிறப்பித்தான். மதுரையிலே ஆள் துணையில்லாத பிட்டு வாணிச்சியின் பொருட்டுச் சிவபெருமானே கூலியாளாக வந்து, அணைகட்ட முன்வந்தார். அவர் சரியாக வேலை செய்யவில்லை யென்று பாண்டியன் கைப்பிரம்பால் அடிபட்டார். அந்த அடி எல்லா உயிர்கள் மேலும் பட்டது. வந்த கூலியாளும் மறைந்தார். வாதவூரரின் உண்மைப் பெருநிலையை வான்மொழி யொன்று பாண்டியனுக்கு எடுத்துக்கூறிற்று. அதுகேட்ட பாண்டியன் அஞ்சி, வாதவூரரை வணங்கி, அவர் விருப்பப்படியே செல்லவிடுத்தான்.

வாதவூரர் தவக்கோலம் பூண்டு, பல தலங்களையும் கண்டு வணங்கித் தம் குருநாதரைக் காணமையாற் பலவாறு புலம்பியழுதார். இடையிடை சிவபெருமான் மாணிக்கவாசகருக்குத் தம் திருக்கோலத்தைக் காட்டி, அவரைத் தில்லைக்கு வரும்படி பணித்தார். அடிகளும் அவ்வாறே தில்லைக்குச் சென்று ஒரு பன்னசாலை அமைத்து, அங்கே தங்கியிருந்து, தில்லைக் கூத்தனைச் சென்று தரிசித்து வந்தார். அந்நாளில் ஒருநாள் பௌத்தர் பலர் அவரோடு வாது செய்யவந்து, முறைதவறிப் பேசி, வாயடைபட்டு நின்றனர். அவரோடு வந்த அரசன் தன் ஊமைப்பெண்ணை அடிகளிடம் காட்டி அவளை வாய் பேசவைக்குமாறு வேண்டினான். அடிகள் அவ்வூமைப் பெண்ணையே பேசவைத்து, அப்பௌத்தர் கேட்ட வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தார். அரசனும் ஏனையோரும் அடிகளை வணங்கிச் சைவராகி ஏகினர்.

ஒருநாள் அந்தணர் ஒருவர் அடிகளிடம் வந்து, அவர் பாடிய திருவாசகப் பாடல்களை அவர் சொல்லத் தமது கையால் ஏடுகளில் எழுதினார். 'பாவை பாடிய வாயால் ஒரு கோவையும் பாடித்தர வேண்டு' மென வந்த அந்தணர் வேண்டவே, மாணிக்கவாசகர் 'திருக்கோவையார்' என்னும் பிரபந்தத்தையும் பாடினார். அதனையும் அந்தணர் எழுதிக்கொண்டு மறைந்துவிட்டார். மற்றை நாள் தில்லைக்கோயிற் பூசகர் கோயிலைத் திறந்தபோது, அம்பலவாணர் திருமுன் ஏடு இருக்கக் கண்டு, வியப்புடன் எடுத்துப்பார்த்தார். ஏட்டின் முடிவிலே 'மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது' என்று கைச்சாத்திட்டிருக்கக் கண்டு விம்மிதமுற்றார். அந்நூல்களைக் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் மாணிக்கவாசகரிடம் வந்து அந்நூல்களுக்கு 'அடிகளே பொருள் கூறவேண்டும்' என்று கேட்டனர். அடிகள் அவர்களைப் பொன்னம்பலத்துக்கு அழைத்து வந்து, 'இத் தமிழ் மாலைகளுக்குப் பொருள் இவரே' எனச் சிவபிரானைக் காட்டித் தமது முப்பத்திரண்டாம் வயதில், ஆனிமாத மகநாளில், மன்றினுட் பெருமானோடு ஒன்றிவிட்டார்.

## 4.2 மாணிக்கவாசகரின் சாதனைகள்:

(1) அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் தேவார ஆசிரியர் மூவரும் முறையே சைவசித்தாந்த நூல்கள் கூறும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று மார்க்கங்களிலும் நின்று நமக்கு வழிகாட்டியவர்கள் என்றும், திருவாசகம் திருக்கோவை பாடிய மாணிக்கவாசகர் நான்காவதாகிய ஞானமார்க்கத்தில் நின்று நமக்கு வழிகாட்டியவர் என்றும் சைவ உலகம் பேசும். ஞானமார்க்கமே இறைவனுடன் உயிரானது இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்திக்கு வழியாகும் என்றும் சித்தாந்த நூல்கள் கூறும். சரியை, கிரியை, யோகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்னும் நாற்பாதங்களும் முறையே அரும்பு, பூ, காய், கனி ஆகும் என்பர் தாயுமான அடிகள். அரும்புமுதிர்ந்து பூவாவதும், பூ முதிர்ந்து காயாவதும், காய் முதிர்ந்து கனியாவதும் இயல்பானாற் போலவே இந்நாற்பாதங்களுள் முன்னைய மூன்றும் முடிவில் ஞானத்திலே வந்து நிறைவெய்தும். இந்த ஞானமார்க்கம், பத்திநெறி வரிசையிலே சன்மார்க்கம் எனப்படும். இந்தநெறி 'அன்பின் ஐந்திணை' நெறியென்றும் சொல்லப்படுவதுண்டு. கருத்தொருமித்த காதற்றலைவியும் தலைவனும் தம்முட்கூடி நுகருவது போன்ற அன்புப் பிணைப்பால் ஆன்மாவும் இறைவனும் ஐக்கியப்படும் பத்திநெறியே சன்மார்க்கமாகும். மாணிக்கவாசகர் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்துப் பிரிவினால் இரங்கிப் பாடிய பாடல்களே திருவாசகப் பாடல்கள். இந்த நாயக நாயகி பாவனையால், தேனொடு குழைத்த மருந்து போலச் சிற்றின்பச் சொற்கொண்டு பேரின்பப் பொருளை விளக்கியுள்ள நூலே திருக்கோவையாராகும். ஆகையால், அதனைக் 'காமஞ்சான்ற ஞானப் பனுவல்' என்று பெரியோர் போற்றுவர். பத்திநெறியிலே அடியவர் ஒருவர் இறைவனோடு கொள்ளும் அன்புத் தொடர்பில் இதுவே மிகவும் உயர்ந்தது என்றும் கூறுவர்.

(2) சங்க இலக்கியத்தில், பழந்தமிழரின் வாழ்க்கையில் இயல்பாக மலர்ந்த காதல் ஒழுக்கம், அன்பின் ஐந்திணைக் காதல் ஒழுக்கமாகப் புலவர்களால் தூய்மை செய்யப்பட்டுச் சுடர்விடுவதைக் காண்கின்றோம். இது மக்கள் நுதலிய காதல் ஒழுக்கமேயாகும். பின்னர், சமண பௌத்த சமயங்களின் தாக்கத்தால் இந்தக் காதலொழுக்கம் 'காமவின்பம்' என்று இகழப்படுவதாயிற்று. தேவார ஆசிரியர்கள் இக்காதலைத் தெய்வக்காதலாக உயர்த்தி, அகப்பொருட் முறையிலே உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள காதற்றொடர்பாகச் சில பதிகங்கள் பாடியுள்ளனர். மாணிக்கவாசகரோ அந்த அகப்பொருள் இலக்கணத்திற் கூறப்படும் அத்தனை துறைகளையும் கோவைப்படுத்தித் திருக்கோவையார் என்னும் அருமருந்தன்ன ஒரு முழுநூலைப் புதுவதாகப் புனைந்து தந்துள்ளார். பிற்காலக் கோவைப் பிரபந்தங்கள் தோன்றுவதற்கெல்லாம் மூலமாக விளங்கியதும், ஈடும் எடுப்பும் இல்லாப் பீடுபெற்று இலங்குவதும் மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையாரேயாம்.

(3) மாணிக்கவாசகர் தம்மை நாயகியாகப் பாவனைசெய்த பழக்கத்தால் பெண்மையுள்ளம் பெற்று விளங்கினார். அக்கால மகளிர் தம் விளையாட்டுகளிலே உலகியற் காதல் பற்றிப் பாடும் பல்வகைப்பாடல்களை யெல்லாம் தெய்வக் காதற் பாடல்களாக்கத் திருவுளங் கொண்டமையால், தம்மையும் அவ்விளையாட்டு மகளிர் கூட்டத்துள் ஒருவராகப் பாவித்து, திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்பன போன்ற அற்புத பதிகங்களைப் பாடியருளினார். அவப்பொழுதையும் தவப்பொழுதாய்க் கழிப்பதற்கு இத்திருப்பாடல்கள் இளமகளிர்க்கு உதவுவன. இப்பாடல்கள் அடிகள் காலத்திலும், பின்னரும் தமிழ்ச்சைவச் சமூகத்தில் நிலையான தாக்கவிளைவுகளை உண்டாக்கியுள்ளன. உதாரணமாகத் திருவெம்பாவைப் பாடல்கள் சைவமரபினர் அனைவர் வீடுகளிலும் சைவக்கோயில்களிலும் மார்கழி வைகறைப் பொழுதில் ஓதப்பட்டுவருகின்றன. இன்னும், சீயம்(தாய்லாந்து) போன்ற அயல்நாடுகளிலும் மன்னர் முடிசூட்டு விழாவிலும், திருவிழாக் கொண்டாட்டங்களிலும் இப்பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு சிதைந்த வடிவில் ஓதப்பட்டு வருகின்றன.

(4) மாணிக்கவாசகர் தில்லையில் இருந்த காலத்தில், ஈழநாட்டுப் பௌத்த மன்னன் ஒருவன் புத்தகுருமார்களுடன் தில்லையை அடைந்து, தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரையும் வாதுக்கு அழைத்தான் என்றும்; தில்லைமூவாயிரவர் சிவபெருமானைத் தியானிக்க, அப்பெருமான் அவர்களின் கனவிலே தோன்றி 'மாணிக்கவாசகரைக் கொண்டு வாதிடுக' என்று திருவாய்மலர்ந்தருளினார் என்றும்; அவ்வாறே தில்லைமூவாயிரவர் வாதவூரடிகளை வேண்டிப் புத்தருடன் வாதிட வைத்தனர் என்றும்; வாதவூரடிகள் புத்தர் வினவியவற்றுக்கு விடை கூறுகையில், அவர்கள் கேளாது மறுத்ததால், வாக்கின் தேவியைப் பொய்யர் நாவினின்றும் நீங்குமாறு அடிகள் பணித்தலும் புத்தகுருமுார் அனைவரும் ஊமைகளாயினர் என்றும்; இவ்வற்புதத்தைக் கண்ட புத்தமன்னன் தன் மகளாகிய ஊமைப்பெண்ணை வாதவூரடிகள் முன்கொணர்ந்து அவளைப் பேசவைத்தால் தான் சைவனாவான் என்று சூளுரைத்தான் என்றும்; வாதவூரடிகள் அவ்வுமைப் பெண்ணைப் பேசச் செய்ததோடு மட்டுமன்றி, அவளைக் கொண்டே முன்பு பௌத்தர் கேட்ட வினாக்களுக்கு விடையிறுக்கச் செய்தார் என்றும்; புத்தமன்னன் அடிகளை வணங்கிச் சைவனானான் என்றும்; புத்தகுருமாரும் அவ்வாறே அடிகளை வணங்கி வாய்பெற்றுச் சைவராயினர் என்றும் ஒரு நிகழ்ச்சியைத் திருவாதவூரர் புராணம் கூறுகின்றது.

இச்செய்தியில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பதை அறிதற்கில்லை. மாணிக்கவாசகர் தாம் பாடிய திருத்தோணோக்கத்தில்,

**'புத்தன் முதலாய புல்லறிவீற் பல்சமயம்**
**தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்**
**சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்**
**அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ' (6)**

என்று பாடியிருப்பதை வைத்துக்கொண்டு, புராணகாரரர் இக்கதையைப் புனைந்திருத்தலும் கூடும். மாணிக்கவாசகர் வரலாறு கூறும் புராணங்கள் ஒன்றினொன்று மாறுபடுவதால், அப்பெரியாருடைய உண்மையான வாழ்க்கை வரலாறு நிச்சயிக்கப்படமுடியாமல் உள்ளது.

## 4.3 மாணிக்கவாசகர் வாழ்க்கையிலிருந்து நாம் அறியவேண்டிய உண்மைகள்:

(1) திருவாதவூரர் பாண்டியனுக்கு அமைச்சராய், அரசறிய வாழ்ந்த போதும் உலகியல் இன்பங்களில் மூழ்கினாரல்லர். அரசனுக்குரிய கடமைகளைச் செய்தாலும், தமது ஆன்மிக வாழ்வை அவர் மறந்துவிடவில்லை. தமக்கு மெய்யுணர்வு கூட்டவல்ல ஞானகுரு எப்போது, எங்கே கிடைப்பாரோ என்று நாடியவண்ணமே இருந்தார். அதற்காக அல்லும் பகலும் இறைவனை வேண்டிவந்தார். அவர் வேண்டியவாறே திருப்பெருந்துறையில் நல்ல குருநாதரைக் கண்டார்; காந்தத்தால் ஈர்க்கப்படும் இரும்புபோலக் குருநாதர் அடியில் வீழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதவூரரின் பக்குவநிலை கண்டு குருநாதர் அவருக்கு நயனதீட்சை, பரிசதீட்சை, திருவடித்தீட்சை முதலியன கொடுத்து, உபதேச முறையால் மெய்யுணர்வு கொளுத்தி, ஆட்கொண்டருளினார். வாதவூரர் மாணிக்கவாசகரானார்; தமது குருநாதர் சிவபெருமானேயெனத் தெளிந்தார்; அதுமுதல் சிவபெருமானைக் கண்டும் கேட்டும் உள்ளத்தால் உணர்ந்தும் அனுபவிக்கும் உத்தம பத்திநிலையை எய்தினார். இவ்வாறு ஞானநிலை எய்துவதற்கு, முன்பு தவஞ்செய்திருத்தல் வேண்டும். நாமும் 'தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது' கருதுவோமாயின், அதுவே செய்தவமாக எமக்கும் இறைவன் அணுக்கனாய் அருள்செய்வான். மாணிக்வாசகரின் அனுபவம் எமக்கு இம்மையிற் கைகூடாது போனாலும் அம்மையிற் கைகூடுவது திண்ணம்:

**'கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க'**

**(சிவபுராணம்)**

**'அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபர னாகி அருளிய பெருமையை'**

**(போற்றித்திருவகவல்)**

**'என்னையு மொருவ னாக்கி யிருங்கழல்**
**சென்னியில் வைத்த சேவக போற்றி'** **(ஷ)**

**'கருணையின் பெருமை கண்டேன் காண்க**
**புவனியிற் சேவடி தீண்டினன் காண்க**
**சிவனென யானுந் தேறினன் காண்க'**

**(திருவண்டப்பகுதி)**

(2) இறைவனால் ஆட்கொள்ளப்பட்டது முதல் மாணிக்கவாசகர் துறவுநிலையிலேயே நின்று வீடுபெற்றார். ஆனால், அதற்குமுன் அமைச்சராய் இருந்த காலத்தில் அவர் இல்லற ஒழுக்கத்தில் நின்றாரோ என்பதை மாணிக்கவாசகர் வரலாறு கூறும் புராணங்கள் கூறவில்லை. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் 'பெண்போகம்' பற்றிக் கூறியுள்ள அகச்சான்றுகளைக் காட்டி, அவர் இல்லறத்தில் ஒழுகினார் என்று ஆசிரியர் மறைமலையடிகள் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் தமது நூலிலே கூறியுள்ளார். சைவம், மகளிர் சேர்க்கை கூடாது என்று ஒரு போதும் கூறவில்லை. சிவபெருமானே மாதொரு பாகனாக இருந்து போகத்தையும், தாபதவேடத்தோடு இருந்து யோகத்தையும் ஆன்மாக்களுக்கு ஊட்டுகிறார் என்பது சைவம். மாணிக்கவாசகரே,

**'தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்**
**ஐயம் புகுவரால் அன்னே என்னும்'**

**(அன்னைப்பத்து-9)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்**
**பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ**
**பெண்பால் உகந்திலனேற் பேதாய்! இருநிலத்தோர்**
**விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ'**

**(திருச்சாழல்-9)**

**'மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை**
**உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ**
**உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்**
**கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ'**

**(திருச்சாழல்-13)**

என்று பாடியிருப்பதால் அவர் இல்லறம் பூண்டு மனைக்கிழத்தியோடு இன்பம் நுகர்ந்து, பின்னர்த் துறவு பூண்டு சிற்றின்பத்தை வெறுத்து விட்டார் என்று கொள்வதில் இழுக்கில்லை. அல்லது, அவர் இளமை தொட்டே அகத்துறவு பூண்டு, இல்லறத்தில் இயல்பாக எழும் இணைவிழைச்சு வேட்கையை இறைபத்தியினால் வென்று, பின்னர்ப் புறத்துறவும் பூண்டிருந்தார் என்றுங் கொள்ளலாம். இதற்கு ஆதாரமாகவுள்ள சில அகச்சான்றுகள் வருமாறு:

**'கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்**
**ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்**
**கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்**
**தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்**
**தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்**
**கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்'**

**(போற்றித்திருவகவல்)**

**'தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்**
**தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்**
**கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்**
**கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்**
**டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி**
**அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை**
**முனைவனே முதலந்த மில்லா மல்லற்**
**கரை காட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே,'**

**(திருச்சதகம்-2)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே'

(அச்சோப்பதிகம்-7)

(3) வாதவூரர் துறவு பூண்ட போது (அல்லது, இல்லறத்தில் இறங்க-விருப்பமில்லாமல் இறைபத்தியில் நாட்டமுடையவராய் இருந்தபோது) உற்றாரும் மற்றோரும் நாத்திகம் பேசி, அவர் உள்ளத்து உறுதியைக் குலைத்து, உலகவாழ்விலே ஈடுபடவைக்க முயன்றுள்ளனர். ஆனால், அடிகள் தமது உறுதியினின்றும் வழுவாமல், மற்றோர் கூறும் பழிப்புரையையும் பொருட்படுத்தாமல், தம் கருமமே கண்ணாயிருந்தார். இதற்குரிய சில அகச்சான்றுகள் வருமாறு:

'தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்'

(போற்றித் திருவகவல்)

... ...

'சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதலின்றி..' (ஷை)

'நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த'

(திருவம்மானை-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பித்தனென்றெனை உலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர்'
(அதிசயப்பத்து-4)

(4) மாணிக்கவாசகர் தம்முடைய குறைபாடுகளை இறைவனிடம் சொல்லிச் சொல்லி அவற்றைத் திருத்த முயன்று வெற்றியுங்கண்டவர். மாதர் மயலில் தம்மனம் சென்றால், அதற்காக அவர் மாதரைப் பழித்தோ, இழித்தோ பேசவில்லை; தம்மனத்தைக் கட்டுப்படுத்தித் திருத்தவே அக்குறைபாட்டைப் பன்முறையும் எடுத்துக்கூறினார். இறைவன் தமக்கு அளிக்கும் பேரின்பத்துக்கு முன் அச்சிற்றின்பம் வேண்டாத வெற்றின்பமாகவே தோன்றியிருக்கும். பிற்காலத் துறவியர் பலர் தம்மனத்தை வெல்ல முயலாமல், மாதரைப்பழித்தலை வழக்கமாக்கிக் கொண்டனர். இறைவன் படைப்பில் ஒரு பாதியைப் பழிப்பது அறமுமாகாது; உயர்ந்த பண்புமாகாது; இந்த மரபைத் தொடக்கி வைத்தவர், சமண முனிவரும் பௌத்தத் துறவியருமேயாவர். பட்டினத்தார், தாயுமானவர் போன்ற சைவத் துறவியரும் இக்குற்றத்தைப் புரிந்துள்ளனர். இவ்வகையில் மாணிக்கவாசகரின் மனப்பான்மை மகோன்னதமானது.

(5) மாணிக்கவாசகர் இறைவன்பால் அளவுகடந்த பத்திகொண்டவர்; அப்படியிருந்தும் தமது அன்பு போதாது என்றே இரங்கினார்; இறைவன் தமக்குச் செய்த சிறப்புக்குத்தாம் தகுதியற்றவர் என்றும் எண்ணினார்; அதனாலே தம்மை 'நாயேன்' என்றும் 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்' என்றும், 'கடையவனேன்' என்றும் தாழ்த்திக்கூறுகின்றார். இறைவன்பால் வைத்த அன்பினாலும், அவனைப் பிரிந்த பிரிவினாலும், அவனைக் கூடிமுயங்கவேண்டும் என்னும் வேட்கையாலும் மாணிக்கவாசகர் உருகியழுததுபோல மற்றெந்த அடியாரும் அழுதிருப்பாரோ யாமறியோம்.

(6) மாணிக்கவாசகர் அமைச்சராயிருந்து, பாண்டியன் கொடுத்த பொன்னெல்லாவற்றையும் குதிரை வாங்குவதற்குச் செலவிடாது, சிவப்பணிக்குச் செலவிட்டது முறையாகுமா? என்ற ஒரு வாதம் பலலமுறையும் எழுப்பப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சி உள்ளவாறு நடந்ததுதானா என்பதே உறுதியாகவில்லை. திருவாசகத்தில் இதற்கு அகச்சான்றும் காணப்படவில்லை. இச்செய்தியைக் கூறும் புராணகாரர், திருவாதவூரர் குருநாதரைக்கண்டு அவரால் ஆட்கொள்ளப்பட்டபின் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருநாதருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டார் என்றும்; குரு நாதரின் கட்டளைப்படியே அரசன் கொடுத்த பொன்னெல்லாவற்றையும் சிவப்பணியிற் செலவிட்டார் என்றும்; அரசனது பணமாயின் அந்த அறப்பயன் அவனையே சாரும் என்றும் சமாதானங் கூறுவர். உலகியல் நீதிப்படி, திருவாதவூரர் அப்பொன்னைப் பாண்டியனிடமே உடன்வந்த ஆட்கள் மூலம் அனுப்பியிருந்தல் வேண்டும். பொன்னும், பொருளும் எல்லாம் இறைவன் கொடுத்த கொடையே எனக் கொண்டால், வாதவூரர் குருநாதர் பணித்தபடியே, பாண்டியன் கொடுத்த பொன்னைச் சிவப்பணியிற் செலவிட்டது குற்றமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4. மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகமும் திருக்கோவையாரும்:

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. 'தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை நானூறும்' என்று புலவர் ஒருவர் பாடல்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், திருவாசகநூலில் ஐம்பத்தொரு பதிகங்களும் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்களும் உள்ளன. திருக்கோவையாரில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை நானூறே.

திருவாசகம்: திருவாசகப் பாடல்கள் அனைத்தும் மாணிகவாசகரின் வாழ்க்கையனுபவத்தின் வெளிப் பாடே என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். மாணிக்கவாசகரின் வாழ்க்கை சைவசமய சித்தாந்த தத்துவக் கூறுபாடுகள் அமைந்த சீரிய வாழ்க்கையாகும். மணிவாசகர் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் தத்துவப்படிகளில், கீழிருந்து மேலே ஒழுங்காக ஏறிச் சென்றவர். அச்சம் உற்றபோதெல்லாம் அழுதழுது இறைவன் அருளைப் பெற்று அச்சம் அகன்றவர். முடிவில் இறைவனோடு இரண்டறக் கலந்து இனிப்பிறவாநிலை எய்தினவர்.

அவர் இளமைப் பருவம் தொட்டே உலகநிலையாமையை நன்கு உணர்ந்து, வீடுபேற்றுக்குரிய சிவஞானம் நல்கும் அருட்குரவனை இடைவிடாமல் நாடியவர்; இளமை தொட்டு இரக்கமே வடிவமாகத் திகழ்ந்தவர். இளமையிற் பிறபொருள்களில் கண்ட வேதனைக் காட்சிகளாலும், மங்கையராலும் புலன்களாலும் பிறவற்றாலும் தாம் அடைந்த துன்பங்களையும் உணர்த்தி, அத்துன்பங்களிலிருந்து தம்மை விடுவிக்குமாறு பலபாடல்களிலே அவர் இறைவனை வேண்டுகின்றார்.

வாதவூரன்பர் வேண்டிக் கொண்டவாறே இறைவன் ஞானாசிரியனாக வந்து அவருக்குச் சிவஞானம் நல்கினான். அவருக்கு ஆணவமலம் நழுவும் தகுதி உண்டாயிற்று. திருவருள் நன்கு பதிந்தது. வினையால் வரும் இன்பத் துன்பங்களை ஒரு நீராகக் கொண்டு உவக்கும் உள்ளநிலை 'இருவினை ஒப்பு' எனப்படும். இருவினை ஒப்பு வந்ததும் அறியாமையாகிய ஆணவமலம் நழுவும். இந்த நிலை 'மலபரிபாகம்' எனப்படும். இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்னும் இரண்டும் ஏற்பட்டால், உயிரின் அறிவின்கண் திருவருள் பதியும். இதுவே 'சத்திநிபாதம்' எனப்படுவது. மாணிக்கவாசகர் சத்திநிபாதம் எய்தியவர்.

அடிகளை ஆட்கொண்டருளிய அருட்குரவன், அவருக்குத் தில்லையில் பரமுத்தி அருளுவதாகக் கூறித் தன்னுடன் வந்த அடியவர்களோடு மறைந்தருளினான். அதன்பின், அடிகள் ஒப்பற்ற அன்புருவாய், உலகை மறந்து முத்தர் நிலைபெற்று, சிவனையே இடைவிடாமற் சிந்திக்கும் நிலையினரானார். தில்லைக்கு அடிகள் சென்றபின் இறைவன் அடிகளுக்கு அருள் செய்வானாயினான். அவர் சித்தமலம் அற்றுச் சிவமாகி விளங்கினார். இந்நிலையே 'சீவன்முத்தர்' நிலை எனப்படும்.

சீவன்முத்தியடைவதற்கு, அடிகள் சன்மார்க்கம் எனப்படும் 'தலைவன் தலைவி' நெறியைக் கைக்கொண்டவர். அவர் தம்மை நாயகியாகப் பாவித்து, உள்ளத்தாற் பெண்மையுணர்வு நிறைந்து விளங்கினார். உலகியலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பெண்கள் விளையாடும் போதும், தொழில் செய்யும் போதும் உலகியற் காதற் பாடல்களைப் பாடுவது வழக்கம். 'அப்பெண்களும் உய்தி பெறவேண்டும் என்னும் விருப்பினால், அடிகள் அப்பாடல்களைத் தெய்வக்காதல் பற்றிய பாடல்களாக்ப் பாடி, அவற்றிலே சைவசித்தாந்தக் கருத்துகளைப் பொதிந்து வைத்தார். மக்கட் பிறப்பெடுத்த உயிர்களேயன்றி, குயில், கிளி, தும்பி போன்ற சிற்றுயிர்களும் இறைவனை அடைந்து இன்பம் எய்த வேண்டும் என்னும் அனைத்துயிரையும் தழுவிய விரிந்து பரந்த பெருநோக்கால், அடிகள் அவற்றை பார்த்து இறைவனை வரக் கூவுமாறும், அவன் பெயரையும், பெருமைகளையும் சொல்லுமாறும், அவன் திருவடிக் கமலத் தேனிற் படியுமாறும் வேண்டினார். இவ்வகையில் அமைந்தவையே 'குயிற்பத்து', 'திருத்தசாங்கம்', 'திருக்கோத்தும்பி' என்னும் பதிகங்கள்.

கடவுளைக் காணுதல் அரிது என்பதனாலும், அப்படிக் கண்டவர் தம் அனுபவத்தை வாய்ச் சொற்களால் விள்ளுதல் அதனினும் அரிது என்பதனாலும் '**கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்**' என்னும் மறைக் கூற்று ஒன்று தோன்றியது. ஆனால், மாணிக்கவாசகரைப் பொறுத்தவரையில் இம்மறைக் கூற்றும் பொய்த்துவிட்டதென்றே கூறலாம். மாணிக்கவாசகர் "இறைவனைக் கண்டது மட்டுமல்லாமல், அந்த அனுபவத்தைச் சொற்களிலும் வடித்தும் தந்துள்ளார். திருவாசகப் பாடல்களும் திருக்கோவைப் பாடல்களும் இந்த அனுபவத்தின் வெளிப்பாடே. அப்பாடல்களைப் பாடிப் பாடிக் கலந்து அனுபவித் தாலே உண்மை புலனாகும். இங்கே, திருவாசகத்தில் ஒரு வாசகத்தைத் தருவாம்:

**"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே."**

முத்திநெறியை அறியாத மூர்க்கர் நாத்திகம் பேசும் உலகாயதர்; சிவபெருமான் மாணிக்கவாசகரை அம்மூர்க்கரினின்றும் பிரித்துப் பத்திநெறியை அவருக்கு அறிவித்தார். அறிவிக்க அறிவது ஆன்மாவின் இலக்கணம். அந்த ஆன்மா சிவத்தை அறியாமலும், அடையாமலும் இருப்பதற்குக் காரணம் தொன்று தொட்டே அதனைப் பற்றிநிற்கும் ஆணவ மலமும், இடையில் வந்து சேர்ந்த கன்மம், மாயை ஆகிய மலங்களுமாம். ஆன்மா பிறவிகள் தோறும் ஈட்டிய வினைகளே பழவினைகள். இவை சஞ்சித வினைகள் எனப்படும். இச்சஞ்சித வினைகள், வீழ்வதற்கு ஆன்மாவைப் பற்றி நிற்கும் மூலமலமாகிய ஆணவம் (அதாவது சித்தமலம்) அறவேண்டும்; ஆணவம் தன்னியல்பாலேனும் ஆன்மாவின் முயற்சியாலேனும் அறமாட்டாது; இறைவன் அருளால் மட்டுமே அது அறுவிக்கப்படல் வேண்டும். அப்படி ஆணவம் அறும்போது, ஆன்மா சிவத்தின் முன்னிலையிற் சிவமாகமாறும். பழுக்கக் காய்ச்சிய இரும்பு, தன் கரு நிறம் மாறத் தீயின் நிறம் பெற்று விளங்குவது போன்றது இம்மாற்றம். இதனையே அடிகள் 'சிவமாக்கி' என்று கூறுகிறார். இந்த நிலையே இறைவனுடன் உயிரானது இரண்டறக் கலக்கும் 'அத்துவித முத்தி' எனப்படுவது. இம் முத்திநிலையிலும் இறைவன் 'ஆண்டவனே'; உயிர் 'அடிமையே'. இந்த உண்மையையே அடிகள் 'எனை ஆண்ட அத்தன்' என்று கூறிப் புலப்படுத்துகிறார். மாணிக்வாசகர் சிவத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அனுபவித்துச் சொற்களாற் கூறிய இந்த அரிய உண்மையை, பின்னர்ச் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை முறைப்படுத்திக் கூறிய மெய்கண்ட தேவர் (கி.பி.13ஆம் ஆண்டு),

**'தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தானைப்**
**பின்னை மறத்தல் பிழையலது-முன்னவனே**
**தானேதா னாச்செய்துந் தைவமென்றுந் தைவமே**
**மானே தொழுகை வலி'**

என்று வெண்பாவில் வற்புறுத்தியருளினார்.

திருக்கோவையார்: சங்கத் தமிழ்ப்புலவர்கள் மக்கள் நுதலிய உலகிற் காதல் ஒழுக்கத்தை "அகம்" எனப்பெயரிட்டு, அதனைக் "களவு", "கற்பு" என்னும் இரு கைகோள்களாக வகுத்து, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணைகளிலும் வைத்து "காட்சி" முதல் "ஊடல்" வரை நானூறு துறைகளாக விரித்துச் செய்யுள் செய்தனர். தொல்காப்பியப் பொருளதிகாரத்து அகத்திணை இயல், இறையனார் களவியல், நம்பி அகப்பொருள் போன்ற நூல்கள் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளன. சங்கத்தொகை நூல்களில் வரும் செய்யுள்கள் அவ்வகத்துறைக்கு விளக்கமாக அமைந்த தனிநிலைச் செய்யுள்களேயாகும். மாணிக்கவாசகர் இந்நானூறு துறைகளையும் கோவைப்படுத்தி, ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கட்டளைக்கலித்துறைச் செய்யுளாக நானூறு செய்யுள்கள் பாடிக் கோவைப் பிரபந்தத்தை ஆக்கித் தந்துள்ளார். கிளவித் தலைவன், தலைவி முதலானோர் பெயர் சுட்டிக் கூறப்படாது, வாளா தலைவன், தலைவி, பாங்கள், தோழி, செவிலி, நற்றாய், வழிப்போக்கர் என்றின்னவாறு சுட்டப்படுவதே அகத்திணைப் பாடல் மரபு. மாணிக்கவாசகர் அந்த மரபைத் தழுவிப் பாட்டுடைத் தலைவனாகத் தில்லைச் சிற்றம்பலவனை வைத்துப் பாடியுள்ளார். ஆதலால் இந்நூல் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் பெயர் பெறுகின்றது. சிற்றின்ப மொழிகொண்டு பேரின் பத்தை விளக்கும் நூலாதலின் "திரு" என்னும் அடையும் "ஆர்" என்னும் சிறப்பு விகுதியும் பெற்றுத் திருக்கோவையார் என்று பொதுவாக வழங்குகின்றது.

ஒவ்வொரு பாட்டும் திட்பம், நுட்பம், ஒட்பம் என்னும் பண்புகளோடு கூடி ஒவ்வொரு முழுமணியாகத் திகழும் சிறப்புடையது. ஒவ்வொரு பாட்டிலும் பாட்டுடைத் தலைவனாகிய தில்லைச் சிற்றம்பலவன் சிறப்புகளை மாணிக்கவாசகர் உவமைவகையாகவும் பிறவகையாகவும் உணர்த்தியிருக்கும் அருமை சொல்லில் அடங்காது. சிவபெருமானைப் பற்றிச் சைவசித்தாந்த நூல்கள் அனைத்தையும் அரும் பாடுபட்டுக் கற்று அறியத்தக்க சித்தாந்த உண்மைகளை எல்லாம், இந்நானூறு பாடல்களிலும் வரும் திருச்சிற்றம்பலவன் சிறப்புகளை ஒன்று திரட்டினால், எளிதிலே அறிந்து இன்புறலாம்.

இறையனார் 'களவியல்' என்னும் நூலுக்கு உரைகண்ட நக்கீரர், 'இந்நூல் என்னுதலிற்றோவெனின், தமிழ் நுதலிற்று என்பது' என்று கூறுவர். இங்கே, 'தமிழ்' என்பது அகப்பொருளையும் அவ்வாற்றால் 'இன்பத்தையும்' உணர்த்துவதை அறியலாம். அந்த இன்பம் மக்கள் நுதலிய சிற்றின்பமேயாயினும் பேரின்பத்துக்கு வாயிலாய் அமைவது. மாணிக்கவாசகர் செய்த திருக்கோவையாரும் தமிழ்நுதலிய நூலேயாம். இயல், இசை, நாடகம் என முக்கூறுபடும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருளுணர்விற்குக் கருவியாதலால், அதுவும் பேரின்பத்துக்கு வாயிலேயாம். அந்தத் தமிழில் மாணிக்கவாசகருக்கு எத்தகைய ஈடுபாடு இருந்தது என்பதைப் பின்வரும் திருக்கோவையார்ப் பாட்டு எமக்குக் காட்டும்:

(முதல் நாள் எதிர்பாராத வகையில், ஆகூழ் கூட்ட, சோலையிடத்திலே தலைவியைத் தமியளாகக் கண்டு, உள்ளம் பறிகொடுத்த தலைவன், மீண்டும் அவளை அவ்விடத்திலே காணலாம் எனச் சென்று, காணாமையால் வருந்தி, உடல்மெலிந்து, தன்பாங்கனின் துணைபெற்றுத் தன் விருப்பத்தை நிறைவேற்றலாம் என்னும் நசையினால், பாங்கனிடம் வருகின்றான். தலைவனது மெலிவு கண்டு துணுக்குற்ற பாங்கன், அவன் மெலிவுக்குக் காரணம் யாது என்று வினவுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு.)

> **'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்**
> **உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்**
> **துறைவாய்ப் புகுந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ**
> **இறைவா தடவரைத் தோட்கென் கொலாம் புகுந் தெய்தியதே.'**

(சிவன் உறையும் மதுரையிலே, சங்கப் புலவர் ஆய்ந்து தூய்மை செய்த தமிழ் ஒண்தீந் தமிழ்; அத்தமிழின் துறைகளோ பல; அத்துறைகளிலே புகுந்தால், அல்லது ஏழிசைச் சூழலிலே புகுந்தால், தலைவன் ஊண், உறக்கம் எல்லாம் மறந்து அதிலேயே ஈடுபட்டு நின்றுவிடுவான் என்பதும், அதனால் அவன் உடலுக்கு(தோள்களுக்கு) மெலிவு உண்டாகியிருக்கலாம் என்பதும் பாங்கனது உட்கிடையாகும்.)

இத்தகைய அருமைத் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் என்பார் சாலச் சிறந்த உரையொன்று செய்துள்ளார். நூலைப் போலவே உரையும் திட்பநுட்ப ஒட்பம் வாய்ந்தது. இங்கே ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம்:

**'உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச்சிற்றம்பலத் தொருத்தன்'** என்னும் அடியில், **'உணர்ந்தார்க்கு உணர்வரியோன்'** என்னும் பகுதிக்குப் பேராசிரியர் கூறுவது: **'ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குமாதலால், மீட்டும் உணர்வரியோன்'** என்பது. இவ்வாறே, பேராசிரியர் உரையும் படித்து இன்புறத்தக்கது.

## 4.5 மாணிக்கவாசகர் நமக்குக் கூறும் உபதேசம்:

மக்கட்பிறவி அடைவதற்கு அரியது. தெய்வம் ஒன்று உண்டு என்னும் சித்தம் உண்டாவது அதனினும் அரியது. மக்கள் யாவரும் சிவபெருமானை முதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்துவரின், வீட்டின்பம் பெறலாம். சிவபெருமான் தென்னாடு உடையவரேயெனினும், அவர் எந்நாட்டவர்க்கும் இறைவரேயாவர். அவர் உயிர்கட்குத் தலைவர்; உயிர்களின் சுட்டறிவினால் அறியப்படாதவர். ஆனால், அன்பர்களின் பத்தி வலையில் அகப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களுக்கு அருள்செய்ய வேண்டி, அவர் தமது அருட்சத்தியினாற் பல்வேறு வடிவங்கொள்வர். உண்மை அன்பர்களின் உள்ளத்தே அவர் என்றும் நிலையாகக் குடியிருப்பார்; அன்பர்களிடம் அவர்களினும் பார்க்க மிக்க அன்பு செய்வார்; அன்பர்களுக்கு இன்பத்தை இடையீடின்றி அருளுவார்.

யாவரும் வீட்டின்பம் பெறலாம். இறைவனிடத்து உறுதியான அன்பும் அடியார் கூட்டுறவும், அன்பின் பெருக்கால் அழுகையும் கொள்வோர், அவன் அருளாலே, அவன் அருட்குரவனாக வந்து உணர்த்த, அவன் உண்மை இயல்பை உணர்வர். இடையிடையே அவன் சோதனை செய்தலும் கூடும். அச்சோதனைக்குத் தளராமல், அவனையே பற்றி நிற்பின், அவன் பலப்பல அற்புதங்களைக் காட்டி அருள்புரிவான். இறுதியில் அவனோடு இரண்டறக் கலந்து இன்பத்தில் நிலைத்திருக்கலாம்.

---

## நால்வர் திருவடி வாழ்க

### நால்வர் திருநட்சத்திரம்

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

### நால்வர் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரர்க்குச்
செப்பியநா லெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொல்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

## நால்வர் தோத்திரப் பாக்கள்

### நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

### திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதிந்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைத்தன் ஞானப்பாடற்
றொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம் பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேயமெல்லாம்
குரவையிட்த் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தங் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

ஒரு மணத்தைச் சிதைவு செய்துவல் வழக்கிட்டாட் கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாளன் எல்லாமுய்யப்
பெருமணச் சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமானென்றுந்
திருமணக்கோ லப்பெருமான் மறைப்பெருமான் எமதுகுல தெய்வமாமால்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும் பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய் மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி யிணைகள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover by: digi graphics & studios ~ Print by: Viveka